சு.து.ந.க.எண்.*NUHM/ B2/1919/2019*

தீர்மான எண்.*284/2019* **நாள்:*03-06-2019***

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம்– பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 12 தீவிர சிசு கண்காணிப்பு பிரிவு, (New born Stabilization Unit), 3 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் 7 நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 65 செவிலியர்கள் (Staff Nurses) 02.05.2018 முதல் 01.04.2019 வரையில் ஒப்பந்த அடிப்படையில் M/s. Monisha Security Agency நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டது-மேலும் 02.04.19 முதல் 16.05.19 வரை பணி நீட்டிப்பு செய்யப்பட்டது மற்றும் இந்த 65 செவிலியர்கள் புதியதாக கட்டப்பட்டுள்ள 6 நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 2019-2020 ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள 16 செவிலியர்கள் மொத்தம் 81 செவிலியர்கள் (Staff Nurses) ஒப்பந்த அடிப்படையில் 11 மாத காலத்திற்கு ஒப்பம் கோரி பணியமர்த்தஅனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 12 தீவிர சிசு கண்காணிப்பு பிரிவிற்கு (New born Stabilization Unit), 3 மகப்பேறு மருத்துவமனைகள், 7 நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு, சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.332/2018 நாள்.25.04.2018ன்படி, 65 செவிலியர்களை(Staff Nurses), ஒப்பந்த அடிப்படையில் M/s. Monisha Security Agency நிறுவனத்தின் மூலம் 02.05.2018 முதல் 01.04.2019 வரை பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்த பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை (EAPII-1) அரசாணை நிலை எண்.232 நாள்.13.06.2018ன்படி செவிலியர் (Staff Nurse) பணியிடத்திற்கு மாத ஊதியமாக ரூ.14,000/-என நிர்ணயிக்கப்பட்டதின்படி சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.918/2018 நாள்.19.11.2018ல் மேற்கண்ட 65 செவிலியர் (Staff Nurse) பணியிடத்திற்கு மாத ஊதியமாக ரூ.10500/- லிருந்து ரூ.14,000/- ஆக 01.12.2018 முதல் 01.04.2019 வரை உயர்த்தி அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 223/2018, நாள்.04.04.2019ன்படி 02.04.2019 முதல் 16.05.2019 வரை M/s. Monisha Security Agency நிறுவனத்திற்கு பணி நீட்டிப்பு செய்து பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 2019-2020ல் புதியதாக கட்டப்பட்டுள்ள திருவொற்றியூர், புழல், வளசரவாக்கம் மற்றும் பெருங்குடி நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு 4 செவிலியர்கள் வீதம் 16 செவிலியர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

Sl. No	Zone	Particulars	Total Number Staff Nurses approved in RoP
1	1	Thiruvottiyur UCHC	4
2	3	Puzhal UCHC	4
3	11	Valasaravakkam UCHC	4
4	14	Perungudi UCHC	4
		Total	16

எனவே, கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவிக்கப்பட்டுள்ள 81 செவிலியர்களை 11 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தலாம்.

Sl. No	Zone	Particulars	No of Staff Nurses Sanctioned
New Born Corner Stabilization Units			
1	5	R.K Nagar UCHC	4
2	5	Sanjeevarayapet UCHC	4
3	5	Perumalpet EOC	4
4	6	Puliyanthope UCHC	4
5	7	Padi UCHC	4

6	8	Ayanavaram UCHC	4
7	8	Shenoy Nagar EOC	4
8	9	Mirshaibpet UCHC	4
9	10	Vadapalani UCHC	4
10	10	Saidapet EOC	4
11	12	Alandur UCHC	4
12	13	Adyar UCHC	4
Existing Urban Community Health Centres			
1	4	Meenambal Nagar, Korukupet, Chennai	2
2	5	Sanjeevarayanpet, 110, Solaippan st, Old washermanpet, Chennai-21.	2
3	6	40,Thiruvengadasany Street, Pulianthope, Chennai-600 012.	2
4	8	Ayanavaram UCHC,29,United India Colony, Ayanavaram, Ch-23	2
5	9	11, Begum Sahib Vth Lane, Royapettah, Chennai- 600 014.	2
6	10	Vadapalani No: 65, Arcot Road , Kodambakkam, CH-24.	2
7	13	2, Venkatrathnam Nagar,Adyar,Ch-20.	2
Maternity Centres			
1	5	Perumalpet EOC	1
2	8	Shenay Nagar EOC	1
3	10	Saidapet EOC	1
Newly constructed UCHCs			
1	1	Thiruvottiyur UCHC	4
2	3	Puzhal UCHC	4
3	11	Valasaravakkam UCHC	4
4	14	Perungudi UCHC	4
Total			81

Qualification of Staff Nurse

Sl.No	Category of Staff	Qualification
1	Staff Nurse	Higher Secondary Course +B.sc. Nursing (4 years) or Diploma in Nursing or Diploma in General Nursing and Midwife (3 years) (Registration with Nursing council)

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம், பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம்(Administrative Charges) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

Employee's State Insurance		Employee's Provident Fund		GST	Administrative Charges
Employer Contribution in the salary	Employee Contribution in the salary	Employer Contribution in the salary	Employee Contribution in the salary		
4.75%	1.75%	13%	12.00%	18%	Rs.500/- (as per NUHM Norms)

சு.து.ந.க.எண்.*NUHM/ B2/1919/2019*

திட்ட இயக்குநர், நகர்ப்புற சுகாதாரத்திட்டம் தமிழ்நாடு அவர்களின் *24/07/2018* நாளிட்ட கடித்தில் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊதியத்தில் 50% அடிப்படை ஊதியமாகவும், மீதமுள்ள 50% இதர படிகளாகவும் நிர்ணயம் செய்து அடிப்படை ஊதியத்திற்கான பணியாளர் வருங்கால வைப்புநிதி (Employee's Provident Fund) வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை-3

Sl. No	Category of Staff	Basic Pay (Rs)	Allowances	EPF (13 %) for Basic pay (Rs)	ESI (4.75 %) for Gross Salary (Rs)	Administrative Charges	GST 18% (1+2+3+4)	Total (1+2+3+4+5)	Required Number of Staff	Cost per 11 months Rs (6x7)
		1	2	3	4	5	6	7	8	9
1	Staff Nurse	7000	7000	910	665	500	2894	18969	81	16901379

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 12 தீவிர சிசு கண்காணிப்பு பிரிவிற்கு (New born Stabilization Unit), 3 மகப்பேறு மருத்துவமனைகள், 11 நகர்ப்புற சமுதாய நல மையங்குளுக்கு தேவையான 81 செவிலியர்கள் (Staff Nurses) தகுதி வாய்ந்த வெளி நிறுவனம் மூலம் 11 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,
2. இதற்கான செலவினம் ரூ. 1,69,01,379/- (ரூபாய் ஒரு கோடியே அறுபத்தி ஒன்பது லட்சத்து ஆயிரத்து முன்னூற்றி எழுபத்தி ஒன்பது மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும்,
3. இந்த பணியிடங்களுக்கு பொதுசுகாதாரத்துறை (தலைமையிடம்) மூலம் மின்னணு ஒப்பம் கோரவும்,
4. இதற்கான செலவினத்தினை 2019-2020ம் ஆண்டில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் Human Resources- Salary for Staff Nurse க்கென வழங்கப்பட்ட தொகையில் (FMR Code (U.8.1.2.1, U.8.1.2.2, U.8.1.2.3) U.8.3 for EPF, U.16.8.3.4 (any other (ESI,GST and Admin Cost)) மேற்கொள்ளவும்,

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *29.05.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"*1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

சு.து.ந.க.எண்.*NUHM/ B2/2395/2019*

தீர்மான எண்.*285/2019* **நாள்:*03-06-2019***

பெருநகர சென்னை மாநகராட்சி - பொது சுகாதாரத்துறை - தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் 382 துணை செவிலியர்கள் (ANM) பெருநகர மாநகராட்சி ஆரம்ப நகர்ப்புற சுகாதார மற்றும் சமுதாய நல மையங்களுக்கு ஒப்பந்த அடிப்படையில் 01.08.2018 முதல் 30.06.2019 வரை M/s. J.R.Agency நிறுவனத்தின் மூலம் பதினொரு மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த பணியாணை வழங்கப்பட்டது - இந்த 382 துணை செவிலியர்கள் (ANM) மற்றும் புதியதாக கட்டப்பட்டுள்ள பாடி மற்றும் ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 துணை செவிலியர்கள் (ANM) மொத்தம் 384 துணை செவிலியர்கள் (ANM) ஒப்பந்த அடிப்படையில் 11 மாத காலத்திற்கு ஒப்பம் கோரி பணியமர்த்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்ட வழிகாட்டுதல்களின்படி, சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.590/2018 நாள்.27.07.2018ன்படி வடக்கு வட்டாரத்தில் 1 முதல் 5 மண்டலங்களில் செயல்பட்டுவரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான தேவையான 127 துணை செவிலியர்கள் (ANM), M/s.J.R.Agency நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 01.08.2018 முதல் பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்தப்பட்டு பணிக்காலமானது 30.06.2019ல் முடிவடைகின்றது.

அட்டவணை-1

M/s.J.R.Agency (Period 01.08.2018 to 30.06.2019) (Zone-1 to 5)

Sl. No	Category of Staff	Salary per Month (Rs)	EPF (13.%) on 50% pay	ESI (4.75 %) (Rs)	Service Charge	GST (18%) (1+2+3+4)	Total (1+2+3+4+5)	Required Number of Staff	Total 11 months Rs (6x7x11)
		1	2	3	4	5	6	7	8
1	ANM	10000	650	475	2400	2435	15960	127	22296120

சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.592/2018 நாள்.27.07.2018ன்படி மத்திய வட்டாரத்தில் 6 முதல் 10 மண்டலங்களில் செயல்பட்டுவரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 128 துணை செவிலியர்கள் (ANM), M/s.J.R.Agency நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 01.08.2018 முதல் பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்தப்பட்டு பணிக்காலமானது 30.06.2019ல் முடிவடைகின்றது.

அட்டவணை-2

M/s.J.R.Agency (Period 01.08.2018 to 30.06.2019) (Zone-6 to 10)

Sl. No	Category of Staff	Salary per Month (Rs)	EPF (13.%) on 50% pay	ESI (4.75 %) (Rs)	Service Charge	GST (18%) (1+2+3+4)	Total (1+2+3+4+5)	Required Number of Staff	Total 11 months Rs (6x7x11)
		1	2	3	4	5	6	7	8
1	ANM	10000	650	475	2400	2435	15960	128	22471680

சிறப்பு அதிகாரி, மன்றத்தீர்மான எண்.591/2018, நாள்.27.07.2018ன்படி தெற்கு வட்டாரத்தில் 11 முதல் 15 மண்டலங்களில் செயல்பட்டுவரும் நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 127 துணை செவிலியர்கள் (ANM), M/s.J.R.Agency நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் 01.08.2018 முதல் பதினொரு மாத காலத்திற்கு பணியமர்த்தப்பட்டு பணிக்காலமானது 30.06.2019ல் முடிவடைகின்றது.

சு.து.ந.க.எண்.NUHM/ B2/2395/2019

அட்டவணை-3

M/s.J.R.Agency (Period 01.08.2018 to 30.06.2019) (Zone-11 to15)

Sl. No	Category of Staff	Salary per Month (Rs)	EPF (13.%) on 50% pay	ESI (4.75 %) (Rs)	Service Charge	GST (18%) (1+2+3+4)	Total (1+2+3+4+5)	Required Number of Staff	Total 11 months Rs (6x7x11)
		1	2	3	4	5	6	7	8
1	ANM	10000	650	475	2400	2435	15960	127	22296120

ஆணையர் அவர்களின் 21.02.2018 நாளிட்ட ஆணையின்படி, பாடி மற்றும் ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 துணை செவிலியர்கள் (ANM) ஒப்பந்த அடிப்படையில் 01.03.2018 முதல் 31.01.2019 வரையில் பதினோரு மாத காலத்திற்கு பணியர்மத்த M/s. Vardhan Infraastructure நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.948/2019, நாள். 23.11.2019ன்படி 01.12.2018 முதல் துணை செவிலியர் (ANM) பணியிடத்தில் துணை செவிலியர் பயிற்சி (ANM Course) முடித்தவர்கள் பணியமர்த்தப்படும் போது மாத ஊதியம் ரூ.10000/- லிருந்து ரூ.11000/- ஆக உயர்த்தியும், துணை செவிலியர் (ANM) பணியிடத்தில் செவிலியருக்கான (Staff Nurse) கல்வி தகுதி உள்ளவர்கள் பணியமர்த்தப்படும் போது மாத ஊதியம் ரூ.10000/- லிருந்து ரூ.14,000/- ஆக உயர்த்தியும், அளிக்க அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை-4

Sl. No	Name of the Post	Qualification	Base Salary already paid (in Rs.)	Revised Base Salary from 01.12.2018 (in Rs.)
1.	ANM	Higher Secondary Course + 2 years ANM course (Registration with Nursing council)	10000 per month	11000 per month (as approved in RoP 2018-19)
2.	ANM	Higher Secondary Course +B.sc. Nursing (4 years) or Diploma in Nursing or Diploma in General Nursing and Midwife (3 years) (Registration with Nursing council)	10000 per month	14000 per month (as instructed in minutes of Chief Secretary Dt.02.10.2018)

அட்டவணை-5

Name of the Post : ANM(Revised Salary)

Sl. No	Name of the Contractor	Contract Period	Salary per Month (Rs)	EPF (13%) on 50% pay	ESI (4.75 %) (Rs)	Service Charge	GST (18%) (1+2+3+4)	Total (1+2+3+4+5)	Number of Staff	Total Rs
			1	2	3	4	5	6	7	8
1	M/s.J.R.Agency	01.12.2018 to 30.06.2019 (7 months)	14000	910	665	2400	3236	21211	127	1,88,56,579
2	M/s.J.R.Agency	01.12.2018 to 30.06.2019 (7 months)	14000	910	665	2400	3236	21211	128	1,90,05,056

3	M/s.J.R.Agency	01.12.2018 to 30.06.2019 (7 months)	14000	910	665	2400	3236	21211	127	1,88,56,579
4	M/s. Vardhan Infraastructure	01.12.2018 to 31.01.2019 (2 months)	14000	1820	665	2150	3354	21989	2	87,956
										5,68,06,170

துணை செவிலியர்கள் (ANM) ஊதியம் உயர்த்தியதற்கென சென்னை மாநகர நல சங்கம், இரண்டாவது நிர்வாக குழு கூட்டத்தில் பின்னேற்பு அனுமதி பெறப்பட்டுள்ளது.

துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களின் 25.01.2019 நாளிட்ட ஆணை பெறப்பட்டு 2 துணை செவிலியர்கள் (ANM) பணியமர்த்தும் பணிக்காலமானது 01.02.2019 முதல் 31.03.2019 வரை நீட்டிப்பு செய்யப்பட்டுள்ளது .

துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் 08.03.2019 நாளிட்ட ஆணையின்படி பாடி மற்றும் ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 துணை செவிலியர்கள் (ANM) பணியமர்த்த விலைப்புள்ளிகள் கோரப்பட்டு குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s. Vardhan Infraastructure நிறுவனத்திற்கு 01.04.2019 முதல் 30.06.2019 வரை பணியாணை வழங்கப்பட்டுள்ளது.

தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 2019-2020ல் 384 துணை செவிலியர்கள் பணியிடத்திற்கு மாத ஊதியமாக ரூ.10450/- என நிர்ணயம் செய்து வழங்கப்பட்டுள்ளது. ஆனால் பெருநகர சென்னை மாநகராட்சியில் சென்னை மாநகர நல சங்கம்,இரண்டாவது நிர்வாக குழுவில் நிர்ணயிக்கப்பட்டவாறு கீழ்க்கண்ட கல்வி தகுதிஉடைய பணியாளர்களுக்கு எதிரே தெரிவிக்கப்பட்டவாறு ஊதியம் வழங்கலாம். (இந்த ஊதியமே தற்போது துணை செவிலியர்கள் பணியிடத்திற்கு வழங்கப்பட்டு வருகின்றது,)

(அட்டவணை-6) Qualification for ANM

Sl.No	Name of the Post	Qualification	Revised Base Salary (in Rs.)
1.	ANM	Higher Secondary Course + 2 years ANM course (Registration with Nursing council)	11000 per month
2.	ANM	Higher Secondary Course +B.sc. Nursing (4 years) or Diploma in Nursing or Diploma in General Nursing and Midwife (3 years) (Registration with Nursing council)	14000 per month

மேலும், தற்போது துணை செவிலியர் (ANM) பணியிடத்தில் பெரும்பாலும் செவிலியருக்கான (Staff Nurse) கல்வி தகுதி உள்ளவர்களே பணிபுரிந்து வருவதால் மாத ஊதியம் ரூ.14,000/ த்தில் கணக்கிட்டு தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தில் 2019-2020 ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள 384 துணை செவிலியர்களை (ANM) 11 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த ஒப்பம் கோர உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்,பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), சரக்கு மற்றும் சேவைக்கட்டணம் (GST) மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம்(Administrative Charges) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

Employee's State Insurance		Employee's Provident Fund		GST	Administrative Charges(As per NUHM Norms)
Employer Contribution in the salary	Employee Contribution in the salary	Employer Contribution in the salary	Employee Contribution in the salary		
4.75%	1.75%	13%	12.00%	18%	Rs.500/-

சு.து.ந.க.எண்.NUHM/ B2/2395/2019

திட்ட இயக்குநர், நகர்ப்புற சுகாதாரத்திட்டம் தமிழ்நாடு அவர்களின் *24.07.2018* நாளிட்ட கடிதத்தில் பணியாளர்களுக்கு தற்போது வழங்கப்படும் ஊதியத்தில் 50% அடிப்படை ஊதியமாகவும், மீதமுள்ள 50% இதர படிகளாகவும் நிர்ணயம் செய்து அடிப்படை ஊதியத்திற்கான பணியாளர் வருங்கால வைப்புநிதி (Employee's Provident Fund) வழங்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

(அட்டவணை-7)

Sl. No	Category of Staff	Basic Pay (Rs)	Allowances	EPF (13 %) for Basic pay (Rs)	ESI (4.75 %) for Gross Salary (Rs)	Administrative Charges	GST 18% (1+2+3+4+5)	Total (1+2+3+4+5+6)	Required Staff	Cost per 11 months Rs (6x7x11)
		1	2	3	4	5	6	7	8	9
1	ANM	7000	7000	910	665	500	2894	18969	384	8,01,25,056

எனவே,

1. **பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் அட்டவணை-7ல் தெரிவிக்கப்பட்டவாறு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையங்களுக்கு தேவையான 382 துணை செவிலியர்கள் (ANM) மற்றும் பாடி, ஆலந்தூர் நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு தேவையான 2 துணை செவிலியர்கள் (ANM), மொத்தம் 384 துணை செவிலியர்கள் (ANM), தகுதி வாய்ந்த வெளி நிறுவனம் மூலம் 11 மாத காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதிக்கும்,**
2. **இதற்கான செலவினம் ரூ.8,01,25,056/- (ரூபாய் எட்டு கோடியே ஒரு லட்சத்து இருபத்தி ஐந்தாயிரத்து ஐம்பத்தி ஆறு மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும்,**
3. **இந்த பணியிடங்களுக்கு பொதுசுகாதாரத்துறை (தலைமையிடம்) மூலம் குறுகிய கால மின்னணு ஒப்பம் கோரவும்,**
4. **இச்செலவினத்தினை தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் Human Resources- Salary for ANM க்கென வழங்கப்பட்ட தொகையில் (FMR Code U.8.1.1.1, U.8.1.1.2 for salary, U.8.3 for EPF, U.16.8.3.4 (any other (ESI,GST and Admin Cost)) மேற்கொள்ளவும் ,**

மேற்கண்ட *1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *29.05.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"*1* முதல் *4* வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

S.W.M.C.No.A7/0947/2019

Resolution No.286/2019 **Date:03-06-2019**

Solid Waste Management Department – Plastic Waste Management Rules, 2016 – Notification issued by Ministry of Environment, Forest and Climate change, New Delhi, Dated: 18.03.2016 as amended 27th March, 2018 – Draft By-laws framed U/S 349 of CCMC Act 1919 – Council approval required to implement under CCMC Act 1919 – For orders.

The Ministry of Environment, Forest & Climate Change, New Delhi has fixed duties and responsibilities of local authorities under Rule 6 (4) which states "Frame By-Laws incorporating the provision of these rules".

In exercise of the power conferred under section 6,8 & 25 of the Environment (Protection) Act 1986 (29 of 1986), and is supersession of the Plastic Waste (Management and Handlings) Rules, 2011 except as respect things done or omitted to be done before such supersession, the Central Government have enacted the Plastic Waste Management Rules 2016. The Plastic Waste Management Rules apply to every waste generator, local body, Gram Panchayat, Manufacturer, Importers and producers.

The Rule 6 of Plastic Waste Management which reads " Every local body shall be responsible for development and setting up of infrastructure for segregation collection, storage, transportation, processing and disposal of the plastic waste either on its own or by engaging agencies or producers".

Further as per G.O (Ms) No. 84, Environment and forests (EC.2) Department dated 25.06.2018, the Commissioner in respect of Municipal Corporations / District Collectors, in respect of local areas other than Municipal Corporation shall enforce the direction of "one time use throw away plastic ban" in exercise of power conferred on them by law in their jurisdiction. In order to implement G.O. (Ms) No.84, penalty structure as approved by the Government vide Amendments to the Chennai City Municipal Corporation Act,1919 as mentioned in (Schedule VIII-A) is incorporated in the By-laws 2019 vide schedule -II.

In accordance of the above rules and CCMC Act 1919, and also in order to ensure effective implementation of Plastic Waste Management By-laws 2019 are framed by duly incorporating G.O.(Ms) No.84 of Environment and Forest Department date. 25.06.2018 and the Act amendment along with the provisions of the Plastic Waste Management Rules, 2016.

Hence,

1. To approve the Draft Plastic Waste management By-laws, 2019
2. In anticipation of approval of By- laws by the Government, the penalties for violators of Plastic ban as per G.O.84 made for prevention of use and throwaway plastic may be implemented for effective enforcement in Greater Chennai Corporation.

Sl.No. 1 & 2 above, orders of the Special Officer–Standing Committee (Health), Standing Committee(Taxation and Finance) and Council are requested. Commissioner's note dated 29.05.2019 is read.

"Draft plastic waste management By-Laws 2019, Sl.No. 1 & 2 are approved by Special Officer-Standing Committee (Health,), Standing Committee (Taxation and Finance) and Council."

*****

இ.பொ.து.வ.செ.வா.ப.ந.க.எண். பிசி / 169 / 2019

தீர்மான எண்.287/2019 **நாள்:03-06-2019**

பெருநகர சென்னை மாநகராட்சி - இயந்திர பொறியியல் துறை - வடசென்னை பிரதான லாரி நிலையம் - 2019-2020 ஆம் ஆண்டுக்கான டீசல் கொள்முதல் - இந்தியன் ஆயில் நிறுவனம் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெறப்பட்டது - 2019-2020 ஆம் ஆண்டிற்கு டீசல் கொள்முதல் செய்ய அனுமதி.

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண். 180 / 78 நாள். 26.02.78 ன்படி சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரி பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து இந்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்திடமிருந்து 1978 -79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. தென் சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் அமைக்கப்பட்ட பின்னர் இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்தியன் ஆயில் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள் மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன.

வடசென்னை மற்றும் மண்டல வாகன நிலையங்களால் அசோக்லைலேண்ட், சுவராஜ் மஸ்தா, டாடா, எய்ச்சர், டிராக்டர், சிறியவகை முன்பளு தூக்கிகள், முன்பளு தூக்கிகள், மின் துறை வாகனங்கள், பொக்லைன்கள் புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகு ரக காம்பேக்டர்கள் போன்ற வாகனங்கள் 237 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், நலத்துறை மலேரியா பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக வேன்பாக் போன்ற வாகனங்களுக்கு தேவையான அளவு டீசல் வழங்கப்பட்டு வருகிறது. குடும்ப நலத்துறைக்கு வாசிங் மெசின், டீசல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிக்கு எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வடசென்னை மற்றும் மண்டல நிலையங்களின் கட்டுப்பாட்டில் கீழ்க்கண்ட இடங்களில் எரி பொருள் சேமிப்பு தொட்டிகள் உரிய நிறுவனங்களால் நிறுவப்பட்டுள்ளன.

1. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம்	வடசென்னை பிரதான வாகன நிலையம் (மற்றும்) மண்டலம் 2 லாரி நிலையம்
2. இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம்	மண்டல இயக்கூர்தி நிலையம் 4

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான எரிபொருட்கள் சேமிப்பு தொட்டிகள் நிறுவிய மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால் டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு மேற்கண்ட 2 நிறுவனங்களும் கேட்டுக்கொள்ளப்பட்டன. இந்நிறுவனங்கள் அளித்த விலைப்புள்ளிகள் கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நிறுவனம்	பொருள் விவரம்	1 KL க்கான தொகை ரூபாய்	மொத்த தேவை கிலோ லிட்டர்
இந்தியன் ஆயில் நிறுவனம் விற்பனை அனைத்து வரிகள் உட்பட	டீசல்	ரூ.67835.21	1000
இந்துஸ்தான் பெட்ரோலியம் நிறுவனம் அனைத்து வரிகள் உட்பட	டீசல்	ரூ.67835.21	400
மொத்தம்	1400 கி.லி. x ரூ.67.84 = ரூ.9,49,76,000/-		

இ.பொ.து.வ.செ.வா.ப.ந.க.எண். பிசி / 169 / 2019

மேற்கண்ட விலைப்புள்ளிகள், எரிபொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சி வடசென்னை பிரதான வாகன பணிமனையிலும், மண்டலம் 2 லாரி நிலையத்திலும் மற்றும் மண்டலம்-4 லாரி நிலையத்திலும் ஆகிய மூன்று இடங்களில் மேற்கண்ட இரண்டு நிறுவனங்களிலிருந்து வாகனங்கள் மூலமாக கொண்டுவந்து இறக்கி கொடுப்பதற்கு உட்பட்டதாகும். மேலும், இந்த விலைப்புள்ளிகள் மத்திய அரசு அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், இதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலை செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனங்கள் நிபந்தனைகள் தெரிவித்துள்ளன. இந்நிறுவனங்களின் விலைப்புள்ளிகள் சமமாக உள்ளதாலும், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை கொடுத்து வருவதால் இந்த விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளலாம். இந்நிறுவனங்கள் இந்திய அரசின் நிறுவனங்கள் என்பதால் இவைகளுக்கு பிணை வைப்புத் தொகை மற்றும் காப்பீட்டுத் தொகை செலுத்துவதிலிருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம்.

மேலும், துப்புரவு மற்றும் பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் எரிபொருள் கொள்முதல் அளவுகள் முறையே வடசென்னை பிரதான பணிமனை மண்டலம்-2 லாரி நிலையத்திற்கு 1000 கிலோ லிட்டர் டீசலும் மற்றும் மண்டலம்-4க்கு 400 கிலோலிட்டர் டீசல் பெறுவதற்கு தோராயமாக **ரூ.9,49,76,000/-** தேவைப்படுகிறது. இச்செலவினம் 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகனங்கள் எரிபொருள் உபயோகம், கணக்கு எண்- 230-20-03-06 என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும்.

எனவே, வடசென்னை வாகன நிலையம், மண்டலம்-2 லாரி நிலையம் மற்றும் மண்டலம்-4 லாரி நிலையம் ஆகியவைகளுக்கு தேவையான எரி பொருட்கள் மேற்கண்ட மத்திய அரசு நிறுவனங்களிடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளிகளின் படி அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

டீசல் கொள்முதல் செய்ய 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மானம் எண். 92 / 2000 நாள். 28.02.2000 அனுமதியின்படி அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந. 1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102, நாள். 07.08.2000, மேற்கூறிய இரண்டு நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனங்களாக இருக்கும் வரை ஒவ்வொரு ஆண்டும் சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றம் பெட்ரோல் இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டுள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மானம் எண். 486 / 01 நாள். 18.09.2001 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது. வரும் 2019-2020 ஆம் ஆண்டிற்கு டீசல் கொள்முதல் செய்திட சிறப்பு அதிகாரி மற்றும் மாமன்றம் அவர்களின் ஆணை வேண்டப்படுகிறது.

எனவே,

1. வடசென்னை வாகன நிலையம், மண்டலம்-2 லாரி நிலையம் மற்றும் மண்டல பணிமனை – 4க்கு 2019 – 2020 ஆம் ஆண்டிற்கு தேவையான 1400 கிலோ லிட்டர் டீசல், திருவாளர்கள் இந்தியன் ஆயில் கார்பரேசன் லிமிடெட் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேசன் நிறுவனங்களிடமிருந்து வாங்குவதற்கும் அவர்களால் அமைக்கப்பட்ட சேமிப்பு தொட்டிகளில் அவர்கள் வாகனங்கள் மூலமாக வடசென்னை வாகன நிலையம், மண்டலம்-2 லாரி நிலையம் மற்றும் மண்டலம்-4 லாரி நிலையம் ஆகியவற்றிற்கு சுமார் **ரூ.9,49,76,000/- (ஒன்பது கோடியே நாற்பத்தொன்பது இலட்சத்து எழுபத்தாராயிரம் மட்டும்)** என்ற அளவில் அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கே 2019-2020 ஆம் ஆண்டிற்கு வாங்கவும்,
2. இதற்கான செலவினத்தை வடசென்னை வாகன நிலையம் & மண்டலம் 2 மற்றும் மண்டலம் 4 லாரி நிலையம் ஆகியவற்றிற்கு 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இயந்திர பொறியியல் துறை, ஆய்வு வாகனங்கள் எரிபொருள் உபயோகம், கணக்கு எண் 230-20-03-06 என்ற தலைப்பின் செலவினத்தில் செலவு செய்யவும்,

3. மேற்கண்ட 2 நிறுவனங்கள் இந்திய அரசு நிறுவனங்கள் என்பதால் அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,
4. இந்திய அரசு நிறுவனங்கள் கோரியபடி தேவையான முன்பணத்தை தேவைக்கேற்ப அவ்வப்போது காசோலையாக அளிக்கவும்,
5. சிறப்பு அதிகாரி / மாமன்றம் அவர்களின் நிர்வாக அனுமதி ஆணை பெற்று மேற்பார்வை பொறியாளர் (இ) அவர்களின் ஆணை மூலமாக முன்பண காசோலை செலுத்தி டீசல் கொள்முதல் செய்யவும் .
6. அரசு நிரந்தர ஆணை வெளியிட்டு ஒவ்வொரு ஆண்டும், சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் இனி சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அரசு அனுமதி அளித்துள்ளதால் அரசின் பின்னேற்பு இன்றி கொள்முதல் செய்யவும்,

மேற்கண்ட 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 31.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"டீசல் கொள்முதல் செய்ய, 1 முதல் 6 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண். இ3 /13431 /2019

தீர்மான எண்.288/2019 **நாள்:03-06-2019**

அயற்பணி - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு. A. குமரேசன், கணக்கு அலுவலர், என்பவரின் அயற்பணிக்காலம் 25.08.2019 மூன்று ஆண்டுகள் முடிவடையும் நிலையில் தனியரின் அயற்பணி காலத்தினை மேலும் ஓராண்டிற்கு நீட்டிக்க தனியரின் தாய்த்துறையான இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்கு துறை, சென்னை, அவர்களுக்கு செயற்குறிப்பு அனுப்ப அனுமதி.

நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 15.05.2019 நாளிட்ட கடிதத்தில், கருவூலம் மற்றும் கணக்கு துறை இயக்குநர் அவர்களின் 24.08.2016 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு. A. குமரேசன், (ப.க.கு/கட்டிடம் மற்றும் இயந்திர பொறியியல் துறை) அவர்கள் கணக்கு அலுவலராக அயற்பணியில் 26.08.2016 முதல் பணிபுரிந்து வருவதாகவும் தனியரின் அயற்பணிக்காலம் 25.08.2019 அன்று மூன்றாண்டுகள் முடிவடைவதால் இது தொடர்பாக மேல் நடிவடிக்கை எடுக்குமாறு கோரப்பட்டுள்ளது.

திரு. A. குமரேசன், கணக்கு அலுவலர் (ப.க.கு/கட்டிடம் மற்றும் இயந்திர பொறியியல் துறை), பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்களின் பணி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தற்போது இன்றியமையாததாக உள்ளதால் நிர்வாக நலன் கருதி தனியரின் அயற்பணிக் காலத்தை 26.08.2019 முதல் மேலும் ஓர் ஆண்டு (நான்காம் ஆண்டு) நீட்டிக்கலாம் என தெரிவித்துக் கொள்ளப்படுகிறது. எனவே, தனியரின் அயற்பணிக் காலத்தை 26.08.2019 முதல் மேலும் ஓர் ஆண்டு (நான்காம் ஆண்டு) நீட்டிக்க அரசின் ஆணை பெறப்பட வேண்டும்.

அயற்பணி அடிப்படையில் பணிபுரியும் அரசு அலுவலர்களின் அயற்பணிக்காலத்தை நீட்டிப்பது தொடர்பாக அரசாணை G.O.Ms.No. 256, Personnel and Adminsitrative Reforms (FR-II)Department, dated.25.04.1988-ல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

iv) The period of deputation of a Government servant should not exceed three years. This should be followed strictly.

v) The extension of deputation for the fourth year should be only in exceptional and special circumstances in public interest. Extension of deputation for fourth year shall be sanctioned only by the Government in respect of all Government servants belonging to A, B, C and D Group and Heads of Department should send proposal for such extension to the Government sufficiently in advance before expiry of the third year,

ஆகவே, திரு. A. குமரேசன், கணக்கு அலுவலர் (ப.க.கு/கட்டிடம் மற்றும் இயந்திர பொறியியல் துறை), பெருநகர சென்னை மாநகராட்சி, அவர்களின் அயற்பணிக்காலத்தை நிர்வாக நலன் கருதி 26.08.2019 முதல் மேலும் ஓர் ஆண்டு (நான்காம் ஆண்டு) நீட்டித்து அரசின் ஆணை பெற தனியரின் தாய்த்துறையான இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்கு துறை, சென்னை, அவர்களுக்கு செயற்குறிப்பு அனுப்ப சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 31.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"செயற்குறிப்பு அனுப்ப சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

k.m.11.e.f.v © . Ï 1/5026/2019

தீர்மான எண்.*289/2019* **நாள்:*04-06-2019***

k © l y« -11, gFÂ-34, nfh£l« -151 – ãykhw¦w« - beLP¦rhiy¤Jiw – ÂUts¦q® kht£l«, kJuthay¦ t£l«, kJuthay¦ »uhk« - kJuthay¦ - ngh%® »uhk§fs¦ tê ahf bry¦Y« rhiy mfy¥gL¤J« g â – beLP¦rhiyJiw¡F ãykhw¦w« bra¦a – ÂUts¦q® kht£l tUtha¦ mt®fshy¦ Ãnuuiz fs¦ mD¥g¥g£Ls¦s c¤njr Ïl¤Ây¦ cs¦s kÂy¦ Rt® kw¦W« f£ol¤Âd¦ xUgFÂ Ïo¤J m¥òw¥gL¤j mDkÂ.

ÂUtŸq® kht£l tUthŒ mYty® mt®fŸ TLjš jiyik bray® k‰W« ãy ã®thf Mizaª, nr¥gh¡f« mt®fS¡F mD¥Ãa 23.04.2015 ehë£l foj¤Âš ÂUts¦q® kht£l¤Ây¦ mikªJs¦s kJuthay¦ t£l«, kJuthay¦ kw¦W« ngh%® »uhk§fŸ Mw¦fhL rhiyiaÍ« óéUªjty¦è beLP¦rhiyiaÍ« Ïiz¡F« My¥gh¡f« khãy beLP¦rhiyia 60 mo rhiyahf mfy¥gL¤j nt©o kJuthay¦ kw¦W« ngh%® »uhk§fë¦ muR òw«ngh¡F ãy§fis ãykhw¦w« bra¦ant©o TLjy¦ jiyik bray® kw¦W« ãy ã®thf Mizaª nr¥gh¡f« brd¦id-600005 mt®fS¡F Ãnuhiz fs¦ mD¥gg£Ls¦s jhf bjçé¤Js¦sh®.

nkw¦f©l Ïl¤Ây¦ mt¦thW rhiy éçth¡f« bra¦a ãy« c¤njr« bra¦a¥gl cs¦s ãy« bgUefu brd¦id khefuh£Á¡F brhªjkhd (giHa tsruth¡f« efuh£Á) ngh%® »uhk¤Ây¦ òy v©.160 th®L v©.151, gFÂ-34 mikªJs¦s 1500 r.Û. ÏlkhF«. Ïªj Ïl« kahd tif¥ghL bra¦a¥g£Ls¦s ÏlkhF«. Ïªj kahd« k¡fë¦d¦ FoæU¥ò ika¤Ây¦ mikªJs¦s fhuz¤Âdhy¦ Ïtél¤Ây¦ vçô£ly¦ vJÎ« bra¦a¥gL tÂy¦iy. nkY« Ïªj kahdkhdJ Vw¦fdnt gad¦gh£oy¦ ÏUªJ jw¦nghJ k¡fshy¦ gad¦gL¤j¥glhky¦ fhèælkhf cs¦sJ. Ïªj c¤njr ãykhw¦w Ïl¤Ây¦ fy¦yiwfs¦ kw¦W« òij¤jy¦ nghd¦w ãfH¦Îfs¦ VJ« eilbgWtJ Ïy¦iy. Mdhy¦ ngh%® gFÂ k¡fs¦ brd¦id khefuh£Áahy¦ Mw¦fhL rhiy 151-y¦ mik¡f¥g£Ls¦s (Electrical crematorium) äd¦vçô£L vçnkil¡F Ïwªjt®fë¦d¦ cly¦fis vL¤J¢ brd¦W jfd« bra¦J tU»d¦wd®. jw¦rka« nkw¦f©l Ïl¤Ây¦ mikªJs¦s ngh%® kahd¤Âd¦ xUgFÂ cu« jahç¡F« Ïlkhf (Compost yard) bray¦g£L tU»wJ.

nkY«, Ï¥bghUs¦ F¿¤J bgUefu br‹id khefuh£Á, ãy« kw¦W« cilik¤Jiwædhš, ÂUts¦q® kht£l«, kJuthay¦ t£l« ngh%® »uhk« òy v©.160š cŸs ãy¤ij ãykhŒa« brŒa Ô®khd v©.101/2018, ehs¦.31.01.2018 _y« kd¦w¤Ô®khd« ÑH¦f©lthW ãiwnt¦w¥g£Ls¦sJ. beLP¦rhiy Jiw¡F ãykhw¦w« bra¦a bgUefu brd¦id khefuh£Áæd¦ M£nrgiz æd¦ikæid bjçé¡f Áw¥ò mÂfhç-ãiy¡FG (tçéÂ¥ò kw¦W« ãÂ) kw¦W« kd¦w« mt®fshy¦ mDkÂ më¡f¥g£Ls¦sJ.

nkY«, ÏJ bjhl®ghd ãy§fis ÂUts¦q® kht£l r«kªj¥g£l jhY¡fh »uhk§fë¦y¦ ÏUªJ Ú¡f« bra¦J ÂUts¦q® kht£l muR Ïjœ v©.3, ehŸ.23.04.2015y¦ bt ëæl¥g£Ls¦sJ. vdnt, bghJk¡fë¦d¦ eyd¦ fUÂ Ïªj rhiy éçth¡f¥g â¡fhf bray¦g£L tU« cu« jahç¡F« Ïl¤Âd¦ 47Û. ÚsKs¦s Rw¦WRtw¦iw cu« jahç¡F« Ïl¤Âw¦F vt¦éj ghÂ¥ò« Ïy¦yhky¦ Ïo¤J mfw¦wÎ« kw¦W« mjd¦ mUnf mikªÂU¡F« Ábk©£ fhd¦»ß£ f£ol¤Âd¦ xU gFÂia (5.50m X 3.60m = 19.80 Sq.m) Ïo¤J mfw¦wÎ« Áw¥ò mÂfhç-ãiy¡FG(g â fŸ) k‰W« kd¦w« mt®fë¦d¦ mDkÂ nfhça Mizau J 31.05.2019 ehë£l F¿¥ò go¡f¥g£lJ.

“gFÂ f£ol¤ij Ïo¡f Áw¥ò mÂfhç-ãiy¡FG(g â fŸ) k‰W« k‹w« mt®fshš mDkÂ më¡f¥g£lJ”.

*****

பொ.து.ந.க.எண்.ஈ1/ 50289 /2012

தீர்மான எண்.290/2019 **நாள்:04-06-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.ஆர்.ராஜேந்திரன், உதவி செயற் பொறியாளர் மழைநீர்வடிகால்துறை அவர்கள் - 30.11.2012, பி.ப., அன்று வயது முதிர்வு ஓய்வு பெற அனுமதிக்காமல் - 30.11.2012 அன்று தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டவரை - அரசு கடிதத்தின்படி - தற்காலிக பணிநீக்கம் விலக்கிக்கொள்ளப்பட்டு - ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி பணியிலிருந்து சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் பின்னேற்புக்குட்பட்டு ஓய்வில் செல்ல அனுமதித்தமைக்கு பின்னேற்பு அனுமதி

மேற்பார்வை பொறியாளர் (மழைநீர் வடிகால் துறை) அவர்களின் 29.11.2012 நாளிட்ட குறிப்பில், திரு. ஆர்.ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர், (பணியிடம் திடக்கழிவு மேலாண்மைத்துறை) மழைநீர்வடிகால் துறை அவர்கள் வயது முதிர்வு காரணமாக 30.11.2012 அன்று பிற்பகல் முதல் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து ஓய்வு பெற அனுமதிக்குமாறு கோரப்பட்டது.

ஆணையர் அவர்களின் 30.11.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு. ஆர்.ராஜேந்திரன், உதவி செயற் பொறியாளர், (பணியிடம் திடக்கழிவு மேலாண்மைத்துறை) மழைநீர்வடிகால் துறை அவர்கள் மீது சென்னை மாநகராட்சி பணி விதிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) 1970 ன்படி, துணை விதி 10(b)ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தற்காலிக பணிநீக்கம் செய்து ஆணையிடப்பட்டுள்ளதை தொடர்ந்து, ஆணையர் அவர்களின் 30.11.2012 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, தனியரை பணியிலிருந்து 30.11.2012 பி.ப. முதல் ஓய்வு பெற அனுமதிக்காமல் ஆணையிடப்பட்டது.

தனியர் மீதான குற்றச்சாட்டினை விசாரிப்பதற்காக விசாரணை அலுவலர் நியமிக்கப்பட்டு, விதிகளின்படி விசாரணை நடத்தப்பட்டு குற்றச்சாட்டுகள் நிரூபணமாகிறது/நிரூபணமாகவில்லை என விசாரணை அறிக்கை பெறப்பட்டு இறுதியாணை வேண்டி 21.08.2013 நாளிட்ட கடிதம் அரசுக்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில், 15.02.2018 நாளிட்ட அரசு கடிதத்தில் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

> 4. """"The charges framed against the delinquent official, Thiru.R.Rajendran, Assistant Executive Engineer (u/s), his defense statement, findings of the Inquiry Officer, his further representation and the report of the Commissioner, Greater Chennai Corporation have been examined in detail and had held charges No.1,2,4 and 5 framed against him as “proved” and charge No.3 as “not proved”.
>
> 5. The Government, after careful examination has proposed to impose a punishment at Government level under Rule 7 of Chennai Corporation (Superior) Service Pension Rules, 1970 for the proven charges, after revocation of suspension order and allowing him to retire from service without prejudice to charges pending against him by the Commissioner of Greater Chennai Corporation.
>
> 6. I am, therefore, to request you to revoke the suspension order issued against Thiru.R.Rajendran, Assistant Executive Engineer and allow him to retire from service without prejudice to charges pending against him and send the copies of the proceedings to Government without fail for further course of action in this case.”

பொ.து.ந.க.எண்.ஈ1/ 50289 /2012

ஆணையர் அவர்களின் 16.03.2018 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.ஆர்.ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர் (தற்காலிக பணிநீக்கம் 30.11.2012) ம.நீ.வ.து அவர்களை தற்காலிகமாக பணிநீக்கம் ஆணையினை ரத்தும், தனியர் மீது தொடரப்பட்ட 10(b)ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ள காரணத்தினால், ஒழுங்கு நடவடிக்கை இறுதி முடிவுக்கு எவ்வித குந்தகமின்றியும், சென்னை மாநகராட்சி (மேம்பட்ட) ஓய்வூதிய விதிகள் எண்.7, 1970ன்படியும் (allow him to retire from service without prejudice) மற்றும் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டும் தனியரை 30.11.2012 அன்று பிற்பகல் முதல் ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டது.

அரசாணை (வா). எண்.223 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(மா.ந.3) துறை நாள்.05.10.2018ல், தனியர் மீது சென்னை மாநகராட்சி பணி விதிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) 1970 ன்படி, துணை விதி 10(b)ன்கீழ் ஏற்படுத்தப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையின் இறுதியாணையாக ஓய்வூதியத்தில் மாதம் ரூ.1000/- வீதம் 12 மாதங்களுக்கு பிடித்தம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 30.11.2018 நாளிட்ட கடிதத்தில், தனியர் உதவிபொறியாளர், உதவி செயற்பொறியாளர், மற்றும் செயற்பொறியாளராக துறைகள் மற்றும் மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 1996-97 ஆம் ஆண்டு முதல் 2012-2013 ஆம் ஆண்டு வரை முடியவுள்ள தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், கணக்கு அலுவலர் (தணிக்கை) அலுவலகத்திலுள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கையின்படி தணிக்கை தடை பத்திக்கு ரூ.19965/- (ரூபாய் பத்தொன்பதாயிரத்து தொள்ளாயிரத்து அறுபத்து ஐந்து மட்டும்) கூட்டுப்பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில், தனியருக்கு மட்டும் **ரூ.9983/- (ரூபாய் ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்று மட்டும்)** நிலுவையிலுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து) அவர்களின் 09.01.2019 நாளிட்ட குறிப்பில், அரசு கடித எண்.20922/மா.நா.3/2014-12, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.15.02.2018, ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஈ1/50289/2012 நாள்.16.03.2018 மற்றும் அரசாணை (வா). எண்.223 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள்.05.10.2018ன்படி, தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணையாக ஓய்வூதியத்தில் மாதம் ரூ.1000/- வீதம் 12 மாதங்களுக்கு பிடித்தம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளதாலும், தனியர் மீது தற்போது நிலுவையிலுள்ள தணிக்கை தடைகளுக்கான தனிப் பொறுப்பு ரூ.**ரூ.9983/- (ரூபாய் ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்று மட்டும்)** பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்வதற்கும் மற்றும் சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, தனியரை 30.11.2012 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணையிடப்பட்டமைக்கும் சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தனியர் வகித்து வரும் பதவி வகுப்பு **II** ன் கீழ் வருவதால் இப்பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களிடம் உள்ளது.

ஆகவே, திரு.ஆர்.ராஜேந்திரன், உதவி செயற்பொறியாளர், மழைநீர் வடிகால் துறை, (வயது முதிர்வு ஓய்வு நாள்.30.11.2012) அவர்கள் மீது, தனிப்பொறுப்பில் உள்ள தணிப்பத்தி நிலுவை **ரூ.9983/- (ரூபாய் ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எண்பத்து மூன்று மட்டும்)** பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்வதற்கும் மற்றும் அரசு கடித எண்.20922/மா.நா.3/2014-12,

பொ.து.ந.க.எண்.ஈ1/ 50289 /2012

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.15.02.2018, மற்றும் அரசாணை (வா). எண்.223 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந.3) துறை நாள்.05.10.2018ன்படி, தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கையின் இறுதி ஆணையாக ஓய்வூதியத்தில் மாதம் ரூ.1000/- வீதம் 12 மாதங்களுக்கு பிடித்தம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளதாலும் மற்றும் ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண்.ஈ1/50289/2012 நாள்.16.03.2018ன்படி, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, தனியரை 30.11.2012 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணையிடப்பட்டமைக்கும் சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 03.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணையிடப்பட்டமைக்கும் சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.இ6/ 006341 /2018

தீர்மான எண்.291/2019 **நாள்:04-06-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2018-2019ஆம் பட்டியலாண்டில் இளநிலை உதவியாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியலுக்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி 2018-2019ஆம் பட்டியல் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் காலிப்பணியிடங்களை 7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி ரூ.19500-62000 என்ற ஊதிய விகிதம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் நிரப்புவதற்கான பட்டியல் 01.08.2018 என்ற மைய நாளிட்டு (Crucial Date) தயாரிக்கப்பட வேண்டும்.

பெருநகர சென்னை மாநகராட்சி வகுப்பு 3 மற்றும் 4ம் நிலைப் பணியாளர்களுக்கான சார்நிலை பணி துணை விதிகள் 2009ல் இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கு நியமன முறை மற்றும் கல்வித்தகுதி கீழ்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

இளநிலை உதவியாளர் பதவிக்கான நியமன முறை

பதவியின் பெயர்	நியமன முறை	நிர்ணயிக்கப்படும் தகுதி	நிர்ணய நாள்.	குறிப்பு
இளநிலை உதவியாளர்	1. அனைத்து கீழ் வகை பதவியிடங்களிலிருந்து பதவி உயர்வு மூலம், தகுதிகாண் பருவம் முடித்திருக்க வேண்டும். i. கீழ்நிலைப்பதவிகளில் 5ஆண்டுகள் பணிபுரிந்து இருக்க வேண்டும். ii. பட்டதாரிகளுக்கு முன்னுரிமை அளித்து பணிநியமனம் செய்யப்பட்ட பதவியில் 3ஆண்டுகள் பணிபுரிந்திருக்க வேண்டும். (பட்டதாரி மற்றும் பட்டதாரி அல்லாதோர் 1:1 என்ற விகிதாச்சாரத்தில் பதவி உயர்வு வழங்கப்படும்)	குறைந்தபட்ச பொது கல்வித்தகுதி	ரூ.5200-20200 + நிலை ஊதியம் ரூ.2400 நிர்ணய நாள். ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட்1ம் நாள்.	1.இளநிலை உதவியாளர்கள், தொலைபேசி இயக்குபவர் பொதுவான பணிவகையினை சேர்ந்தவர்களாக கருதப்படவேண்டும். (Common category / Interchangeable post) 2. பதவி உயர்வு மற்றும் நேரடி நியமனத்திற்கான விகிதாச்சாரம் 1:1 3. நேரடி நியமன ஒதுக்கீட்டில் 50% விழுக்காட்டினை கருணை அடிப்படையில் பணி நியமனத்தின் போது பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றுள்ள வாரிசுதாரர்கள் பணி நியமனம். 4. பட்டியாலாண்டில் நிரப்பப்படாமல் நிலுவையில் உள்ள காலிப்பணியிடங்களை அடுத்த ஆண்டிற்கான உரிய ஒதுக்கீட்டிற்கு முன் கொணரப்பட வேண்டும்.

பொ.து.ந.க.எண்.இ6/ 006341 /2018

இளநிலை உதவியாளர் பதவிக்கான காலிப்பணியிடங்களின் விவரங்கள் பின்வருமாறு

01.	பதவியின் பெயர்	**இளநிலை உதவியாளர்**		
02.	மைய நாள்.	**01.08.2018**		
03.	பழைய ஊதிய விகிதம்	ரூ.5200-20200 + தர ஊதியம்		
	7வது ஊதியக்குழுவின் பரிந்துரையின்படி புதிய ஊதிய விகிதம்	**ரூ.19500 - 62000**		
04.	காலிப்பணியிட விவரம்	1. அனுமதிக்கப்பட்ட பணியிடம் மொத்தம்		318
		(அ) தற்காலிக பணியிடம்		-
		(ஆ) நிரந்தர பணியிடம்		318
		(இ) தற்போது பணிபுரிபவர்களின் எண்ணிக்கை. (As on 01.08.2018)		224
		2. (அ) மைய நாளில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம். (Direct Recruitment vacancy as on 01.08.2018)	94	
		(ஆ) மைய நாளுக்கு பின்பு ஏற்பட்டுள்ள/ ஏற்படவுள்ள காலிப்பணியிடம். வயது முதிர்வு ஓய்வு பெறுவதால் ஏற்படும் காலிப்பணியிடம் (01.08.2018 முதல் 31.07.2019)	4	
		(இ) காலமானதால் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம்	1	
		(ஈ) பதவி உயர்வு வழங்கப்பட்டதால் பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள/ ஏற்படவுள்ள காலிப்பணியிடம் (இளநிலை உதவியாளர் பதவியிலிருந்து உதவியாளராக பதவி உயர்வு)	8	
			13	
		மொத்த காலிப்பணியிடம் (94+4+8+1 =107)	**107**	
		(உ) நேரடி நியமனம் (2017-18) (-)	**94**	
		(107-94=13)	**13**	
		3. (அ) **பதவி உயர்வு (2018-19) -1 (07)** (ஆ) **நேரடி நியமனம்(2018-19) -1 (06)**		7
		4. அரசாணை எண்.103 பணியாளர்(ம)நிர்வாகச் சீர்திருத்தத்(எஸ்)துறை,நாள்.09.10.2014ன்படி எதிர்பாரத நிகழ்வினால் ஏற்படவுள்ள காலிப்பணியிடம். (7X40% = (2.8) 3		3
		5. மொத்த காலிப்பணியிடம் (7+3=10)		**10**

பொ.து.ந.க.எண்.இ6/ 006341 /2018

மேற்கண்ட சென்னை மாநகராட்சி சார்நிலை பணி துணை விதிகளின்படி, துறை/மண்டலங்களிலிருந்து பெறப்பட்ட விவரங்களின் அடிப்படையில் 01.08.2018ஐ மைய நாளாக கொண்ட 2018-2019ஆம் பட்டியல் ஆண்டின் இளநிலை உதவியாளர் பதவிக்குரிய தற்காலிக தெரிவுப்பட்டியல் இவ்வலுவலக 24.09.2018 நாளிட்ட சுற்றறிக்கையின் மூலம் கீழ்கண்டவாறு வெளியிடப்பட்டது.

2018-2019ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர்பதவிக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல்

வ. எண்.	பெயர், பதவி மற்றும் துறை / மண்டலம்	பட்டதாரி/ பட்டதாரி அல்லாதவர்	முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள்.
1:1 என்ற விகிதாச்சாரத்தில் 3 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி மற்றும் 5 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி அல்லாதவர்			
01.	D. கோகுலன். துப்புரவு பணியாளர். மண்டலம்-14.	பட்டதாரி	11/03/2009
02.	N.செந்தில் குமார். அடிப்படை சுகாதார பணியாளர். மண்டலம்-8.	பட்டதாரி அல்லாதவர்	19/05/1998
03.	M.சண்முகபிரியா. துப்புரவு பணியாளர். மண்டலம்-14.	பட்டதாரி	16/03/2009
04.	D.கோவிந்தம்மாள். அடிப்படை சுகாதார பணியாளர். மண்டலம்-10.	பட்டதாரி அல்லாதவர்	30/12/1999
05.	K.C.ராமநாதன். துப்புரவு பணியாளர். மண்டலம்-12.	பட்டதாரி	11/12/2009
06.	R.சீனிவாசன். அலுவலக உதவியாளர் மண்டலம்-8.	பட்டதாரி அல்லாதவர்	23/02/2006
07.	T.முனியம்மாள். துப்புரவு பணியாளர். மண்டலம்-9.	பட்டதாரி	09/08/2010
08.	M.R.பத்ரி நாராயணன். பதிவுரு எழுத்தர் பொது சுகாதாரத்துறை	பட்டதாரி அல்லாதவர்	28/02/2006
09.	T.சற்குணம். சாலை பணியாளர். மண்டலம்-14.	பட்டதாரி	08/11/2013
10.	P. ராமமூர்த்தி. பதிவுரு எழுத்தர் பொதுத்துறை	பட்டதாரி அல்லாதவர்	28/02/2006

பொதுத்துறையின் 07.03.2019 நாளிட்ட சுற்றறிக்கை மூலம் மேற்படி தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து வட்டார துணை ஆணையர்கள்/துறைத் தலைவர்கள்/மண்டல அலுவலர்கள் தங்களின் கீழ் பணிபுரியும் அனைத்து சம்மந்தப்பட்ட பணியாளர்களுக்கும் தவறாமல் சுற்றுக்கு விட்டு, இத்தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து பெறப்படும் ஆட்சேபணைக் கருத்துக்களை உரிய ஆவணங்களுடன் 21.03.2019க்குள் பொதுத்துறைக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. அவ்வாறு கேட்டு கொள்ளப்பட்டதனை தொடர்ந்து பெறப்பட்ட ஆட்சேபணை குறித்த விவரங்கள் கீழ்வருமாறு சமர்ப்பிக்கப்படுகிறது.

பொ.து.ந.க.எண்.இ6/ 006341 /2018

2018-2019 ஆம் பட்டியலாண்டின் இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கான தற்காலிக தெரிவுப்பட்டியல் குறித்து பெறப்பட்ட ஆட்சேபணை குறித்த விவரங்கள்

வ. எண். (1)	பெயர் மற்றும் பதவி (2)	ஆட்சேபணை விவரம் (3)	துறையின் கருத்து (4)
1.	G. முனியம்மாள். பெண் இரண சிகிச்சையாளர், அப்பா சாமி ஆரம்ப சுகாதார நிலையம், கோட்டம்-110, மண்டலம்-9.	இளநிலை உதவியாளர் தற்காலிக தெரிவுப்பட்டியலில் பட்டதாரி ஆகிய தன்னுடைய பெயர் விடுபட்டுள்ளது எனவும், தன்னுடைய பெயரினை மீண்டும் இளநிலை உதவியாளர் பெயர் பட்டியலில் சேர்க்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.	தனியரின் கல்விச்சான்றிதழ்கள் அனைத்தும் சரிபார்க்கப்பட்டு, தனியரை பட்டதாரி என கருதப்பட்டு, இறுதி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.1ல் காண்பிக்கப்பட்டுள்ளது.
2.	K. ஞானசேகரன். தொலைபேசி இயக்குபவர் பொதுத்துறை	தனியர் தொலைபேசி இயக்குபவர் பதவியில் இருந்து இளநிலை உதவியாளர் பதவி மாற்றம் செய்ய வேண்டியுள்ளார்.	தனியரின் கோரிக்கையை வரைவு துணை விதியின்படி ஏற்கலாம்.

மேலும், இளநிலை உதவியாளர் காலிப்பணியிடத்தில் ஒரு காலிப்பணியிடத்தை மட்டும், தற்போது தொலைபேசி இயக்குபவராக பணிபுரிந்து வரும் திரு. K. ஞானசேகரன் என்பவர் துணை விதியின்படி இரண்டு ஆண்டுகள் தொலைபேசி இயக்குபவர் பதவியில் பணிபுரிந்தும், மேலும் தற்போது இளநிலை உதவியாளர் பதவிக்கு மாற்றம் கோரி விருப்பக் கடிதம் அளித்துள்ள நிலையிலும் அவருக்கென ஒரு பணியிடத்தை ஒதுக்கி மீதமுள்ள 9 பணியிடங்களுக்கு இறுதி தெரிவுப்பட்டியல் வெளியிடலாம்.

மேற்காணும் விவரங்களின் அடிப்படையில் 01.08.2018ஐ மைய நாளாகக் கொண்ட 2018-2019ம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவி உயர்வுக்கான தகுதி வாய்ந்த பணி முதுநிலையில் உள்ள பட்டதாரி மற்றும் பட்டதாரி அல்லாத கீழ்நிலை பணியாளர்கள் (1:1) என்ற விகிதாச்சாரத்தின் அடிப்படையில் 9 நபர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட இறுதி தெரிவுப்பட்டியல் கீழ்கண்டவாறு அமைகிறது.

2018-2019ஆம் ஆண்டின் இளநிலை உதவியாளர் பதவிக்கான இறுதி தெரிவுப்பட்டியல்

வ. எண்.	பெயர், பதவி மற்றும் துறை / மண்டலம்	பட்டதாரி/ பட்டதாரி அல்லாதவர்	முதன் முதலில் பணியில் சேர்ந்த நாள்.
1:1 என்ற விகிதாச்சாரத்தில் 3 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி மற்றும் 5 ஆண்டுகள் பணிமுடித்த பட்டதாரி அல்லாதவர்			
01.	G. முனியம்மாள். பெண் இரண சிகிச்சையாளர், மண்டலம்-9.	**பட்டதாரி**	24/02/2009
02.	N.செந்தில் குமார். அடிப்படை சுகாதார பணியாளர். மண்டலம்-8.	**பட்டதாரி அல்லாதவர்**	19/05/1998
03.	D. கோகுலன். துப்புரவு பணியாளர். மண்டலம்-14.	**பட்டதாரி**	11/03/2009
04.	D.கோவிந்தம்மாள். அடிப்படை சுகாதார பணியாளர். மண்டலம்-10.	**பட்டதாரி அல்லாதவர்**	30/12/1999

பொ.து.ந.க.எண்.இ6/006341/2018

05.	M.சண்முகபிரியா, துப்புரவு பணியாளர், மண்டலம்-14.	**பட்டதாரி**	16/03/2009
06.	R.சீனிவாசன், அலுவலக உதவியாளர் மண்டலம்-8.	**பட்டதாரி அல்லாதவர்**	23/02/2006
07.	K.C.ராமநாதன், துப்புரவு பணியாளர், மண்டலம்-12.	**பட்டதாரி**	11/12/2009
08.	M.R.பத்ரி நாராயணன், பதிவுரு எழுத்தர் பொது சுகாதாரத்துறை	**பட்டதாரி அல்லாதவர்**	28/02/2006
09.	T.முனியம்மாள், துப்புரவு பணியாளர், மண்டலம்-9.	**பட்டதாரி**	09/08/2010

எனவே,

அ) தற்காலிக தெரிவுப்பட்டியலில் இடம் பெறாத, ஆட்சேபணை பட்டியல் வரிசை எண்.1ல் இடம் பெற்றுள்ள திருமதி.G. முனியம்மாள், பெண் இரண சிகிச்சையாளர், அப்பா சாமி ஆரம்ப சுகாதார நிலையம், கோட்டம்-110, மண்டலம்-9 அவர்கள் பதவி உயர்வுக்கு முழு தகுதி பெற்றுள்ளதால் பணிமூப்பின்படி அவர்களது பெயரை இறுதி தெரிவுப்பட்டியலில் உரிய இடத்தில் பொறுத்தி வெளியிட அனுமதியும்,

ஆ) ஆட்சேபனை பட்டியல் வரிசை எண்.2ல் இடம் பெற்றுள்ள திரு. K.ஞானசேகரன், தொலைபேசி இயக்குபவர், பொதுத்துறை என்பவரை தொலைபேசி இயக்குபவர் பதவியில் இருந்து இளநிலை உதவியாளர் பதவிக்கு மாற்றம் செய்ய ஒப்புதலும்,

இ) 01.08.2018யை மைய நாளாகக் கொண்ட 2018-2019ஆம் ஆண்டிற்கான இளநிலை உதவியாளர் பதவிக்கு ஒருங்கிணைக்கப்பட்ட கீழ்நிலை பதவியின் மூப்பு நிலை வரிசையின் அடிப்படையில் தகுதி பெற்றுள்ள 9 நபர்கள் அடங்கிய இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதலும்,

ஈ) இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள 1 முதல் 6 வரை உள்ள நபர்களுக்கு பட்டியலாண்டில் ஏற்பட்டுள்ள காலிப்பணியிடங்களில் ரூ.19500-62000என்ற காலமுறை ஊதியம் மற்றும் அனுமதிக்கப்பட்ட இதர படிகளுடன் இளநிலை உதவியாளராக பதவி உயர்வு வழங்கவும்,

மேற்கண்ட அ முதல் ஈ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 03.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"இளநிலை உதவியாளர் பதவி தெரிவுப்பட்டியலுக்கு சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

க.து.ந.க.எண்.பி2/527/2019

தீர்மான எண்.292/2019 **நாள்:04-06-2019**

மண்டலம்- 06, வார்டு - 73, புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் உள்ள நகர்புற சமுதாயநல மருத்துவமனையில் கூடுதலாக இரண்டாம் தளம் கட்டும் பணிக்காக ரூ.1,50,00,000/-க்கு 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலையின்படி தயாரிக்கப்பட்டுள்ள திட்ட மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்- 06, வார்டு - 73, புளியந்தோப்பு, டாக்டர் அம்பேத்கர் கல்லூரி சாலையில் உள்ள நகர்புற சமுதாயநல மருத்துவமனையில் கூடுதலாக இரண்டாம் தளம் கட்டும் பணி.
2	பரிந்துரை செய்தவரின் விவரம்	துணை ஆணையர்(சுகாதாரம்)
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	சுகாதாரத்துறை
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப் பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2018-2019 ஆம் ஆண்டின் விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 1,50,00,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ 1,30,04,325.01
	(ஆ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 1,30,043.25
	(இ) எதிர்பாரா செலவு	ரூ. 3,05,112.74
	(ஈ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ. 15,60,519.00
	மொத்தம்	ரூ. **1,50,00,000.00**
6	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்
7	ஏற்கனவே எப்போது செய்யப்பட்டது	2017 கூடுதல் பணி
8	நிதியின் தன்மை/ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிதி/கணக்கு குறியீட்டு எண்.	அரசு மானியம் NUHM
9	இக்கோப்பில் குறிப்பிட்டுள்ள பணிக்கு தேவைப்படும் நிதி	ரூ. 1,50,00,000.00
10	வரைபடம் வைக்கப்பட்டுள்ளதா	ஆம்

மாநகர மருத்துவ அலுவலர் அவர்களின் 12.03.2019 நாளிட்ட கடிதத்தில், மண்டலம்-15, வார்டு-195 கண்ணகி நகரில் கட்டப்பட்டுள்ள நகர்புற சமுதாய நல மருத்துவமனை (30 படுக்கைகள்) கட்டி முடிக்கப்பட்டு, மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட்டுள்ளதால், இந்த மருத்துவமனைக்கு தேவையான Furnitures ஏதும் இல்லாத காரணத்தால், சிகிச்சைக்கு வரும் பொது மக்களுக்கும் மற்றும் மருத்துவமனை ஊழியர்களுக்கும் சிரமமாக உள்ளதால், மருத்துவமனைக்கு தேவையான Furnitures கட்டடத்துறை மூலமாக கொள்முதல் செய்து வழங்குமாறு கடிதம் அனுப்பியுள்ளார்கள்.

எனவே, கண்ணகி நகர் மருத்துவமனைக்கு Supplying and fixing Furnitures கொள்முதல் செய்து அமைக்கும் பணியினையும் இந்த ஒப்பத்தில் சேர்த்து செய்வதால் கூடுதலாக ரூ.5,75,744/- கூடுதலாக செலவு செய்யப்பட வேண்டியள்ளது. இத்தொகையானது ஒப்பத்தொகையை விட கூடுதலாக 25% ற்கு குறைவாக உள்ளது.

இதன் விவரங்கள் கீழ்க்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

வ. எண்.	வளசரவாக்கத்தில் கட்டப்பட்டுள்ள நகர்புற சமுதாய நல மருத்துவமனைக்கு ஒப்பம் கோரி கொள்முதல் செய்த விவரம்	எண்ணிக்கை	விலை	மொத்தம் தொகை	கண்ணகி நகரில் வளசரவாக்கத்தில் கட்டப்பட்டுள்ள நகர்புற சமுதாய நல மருத்துவமனைக்கு கொள்முதல் செய்ய வேண்டிய விவரம் மற்றும் எண்ணிக்கை	விலை	தொகை
1	Table enterprises Tables 3x2 T-31	10	7419	74190	-	-	-
2	Table enterprise tables 4x2	20	13867	277340	7	13867	97069
3	Table s1071 tables 6x3	4	31000	124000	8	31000	248000
4	Side table Mayfair eru	1	6882	6882	-	-	-
5	Computer table stylo 4x2	5	10354	51770	-	-	-
6	Stage table Enterprises 4x2	1	13058	13058	-	-	-
7	Executive table ascent 6x3	6	38259	229554	-	-	-

8	Executive chair 7101 R HB	22	8351	183722	-	-	-
9	Moulded chair	100	600	60000	5	600	3000
10	Rolling chair bravo mb	20	7452	149040	10	7452	74520
11	High back chair 7001 D	5	16338	81690	-	-	-
12	Stage chair bravo visitors	10	5643	56430	-	-	-
13	Cushion chair 7112r	50	4685	234250	17	4685	79645
14	Chair 7112r	50	4685	234250	-	-	-
15	Steel rack	5	9750	48750	-	-	-
16	Cupboard with lock	3	19990	59970	-	-	-
17	Steel plain cupboard	20	18920	378400	1	18920	18920
18	Reception table 2 arc	1	54590	54590	1	54590	54590
	TOTAL			**2317886**			**575744**

ஒப்பத்தொகை	Rs.23,15,568.11
கூடுதலான தொகை	Rs.5,75,744.00
மொத்த தொகை	Rs.28,91,312.11

இப்பணிக்காக ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்ட பணிக்கான ஒப்பத்தொகையான ரூ.23,15,568.11/-யை விட ஒப்பத்திற்கு கூடுதல் இனங்களான (Deviation) பணிகளையும் சேர்த்து பட்டித்தொகை ரூ.28,91,312.11/- என கணக்கிடப்பட்டுள்ளது. இதனால் ரூ.5,75,744/- கூடுதல் செலவீனமாகிறது இத்தொகையானது 10 சதவீதத்தை விட அதிகமாக உள்ளது.. இந்த கூடுதல் செலவீன தொகை ரூ.5,75,744/- சேர்த்து கூடுதல் ஒப்ப சதவீதம் 25% ற்கு குறைவாக உள்ளது.

தற்போது பாராளுமன்ற தேர்தல் நடத்தை விதிகள் அமலில் உள்ளதால் கண்ணகி நகரில் உள்ள மருத்துவமனைக்கு புதிதாக ஒப்பம் கோரி கொள்முதல் செய்ய இயலாத நிலை உள்ளது.

தமிழ்நாடு ஒளிவுமறைவில்லா ஒப்ப சட்டத்தின்படி *(Tamilnadu Tender Transparency act* 1998*)* ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்ப தொகைக்கு கூடுதலாக 25% சதவிகிதத்திற்குள் அதே ஒப்பந்ததாரரைக் கொண்டு பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்பட்டுள்ளது.

எனவே,

1) பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி அதே ஒப்பந்ததாரர் திருவாளர்கள்.ஸ்ரீ விஷ்ணு மார்க்கெட்டிங் அவர்களுக்கு கூடுதல் பணிகளை ரூ.5,75,744/- கூடுதலாக கொள்முதல் ஆணை வழங்கி பணி மேற்கொள்ள அனுமதியும்,
2) இந்த கூடுதல் பணிகளுக்காக ஒப்பந்ததாரருடன் கூடுதல் ஒப்பந்தம் *(Supplementary Agreement)* நிறைவேற்றவும்
3) மேற்கண்ட கூடுதல் பொருட்களை கொள்முதல் செய்து கண்ணகி நகரில் உள்ள மருத்துவமனைக்கு கொள்முதல் செய்து மருத்துவமனையை இயக்க அனுமதியும்,

க.து.ந.க.எண்.பி1/2802/3/2018

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 17.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

சு.து.நக.எண்.NUHM/பி2/2404/2019

தீர்மான எண்.300/2019 **நாள்:11-06-2019**

பொதுசுகாதாரத்துறை- தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம் பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 19 இருபத்தி நான்கு மணி நேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகளுக்கு தேவையான 38 காவலர்களை - ஒப்பந்த அடிப்படையில் 12.02.2018 முதல் 11.02.2019 வரையில் ஒரு வருட காலத்திற்கு M/s.Monisha Security Agency நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டது-12.02.2019 முதல் 11.05.2019 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யப்பட்டது- இந்த 38 காவலர்களுக்கும் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள் மூலம் 12.05.2019 முதல் 31.05.2019 வரை 20 நாட்களுக்கு ஊதியம் நேரடியாக வழங்குவதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 043/2018 நாள். 25.01.2018ன்படி பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டுவரும் 19 இருபத்தி நான்கு மணி நேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகளுக்கு தேவையான 38 காவலர்களை, ஒப்பந்த அடிப்படையில் ஒரு வருட காலத்திற்கு M/s. Monisha Security Agency நிறுவனத்தின் மூலம் 12.02.2018 முதல் ஒரு வருட காலத்திற்கு பணியமர்த்தப்பட்டு பணிக்காலமானது 11.02.2019 ல் முடிவடைகின்றது.

ஒப்பந்த விதிகளின்படி ஏற்கெனவே உள்ள ஒப்பந்தத்தினை 25% வரையில் நீட்டிப்பு செய்யலாம். எனவே, துணை ஆணையர்(சுகாதாரம்) அவர்களின் ஆணை சுது நக எண்.NUHM/பி2/ 6477/2017 நாள்.25.01.2019 மற்றும் சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 230/2019 நாள்.04.04.2019ன்படி மேற்கண்ட பணிக்காலமானது 12.02.2019 முதல் 11.05.2019 வரை மூன்று மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்து வழங்கப்பட்டுள்ளது.

சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண். 004/2018 நாள். 07.01.2019ன்படி 19 இருபத்தி நான்கு மணி நேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகளுக்கு தேவையான 38 காவலர்களை, ஒப்பந்த அடிப்படையில் 11 மாத காலத்திற்கு ஒப்பம் கோரி பணியமர்த்த ஒப்பம் கோரப்பட்டு 12.02.2019 அன்று மாலை 3.30 க்கு ஒப்பம் திறக்கப்பட்டுள்ளது.

திட்ட இயக்குநர் (மாநில சுகாதார சங்கம்-TN) அவர்களின் 24.07.2018 நாளிட்ட செயல்முறை ஆணையில் தமிழகத்தில் உள்ள 27 வட்டார மற்றும் வட்டார அல்லாத மருத்துவமனைகள் உள்ளிட்ட 293 அரசு பல் மருத்துவமனைகளில் பணியாற்றிய பல் அறுவை சிகிச்சை நிபுணர் மற்றும் பல் மருத்துவ உதவியாளர் பணியிடங்களுக்கு பிப்ரவரி 2017 மற்றும் மார்ச் 2017 மாதங்களுக்கான மாத ஊதியம் மற்றும் ஆண்டு ஊதிய உயர்வு ஒப்பந்தாரர் மூலம் வழங்கப்படாமல் அரசு மருத்துவமனை மற்றும் வட்டார ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள் மற்றும் பல் மருத்துவ உதவியாளர்களுக்கும் நேரடியாக பணம் வழங்க ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது கோரப்பட்ட ஒப்பத்தினை இறுதி செய்ய காலதாமதம் ஏற்படும் நிலை உள்ளதால், பெருநகர சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 19 இருபத்தி நான்கு மணி நேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகளுக்கு தேவையான 38 காவலர்களுக்கு சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்கள் மூலம் 12.05.2019 முதல் 31.05.2019 வரை 20 நாட்களுக்கு ஊதியம், வருகையின் அடிப்படையில் நேரடியாக வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை எண்.1

SNo	Zone	Name of the EOC's and Address	No of Security
1	1	Thiruvottiyur UCHC	2
2	2	Manali UCHC	2
3	3	Madhavaram UCHC	2
4	4	Dr.R.K.Nagar UCHC	2
5	5	Sanjeevarayanpet UCHC	2
6	5	Perumalpet EOC	2
7	6	Pulianthope UCHC	2
8	7	Padi UCHC	2
9	8	Ayanavaram UCHC	2
10	8	Shenoy Nagar EOC	2

11	9	Mirshahibpet UCHC	2
12	10	Vadapalani UCHC	2
13	10	Saidapet EOC	2
14	11	Porur UCHC	2
15	12	Alandur UCHC	2
16	12	Mugalivakkam UCHC	2
17	13	Adyar UCHC	2
18	14	Thoraipakkam UCHC	2
19	15	Chemmencherry UCHC	2
		Total	38

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் பணியாளர்களுக்கு,பணியாளர் இன்சூரன்ஸ், (Employee's State Insurance) மற்றும் பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), கீழ்க்கண்ட அளவில் 11.05.2019 வரையில் ஒப்பந்ததாரர் மூலம் வழங்கப்படும்.

Employee's State Insurance		Employee's Provident Fund		GST
Employer Contribution in the salary	Employee Contribution in the salary	**Employer Contribution in the salary**	Employee Contribution in the salary	
4.75%	1.75%	**13%**	12.00%	**18%**

- தற்போது 12.05.2019 முதல் 31.05.2019 வரை 20 நாட்களுக்கு மட்டும் அட்டவணை1ல் தெரிவிக்கப்பட்டுள்ள 38 காவலர்களுக்கு மாத ஊதியம் மட்டும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
- தற்போது ஒப்பந்தம் முடிவடைந்த நிலையில், பொதுசுகாதார துறை தலைமையிடத்தில் EPF, ESI செலுத்த இயலாத நிலையில், 12.05.2019 முதல் 31.05.2019 வரை 20 நாட்களுக்கு மட்டும் 38 காவலர்களுக்கு EPF மற்றும் ESI (Employer and Employee contribution) செலுத்துவதில் தற்சமயம் விலக்கு அளித்து பின்னர் முடிவு எடுக்கவும்,
- ஒப்பந்ததாரர் இல்லாத காரணத்தினால் அவருக்கு வழங்க வேண்டிய நிர்வாக கட்டணம் வழங்க தேவையில்லை. மேலும், தேசிய நகர்ப்புற சுகாதார திட்டத்தின் மூலமே ஊதியம் நேரடியாக வழங்கப்படுவதால் இந்த கால கட்டத்திற்கு GST யும் செலுத்த தேவையில்லை.
- காவலர்களுக்கு ஊதியத்தினை அவர்கள் பணிபுரியும் நகர்ப்புற சமுதாய நல மையம் மருத்துவ அலுவலர்களுக்கு PWS Account க்கு அளித்து அவர்கள் மூலமாக காவலர்களுக்கு (NEFT/Cheque) ஊதியம் வழங்கலாம்.
- பெருமாள் பேட்டை, செனாய் நகர் மற்றும் சைதாப்பேட்டை மகப்பேறு மருத்துவமனைகள் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் வராத காரணத்தினால், அங்கு நோயாளிகள் நல சங்கம் கிடையாது. எனவே, மருத்துவ அலுவலர்களுக்கு PWS Account ம் கிடையாது. இந்த மருத்துவமனை அமைந்துள்ள மண்டலத்தில் உள்ள சமுதாய நல மையத்தின் மருத்துவ அலுவலர் PWS Accountக்கு ஊதிய தொகையினை அளித்து அவர்கள் மூலம் ஊதியம் வழங்கலாம்.

அட்டவணை. 2

S.No	Name of the EOC Security presently Working	Name of the UCHC the salary fund to be distributed
1	Perumalpet EOC	Sanjeevarayanpet UCHC
2	Shenoy Nagar EOC	Ayanavaram UCHC
3	Saidapet EOC	Vadapalani UCHC

- இவ்வாறு காவலர்களுக்கு ஊதியம் வழங்கும் போது அவர்களின் ஆண்டு வருமானது (ரூ.9400x12=ரூ.1,12,800/) வருமான வரி விலக்கிற்கு உட்பட்டு உள்ளதால், அவர்களுக்கு வருமான வரி பிடித்தம் செய்ய தேவையில்லை.

- மேலும் (20 நாட்களுக்கு மட்டும்) மண்டல மருத்துவ அலுவலர்கள் மூலம் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களிடம் இருந்து வருகை பதிவேடு பெற்று அதற்கான தொகையினை விடுவிக்கலாம்.

அட்டவணை. 3

Name of the Post : Security Guards

Sno	Place	Basic Salary (Rs)	Allowances (Rs)	Total (1+2)	Required Staff	Total Amount (3x4x20 days) (Rs)
		1	2	3	4	5
1	19 UCHC/EOCs	4700	4700	9400	38	2,30,452

எனவே,

1. பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறையில் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் சென்னை மாநகராட்சியில் செயல்பட்டு வரும் 19 இருபத்தி நான்கு மணி நேர அவசரகால மகப்பேறு மருத்துவமனைகளுக்கு தேவையான 38 காவலர்களை ஒப்பந்த அடிப்படையில் 12.02.2018 முதல் 11.02.2019 வரை பன்னிரெண்டு மாத காலத்திற்கு M/s.Monisha Security Service நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டு, மேலும் 12.02.2019 முதல் 11.05.2019 வரையில் 3 மாத காலத்திற்கு பணி நீட்டிப்பு செய்யபட்டது, இதன் தொடர்ச்சியாக அவசர அவசியம் கருதியும், பொதுமக்கள் நலன் கருதியும், மருத்துவமனையின் பாதுகாப்பு கருதியும், அட்டவணை – 1 ல் தெரிவிக்கப்பட்டுள்ள 38 காவலர்களின் ஊதியத்தினை அவர்கள் பணிபுரியும் ஆரம்ப சுகாதார மையத்தின் மருத்துவ அலுவலர்களுக்கு அளித்து, அவர்கள் மூலம் 12.05.2019 முதல் 31.05.2019 வரை 20 நாட்களுக்கு மட்டும், வருகையின் அடிப்படையில் மாத ஊதியம் (NEFT/Cheque) வழங்கவும்,
2. இதற்கான மொத்த செலவினம் ரூ.2,30,452/- (ரூபாய் இரண்டு லட்சத்து முப்பதாயிரத்து நானூற்றி ஐம்பத்தி இரண்டு மட்டும்) மேற்கொள்ள நிர்வாக அனுமதிக்கும்,
3. பெருமாள் பேட்டை, சேனாய் நகர் மற்றும் சைதாப்பேட்டை மகப்பேறு மருத்துவமனைகள் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தின் கீழ் வராத காரணத்தினால், அங்கு நோயாளிகள் நல சங்கம் கிடையாது. எனவே, மருத்துவ அலுவலர்களுக்கு PWS Account ம் கிடையாது. இந்த மருத்துவமனைகளுக்கு அருகாமையில் உள்ள சமுதாய நல மையத்தின் (அட்டவணை எண் 2 ல் தெரிவிக்கப்பட்டவாறு) மருத்துவ அலுவலர் PWS Account க்கு ஊதியம் வழங்கி அவர்கள் மூலம் ஊதியம் வழங்கவும்,
4. நிர்வாக காரணங்களினால் 12.05.2019 முதல் 31.05.2019 வரை 20 நாட்களுக்கு மட்டும் 38 காவலர்களுக்கு EPF மற்றும் ESI (Employer and Employee contribution) செலுத்துவதில் தற்சமயம் விலக்கு அளித்து பின்னர் முடிவு எடுக்கவும்,
5. காவலர்களுக்கு ஊதியம் வழங்கும் போது அவர்களின் ஆண்டு வருமானது (ரூ.9400x12=ரூ.112800/) வருமான வரி விலக்கிற்கு உட்பட்டு உள்ளதால், அவர்களுக்கு வருமான வரி பிடித்தம் செய்வதில் விலக்கு அளிக்கவும்,
6. தேசிய நகர்ப்புற சுகாதார திட்டம் மூலமே ஊதியம் வழங்கப்படுவதால் இந்த கால கட்டத்திற்கு GST செலுத்த தேவையில்லை.
7. மாதந்தோறும், மண்டல மருத்துவ அலுவலர்கள் மூலம் சம்பந்தப்பட்ட மருத்துவ அலுவலர்களிடம் இருந்து வருகை பதிவேடு பெற்று அதற்கான தொகையினை சம்பந்தபட்ட மருத்துவ அலுவலர்களின் வங்கி கணக்கிற்கு(PWS Account) செலுத்தவும்,இப்பணியினை திட்ட மேலாண்மை அலகின் மூலம் (CPMU) மேற்கொள்ளவும்,

சு.து.நக.எண்.NUHM/பி2/2404/2019

8. இதற்கான செலவினம் தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் Human Resources- Other support Staff க்கென வழங்கப்பட்ட தொகையில் (FMR Code U.8.1.10.1) மேற்கொள்ளவும்,
9. சிறப்பு அதிகாரி/ மன்றத்தின் அனுமதி பெற்றபின்னர், இது தொடர்பாக அரசின் பின்னேற்பு ஆணை பெறவும்

மேற்கண்ட 1 முதல் 9 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 9 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.இ9/015012/2019

தீர்மான எண்.301/2019 **நாள்:11-06-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-5 - திருமதி.நிஸார் பேகம், பூங்கா பணியாளர், பணி எண்.719299, பகுதி-12, என்பவர் உடல்நலம் சரியில்லாத காரணத்தினால் மருத்துவ இயலாமை ஓய்வில் செல்ல அனுமதி கடிதம் பெறப்பட்டு, மருத்துவ குழு அறிக்கையின்படி தனியரை 02.11.2018 அன்று மருத்துவ இயலாமை ஓய்வில் செல்வதற்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-12ல் பூங்கா பணியாளராக பணிபுரிந்துவரும் திருமதி.நிஸார்பேகம் (பணி எண்.719299) அவர்கள் கருணை அடிப்படையில் 09.04.1999 அன்று முதல் பணியில் சேர்ந்து பணிபுரிந்து வரும் தனியருக்கு அப்பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண்பருவம் வழங்கப்பட்டும், அப்பதவியில் தேர்வு நிலை ஊதியம் வழங்கப்பட்டுள்ளது. இவர் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏதும் நிலுவையில் இல்லையெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. பணிப்பதிவேட்டின்படி தனியரின் பிறந்த தேதி 25.07.1969 என்பதால் தனியரின் வயது முதிர்வு ஓய்வு நாள்.31.07.2029 ஆகும். தற்போது தனியரின் வயது 50 ஆண்டு 08 மாதம் 23 நாட்கள் ஆகும். மொத்த பணிக்காலம் 20 ஆண்டுகள் 05 மாதங்கள் 07 நாட்கள் ஆகும்.

தனியரின் 10.04.2018 நாளிட்ட கடிதத்தில், தனக்கு முதுகெலும்பு உடைந்து செயலிழந்து உள்ளதால், தன்னால் பணிக்கு வர இயலவில்லை என்பதால், தனக்கு மருத்துவ இயலாமை பணி ஓய்வு அளித்து உதவுமாறு கடிதத்தில் கோரியுள்ளார். தமிழ்நாடு ஓய்வூதிய விதி 1978ன்படி விதி எண்.36(1)ன்படி இக்கடிதத்தினை அரசு மருத்துவ குழுவின் பரிந்துரையின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களின் 20.04.2018 நாளிட்ட கடிதத்தில், திருமதி.நிஸார்பேகம், பூங்கா பணியாளர் அவர்கள் 10.04.2018 அன்று மருத்துவ இயலாமை ஓய்வில் செல்வதற்கு கடிதம் அளித்துள்ளதால், தனியரை மருத்துவ பரிசோதனை செய்து மருத்துவ அறிக்கையினை அளிக்குமாறு முதல்வர், அரசு கஸ்தூரிபாய் மகப்பேறு மருத்துவமனை, திருவல்லிக்கேணி, சென்னை-5க்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இயக்குநர், அரசினர் கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல மருத்துவமனை அவர்களின் 31.10.2018 நாளிட்ட மருத்துவ அறிக்கையில், *"""" Mrs. Nizhar Begam, Poonga Worker, Chennai Corporation met with an accident about 1½ years back and sustained fracture L1 Vertebra with paraplegia. She underwent surgery for the same on 12.07.2017. MRI and X-ray spine and chemical examination done by ortho-pedician and was found that the paraplegia has not recovered yet, there is no bladder control and she has been completely bedridden from the date of injury. The chance of recovery is much remote. Hence recommended invalidation on medical grounds for her. The leave already availed may be regularized on medical grounds"* என தெரிவித்துள்ளதால், தனியர் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணி செய்ய தகுதி அற்றவர் என தெரிய வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, காவல் துறை கண்காணிப்பாளர்/விழிப்பு அலுவலர் அவர்களின் 28.01.2019 நாளிட்ட கடிதத்தில், திருமதி.நிஸார்பேகம், பூங்கா பணியாளர், மண்டலம்-5 அவர்கள் மருத்துவ இயலாமை ஓய்வில் செல்வதால், அன்னார் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி சிப்பந்திகள் கூட்டுறவு சங்கத்தின் 05.10.2018 நாளிட்ட கடிதத்தில், தனியருக்கு கடன் தொகையில் (உறுப்பினர் எண்.H2 19904) ரூ.3,55,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரம் மட்டும்) நிலுவையில் உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களின் 20.05.2019 நாளிட்ட கடிதத்தில், திருமதி.நிஸார்பேகம், பூங்கா பணியாளர் அவர்களின் 10.04.2018 நாளிட்ட கடிதம் மற்றும் இயக்குநர், அரசினர் கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல மருத்துவமனை அவர்களின் 31.10.2018 நாளிட்ட மருத்துவ அறிக்கை மண்டலம்-5ல் 02.11.2018 அன்று பெறப்பட்டுள்ளதன் அடிப்படையில், தனியரை மருத்துவ இயலாமை ஓய்வில் செல்வதற்கு அனுமதி வேண்டி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொ.து.ந.க.எண்.இ9/015012/2019

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 29.05.2019 நாளிட்ட கடிதத்தில், திருமதி.நிஸார்பேகம், பூங்கா பணியாளர் அவர்களின் உடல்நலம் சரியின்மை காரணமாக மருத்துவ இயலாமை ஓய்வில் செல்வதற்கு, மண்டல அலுவலர்-5 அவர்கள் பரிந்துரையுடன், இயக்குநர், அரசினர் கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல மருத்துவமனை, மருத்துவ குழு அறிக்கையில், """" *Mrs. Nizhar Begam, Poonga Worker, Chennai Corporation met with an accident about 1½ years back and sustained fracture L1 Vertebra with paraplegia. She underwent surgery for the same on 12.07.2017. MRI and X-ray spine and chemical examination done by ortho-pedician and was found that the paraplegia has not recovered yet, there is no bladder control and she has been completely bedridden from the date of injury. The chance of recovery is much remote. Hence recommended invalidation on medical grounds for her. The leave already availed may be regularized on medical grounds"* என மருத்துவ அறிக்கையின்படி, தனியர் தொடர்ந்து பணி செய்ய இயலாது என்பதால், 31.10.2018 நாளிட்ட மருத்துவ அறிக்கை, மண்டல அலுவலகம்-5ல் 02.11.2018 அன்று பெறப்பட்டுள்ளதால், தனியரை 02.11.2018 அன்று முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் செல்வதற்கு, ஆணையர் அவர்களின் ஆணை வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்காணும் வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 29.05.2019 நாளிட்ட கடிதத்தின்படி, திருமதி.நிஸார் பேகம், பூங்கா பணியாளர், பணி எண்.719299, பகுதி-12, மண்டலம்-5 அவர்கள் சென்னை மாநகராட்சி சிப்பந்திகள் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ரூ.3,55,000/- (ரூபாய் மூன்று இலட்சத்து ஐம்பத்து ஐந்தாயிரம் மட்டும்) தனியருக்கு வழங்கபடவுள்ள ஓய்வூதிய பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்றும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய முன்பண நிலுவைத்தொகை மற்றும் தணிக்கைத் தடை மற்றும் பிற முன்பண நிலுவை தொகை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், தனியருக்கு வழங்கப்படவுள்ள ஓய்வூதிய பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, 02.11.2018 அன்று பிற்பகல் முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் செல்வதற்கு, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 07.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மருத்துவ இயலாமை ஓய்வில் செல்வதற்கு, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

நி.ம.உ..து.ந.க.எண்.எல்இ9/3656/2018

தீர்மான எண்.302/2019 **நாள்:11-06-2019**

நிலம் மற்றும் உடைமைத் துறை - மண்டலம் 11, மதுரவாயல் வட்டம் மற்றும் கிராமம், புல எண்.426, மொத்த விஸ்தீரணம். 01.44.5 ஹெக்டேர்ஸ் மேய்க்கால் வகைப்பாடு நிலத்தில் சுமார்.0.07.5 ஹெக்டேர்ஸ் நிலத்தினை வட்டார போக்குவரத்து அலுவலகம் கட்ட போக்குவரத்து துறைக்கு நில மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு அனுமதி.

சென்னை மாவட்ட ஆட்சியரின் 02.11.2018 நாளிட்ட கடிதத்தில் மண்டலம்-11, சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம் மற்றும் கிராமம், புல எண்.426, மொத்த விஸ்தீரணம்.01.44.5 ஹெக்டேர்ஸ் மேய்க்கால் வகைபாடு கொண்டுள்ள நிலத்தில் சுமார்.0.07.5 ஹெக்டேர்ஸ் நிலம் மட்டும் வட்டார போக்குவரத்து அலுவலகம் (சென்னை-தென்மேற்கு) அலுவலகத்திற்கு சொந்த கட்டிடம் கட்ட போக்குவரத்து துறைக்கு நில மாற்றம் செய்ய உத்தேசிக்கப்பட்டு முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டுள்ளதாகவும், மேற்படி புலமானது பெருநகர சென்னை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள கால்நடைத்துறைக்கு சொந்தமான மேய்க்கால் வகைப்பாடு கொண்ட அரசு புறம்போக்கு நிலமாகும். இந்நிலத்தில் ஏற்கனவே சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமுதாயக்கூடம் (தற்போது மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகமாக செயல்பாட்டில் உள்ளது) சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் போன்ற அரசு அலுவலகங்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தி வரும் சென்னை மாநகராட்சி கட்டுபாட்டில் உள்ள பூங்கா ஆகியவை அமைந்துள்ளதால் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் வாடகை கட்டிடத்தில் இயங்கி வரும் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு சொந்த கட்டிடம் கட்ட போக்குவரத்து துறைக்கு நில மாற்றம் செய்ய தீர்மானம் நிறைவேற்றி வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தனி வட்டாட்சியர்/நிமஉது அவர்களின் 01.02.2019 நாளிட்ட புலத்தணிக்கை குறிப்பில் மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலகம் கட்ட முன்மொழிவுகள் அனுப்பப்பட்ட புலத்தில் சமுதாயக்கூடமாக இருந்து தற்போது தற்காலிகமாக மதுரவாயல் வட்டாட்சியர் அலுவலகமாக செயல்பட்டு வரும் கட்டிடமாக உள்ளதாகவும், மேலும் இதே புலத்தில் மாநகராட்சி பூங்கா, குடிநீர் வடிகால் வாரியம் கட்டிடம் (ம) மேல்நிலைத்தொட்டி அமைந்துள்ளது எனவும், இதே புலத்தில் முன்பகுதியில் வடக்கு புறமாக வள்ளி சிரபாலிஸ்வரர் கோயில் உள்ளது எனவும், வட்டாட்சியர் அலுவலகம் அமைந்துள்ள கட்டிடத்தில் அருகில் கிழக்காக உள்ள காலி இடத்தில் 750 சதுர மீட்டர் வட்டாரப் போக்குவரத்து சென்னை தென்மேற்கு அலுவலகம் கட்ட நிலம் தேர்வு செய்யப்பட்டுள்ளது என்றும், இதனை ஒட்டிய பகுதியில் ஆக்ரமணம் செய்து சில ஆஸ்பெஸ்டாஸ் ஷீட் வீடுகள் கட்டப்பட்டுள்ளது என்றும், கோயிலுக்கும் இப்புலத்திற்கும் இடையில் சிறிய பாதை செல்வதாகவும், மேற்படி 750 சதுர மீட்டர் நிலம் மேய்க்கால் என்பதால் இதற்கு சமமான நிலம் திருவள்ளூர் மாவட்டம் பூந்தமல்லி நூம்பல் கிராமத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும், அதனடிப்படையில் மேற்படி புலத்தில் 750 சதுர மீட்டர் நிலத்தை சென்னை தென்மேற்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலக கட்டிடம் கட்ட பெருநகராட்சி மூலம் இசைவு அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட மண்டலம்-11, சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம் மற்றும் கிராமம், புல எண்.426, மொத்த விஸ்தீரணம். 01.44.5 ஹெக்டேர்ஸ் மேய்க்கால் வகைப்பாடு நிலத்தில் சுமார்.0.07.5 ஹெக்டேர்ஸ் நிலத்தினை வட்டார போக்குவரத்து அலுவலகம் கட்ட போக்குவரத்து துறைக்கு நில மாற்றம் செய்ய பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை தெரிவிப்பது தொடர்பாக மேற்கண்ட நிலத்தினை ஆய்வு செய்து விரிவான அறிக்கை அளிக்குமாறு 15.02.2019 நாளிட்ட இவ்வலுவலக கடிதம் மூலம் 11-வது மண்டல அலுவலரிடம் கேட்டுக்கொள்ளப்பட்டது.

11-வது மண்டல அலுவலரின் 27.02.2019 நாளிட்ட கடிதத்தில் சென்னை மாவட்டம், மதுரவாயல் கிராமம், புல எண்.426, மேய்க்கால் வகைப்பாட்டில் அமையப்பெற்ற சுமார் 750. சதுர மீட்டர் அளவில் வட்டார போக்குவரத்து அலுவலகம் கட்ட தேர்வு செய்யப்பட்டுள்ள இந்நிலத்தை வட்டார போக்குவரத்து துறைக்கு நில மாற்றம் செய்வதற்கு பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-11 சார்பாக எவ்வித தடையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, மண்டலம் 11, வார்டு-147, சென்னை மாவட்டம், மதுரவாயல் வட்டம் மற்றும் கிராமம், புல எண்.426, மொத்த விஸ்தீரணம். 01.44.5 ஹெக்டேர்ஸ் மேய்க்கால் வகைப்பாடுள்ள நிலத்தில் சுமார்.0.07.5 ஹெக்டேர்ஸ் (8073 சதுர அடி) நிலத்தினை வட்டார போக்குவரத்து அலுவலகம் கட்ட போக்குவரத்து துறைக்கு நில மாற்றம் செய்ய கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 07.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

நிபந்தனைகள்;-

1. மேற்படி வட்டார போக்குவரத்து அலுவலகம் கட்ட போக்குவரத்து துறைக்கு நில மாற்றம் செய்யப்படவுள்ள மேய்க்கால் நிலத்திற்கு மாற்று புலமாக அதே பரப்பளவு நிலத்தினை வருவாய்த்துறையினரால் கால்நடை பராமரிப்புத்துறைக்கு ஒப்படைக்கப்பட வேண்டும்.
2. மேற்கண்ட நிலத்தினை எத்தகைய பயன்பாட்டிற்கு ஒப்படைக்கப்படுகிறதோ, அத்தகைய பயன்பாட்டிற்கு மட்டுமே பயன்படுத்தப்படவேண்டும்.

"நிபந்தனைகளுடன், பெருநகர சென்னை மாநகராட்சியின் இசைவினை சென்னை மாவட்ட ஆட்சியருக்கு தெரிவிப்பதற்கு, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

தொ.நோ.ம.மனை.ந.க.எண்.அ2/263/2016

தீர்மான எண்.303/2019 **நாள்:11-06-2019**

பொது சுகாதாரத்துறை - தொற்றுநோய் மருத்துவமனை - பல்நோக்கு சுகாதார பணியாளர் / சுகாதார ஆய்வாளர் (ஆண்கள்) பயிற்சி துவக்குதல் - அரசு ஆணை பெறப்பட்டது - 2019 -2020 ஆண்டிற்கான பயிற்சியை துவக்க அனுமதி - இப்பயிற்சிக்கு தேவையான ஆசிரியர்கள் மற்றும் இதர அலுவலர்கள் நியமிக்க அனுமதி.

சுகாதாரம் மற்றும். குடும்ப நலத்துறையின் அரசாணை (நிலை) எண். 215, நாள் 6.9.2016ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, தொற்றுநோய் மருத்துவமனையில் ஆண்டுதோறும் 30 நபர்களுக்கு பல்நோக்கு சுகாதார பணியாளர் / சுகாதார ஆய்வாளர் (ஆண்கள்) பயிற்சி வழங்க அனுமதி பெறப்பட்டது.

மன்றத்தீர்மான எண். 513/2016, நாள் : 09.09.2016ல் 2016-2017ம் ஆண்டு முதல் இப்பயிற்சியினை துவக்குவதற்கு இப்பயிற்சிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பாடபுத்தகத்தினை கொள்முதல் செய்யவும், இப்பயிற்சிக்கு தகுதியான ஒரு பயிற்றுநர் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தவும், இப்பணிகளுக்கு ஆகும் தோராய செலவினத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து அணுமதிக்கப்பட்டிருந்தது. பல்வேறு நிர்வாக காரணங்களால் 2016 – 2017ம் ஆண்டு முதல் 2018 – 2019ம் ஆண்டு வரை இப்பயிற்சியை துவக்க இயலாத நிலை இருந்தது.

சுகாதாரம் மற்றும். குடும்ப நலத்துறையின் அரசாணை (நிலை)எண் 107 நாள். 13.04.2017ல் இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை அவர்கள் இப்பயிற்ச்சிக்கான தேர்வுகளை நடத்துவதற்கு தேர்வு வாரியமாக அனுமதித்தும், இப்பயிற்சியினை நடத்துவதற்கு புதிய வழிகாட்டி நெறிமுறைகளை இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை அவர்களின் 05.05.2018 நாளிட்ட கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 2018 – 2019ம் கல்வியாண்டிற்கு இப்பயிற்சியினை துவங்க வேண்டி முதற்கட்டமாக 30 மாணவர்களுக்கு இரண்டாண்டு பயிற்சி வழங்க அறிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இப்பயிற்சி நடத்த இயக்குநர் பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறை அவர்களின் கடிதத்தில், கீழ்கண்டவாறு கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அட்டவணை - 1.

வ. எண்	பொருள்	தொகை
1.	விண்ணப்பக்கட்டணம்	ரூ 10,000/-
2.	பள்ளி பதிவுக்கட்டணம் (ஆண்டிற்கு)	ரூ 5,000/-
3.	ஆய்வு கட்டணம் / அனுமதி கட்டணம் / ஒப்புதல் கட்டணம் (ஒருமுறை)	ரூ 1,00,000/-
4.	தேர்வு வாரிய நிர்வாக செலவின கட்டணம்	ரூ.500/- (ஒரு மாணவருக்கு)
5.	சுகாதார சான்றிதழ் கட்டணம்	ரூ 1,000/-
6.	குடியேற்ற சான்றிதழ் கட்டணம்	ரூ 1,000/-

- வரிசை எண்.1 முதல் 3 முடிய மட்டும் ரூ.1,15,000/-
- வரிசை எண்.. 5 முதல் 6 வரை செலுத்த தேவையில்லை
- வரிசை எண். 4 மாணவர்களிடமிருந்து வசூலித்து செலுத்தப்பட வேண்டும்.
- வரிசை எண்.3ல் தெரிவிக்கப்பட்டுள்ள கட்டணத்தை செலுத்துவதற்கு அரசிடம் விலக்கு கோரவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

தொ.நோ.ம.மனை.ந.க.எண்.அ2/263/2016

மேலும், இப்பயிற்சி பயிலும் மாணவர்களுக்கு பாடம் நடத்துவதற்கும் மற்றும் மற்ற அலுவலக பணிகளுக்கு தேவையான அலுவலர்களை நியமனம் செய்ய, வழிகாட்டு நெறிமுறைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளபடி, கீழ்கண்டுள்ள அட்டவணை – 2, மற்றும் 3ல் உள்ளவாறு நியமிக்க அவசியமாகிறது.

அட்டவணை - 2

வ. எண்	கல்வித்தகுதி	பதவி	எண்ணிக்கை	நியமனம் செய்யப்பட இருக்கும் அலுவலர்கள்
1.	சுகாதார அலுவலர் (அ) பொது சுகாதாரத்தில் பட்டயப்படிப்பு பயின்ற பொது சுகாதார வல்லுநர் (அ) பொது சுகாதாரத்துறையில் மேற்படிப்பு (அ) சமுதாய மருத்துவத்தில் பட்ட மேற்படிப்பு	கல்லூரி முதல்வர்	1	கூடுதல் சுகாதார அலுவலர் / இயக்குநர் தொ.நோ.ம.மனை (DPH முடித்திருக்க வேண்டும்)
2.	பொது சுகாதாரத்தில் பட்டயம் பெற்ற தகுதிபெற்ற மருத்துவ அலுவலர்	மருத்துவ ஆசிரியர்	1	ஏதேனும் ஒரு மண்டல நல அலுவலர் / மருத்துவ அலுவலர்
3.	துப்புரவு பொறியாளர் கட்டட பொறியியல் துறையில் இளநிலை அல்லது முதுநிலை	பொது சுகாதார பொறியாளர்	1	உதவி செயற்பொறியாளர் , மண்டலம்- 4 பகுதி-10 வார்டு.43,
4.	பூச்சியியலாளர் முதுநிலை விலங்கியல் பட்டயப்படிப்பு	முதுநிலைபூச்சியியலாளர்	1	முதுநிலை பூச்சியியலாளர்
5.	நுண்ணுயிரியலாளர் முதுநிலை மருத்துவம் / பயன்பாட்டு நுண்ணுயிரியல்	நுண்ணுயிரியலாளர்	1	நுண்ணுயிரியலாளர், தொற்றுநோய் மருத்துவமனை
6.	புள்ளியியலாளர், இளநிலை / முதுநிலை (புள்ளிவிவரம் / கணிதம்)	புள்ளியியலாளர்	1	*(on call from the statistical department)*
7.	சுகாதார கல்வியாளர் - முதுநிலை பட்டயப்படிப்பு சுகாதாரக் கல்வி / பொது சுகாதாரம்	சுகாதார கல்வியாளர்	1	சுகாதார கல்வியாளர் சென்னை மாநகராட்சி

8.	பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துத்துறையில் வழங்கப்பட்ட சுகாதார ஆய்வாளர் சான்றிதழ் பயிற்சி பெற்ற துப்புரவு அலுவலர் (ஒவ்வொரு 10 பயிற்சியாளருக்கும் ஒரு துப்புரவு அலுவலர்)	களப்பணி ஆசிரியர்	4	மருத்துவ அலுவலர்கள்/ துப்புரவு அலுவலர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி
9.	ஆய்வக தொழில்நுட்புனர் - அரசு அங்கீகாரம் பெற்ற கல்விநிலையத்தில் இருந்து சான்றிதழ் / பட்டயம் பெற்றிருக்க வேண்டும்.	ஆய்வக தொழில்நுட்புநர்	1	ஆய்வக தொழில்நுட்புநர், தொற்றுநோய் மருத்துவமனை
10.	கொத்தனார்	கொத்தனார்	1	ஒப்பந்த அடிப்படையில் (On contract on call)

அட்டவணை -3

வ. எண்	பதவியின் பெயர்	எண்ணிக்கை	நியமனம் செய்யப்பட இருக்கும் அலுவலர்கள்
1.	கண்காணிப்பாளர் / கணக்காளர்	1	பகுதி நேர கண்காணிப்பாளர் / கணக்காளர் ஒப்பந்த அடிப்படையில்
2.	உதவியாளர்	1	தொற்றுநோய் மருத்துவமனையின் உதவியாளர்
3.	தட்டச்சர்	1	தொற்றுநோய் மருத்துவமனையின் தட்டச்சர்
4.	ஓட்டுநர்	1	தொற்றுநோய் மருத்துவமனையின் ஓட்டுநர்
5.	துலக்குநர்	1	தொற்றுநோய் மருத்துவமனையின் துலக்குநர்
6.	அலுவலக உதவியாளர்	1	தொற்றுநோய் மருத்துவமனையின் அலுவலக உதவியாளர்
7.	துப்புரவு தொழிலாளி / காவலர்	1	தொற்றுநோய் மருத்துவமனையின் துப்புரவு தொழிலாளி / காவலர்

இப்பயிற்சிக்கு தேவையான உபகரணங்கள், புத்தகங்கள் மற்றும் கட்டுமான சுகாதார பொறியியல் பயிற்சி பணிமனை அமைக்க ஆகும் செலவினங்கள் அட்டவணை - 4 மற்றும் 5ல் உள்ளவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

அட்டவணை - 4

(Non - Recurring Fund)

வ. எண்	உபகரணங்கள்	தோராயமான தொகை (தொடர்ச்சியாக இல்லை)
1.	மாதிரி கண்ணாடிகள் மற்றும் மாதிரிகள் (Slides and Models)	ரூ 2,00,000/-
2.	புத்தகங்கள்	ரூ 1,00,000/-
மொத்தம்		ரூ 3,00,000/-

மேலும் இப்பயிற்சி மாணவர்களுக்கு கீழ்க்காணும் கட்டுமானங்களை சுகாதார பொறியியல் பயிற்சி பணிமனைக்காக அமைக்க வேண்டியுள்ளது.

அட்டவணை - 5

(Non -Recurring Fund)

வ.எண்	கட்டுமான வகைகள்
1.	பலவகையான கழிவறை வார்ப்பு (Casting of latrine Plates)
2.	கை பம்புகள் கையாளுதல் மற்றும் பராமரித்தல் (Operation and Maintenance of hand pumps)
3.	பல்வேறு பிளம்பிங் பயன்பாடு மற்றும் கழிவுநீர் பயன்பாடுகள் (Different plumbing appurtenance and sewerage appurtenances)

அட்டவணை - 6

(Recurring Fund)

வ. எண்	விரிவுரையாளர்கள்	தோராயமான தொகை (ஆண்டு தோறும்)
1.	கௌரவ விரிவுரையாளர்களுக்கான மதிப்பூதியம் (ரூ.1000/- ஒரு பயிற்சி வகுப்புக்கு)	ரூ 2,40,000/-
2.	ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்படும் பயிற்சி ஆசிரியர் (Retired SO / SI) ஊதியம் (ஒரு வருடத்திற்கு 20000 x 12 + GST + Service Charge)	ரூ 3,11,520/-
3.	முன்பணத் தொகை (கூட்டம், எழுதுபொருட்கள், சிற்றுண்டி) ஒரு வருடத்திற்கு	ரூ 2,00,000/-
4.	பகுதி நேர கண்காணிப்பாளர் / கணக்காளர் ஒப்பந்த அடிப்படையில் ஊதியம் (ஒரு வருடத்திற்கு 1000 x 12 + GST + Service Charge)	ரூ. 12,000/-
மொத்தம்		ரூ 7,63,520/-

தொ.நோ.ம.மனை.ந.க.எண்.அ2/263/2016

பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களின் வாரிசுகளுக்கும், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளியில் பயிலும் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கு முன்னுரிமை அளித்து இரண்டு வருட பயிற்சினை அளிக்க உள்ளதால், மாணவர்களுக்கு இப்பயிற்சியை தேர்வு வாரிய நிர்வாக செலவின கட்டணம் தவிர்த்து ஆய்வுக் கட்டணம் / அனுமதி கட்டணம் மற்றும் ஒப்புதல் கட்டணம் செலுத்த விலக்கு அளிக்கவும் கோரவும், மேலும், இப்பயிற்சிக்காக மாணவர்களிடமிருந்து பயிற்சி கட்டணமாக மாதந்தோறும் ரூ.700/- வசூலிக்கவும், அத்தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி கருவூலத்தில் செலுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மேலும் சுகாதாரம் மற்றும். குடும்ப நலத்துறையின் அரசாணை (நிலை) எண் 215 நாள்.6.9.2016ன்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, தொற்று நோய் மருத்துவமனையில் ஒரு வருட பயிற்சி நடத்துவதற்கு மட்டுமே அனுமதி அளிக்கப்பட்டுள்ள நிலையில், இயக்குநர், பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத்துறை அவர்களின் புதிய நெறிமுறைகளின்படி, பல்நோக்கு சுகாதார பணியாளர் / சுகாதார ஆய்வாளர் (ஆண்கள்) பயிற்சியினை இரண்டாண்டு பயிற்சியாக வழங்கப்பட வேண்டியுள்ளது. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியின் தொற்றுநோய் மருத்துவமனையில் நடைபெற இருக்கும் இப்பயிற்சினை, இரண்டாண்டு பயிற்சியாக நடத்த அரசு அனுமதி பெற வேண்டியுள்ளது.

மேலும், மாணவர்கள் சேர்க்கையினை நடைமுறையிலுள்ள இனவரிசை பட்டியலின் அடிப்படையில் தெரிவு செய்யவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரத்துறை தொற்றுநோய் மருத்துவமனையில் ஆண்டுதோறும் 30 மாணவர்களுக்கு பல்நோக்கு சுகாதார பணியாளர் / சுகாதார ஆய்வாளர் (ஆண்கள்) பயிற்சி அளிக்க,

அ) அட்டவணை - 2, மற்றும் 3ல் உள்ள அலுவலர்கள் மற்றும் ஆசிரியர்களை கூடுதல் பணி மேற்கொள்ள நியமித்துக் கொள்வதற்கும்,

ஆ. இப்பயிற்சிக்கு தேவையான உபகரணங்கள், புத்தகங்கள் வாங்க ஆகும் தோராய செலவினம் ரூ 3,00,000/- நிதி ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,

இ) இப்பயிற்சி பணியை ஒருங்கிணைத்து நடத்திச் செல்ல பயிற்றுநர் ஆசிரியர் மற்றும் பகுதி நேர கண்காணிப்பாளர் / கணக்காளர் ஒருவரை அட்டவணை - 6ல் வரிசை எண் 2 மற்றும் 4ல் கண்டுள்ளவாறு ஒப்பந்த அடிப்படையில் தனியார் நிறுவனம் _லம் (out sourcing basis) நியமிக்கவும் மற்றும் கௌரவ விரிவுரையாளருக்கான மதிப்பூதியம் வழங்கவும் ஆகும் தோராய செலவினம் ரூ 5,63, 520/- க்கு அனுமதியும்,

ஈ) இப்பயிற்சிக்கான எழுதுபொருட்கள், கலந்தாய்வு கூட்டம், சிற்றுண்டி போன்ற இதர செலவினங்களுக்கு ரூ 2,00,000/- நிதி ஒதுக்கவும் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து ரூ 20,000/- சுழல் நிதி முறையில் முன்பணம் பெற்று நேர் செய்யவும்,

உ) மேற்கண்டுள்ள செலவினங்களுக்கு ரூ, 12,00,000/- கணக்குத் தலைப்பு எண் 30-32-01 / 750-200-500ல் ஒதுக்கீடு செய்து செலவுகளை மேற்கொள்ள நிர்வாக அனுமதியும்,

ஊ) அட்டவணை 5ல் கண்டுள்ள கட்டுமானங்களை மண்டல அலுவலர்-4 அவர்கள் மூலமாக மேற்கொள்ளவும்

எ) மாணவர்கள் சேர்க்கையினை நடைமுறையிலுள்ள இனவரிசை பட்டியலின் அடிப்படையில் தெரிவு செய்யவும்,

மேற்கண்ட அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 04.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"அ முதல் எ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

க.து.ந.க.எண்.பி1 /388/2019

தீர்மான எண்.304/2019 **நாள்:14-06-2019**

கட்டடத்துறை - மண்டலம்- 10, வார்டு - 134, கோடம்பாக்கம், காமராஜர் காலனியில் ஏற்கனவே உள்ள உடற்பயிற்சி கூடத்தின் முதல் தளத்தில் குத்து சண்டை அறையும் இரண்டாம் தளத்தில் உள் விளையாட்டு அரங்கம் கட்டும் பணிக்காக *M/s CVT Enterprises* அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்- 10, வார்டு - 134, கோடம்பாக்கம், காமராஜர் காலனியில் ஏற்கனவே உள்ள உடற்பயிற்சி கூடத்தின் முதல் தளத்தில் குத்து சண்டை அறையும், இரண்டாம் தளத்தில் உள் விளையாட்டு அரங்கம் கட்டும் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மான எண் 131/2019 நாள் 20.02.2019
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் - 10
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டியலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2018 -2019 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ. 1,05,70,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ 81,97,270.91
	(ஆ) மேலான மேற்பார்வை செலவு	ரூ 8,19,727.09
	(இ) சிறு மேற்பார்வை செலவு	ரூ 2,04,931.77
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 81,972.71
	(உ) எதிர்பாரா செலவு	ரூ. 2,00,452.30
	(எ) தரக்கட்டுபாடு	ரூ. 81,972.71
	(ஏ) சரக்கு மற்றும் சேவை வரி 12%	ரூ. 9,83,672.51
	மொத்தம்	ரூ. **1,05,70,000.00**
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. டெக்கான் குரோனிக்கல் 23.02.2019 2. மக்கள்குரல் நாள் 23.02.2019
7	ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்	28.02.2019
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	மூலதனநிதி
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம்(குறுகிய கால ஒப்பம்)
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	ஐந்து (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது

க.து.ந.க.எண்.பி1 /388/2019

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	பணியின் அலுவலக மதிப்பு 2018-2019 (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு
1	VRK Builders	81,97,270.91	87,21,896.25	(+6.40% அதிகம்
2	A.Balaji	81,97,270.91	90,00,603.46	(+)9.80% அதிகம்
3	Raj Developers	81,97,270.91	89,92,406.19	(+)9.70% அதிகம்
4	S.Valli	81,97,270.91	1,06,56,452.18	(+)30.00% அதிகம்
5	CVT Enterprises	81,97,270.91	77,88,227.09	(-)4.99% குறைவு

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 28.02.2019 அன்று ஐந்து ஒப்பங்கள் e-Tender மூலமாக பெறப்பட்டன. இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான M/s CVT Enterprises அவர்களின் ஒப்பத் தொகை 2018-2019 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ. 81,97,270.91யைவிட (-)4.99% குறைவாகும். 01.03.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததரரர் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ. 77,88,227.09 மற்றும் ஒப்ப சதவீதம் (-)4.99% ஆகும்.

01.03.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததரரர் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்த விவரங்கள்

ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்	ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்பத் தொகை 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி 12% GST சேர்த்து	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகையினை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (12% GST சேர்த்து) ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம்
CVT Enterprises	ரூ .87,22,814.34	(-)13.67% குறைவு

இவ்வொப்பத் தொகையானது 2018-2019ம் ஆண்டின் அலுவலக விலைப் பட்டியலை விட குறைவாகவும் (12% GST உடன் சேர்த்து) சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-)13.67% குறைவாகவும் உள்ளது.

பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட மூலப் பொருட்கள் விலை, தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் போக்குவரத்து வாகன செலவு ஆகியவற்றிற்கான விலை விரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீடு தொகை மற்றும் இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 25.09.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007 ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

க.து.ந.க.எண்.பி1 /388/2019

மேலே குறிப்பிட்டுள்ளவாறு 01.03.2019 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக (12% சரக்கு மற்றும் சேவைவரி உட்பட) ரூ .87,22,814.34க்கு ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை M/s CVT Enterprises அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த விலைப்புள்ளி அளித்த ஒப்பந்ததாரரான M/s CVT Enterprises அவர்களுக்கு ஒப்பத் தொகை (12% சரக்கு மற்றும் சேவைவரி உட்பட) ரூ.87,22,814.34 க்கு 2018-2019ம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி (-)4.99% குறைவான விழுக்காட்டிற்கு பணிகள் அளிக்கவும், ஒப்பத்தை ஏற்று பணி ஆணை வழங்கவும் சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 11.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

க.து.ந.க.எண்.பி2/097/2018

தீர்மான எண்.305/2019 **நாள்:14-06-2019**

கட்டடத்துறை - மண்டலம்-8, வார்டு-101, சென்னாய் நகரில் உள்ள அம்மா அரங்கத்தில் இரண்டாம் தளத்துடன் connecting corridar and lift room, kitchen cum store building கூடுதல் பணிக்காக Th.V.Karuthiruman அவர்களுக்கு ஒப்பம் வழங்க அனுமதி.

1	பணியின் பெயர்	மண்டலம்-8, வார்டு-101, சென்னாய் நகரில் உள்ள அம்மா அரங்கத்தில் இரண்டாம் தளத்துடன் *connecting corridar and lift room, kitchen cum store building* கூடுதல் பணி.
2	மதிப்பீட்டிற்கு ஒப்புதல் பெற்ற விவரம்	சிறப்பு அதிகாரி(மன்றம்) அவர்களின் தீர்மான எண் 135/2019 நாள் 20.02.2019
3	எந்த துறைக்காக இந்த பணி செயலாக்கம்	மண்டலம் – 8
4	மதிப்பீடு எந்த வருடத்தின் விலைப்பட்டிலை முன் வைத்து தயாரிக்கப்பட்டது	2018 -2019 ஆம் ஆண்டின் அலுவலக விலை விவரப்படி
5	மதிப்பீட்டின் தொகை	ரூ.64,25,000.00
	(அ) கட்டுமான பணி செலவு	ரூ.49,95,000.00
	(ஆ) சிறு மேற்பார்வை செலவு	ரூ. 1,24,875.00
	(இ) எதிர்பாரா செலவு	ரூ. 1,24,875.00
	(ஈ) தமிழ்நாடு கட்டுமான தொழிலாளர்கள் நல வாரியம் 1%	ரூ. 49,950.00
	(உ) மின்சாரம் மற்றும் பிற இனங்களுக்கு	ரூ. 31,400.00
	(ஊ) சரக்கு மற்றும் சேவை வரி 12 %	ரூ. 5,99,400.00
	(எ) மேலான மேற்பார்வை செலவு 10%	ரூ. 4,99,500.00
	மொத்தம்	ரூ. **64,25,000.00**
6	எந்தெந்த பத்திரிக்கையில் ஒப்பம் பிரசுரிக்கப்பட்டது/நாள்	1. டெக்கான் குரோனிக்கல் 23.02.2019 2. மக்கள்குரல் நாள் 23.02.2019
7	ஒப்பந்ததப்புள்ளி ஏற்றுக்கொள்வதற்கான கடைசி நாள்	28.02.2019
8	நிதியின் தன்மை மற்றும் கணக்கு குறியீட்டு எண்	மூலதனநிதி
9	ஒப்பம் செய்தித்தாளில் பிரசுரிக்கப்பட்ட நாளிலிருந்து 15 நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளதா?	ஆம் (குறுகிய கால ஒப்பம்)
10	எத்தனை ஒப்பங்கள் பெறப்பட்டன	நான்கு (e-Tender) இணையத்தளத்தின் மூலம் ஒப்பப்படிவம் பெறப்பட்டுள்ளது

க.து.ந.க.எண்.பி2/097/2018

ஒப்பத்தில் பங்கேற்றவர்களின் விவரம்

வ எண்	ஒப்பத்தில் பங்கேற்றவர் பெயர்கள் திரு/ திருவாளர்கள் / திருமதி	பணியின் அலுவலக மதிப்பு 2018-2019 (ரூ)	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை (ரூ)	விலைவிகிதம் விழுக்காடு அதிகம்/குறைவு
1	VRK Builders	49,95,000.00	51,94,800.31	(+)4.00% அதிகம்
2	V.Karuthiruman	49,95,000.00	50,17,477.80	(+)0.45% அதிகம்
3	Selvakumar Raju	49,95,000.00	72,42,750.44	(+)45.00% அதிகம்
4	Sri Venkateswara Contractors	49,95,000.00	51,44,850.31	(+)3.00% அதிகம்

மேற்கண்ட பணிக்காக ஒப்பங்கள் கோரப்பட்டு ஒப்ப இறுதி நாளான 28.02.2019 அன்று நான்கு ஒப்பங்கள் e-Tender மூலமாக பெறப்பட்டன. இவர்களில் குறைந்த ஒப்பந்ததாரரான Th.V.Karuthiruman அவர்களின் ஒப்பத் தொகை 2018-2019 ஆம் ஆண்டின் இவ்வலுவலக பணி மதிப்பீட்டுத் தொகையான ரூ. 49,95,000/-யைவிட (+)0.45% அதிகமாகும். 01.03.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததரரர் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். இதன்படி ஒப்பந்ததாரர் அளித்துள்ள ஒப்பத்தொகை ரூ. 50,17,477.80 மற்றும் ஒப்ப சதவீதம் (+)0.45% ஆகும்.

01.03.2019 அன்று நடத்தப்பட்ட பேச்சுவார்த்தைக்குப்பின் ஒப்பந்ததரரர் விலை குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்த விவரங்கள்

ஒப்பந்ததாரர் பெயர் திரு/ திருவாளர்கள்	ஒப்பந்ததாரர் அளித்த இறுதி ஒப்பத் தொகை 2018-2019 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி 12% GST சேர்த்து	ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகையினை சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (12% GST சேர்த்து) ஒப்பந்ததாரரின் ஒப்ப சதவீதம்
Th.V.Karuthiruman	ரூ .56,19,575.10	(-)9.86% குறைவு

இவ்வொப்பத் தொகையானது 2018-2019ஆம் ஆண்டின் அலுவலக விலைப் பட்டியலை விட கூடுதலாகவும் (12% GST உடன் சேர்த்து) சந்தை விலையுடன் ஒப்பிடுகையில் (-)9.86% குறைவாகவும் உள்ளது.

பணிகள் முன்னேற்றம் கருதி ஒப்பம் திறக்கப்படும் வாரத்தில் வெளியிடப்பட்ட மூலப் பொருட்கள் விலை, தொழிலாளர்களின் ஊதியம் மற்றும் போக்குவரத்து வாகன செலவு ஆகியவற்றிற்கான விலை விரங்களின் அடிப்படையில் பணிகளுக்கான மதிப்பீடு தொகை மற்றும் இரண்டினையும் ஒப்பிட்டு, ஏற்படும் வித்தியாச சதவீதத்தில் பணிகள் வழங்கலாம் என 25.09.2007 நாளிட்ட தீர்மான எண்.512/2007 ன்படி மன்றம் அனுமதி அளித்துள்ளது.

க.து.ந.க.எண்.பி2/097/2018

மேலே குறிப்பிட்டுள்ளவாறு 01.03.2019 அன்று ஒப்ப கூர்ந்தாய்வுக் குழுவில் (TENDER SCRUTINY COMMITTEE) மேற்கண்ட பணிக்காக (12% சரக்கு மற்றும் சேவைவரி உட்பட) ரூ .56,19,575.10க்கு ஒப்பத்தை ஏற்று இவ்வொப்பப்பணியை Th.V.Karuthiruman அவர்களுக்கு வழங்கலாம் என பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட பணிக்கு குறைந்த ஒப்பந்ததாரரான Th.V.Karuthiruman அவர்களுக்கு ஒப்பத் தொகை (12% சரக்கு மற்றும் சேவைவரி உட்பட) ரூ .56,19,575.10க்கு 2018-2019ஆம் ஆண்டு அலுவலக விலைப்பட்டியலின்படி (+)0.45% அதிகமான விழுக்காட்டிற்கு பணிகள் அளிக்கவும், ஒப்பத்தை ஏற்று பணி ஆணை வழங்கவும் சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு (வரிவிதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 11.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஒப்பம் வழங்க சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ம.அ.7.ந.க.எண்.இ1/ 3889/2019

தீர்மான எண்.306/2019 **நாள்:14-06-2019**

மண்டலம்-7(அம்பத்தூர்) மற்றும் மண்டலம் 11 (வளசரவாக்கம்) - அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகம்- தினமும் சேகரிக்கப்படும் 480 மெ.டன் குப்பைகளை அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் இருந்து தினமும் அள்ளிச் சென்று கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் 180 நாட்களுக்கு கொட்டும் பணி ஒப்பந்ததாரர் திருவாளர்கள் S.P. பில்டர்ஸ் நிறுவனத்தாரின் ஒப்பக்காலம் 09.06.2019 உடன் பணி முடிவடைய உள்ளது. அதே ஒப்பந்ததாரரான திருவாளர்கள் S.P. பில்டர்ஸ் மூலம் 25 சதவிகிதம் மிகாமல் பணியினை தொடர்ந்து மேற்கொள்ள கூடுதல் செலவினம் ரூ.79,16,400/- க்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட அம்பத்தூர், மண்டலம்-7 ஆனது 43.52 சதுர கி.மீ. பரப்பளவுள்ள 15 வார்டுகளை உள்ளடக்கிய பகுதியாகும். இந்த மண்டலத்தில் 35 எண்ணிக்கையில் பேருந்து சாலைகள் மற்றும் 3448 கி.மீ உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 528534 ஆகும். இம்மண்டலம், நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக விளங்குவதால், நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கள் தொகை வளர்ச்சி அடைந்து வருகிறது.

இங்கு சேகரிக்கப்படும் குப்பைகள் அத்திப்பட்டு குப்பை மாற்று வளாகத்தில் கொட்டி, தினமும் பெரிய கொள்ளளவு லாரிகளை கொண்டு தனியார் மூலம் அகற்றி கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது. மேலும், இப்பணிக்கு சிறப்பு அதிகாரி-மன்ற தீர்மான எண்.929/2018, நாள் 20.11.2018ல் நிர்வாக ஒப்புதல் பெறப்பட்டு தற்போது பணி நடைபெற்று வருகிறது. இப்பணியின் ஒப்பக் காலம் 09.06.2019 உடன் முடிவடைகிறது.

பாராளுமன்ற தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதினால் இப்பணியினை மேலும் 180 நாட்களுக்கு மேற்கொள்வதற்கான நிர்வாக அனுமதி பெறுவதற்கான நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

09.06.2019 உடன் இப்பணியின் ஒப்பக் காலம் முடிவடைய உள்ளதாலும், இப்பணிக்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பம் கோரி பணி ஆணை வழங்குவதற்கு காலதாமதம் ஏற்படும் என்ற காரணத்தினாலும் இப்பணியினை ஒப்பத் தொகையான ரூ.3,16,65,600/-க்கு 25 சதவிகிதம் ரூ.79,16,400/- மிகாமல் அதே ஒப்பந்ததாரரை கொண்டு பணியினை மேற்கொள்ள ஆணை வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

வ. எண்.	பொருள்	அளவு	ஒப்ப விலை	ஒப்ப தொகை
1	ஒப்பந்தத்தில் உள்ள அளவு	86400	366.50	ரூ.3,16,65,600
2	25 சதவிகிதம்	21600	366.50	ரூ.79,16,400

எனவே,

1. அத்திப்பட்டு குப்பை கொட்டும் வளாகத்தில் தினமும் மண்டலம் 7-ல் சேகரமாகும் 360 மெ.டன் குப்பைகள் மற்றும் மண்டலம் 11-ல் சேகரமாகும் 120 மெ.டன் குப்பைகள் சேர்த்து மொத்தம் 480 மெ..டன் அளவு சேகரிக்கப்படும் குப்பைகளை பெரிய கொள்ளளவு கொண்ட தனியார் லாரிகள் மூலம் கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் கொண்டு போய் குப்பைகளை கொட்டும் பணிக்கு ஒப்பத் தொகையான ரூ.3,16,65,600/-க்கு 25 சதவிகிதம் ரூ.79,16,400/- (ரூபாய் எழுபத்தி ஒன்பது இலட்சத்து பதினாறாயிரத்து நானூறு மட்டும்) மிகாமல் அதே ஒப்பந்தாரரான திருவாளர்கள் S.P. பில்டர்ஸ் மூலம் தொடர்ந்து பணி மேற்கொள்ளவும்,

2. இப்பணிக்கான செலவினத்தினை பிரிவுக் குறியீடு 40-41-03 மற்றும் கணக்குத் தலைப்பு எண்.230-15-01-00ன் கீழ் மேற்கொள்ளவும்,

3. பணியின் அவசரம் மற்றும் அவசியம் கருதி உடன்படிக்கையிலிருந்து விலக்களிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 10.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 3 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ம.7.ந.க.எண். 3514/2019

தீர்மான எண்.307/2019 **நாள்:14-06-2019**

மண்டலம்-7(அம்பத்தூர்) பகுதி - 18 விரிவாக்கப்பட்ட பகுதிகளில் தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் NULM கீழ் பணியமர்த்தப்பட்ட துப்புரவு பணியாளர்களின் பணிக்காலம் 30.06.2019 உடன் முடிவடைவது - துப்புரவு பணியாளர்களை வைத்து 01.07.2019 முதல் 31.12..2019 வரை பணியினை மேற்கொள்வதற்கு ஆகும் தோராய செலவு ரூ 2,75,09,104/-க்கு அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குப்பட்ட மண்டலம் - 7 அம்பத்தூர், பகுதி – 18, வார்டு – 79 முதல் 83 வரை உள்ள 5 வார்டுகளில் மொத்த பரப்பளவு 16.08 சதுர கி.மீ உள்ளடங்கிய பகுதியாகும். இந்த பகுதியில் 14 எண்ணிக்கையிலான பேருந்து சாலைகளும் மற்றும் 1638 எண்ணிக்கையில் உட்புற சாலைகளும் பெருநகர சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இம்மண்டலத்தின் மக்கள் தொகை 2015 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 156255 இருப்பினும் நகரமயமாக்குதலின் முக்கிய பகுதியாக இம்மண்டலம் விளங்குவதால் நாளுக்கு நாள் இம்மண்டலத்தில் மக்கட் தொகை பன்மடங்கு உயர்ந்து வருகிறது.

மண்டலம்-7, அம்பத்தூர், பகுதிகளில் தோரயமாக 335 மெடன் குப்பைகள் வார்டு 79 முதல் 93 வரையுள்ள 15 வார்டுகளில் தினந்தோறும் துப்புரவு பணியாளர்கள் மூலம் குப்பைகள் சேகரிக்கப்படுகிறது- இப்பணிகளை திறம்பட செய்ய போதிய நிரந்தர துப்புரவு தொழிலாளர்கள் இல்லாத காரணத்தினால் தினக்கூலி அடிப்படையில் தற்காலிக தொழிலாளர்களை நியமித்து அனைத்து வார்டுகளிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமாகிறது. எனவே, தற்போது பகுதி-18ல் (வார்டு – 79 முதல் 83 வரை) தற்போது உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை, வாகனங்களின் எண்ணிக்கை போதுமானதாக இல்லாத காரணத்தால் இன்றைய நிலைகளுக்கு ஏற்ப, துப்புரவு பணிகளை திறம்பட மேற்கொள்ள கீழ்கண்ட விவரங்களின் அடிப்படையில் பணியாளர்களை நியமித்து பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

1) பகுதி 18ல் பணிபுரியும் மொத்த பணியாளர்களின் எண்ணிக்கை - 620
2) பகுதி 18ல் உள்ள நிரந்தர பணியாளர்களின் எண்ணிக்கை - 207
3) பகுதி -18ல் NULM திட்டத்தின் கீழ் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கை - 413

வார்டு – 82 , 83ல் நிரந்தர துப்புரவு பணியாளகள் 37 நபர்கள் கடந்த ஓராண்டுகளில் வயது முதிர்வு காரணமாக ஓய்வு பெற்றும் பதவி உயர்வு பெற்ற நிலையில் அங்கு NULM பணியாளர்கள் 29 நபர்கள் நியமிக்கவும், தற்போது துப்புரவு பணிகள் பாதிக்காத வகையில் மற்ற வார்டுகளிலிருந்து NULM பணியாளர்களை மாற்று பணி அடிப்படையில் நியமித்து துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேலும், இப்பகுதி வளர்ந்து வரும் பகுதி மற்றும் மக்கட் தொகை அதிகரித்துள்ளதாலும் அனைத்து தெருக்களிலும் துப்புரவு பணிகளை மேற்கொள்ள அவசியமுள்ளதால் அதற்கேற்ப தற்காலிக பணியாளர்கள் நியமிக்கப்பட வேண்டியுள்ளது.

19.09.2018 தேதியிட்ட சிறப்பு அதிகாரி-மன்ற தீர்மான எண்.1015/2018 – ன் படி தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத்தின் (NULM) கீழ் 413 பணியாளர்களை பணியமர்த்தி துப்புரவு பணிகளை மேற்கொள்ள 01.10.2018 முதல் 31.12.2018 வரை மூன்று மாத காலத்திற்கு மன்றம் அனுமதி வழங்கப்பட்டு தற்போது துப்புரவு பணி நடைப்பெற்று வருகிறது. இத் திட்டப்பணியானது 30.06.2019ல் நிறைவடைய உள்ளதால் மண்டலம்-7 பகுதி-18ல் NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து இப் பணியினை மேற்கொள்ள சிறப்பு அதிகாரி மன்றத்தின் அனுமதி அவசியமாகிறது. அம்பத்தூர் மண்டலம்-7ல், பகுதி-18ல் துப்புரவு பணி பாதிப்பு ஏற்படாத வகையில் இத்திட்டபணியினை தொடர்ந்து ஆறு மாத காலத்திற்கு செயல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இக்கருத்துகளின் அடிப்படையில் 620 துப்புரவு பணியாளர்கள் என்றாலும், தற்பொழுதுள்ள 207 நிரந்தர துப்புரவு பணியாளர்களை தவிர்த்து மீதமுள்ள 413 எண்ணிக்கை கொண்ட தற்காலிக துப்புரவு பணியாளர்கள் மண்டலம்-7 பகுதி – 18க்கு தேவை என கணக்கிட்டு 01.07.2019 முதல் 31.12..2019 வரையில் ஆகும் தோராய செலவினம் கீழ்காணும் வகையில் கணக்கிடப்பட்டுள்ளது.

ம.7.ந.க.எண். 3514/2019

வ.எண்	பகுதி எண்	துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை	தோராய செலவினம்
1	18	413	ரூ.362x413x184 (நாட்கள்) = ரூ 2,75,09,104/-
		மொத்தம்	ரூ 2,75,09,104/-

தீர்மான எண்.321/2019 **நாள்:20-06-2019**

கட்டடத்துறை - மண்டலம் 13, வார்டு 176, அடையாறு, சாஸ்திரி நகர் 2 வது தெருவில் சமூக நலத்துறை கட்டுப்பாட்டில் உள்ள பணிபுரியும் மகளிர் விடுதியில் மேம்படுத்தும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. கூடுதல் செலவினங்கள் மேற்கொண்டதற்கு நிர்வாக அனுமதி.

மண்டலம் 13, வார்டு-176, அடையாறு , சாஸ்திரி நகர் 2வது தெருவில் ஏற்கனவே உள்ள பணிபுரியும் மகளிர் விடுதியை (தரைதளம் + முதல்தளம் மற்றும் இரண்டாம்தளம்) மேம்படுத்தும் பணிக்காக ரூ.92,81,000/- க்கு கட்டடத்துறை மூலமாக மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற தீர்மானம் பெறப்பட்டு 02.08.2017 அன்று ஒப்பம் கோரப்பட்டது.

இந்த ஒப்பத்தில் குறைந்த ஒப்பந்ததாரராக தேர்வு செய்யப்பட்ட திருவாளர்கள் MPK Enterprises அவர்களுக்கு சிறப்பு அதிகாரி / மன்ற தீர்மான எண்.088/2018, நாள்.31.01.2018 அன்று ஒப்புதல் பெறப்பட்டு 09.02.2018 அன்று பணி ஆணை வழங்கப்பட்டது. அதன்படி திருவாளர்கள் MPK Enterprises மூலம் 03.02.2018 அன்று புனரமைக்கும் பணியினை துவங்கிய போது கட்டிடத்தில் (தரைதளம் + முதல்தளம் மற்றும் இரண்டாம்தளம்) உள்ள சிமெண்ட் பூச்சு உதிர்ந்து தளத்தின் இரும்பு கம்பிகள் மிகவும் துருப்பிடித்த நிலையில் இருந்தது. இப்பணியினை எவ்வாறு மேற்கொள்ளலாம் என ஓய்வு பெற்ற அண்ணா பல்கலை கழக முன்னாள் பேரராசிரியர் திரு. A.R. சாந்தகுமார் அவர்களை கலந்தறிவாளராக நியமித்து பணி மேற்கொள்ள தலைமை பொறியாளர்(கட்டடம்) அவர்களின் அனுமதி பெறப்பட்டது.

பேராசிரியர் திரு A.R. சாந்தகுமார் அவர்கள் கட்டிடத்தின் அனைத்து தளங்களையும் ஆய்வு செய்த பின் தளத்தின் இரும்பு கம்பிகள் துருப்பிடித்த நிலையில் உள்ளதால் மறு சீரமைப்பு (Retrofitting) முறையில் செய்தால் மட்டுமே கட்டிடம் வலுவுள்ளதாக இருக்கும் என அறிவுறுத்தியதால் அந்த முறையிலேயே பணிகள் மேற்கொள்ளப்பட்டது. தலைமை பொறியாளர்(கட்டடம்) அவர்களின் ஆணை பெறப்பட்டு ஒப்பந்தத்தில் குறிப்பிடாத இனங்களான வேலைக்காக Lock fixing, Zinc coating, welding and Bottom centring, Epoxy coating Polymer coating etc., போன்ற Special nature of work முறையில் மேற்கொள்ளப்பட்டு பழைய கான்கிரீட் மற்றும் கம்பிகளை வலுவாக்கி உறுதியாக்கப்பட்டது மற்றும் சன்சேடுகளில் போடப்பட்டிருந்து கான்கிரீட் மற்றும் கம்பிகள் மிகவும் பழுதடைந்து இருந்ததாலும், அதனை வலுவாக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லாததாலும், முற்றிலும் அகற்றப்பட்டு அதற்கு பதிலாக Metal Sheet கொண்டு சன்சேடு அமைக்கப்பட்டது. இது தவிர Terrace Roofல் உள்ள பழைய ஓடுகளை மற்றும் செங்கல் ஜல்லி அகற்றிவிட்டு, மேற்பரப்பு முழுவதும் Water Proof Coating வேலை மேற்கொண்டு முற்றிலும் சிமெண்ட் மற்றும் ஜல்லி கொண்டு தரை போடப்பட்டது.

மேற்கூறியது தவிர மாவட்ட சமூக நல அலுவலர், சென்னை 01 அவர்களின் 04.07.2018 நாளிட்ட கடிதத்தில் ஒப்பத்தில் இல்லாத இனங்களான சில பணிகளை செய்து தருமாறு கட்டடத்துறைக்கு கடிதம் அனுப்பி உள்ளார்கள். அதன் விவரங்கள் பின்வருமாறு

1. நுழைவு வாயிலில் பாதுகாப்பு கதவு (Entrance safety gate)
2. கட்டிடத்தை சுற்றி கான்கிரீட் கற்கள் (Inter - locking blocks)
3. கட்டிடத்தின் திறந்த வெளிப்பகுதியில் சறுக்காத ஓடுகள் (anti-skid tiles)
4. மதில் சுவரைச் சுற்றி பாதுகாப்பு வேலி (compound wall wire fencing)
5. புதிய சமையல் அறையில் சுவர் மற்றும் தரை ஓடுகள் (wall and floor tiles)
6. கட்டிடத்தின் நடைபாதை பகுதிகளில் தரைத்தள ஓடுகள் (verandah tiles)
7. பெயர் பலகை அமைத்தல்

மேலே குறிப்பிட்டுள்ள இப்பணிக்காக விலைப்பட்டியல் ஒப்பளிப்பு (Rate Approval) தலைமை பொறியாளர் (கட்டடம்) அவர்களின் 20.02.2019 நாளிட்ட ஆணை பெறப்பட்டுள்ளது. இதன்படி ஒப்பம் சாரா இனங்களான பணிகளும் மற்றும் மறு சீரமைப்பு முறையில் (Retrofitting) பணிகளும் செய்துள்ளதாலும், மாவட்ட சமூக நல அலுவலர், அவர்கள் கடிதத்தில் கோரியுள்ள பணிகளான ஒப்பம் சாரா இனங்களும் மேற்கொள்ளப்பட்டு இப்பணியை செய்து முடிக்கப்பட்டதாலும், பணி செலவீனம் ஒப்பத்தொகையை விட கூடுதலாக 20.06% அதிகமாகியுள்ளது. அதன் விவரங்கள் கீழ்கண்டவாறு பட்டியலிடப்பட்டுள்ளது.

க.து.ந.க.எண்.பி1/892/2017

பணிகளுக்கான விவரங்கள்	தொகை ரூ.
அ) ஒப்பந்ததாரரின் ஒப்பத்தொகை	Rs.88,44,600.00
ஆ) செய்து முடிக்கப்பட்ட பணிக்கான மொத்த தொகை	Rs.1,06,19,602.00
இ) ஒப்ப தொகையை விட கூடுதல் செலவீனத்தொகை	Rs.17,75,002.00
ஈ) ஒப்பத்தொகையைவிட கூடுதல் ஒப்ப சதவீதம்	20.06%

இந்நிலையில் தமிழ்நாடு ஒளிவுமறைவில்லா ஒப்ப சட்டத்தின்படி *(Tamilnadu Tender Transparency act 1998)* ஏற்கனவே அனுமதிக்கப்பட்ட ஒப்ப தொகைக்கு கூடுதலாக *25*சதவிகிதத்திற்குள் அதே ஒப்பந்ததாரரரைக் கொண்டு பணிகள் மேற்கொண்டதற்கான பின்னேற்பு அனுமதி, மற்றும் கூடுதல் பணிகளுக்கும் கூடுதல் ஒப்பத்தொகைக்கும் ஒப்பந்ததாரருடன் கூடுதல் ஒப்பந்தம் *(Supplementary Agreement)* நிறைவேற்றப்பட்டு மற்றும் இப்பணிக்கான கூடுதல் செலவீனம் ரூ.17,75,002/- வழங்க சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *18.06.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மகளிர் விடுதி கட்டிட மேம்பாட்டு பணிக்கு பின்னேற்பு அனுமதியும், கூடுதல் பணிக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ப.து.ந.க.எண்.D1/SD/WDCN15/00115/2019

தீர்மான எண்.322/2019 **நாள்:20-06-2019**

தானப்பத்திரம்

திருவாளர். M/s. World Making Developers Private Limited rep by its Director Mr. P. Adityaram & M/s. Adityaram Infrastructure Projects LLP rep by its Designated Partner Mr. P. Adityaram ஆகியோர் சர்வே எண்.116/1, 2, 4, 6, 7A, 7B, 117/1, சோளிங்கநல்லூர் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு அனுமதி வேண்டி SD/WDCN15/00115/2019, நாள்:06.03.2019ன்படி விண்ணப்பம் அளித்துள்ளார்கள்.

மனைப்பிரிவில் காட்டப்பட்டுள்ள சாலைக்கான நிலங்களை சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழ ங்க வேண்டும் என்று அரசாணை எண். G.O.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை நாள் 21.08.1984ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இம்மனைப்பிரிவில் சாலைக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்கப்பட வேண்டும்.

அதற்கேற்ப விண்ணப்பதாரர்கள் M/s. World Making Developers Private Limited rep by its Director Mr. P. Adityaram & M/s. Adityaram Infrastructure Projects LLP rep by its Designated Partner Mr. P. Adityaram ஆகியோரிடமிருந்து மனைப்பிரிவில் சாலைக்கென ஒதுக்கப்பட்ட நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்க சிறப்பு அதிகாரி, மன்றத் தீர்மானம் எண். 242/2019, நாள். 23.04.2019ன்படி மன்றத் தீர்மானம் பெறப்பட்டு, ஆவணம் எண்.2232/2019 dated 09.05.2019 மூலமாக பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்கப்பட்டு, உதவி பொறியாளர், பகுதி - 44 அவர்களால் நிலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளப்பட்டது.

Tamil Nadu Combined Development & Building Rules, 2019ல் மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பிக்கும் பொழுது மனைப்பிரிவு பரப்பளவில் 0.5% (சாலை பகுதி நீங்கலாக) ஒதுக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரர் புதிய விதிமுறைக்கு ஏற்ப 34.38 ச.மீ பரப்பளவு நிலம் அளிக்க இசைவு தெரிவித்துள்ளார்.,

எனவே, திருவாளர்கள் M/s. World Making Developers Private Limited rep by its Director Mr. P. Adityaram & M/s. Adityaram Infrastructure Projects LLP rep by its Designated Partner Mr. P. Adityaram ஆகியோரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகிறது.

எனவே, சர்வே எண்.116/1, 2, 4, 6, 7A, 7B, 117/1, சோளிங்கநல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள திட்ட வரைபடத்தில் பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ள 34.38 ச.மீ நிலத்தை மனை உரிமையாளர்கள் திருவாளர். World Making Developers Private Limited rep by its Director Mr. P. Adityaram & M/s. Adityaram Infrastructure Projects LLP rep by its

ப.து.ந.க.எண்.*D1/SD/WDCN15/00115/2019*

Designated Partner Mr. P. Adityaram ஆகியோரிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *14.06.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் பெற சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ப.து.ந.க.எண்.டி1/0049/2019

தீர்மான எண்.323/2019 **நாள்:20-06-2019**

தானப்பத்திரம்

மண்டலம்-9, கோட்டம்-113ல் Thiru. E.Krishna Reddy Managing Partner of M/s. Krishna Constructions அவர்கள் பழைய கதவு எண்.110B, புதிய கதவு எண்.27, கோடம்பாக்கம் பிரதான சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600034, R.S.No.2/23, பிளாக் எண்.1, மயிலாப்பூர் கிராமம் என்ற இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-09 ல் PPA/WDCN09/02145/2019 நாள். 03.04.2019ன்படி விண்ணப்பித்துள்ளார்கள். அவர்கள் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக கோடம்பாக்கம் பிரதான சாலை, அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி கோடம்பாக்கம் பிரதான சாலை 27.0 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே, மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய 101.01ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் Thiru. E. Krishna Reddy Managing Partner of M/s. Krishna Constructions அவர்கள் பழைய கதவு எண்.110B, புதிய கதவு எண்.27, கோடம்பாக்கம் பிரதான சாலை, நுங்கம்பாக்கம், சென்னை - 600034 R.S.No.2/23, பிளாக் எண்.1, மயிலாப்பூர் கிராமம் என்ற இடத்தில் அமைந்துள்ள மனையில் சாலை விரிவாக்கம் செய்ய 101.01ச.மீ. நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்ளவும்,

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.1,80,000/-ஐ (ரூபாய் ஒரு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) மனை உரிமையாளர் Thiru. E. Krishna Reddy Managing Partner of M/s. Krishna Constructions அவர்களிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 18.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரம் பெற சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ப.து.ந.க.எண்.டி1/ 044 / 2019

தீர்மான எண்.324/2019 **நாள்:20-06-2019**

தானப்பத்திரம்

மண்டலம்-5, கோட்டம்-58ல் திரு. சுனில் குமார் அவர்களின் பொது அதிகார முகவர் திரு. ராம்பால் கோயல் (GPA) அவர்கள் பழைய கதவு எண். 84 & 85, புதிய கதவு எண்.159 & 161, பெரம்பூர் பேரக்ஸ் சாலை (வேத விநாயகர் கோயில் தெரு), வேப்பேரி, சென்னை - 600007 R.S.No.848/2, 848/5, புரசைவாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள இடத்திற்கு திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5ல் *PPA/WDCN05/1683/2019* நாள். *09.03.2019*ன்படி விண்ணப்பித்துள்ளார். அவர் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வேண்டி விண்ணப்பித்த இடத்திற்கு அணுகு சாலையாக பெரம்பூர் பேரக்ஸ் சாலை அமைய பெற்றுள்ளது. இரண்டாம் முழுமைத் திட்டத்தின்படி பெரம்பூர் பேரக்ஸ் சாலை 24.00 மீ அகல சாலையாக விரிவாக்கம் செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் விதிகளின்படி, சாலை விரிவாக்கத்திற்கான நிலத்தினை தானப்பத்திரம் மூலம் உள்ளாட்சி அமைப்புகளிடம் மனை உரிமையாளர் ஒப்படைத்த பிறகு தான் திட்ட அனுமதி மற்றும் கட்டிட அனுமதி வழங்க இயலும். ஆகவே மனுதாரர் தங்களுக்கு சொந்தமான நிலத்திலிருந்து சாலை விரிவாக்கம் செய்ய மனையில் நீளம் 9.40 மீட்டர் மற்றும் அகலம் 3.50 மீட்டர் ஆக மொத்தம் சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 32.90 ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானப்பத்திரம் மூலம் வழங்க ஒப்புதல் அளித்துள்ளார்.

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்படைக்கபடவுள்ள நிலத்தை தானமாக பெற்றுக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

எனவே,

(1) மனை உரிமையாளர் திரு. சுனில் குமார் அவர்களின் பொது அதிகார முகவர் திரு. ராம்பால் கோயல் (GPA) அவர்களிடம் பழைய கதவு எண். 84 & 85, புதிய கதவு எண்.159 & 161, பெரம்பூர் பேரக்ஸ் சாலை (வேத விநாயகர் கோயில் தெரு), வேப்பேரி, சென்னை - *600007* R.S.No.848/2, 848/5, புரசைவாக்கம் கிராமம் மனையில் சாலை விரிவாக்கத்திற்காக தான பத்திரம் மூலம் மனையின் நீளம் 9.40 மீட்டர் மற்றும் அகலம் 3.50 மீட்டர் ஆக மொத்தம் சாலை விரிவாக்கம் செய்ய தேவையான 32.90ச.மீ நிலத்தினை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தானமாக பெற்றுக் கொள்ளவும்.

(2) தானமாக வழங்கப்பட்ட பகுதியில் சாலை விரிவாக்கப் பணிகளை மேற்கொள்ள செலவாகும் தொகை ரூ.62,000/-ஐ (ரூபாய் அறுபத்தி இரண்டாயிரம் மட்டும்) மனை உரிமையாளரிடம் இருந்து ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி என்கின்ற பெயரில் வரைவு காசோலையாக பெறவும்,

மேற்கண்ட *1* மற்றும் *2* ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது *18.06.2019* நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தானப்பத்திரத்திற்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ப.து.ந.க.எண்.D1/LA/SD/WDCN04/00290/2019

தீர்மான எண்.325/2019 **நாள்:20-06-2019**

தானப்பத்திரம்

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம்அவர்களின் 20.05.2019 நாளிட்ட கடிதத்தில், கதவு எண்.1, கே.எம். எ. கார்டன் சாலை, சின்னான்டிமடம், கொடுங்கையூர், பழைய புல எண். 65 part, 66/1 part, 2 part & 3 and 67 part, நகர புல எண். 105/24, 105/25, 105/26 & 105/27, Block No.14 கொடுங்கையூர் கிராமம் என்ற இடத்திற்கு தொழிற்சாலை (Industrial Site) மனைப்பிரிவு செய்ய வேண்டி திட்ட அனுமதி வேண்டி M/s. Prince Foundation Ltd, (PoA) represented by its General Manager Thiru. Devesh Bhuva on behalf of Mr. Mukesh T. Chandan & 3 others சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனைப்பிரிவில் [Industrial site] காட்டப்பட்டுள்ள சாலை பகுதிகள் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளிடம் தானப்பத்திரம் மூலம் வழங்க வேண்டும் என்று அரசாணை [G.O.Ms.No.654, வீட்டு வசதி மற்றும் ஊரக வளர்ச்சி துறை, நாள்.21.08.1984ல்] குறிப்பிட்டுள்ளதற்கு ஏற்ப, மனுதாரரை மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலைக்காக ஒதுக்கப்பட்ட பகுதிகளை தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்க அறிவறுத்துமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

M/s. Prince Foundation Ltd, (PoA) represented by its General Manager Thiru. Devesh Bhuva on behalf of Mr. Mukesh T. Chandan & 3 others மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலைக்கான பகுதிகளை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒப்புடைக்க இசைவு தெரிவித்து தானப் பத்திரம் அளித்துள்ளார்.

M/s. Prince Foundation Ltd, (PoA) represented by its General Manager Thiru. Devesh Bhuva on behalf of Mr. Mukesh T. Chandan & 3 others அவர்கள் மனைப்பிரிவு வேண்டி சமர்ப்பித்த வரைபடத்தின் மொத்த பரப்பளவு 5555.00 சதுர மீட்டர். அவற்றில் சாலைக்கென 1090.00சதுர மீட்டர், பரப்பளவு ஒதுக்கப்பட வேண்டும் என்று சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமத்தால் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி எடுத்துக் கொள்ளலாம் என்று கருதப்படுகின்றது. ஆதலால் M/s. Prince Foundation Ltd, (PoA) represented by its General Manager Thiru. Devesh Bhuva vide Power of Attorney on behalf Mr. Mukesh T. Chandan & 3 others யிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெற்றுக் கொள்வதற்கு ஆணை வேண்டப்படுகின்றது.

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதிகளில் சாலைகளை அமைக்க ஆகும் செலவினம் விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கப்பட வேண்டும்.

விண்ணப்பதாரரிடம் இருந்து சாலை அமைப்பதற்கான நிலங்களை எடுத்துக் கொள்ளும் பொழுது, சாலைகளை உருவாக்க தேவைப்படும் கட்டணங்களை மனுதாரரிடம் இருந்து வசூலிக்கப்படும். அவ்வாறு அமைக்கப்படும் சாலைகள் MoRT & H (5th Revision) - ல் உள்ள specifications-க்கு ஏற்றவாறு அமைக்கப்படும்.

மேலும் உள்கட்டமைப்பு வசதிகளான சாலை, மழைநீர் வடிகால் மற்றும் தெரு விளக்கு ஆகிய பணிகளை மேற்கொள்வதற்கான கட்டணம் M/s. Prince Foundation Ltd, (PoA) represented by its General Manager Thiru. Devesh Bhuva on behalf of Mr. Mukesh T. Chandan & 3 others யிடமிருந்து வசூலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்படுகிறது அதற்கான கட்டணம் ரூ.36,60,000/-யை (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) காசோலையாக பெறவும்.

எனவே,

(1) கதவு எண்.1, கே.எம்.எ. கார்டன் சாலை, சின்னான்டிமடம், கொடுங்கையூர், பழைய புல எண். 65 part, 66/1 part, 2 part & 3 and 67 part, நகர புல எண். 105/24, 105/25, 105/26 & 105/27, Block No.14 கொடுங்கையூர் கிராமம், (Industrial Site) என்கின்ற இடத்தில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தால் மனைப்பிரிவு வரைபடத்தில் 1090.00 சதுர மீட்டர் நிலத்தை சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ளதை M/s. Prince Foundation Ltd, (PoA) represented by its General Manager Thiru. Devesh Bhuva on behalf of Mr. Mukesh T. Chandan & 3 others யிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள இடத்தில் சாலை பணி, மழைநீர் வடிகால் மற்றும் தெரு விளக்கு அமைக்கும் பணியினை பெருநகர சென்னை மாநகராட்சி :மூலம் மேற்கொள்ள M/s. Prince Foundation Ltd, (PoA) represented by its General Manager Thiru. Devesh Bhuva on behalf of Mr. Mukesh T. Chandan & 3 others அவர்களிடமிருந்து கட்டணமாக ரூ.36,60,000/- யை (ரூபாய் முப்பத்தாறு லட்சத்து அறுபதாயிரம் மட்டும்) காசோலையாக வசூலிப்பதற்கும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 18.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ப.து.ந.க.எண்.A7/0937/2019

தீர்மான எண்.326/2019 **நாள்:20-06-2019**

தானப்பத்திரம்

(1) Tmt. Jayalakshmi, (2) Tmt. N. Jagadhambal, (3) Tmt. C. Navaneetham (4) Thiru. L. Govardanan (5) Tmt. C. Santha (6) Tmt. B. Gowri, அவர்களின் பொது அதிகார முகவர் Thiru. S. Palanigowtham அவர்கள் சர்வே எண்.365/2B, செம்மஞ்சேரி கிராமத்தில் அமைந்துள்ள நிலத்திற்கு மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த அனுமதி வேண்டி பதிவு எண் CMDA/L/0010620/2017, நாள்.05.01.2018ன்படி விண்ணப்பம் பதிவு செய்துள்ளார்.

மனைப்பிரிவு வரன்முறைப்படுத்தும் வரைபடத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி வசம் ஒப்படைக்க விண்ணப்பதாரர்கள் (1) Tmt. Jayalakshmi, (2) Tmt. N. Jagadhambal, (3) Tmt. C. Navaneetham (4) Thiru. L. Govardanan (5) Tmt. C. Santha (6) Tmt. B. Gowri, அவர்களின் பொது அதிகார முகவர் Thiru. S. Palanigowtham அவர்களை அறிவுறுத்துமாறு உறுப்பினர்-செயலர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்கள் *26.02.2019* நாளிட்ட கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

மனுதாரர்கள் (1)Tmt.Jayalakshmi, (2) Tmt. N.Jagadhambal, (3) Tmt. C. Navaneetham (4) Thiru. L. Govardanan (5) Tmt. C. Santha (6) Tmt. B. Gowri, அவர்களின் பொது அதிகார முகவர் Thiru. S. Palanigowtham அவர்கள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளவாறு சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை தானப்பத்திரம் மூலம் ஒப்படைக்க இசைவு தெரிவித்து தானப்பத்திரம் அளித்துள்ளார்.

மனைப்பிரிவின் பரப்பளவு 88805.00 சதுர அடி ஆகும். அவற்றில் சாலைக்கென 23796.00 சதுர அடியும் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கென 5041.00 சதுர அடியும் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது.

எனவே (1) Tmt. Jayalakshmi, (2) Tmt.N.Jagadhambal, (3) Tmt. C. Navaneetham (4) Thiru. L. Govardanan (5) Tmt. C. Santha (6) Tmt. B. Gowri, அவர்களின் பொது அதிகார முகவர் Thiru. S. Palanigowtham அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் சாலை மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டு நிலங்களை பெருநகர சென்னை மாநகராட்சி வசம் எடுத்துக் கொள்ளலாம் என கருதப்படுகிறது.

மனைப்பிரிவில் ஒதுக்கப்பட்டுள்ள சாலை பகுதிகளில் சாலைகளை அமைக்க ஆகும் செலவினம் விண்ணப்பதாரரிடம் இருந்து வளர்ச்சி கட்டணமாக மனைப்பரப்பளவில் சதுர மீட்டருக்கு `500/- வீதம் வசூலிக்கப்பட வேண்டும்.

எனவே,

(1) சர்வே எண்.365/2B, செம்மஞ்சேரி கிராமத்தில் அமைந்துள்ள நிலத்தில் மனைப்பிரிவு வரன்முறைப்படுத்த வேண்டி விண்ணப்பிக்கப்பட்டுள்ள வரைபடத்தில் சாலைக்கென ஒதுக்கப்பட்டுள்ள 23796.00 சதுர அடி நிலம் மற்றும் திறந்தவெளி ஒதுக்கீட்டிற்கான 5041.00 சதுர அடி நிலம் அகியவற்றை உரிமையாளர்கள் (1) Tmt. Jayalakshmi, (2) Tmt. N. Jagadhambal, (3) Tmt. C. Navaneetham (4) Thiru. L. Govardanan (5) Tmt. C. Santha (6) Tmt. B. Gowri, அவர்களின் பொது அதிகார முகவர் Thiru. S. Palanigowtham அவர்களிடமிருந்து தானப்பத்திரம் மூலம் பெருநகர சென்னை மாநகராட்சி பெற்றுக் கொள்வதற்கும்,

(2) உள்கட்டமைப்பு வசதிகளான சாலை மற்றும் தெருவிளக்கு ஆகியவை அமைப்பதற்கான செலவினமாக மனைப்பரப்பளவில் சதுர மீட்டருக்கு `500/- வீதம் (ரூபாய் ஐநூறு மட்டும்) விண்ணப்பதாரரிடம் இருந்து வசூலிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 18.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (நகரமைப்பு) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

சு.து.ந.க. எண்.பி2/1710/2019

தீர்மான எண்.327/2019 **நாள்:20-06-2019**

பொதுசுகாதாரத்துறை- 15 மண்டலங்கள், தலைமையிடம், பூச்சித்தடுப்புத்துறை, குடிநீர் பகுப்பாய்வு கூடங்கள், கூடுதல் மாநகர நல அலுவலர்கள் அலுவலங்கள், மத்திய மருந்து பண்டக சாலை, 7 பெரிய மருத்துவமனைகள் மற்றும் தொற்றுநோய் மருத்துவமனைக்கு தேவையான 53 கணினி பதிவாளர்கள் ஓராண்டு காலத்திற்கு வெளிநிறுவனம் மூலம்ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறையின் கீழ் 15 மண்டல சுகாதார அலுவலகங்கள், தொற்றுநோய் மருத்துவமனைகளில் அன்றாடம் பொதுமக்களிடமிருந்து ஆன்லைன் மூலம் பெறுகின்ற குறைகள் குறித்த புகார்கள் சேகரித்தல் மற்றும் அதற்கு பதில் அளித்தல், அரசு தனியார் மருத்துவமனைகளில் தொற்றுநோய்கள் குறித்த விவரங்கள் சேகரிக்கும் பணிகள் மேற்கொள்ளுதல், தினம் மற்றும் வாரந்திர அறிக்கைகள் தயாரிக்கும் பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் அலுவலக கணினி பணிகள் மேற்கொள்ளவும், பொதுசுகாதாரத்துறை தலைமையிடம், பூச்சித்தடுப்புத்துறை, குடீநீர் பகுப்பாய்வு கூடங்கள் மற்றும் அம்மா உணவகம் ஆகிய துறைகளில் அலுவலக பணிகள் கணினியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 சுகாதார அலுவலகங்களில் மற்றும் ஏழு பெரிய மருத்துவமனைகளில் நிகழும் பிறப்பு மற்றும் இறப்பு விவரங்கள் கணினியில் பதிவு செய்தல், சான்றிதழ்கள் பொதுமக்களுக்கு இலவசமாக வழங்குதல், போன்ற பணிகளுக்கு 51 கணினி பதிவாளர்கள் சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.578/2018 நாள்.18.07.2018ன்படி அனுமதி பெறப்பட்டு 02.08.2018 முதல் M/s Varadhan Infraastructure நிறுவனத்திற்கு பணியாணை வழங்கப்பட்டு பணிகாலமானது 01.08.2019ல் முடிவடைகின்றது.

பெருநகர சென்னை நகராட்சி, பொதுசுகாதார துறை கீழ் எண். 11/4 சாமி தெரு, பெரிய மேடு, சென்னை- 600003ல் பொதுபகுப்பாய்வு கூடம் ஒன்று செயல்பட்டு வருகின்றது. இதில் சென்னை மாநகராட்சியின் 15 மண்டலங்களிருந்து குடிநீர் மாதிரிகள் பகுப்பாய்வு செய்து, அறிக்கையினை மேல் நடவடிக்கைக்காக அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றது. பொது மக்களுக்கு பாதுகாப்பான மற்றும் சுத்தமான தண்ணீர் கிடைப்பதற்கும், தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்காகவும், உடனுக்குடன் மேல் நடவடிக்கை எடுக்கும் வகையில், 3 குடிநீர் பகுப்பாய்வு கூடங்கள் வடக்கு, மத்திய மற்றும் தெற்கு வட்டாரங்களில் கூடுதலாக கீழ்க்கண்டவாறு அமைக்க சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.578/2018 நாள்.18.07.2018ல்அனுமதி பெறப்பட்டுள்ளது.

1	வடக்கு வட்டாரம் குடிநீர் பகுப்பாய்வு கூடம்	தொற்று நோய் மருத்துவமனை
2	மத்திய வட்டாரம் குடிநீர் பகுப்பாய்வு கூடம்	சி.ஐ.டி.நகர் பொது பகுப்பாய்வுகூடம் (CIT Nagar Diagnostic Center)
3	தெற்கு வட்டாரம் குடிநீர் பகுப்பாய்வு கூடம்	திருவான்மியூர் பொதுபகுப்பாய்வுகூடம் (Thiruvanmiyur Diagnostic Center)

இதில் மத்திய வட்டாரத்தில் சி.ஐ.டி. நகர் பொது பகுப்பாய்வுகூடத்தில் (CIT Nagar Diagnostic Center) அமையவிருந்த பகுப்பாய்வு கூடமானது இடவசதி இல்லாத காரணத்தினால் எண். 11/4, சாமி தெரு, பெரிய மேடு, சென்னை- 600003 லேயே தொடர்ந்து செயல்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இந்த மூன்று குடிநீர் பகுப்பாய்வு கூடங்களுக்கும் தேவையான 3 கணினி பதிவாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த சிறப்பு அதிகாரி/மன்றத்தீர்மான எண்.638/2018 நாள். 09.08.2018ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது ஒரு கணினி பதிவாளர், சாமி தெரு, பெரிய மேடு, பகுப்பாய்வு கூடத்தில் பணிபுரிந்து வரும் நிலையில் 2 கணினி பதிவாளர்கள் மட்டும் 51 கணிணி பதிவாளர்களுடன் கூடுதலாக பணியமர்த்தலாம்.

சு.து.ந.க. எண்.பி2/1710/2019

எனவே, கீழ்க்கண்ட இடங்களில் 53 கணினி பதிவாளர்கள் தேவைப்படுகின்றனர்.

அட்டவணை எண்-1

வ எண்	தேவைப்படும் துறை	எண்ணிக்கை	கூடுதல்	மொத்தம்
1	மண்டலம் 1 முதல் 15 வரை(பொதுசுகாதார பணிகளுக்கு)	15	-	15
2	பொதுசுகாதார தலைமையிடம்	2	-	2
3	தொற்றுநோய் மருத்துவமனை	1	-	1
4	பூச்சி தடுப்புத்துறை(தலைமையிடம்)	1	-	1
5	அம்மா உணவகம் (தலைமையிடம்)	3	-	3
6	குடிநீர் பகுப்பாய்வு கூடம்	1	2	3
7	கூடுதல் மாநகர நல அலுவலர் அலுவலகம் (வடக்கு வட்டாரம்)	1	-	1
8	கூடுதல் மாநகர நல அலுவலர் அலுவலகம் (வடக்கு வட்டாரம்)	1	-	1
9	கூடுதல் மாநகர நல அலுவலர் அலுவலகம் (வடக்கு வட்டாரம்)	1	-	1
10	நல கல்வி அலுவலர் அலுவலகம்	1	-	1
11	மத்திய மருந்து பண்டக சாலை	1	-	1
12	மண்டலம் 1 முதல் 15 வரை (பிறப்பு இறப்பு பதிவு செய்தல் மற்றும் சான்று வழங்குதல்)	15	-	15
13	பிறப்பு இறப்பு பதிவு-தலைமையிடம்	1	-	1
14	RSRM மருத்துவமனை (மண்டலம்-5)	1	-	1
15	தாய்சேய் நல மருத்துவமனை(மண்டலம்5)	1	-	1
16	கீழ்ப்பாக்கம் மருத்துவகல்லூரி மருத்துவமனை (மண்டலம்8)	1	-	1
17	கஸ்தூரிபா காந்தி மருத்துவமனை (மண்டலம்-9)	1	-	1
18	ராஜீவ் காந்தி அரசு மருத்துவமனை	1	-	1
19	ஸ்டேன்லி அரசு மருத்துவமனை (மண்டலம்-5)	1	-	1
20	ராயபேட்டை அரசு மருத்துவமனை (மண்டலம்-9)	1	-	1
		51	2	53

எனவே, பொதுசுகாதாரத்துறைக்கு தேவையான 53 கணினி பதிவாளர்கள் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

Sl.No	Category of Staff	Qualification
1	Data Entry Operator	Must have passed any Degree, typewriting in Tamil &, English (lower level) , Certificate Course in computer of Office Automation.

2018-2019 ம் ஆண்டிற்கான குறைந்தபட்ட ஊதிய நிர்ணயத்தில், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணையில் இந்த பணியாளர்களுக்கு தினக்கூலியாக ஒரு நாளைக்கு ரூ.415/- என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. எனவே, ஒரு மாத காலத்திற்கு 26x415=ரூ.10,790/-ஆகும். எனவே இந்த பணியாளர்களுக்கு மாத ஊதியமாக ரூ.10,800/- நிர்ணயம் செய்யலாம்.

ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்படும் கணினி பதிவாளர்களுக்கு அடிப்படை ஊதியத்துடன், பணியாளர் வருங்கால வைப்பு நிதி (Employee's Provident Fund), பணியாளர் இன்சூரன்ஸ் (Employee's State Insurance), சரக்கு மற்றும் சேவை வரி (GST), மற்றும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட வேண்டிய சேவைக்கட்டணம் (Administrative Charges) கீழ்க்கண்ட அளவில் வழங்கப்பட வேண்டியுள்ளது.

சு.து.ந.க. எண்.பி2/1710/2019

Employee's State Insurance		Employee's Provident Fund		GST	Administrative Charges
Employer Contribution in the salary	Employee Contribution in the salary	**Employer Contribution in the salary**	Employee Contribution in the salary		
4.75%	1.75%	**13%**	12.00%	**18%**	10% approximately

அட்டவணை-2

Sl. No	Category of Staff	Minimum Salary per Month (Rs)	EPF (13. %) (Rs)	ESI (4.75 %) (Rs)	Administrative Charges (Rs)	GST 18% (1+2+3+4) (Rs)	Total (1+2+3+4+5) (Rs)	Required Staff	Cost per 12 months (Rs) (6x7x12)
		1	2	3	4	5	6	7	8
1	Data Entry Operator	10800	1404	513	To be provided by Bidder	2289	15006	53	95,43,816

எனவே,

1. **பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை அட்டவணை-2ல் தெரிவிக்கப்பட்டவாறு 53 கணினி பதிவாளர்களை (Data Entry Operators), தகுதி வாய்ந்த வெளி நிறுவனம் மூலம் 03.08.2018 முதல் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதியும்,**
2. இதற்கான நிர்வாக செலவினம் ரூ. 95,43,816/- (ரூபாய் தொண்ணூற்றி ஐந்து லட்சத்து நாற்பத்தி மூன்றாயிரத்து எண்ணூற்றி பதினாறு மட்டும்) மற்றும் ஒப்பந்தத்தில் தேர்ந்தெடுக்கப்படும் ஒப்பந்ததாரர் தெரிவிக்கும் நிர்வாக கட்டணம் சேர்த்து மேற்கொள்ள அனுமதியும்,
3. இந்த பணியிடங்களுக்கு பொதுசுகாதாரத்துறை (தலைமையிடம்) மூலம் மின்னணு ஒப்பம் கோரவும்,
4. இச்செலவினத்தினை பெருநகர சென்னை மாநகராட்சி நிதியிலிருந்து பிரிவு குறியீடு 30-31-01, கணக்கு குறியீடு 220-11-03-14 என்ற தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.ஈ13/42267/2017

தீர்மான எண்.328/2019 **நாள்:20-06-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மண்டலம்-6, பகுதி-16, கோட்டம்-69க்குட்பட்ட பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை, ராகவன் தெரு, ராஜா தெரு, திருநாவுக்கரசு தெரு, ஜெகனாதன் காலனி, சிறுவள்ளூர் சாலை, செயின்ட் மேரிஸ் சாலை ஆகிய விலாசங்களில் விதிகள் மீறி கட்டப்பட்ட கட்டிடத்தினை கண்காணிக்க தவறியது மற்றும் தொடர் நடவடிக்கை எடுக்காத குற்றத்திற்காக திரு.அ.பன்னீர்செல்வம், இளநிலை பொறியாளர், மண்டலம்-6, (தற்போது கட்டடத்துறை (மாற்றுப்பணி மண்டலம்-7), அவர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டது- விசாரணை நடத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்டது - தனியர் அவர்கள் தண்டனையை எதிர்த்து அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.

ஆணையர் அவர்களின் 01.12.2017 நாளிட்ட ஆணையின்படி மண்டலம்-6, பகுதி-16, கோட்டம்-69க்குட்பட்ட பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை, ராகவன் தெரு, ராஜா தெரு, திருநாவுக்கரசு தெரு, ஜெகனாதன் காலனி, சிறுவள்ளூர் சாலை, செயின்ட் மேரிஸ் சாலை ஆகிய விலாசங்களில் விதிமுறைகளை பின்பற்றாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை ஆய்வு செய்து, பணிநிறுத்த தாக்கீது வழங்காமல் கட்டிடப்பணிகளை தொடர அனுமதித்த குற்றத்திற்காக கீழ்கண்டுள்ள அலுவலர் / பணியாளர்கள் மீது துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் 12.12.2017 நாளிட்ட குறிப்பாணையின் மூலமாக விதி 10(a) மற்றும் 9(1)ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தப்பட்டு, விளக்கம் பெறப்பட்டது.

1. திரு.அர்.எல்.தமிழ் அன்பு, உதவி செயற்பொறியாளர், மண்டலம்-6 (தற்போது பூங்கா துறை, தலைமையகம்),
2. திருமதி.என்.சரோஜா, உதவி செயற்பொறியளார், மண்டலம்-8 (மாற்றுப்பணி மண்டலம்-6)
3. திருமதி.டி.ரேவதி, உதவி பொறியாளர், மண்டலம்-6 (தற்போது பாலங்கள் துறை, தலைமையகம்),
4. திரு.அ.பன்னீர்செல்வம், இளநிலை பொறியாளர், மண்டலம்-6, (தற்போது கட்டடத்துறை (மாற்றுப்பணி மண்டலம்-7),

மேற்கண்டுள்ள அலுவலர் / பணியாளர்கள் மீது 10(a) / 9(1) ல் ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் விசாரணை அலுவலர் நியமனம் செய்ய வேண்டிய அவசியம் எழவில்லை.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சி மண்டலம்-6, பகுதி-16, கோட்டம்-69க்குட்பட்ட பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை, ராகவன் தெரு, ராஜா தெரு, திருநாவுக்கரசு தெரு, ஜெகனாதன் காலனி, சிறுவள்ளூர் சாலை, செயின்ட் மேரிஸ் சாலை ஆகிய விலாசங்களில் விதிமுறைகளை பின்பற்றாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை ஆய்வு செய்து, பணிநிறுத்த தாக்கீது வழங்காமல் கட்டிடப்பணிகளை தொடர அனுமதித்த குற்றத்திற்காக மண்டலம்-6ல் பணிபுரிந்த மேற்கண்டுள்ள அலுவலர் / பணியாளர்கள் மீது தொடரப்பட்ட ஒழுங்கு நடவடிக்கையில் கீழ்கண்டவாறு இறுதியாணைகள் வழங்கப்பட்டுள்ளது.

வ. எண்	குற்றஞ்சாட்ட அலுவலர்களின் பெயர் மற்றும் பதவி	ஆணையர் அவர்களின் இறுதி ஆணை
1.	திரு.அர்.எல்.தமிழ் அன்பு, உதவி செயற்பொறியாளர், மண்டலம்-6 (தற்போது பூங்கா துறை, தலைமையகம்),	ஆறு மாதங்களுக்கு திரண்ட பயனின்றி ஊதியம் நிறுத்தம் செய்ய ஆணையிடப்பட்டது.
2.	திருமதி.என்.சரோஜா, உதவி செயற்பொறியளார், மண்டலம்-8 (மாற்றுப்பணி மண்டலம்-6)	குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டு ஆணையிடப்பட்டது.
3.	திருமதி.டி.ரேவதி, உதவி பொறியாளர், மண்டலம்-6 (தற்போது பாலங்கள் துறை, தலைமையகம்),	குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டு ஆணையிடப்பட்டது.

4.	திரு.அ.பன்னீர்செல்வம், இளநிலை பொறியாளர், மண்டலம்-6, (தற்போது கட்டடத்துறை (மாற்றுப்பணி மண்டலம்-7),	இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி ஊதியம் நிறுத்தம் செய்ய ஆணையிடப்பட்டது.

மேற்கண்டுள்ள குற்றச்சாட்டில் தொடர்புடைய திரு.அ.பன்னீர்செல்வம், இளநிலை பொறியாளர், மண்டலம்-6, (தற்போது கட்டடத்துறை (மாற்றுப்பணி மண்டலம்-7), அவர்கள் தனக்கு அளிக்கப்பட்டுள்ள இரண்டு ஆண்டுகளுக்கு திரண்ட பயனின்றி ஊதியம் நிறுத்தம் தண்டணையை எதிர்த்து 22/04/2019 நாளிட்ட தனது மேல்முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி மன்றம் அவர்களுக்கு கீழ்கண்டுள்ளவாறு சமர்ப்பித்துள்ளார்.

குற்றச்சாட்டு 1:

"பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-6, பகுதி-16, கோட்டம்-69க்குட்பட்ட பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை, ராகவன் தெரு, ராஜா தெரு, திருநாவுக்கரசு தெரு, ஜெகனாதன் காலனி, சிறுவள்ளூர் சாலை, செயின்ட் மேரிஸ் சாலை ஆகிய பகுதியில் விதிமுறைகளை பின்பற்றாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடங்களை கள ஆய்வு செய்து, மேற்கண்ட கட்டிடங்களுக்கு பணிநிறுத்த தாக்கீது வழங்காமல், கட்டிடப்பணிகள் தொடர்ந்து நடைபெற அனுமதித்துள்ளது.

வ.எண்.	கட்டிட உரிமையாளர் பெயர்	முகவரி
1.	திரு.பழனியப்பன் மற்றும் அலமேலு	கொல்லந்தோட்டம் தெரு, புதிய எண்.57, பழைய எண்.27A, மாதவரம் நெடுஞ்சாலை, பெரம்பூர், சென்னை-11.
2.	திருமதி.பிரேமா, மற்றும் திருமதி.சாந்தி	புதிய எண்.6, பழைய எண்.126, ராகவன் தெரு, பெரம்பூர், சென்னை-11
3.	திரு.அதகெர் ரஹ்மான் மற்றும் எஸ்.சுரேஷ்	4/24, ராஜா தெரு, ரமணா நகர், சென்னை-11
4.	திரு.அதகெர் ரஹ்மான் மற்றும் எஸ்.சுரேஷ்	4/24, ராஜா தெரு, ரமணா நகர், சென்னை-11
5.	திருமதி.ஜி.ஆர்.இளமதி	1/2A, திருநாவுக்கரசு, தெரு, பெரம்பூர், சென்னை-11
6.	திரு.கிங்ஸ்லி பாஸ்கோ ஜேசுதாஸ்	19/4, ஜெகனாதன் காலனி, பெரம்பூர், சென்னை-11
7.	திரு.சூசன் ஜான் மற்றும் இரண்டு நபர்கள்	17/4, சிறுவள்ளூர் சாலை, திவோலி பில்டிங், பெரம்பூர், சென்னை-11
8.	திரு.ஃபெலிக்ஸ் அலெக்சாண்டர்	24/25, ஜெகனாதன் காலனி, பெரம்பூர், சென்னை-11
9.	திருமதி.என்.எஸ்.கீதா	28, செயின்ட் மேரிஸ் சாலை, பெரம்பூர், சென்னை-11

குற்றச்சாட்டு 1ற் கான விளக்கம்:

எந்தவொரு குறிப்பாணையின்மீதும் ஒரு குறிப்பிட்ட காலவரையறைகளுடன் கூடிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்றும், காலதாமதமான நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டுமென்றும் அரசு வெளியிட்டுள்ள ஆணை மற்றும் கடிதத்தில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இணைப்பு – 1 இவற்றுக்கு முரணாக என்மீதான குறிப்பாணையின் மீதான நடவடிக்கை அமைந்துள்ளது. சென்னைமாநகராட்சி வகுப்பு மூன்று மற்றும் நான்காம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல் முறையீடு) விதிகள் 1983 – துணை விதி 9(3) ன் படி குறிப்பாணையின் மீது ஒரு மாதத்திற்குள்ளாக நடவடிக்கை எடுக்கப்படவேண்டும். மாறாக என்மீது ஒரு வருட கால தாமதத்திற்கு பின் நடவடிக்கை எடுக்கப்பட்டு உள்ளது.

இணைப்பு – 2 ஒரு மாத காலத்திற்குள் வழங்க வேண்டிய இறுதி ஆணையை ஒரு வருட கால தாமதத்திற்குப் பின் அதுவும் மதிப்பிற்குரிய முந்தைய ஆணையர் அவர்கள் பணியிட மாறுதல் உத்தரவின் கீழ் வேறுதுறைக்குச் செல்ல வேண்டிய கட்டாய நிலையில் அவசரமாக ஒழுங்கு நடவடிக்கை நடைமுறைகளை பின்பற்றாமல் போகிறபோக்கில் விருப்பு /வெறுப்பின் அடிப்படையில் –மனதளவில் முன்னரே முடிவு செய்துவிட்டு (Pre- determined) இறுதியாணை வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று நிலுவையிலிருந்த ஏராளமான ஒழுங்கு நடவடிக்கை கோப்புகள் பணியிடமாறுதல் செல்லவேண்டிய அவசர கதியில் சுயவிருப்பு – வெறுப்பு- வரப்பெற்ற அழுத்தங்கள் – பரிந்துரைகள் –பாலினப்பாகுபாடு ஆகியவற்றினடிப்படையில் சிலருக்கு சாதகமாகவும், சிலருக்குப் பாதகமாகவும் ஒழுங்கு நடவடிக்கைகள் முடிவுக்குக் கொண்டு வரப்பெற்று இறுதியாணை வழங்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டு 2 :

மண்டலம்-6, பகுதி-16, கோட்டம்-69க்குட்பட்ட பெரம்பூர், மாதவரம் நெடுஞ்சாலை, ராகவன் தெரு, ராஜா தெரு, திருநாவுக்கரசு தெரு, ஜெகனாதன் காலனி, சிறுவள்ளூர் சாலை, செயின்ட் மேரிஸ் சாலை ஆகிய மேற்கண்ட பட்டியலில் கண்டுள்ள விலாசங்களில் விதிமுறைகளை பின்பற்றாமல் கட்டப்பட்டுள்ள கட்டிடங்கள் மீது பகுதி-16ன் உதவி பொறியாளர் என்கிற நிலையில் உடனடி நடவடிக்கை மேற்கொள்ளாமல், மாநகராட்சி, விழிப்பு அலுவலர் அவர்களிடம் புகார் பெறப்பட்ட பிறகு, மேற்கண்ட கட்டிடங்களுக்கு பணிநிறுத்த தாக்கீது வழங்கப்பட்டுள்ளது.

குற்றச்சாட்டு எண் 2ற்கான விளக்கம் :

பல வருடங்களாகத் தொடர்ந்து மண்டலங்களில் பணிசெய்து வந்த நான் உடல்நிலையின் பொருட்டு தலைமையகத்தில் சிறப்புத்திட்டங்கள் துறைக்குப் பணியிடமாற்றம் பெற்ற இரண்டே மாதங்களில் மீண்டும் வடகிழக்கு பருவமழை பணிக்காக மண்டலம்-6, வார்டு-69க்கு பணியிடமாற்றம் செய்யப்பட்டு 28.10.2016 அன்று பணியில் சேர்ந்தேன்.

1. பருவ மழைக்கால முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்,
2. பெருமழையின் போதான நடவடிக்கைகள்,
3. 'வார்தா' பெரும்புயல் பாதிப்பு மீட்பு நடவடிக்கைகள்,
4. 01.03.2017 முதல் 06.04.2017 வரை அறுவை சிகிச்சைக்கான மருத்துவ விடுப்பு ,
5. மருத்துவ விடுப்புக்கு பின் 7.04.2017 முதல் பணியிட மாறுதல் பெற்ற 3.08.2017 வரையிலான காலத்தில் உடல்நிலையின் பொருட்டு அலுவல் பணி மட்டுமே செய்தது,

என மேற்படி நான் வார்டு-69ல் பணி செய்த காலத்தில், வார்டு-69ல் கதவு எண்:1,சிறுவள்ளுவர் சாலை, பெரம்பூர், சென்னை-11 எனும் முகவரியில் 2011ஆம் வருடம் கட்டப்பட்ட விதிமீறல் கட்டிடத்தின் மீது திரு.அ.அனந்தராமன் என்பவர் நடவடிக்கை எடுக்கக்கோரி தகவலறியும் உரிமைச்சட்டபடி மனு அளிக்கின்றார்.

அதன்படி மனுவில் குறிப்பிட்ட கட்டட உரிமையாளருக்குக் கள ஆய்வுக்குப் பின் 11.04.2017 அன்று வரைபட அனுமதி நகல்கோரும் அறிவிக்கையும் 26.05.2017 அன்று கட்டடத்தைப் பூட்டி சீல் வைப்பதற்கான அறிவிக்கையும் சார்பு செய்யப்படுகிறது. இதனால் அச்சத்திற்காளான கட்டட உரிமையாளர் வார்டு-69ல் ஏற்கனவே கட்டப்பட்ட ஒன்பது கட்டடங்கள் மற்றும் வார்டு 68ல் இரண்டு கட்டடங்கள் என மொத்தம் 11 கட்டங்கள் குறித்துத் தமது மனுவில் குறிப்பிட்டு அவற்றின் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி மாநகராட்சி விழிப்புத்துறைக்கு மனு கொடுக்கிறார்.

என்மீதான குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ள 9 கட்டடங்களில் வரிசை 1 யை தவிர இதர எட்டு கட்டடங்கள் நான் வார்டு-69ல் பணியில் சேர்வதற்கு முன்பாகவே கட்டப்பட்ட கட்டடங்களாகும். இது குறித்து 09.01.2018 அன்று நான் சமர்ப்பித்த விளக்கத்தில் மிகத் தெளிவாக குறிப்பிட்டுள்ளேன்.

குறிப்பாணையில் குறிப்பிடப்பட்டுள்ள 9 கட்டடங்களில் 8 கட்டடங்களுக்கு காரணமாக இருந்த எனக்கு முன்பாக வார்டு -69ல் பணிசெய்தோர் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் ஒரேயொரு கட்டடத்திற்கு பொறுப்பான என்மீது மட்டும் நடவடிக்கை எடுத்திருப்பது பாலினப்பாகுபாடு பார்த்து – ஒரு சார்பான – அப்பட்டமான பாரபட்சமான நடவடிக்கையாகும்.

மேலும் புகார்தாரர் விழிப்புத் துறையில் அளித்த மனுவில் வார்டு-69ல் ஒன்பது , வார்டு -68ல் இரண்டு என மொத்தம் 11 கட்டடங்களை குறிப்பிட்டிருக்கையில் வார்டு 69ல் உள்ள 9 கட்டடங்களுக்கு குறிப்பாணை சார்பு செய்த துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் வார்டு -68ல் புகார்தாரர் குறிப்பிட்ட இரண்டு விதிமீறல் கட்டடங்களுககு அந்த வார்டின் உதவிபொறியாளர்களுக்கு ஏன் காரணம் கேட்கும் குறிப்பாணை கொடுக்கவில்லை? இச்செயலானது மதிப்பிற்குரிய துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் அப்பட்டமான பாரபட்சமான – பாலினப் பாகுபாடு பார்த்து எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

மாண்புமிகு உயர்நீதிமன்றம் 03.11.2011 அன்று வழங்கிய ஆணைப்படி விழிப்புத்துறையில் மனு அளித்த புகார்தாரர் அவருடைய விதிமீறல் கட்டடத்தை மறைத்துவிட்டு மற்ற கட்டடங்களை பற்றி புகார் அளிக்க அவருக்கு எந்த அருகதையும் இல்லை என்பதை மதிப்பிற்குரிய துணை ஆணையர் (பணிகள்) அவர்கள் தமது கவனத்தில் கொள்ளவில்லை .

குற்றச்சாட்டு 3 :

தங்களுடைய பணியை கவனத்துடன் செய்யாததால் பெருநகர சென்னை மாநகரட்சி பணியாளர் நடத்தை விதிகள் 1983, விதி.20ஐ மீறியுள்ளது.

குற்றச்சாட்டு 3ற் கான விளக்கம்:

ஒரு புறம் – "வார்டு – 69ல் விதி மீறல் கட்டிடங்களின் மீது நடவடிக்கை எடுக்கவில்லை" என்று என்மீது தண்டனையுடன் கூடிய இறுதி ஆணை..

இன்னொரு புறம்- வார்டு- 173ல் நான் பணி செய்த போது மாண்புமிகு உயர்நீதி மன்றம் வழங்கிய தீர்ப்பின்படி ஒரு விதி மீறல் கட்டடத்தின் மீது எடுக்கப்பட்ட அமலாக்க நடவடிக்கையாக கட்டடத்தை பூட்டி சீல் வைத்ததற்காக மாநில மனித உரிமை ஆணையத்தால் ரூ. 25,000/- அபராதம் விதிக்கப்பட்ட வேடிக்கையான கொடுமை.

மத்தளத்திற்கு இரண்டு பக்கம் இடி என்றால் மண்டலங்களில் பணிசெய்யும் வார்டு பொறியாளர்களுக்குத் திரும்பிய பக்கம் எல்லாம் இடி எனவே ,

1. என் மீதான குறிப்பாணைக்கு நான் 09.01.2018 என்று சமர்ப்பித்த தெளிவான நீண்ட விளக்கம் ,
2. ஒழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு விதி எண்.9 – (3) ன் கீழ் ஒரு மாதத்திற்குள் நடவடிக்கை எடுக்கப்படாமல் ஒரு வருட காலம் கழிந்து இறுதியாணை வழங்கியது- தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமமாகும்.
3. இரண்டு வார்டுகளில் (68 மற்றும் 69) கட்டப்பட்டுள்ள விதிமீறல் கட்டடங்களை தமது புகார் மனுவில் அருகதையற்ற புகார்தாரர் குறிப்பிட்டுள்ள நிலையில் வார்டு -69ல் குறிப்பிட்ட கட்டடங்களுக்கு மட்டும் என்மீது குறிப்பாணை அளித்து வார்டு-68 உதவிப்பொறியாளர் மீது குறிப்பாணை வழங்காத மாநகராட்சி விழிப்புத்துறை மற்றும் துணை ஆணையர் (பணிகள்) அவர்களின் பாலினப்பாகுபாடு – பாரபட்சமான செயல்,
4. நான் வார்டு- 69ல் சேருவதற்க முன்னரே கட்டப்பட்ட கட்டடங்களுக்கு என்னைப் பொறுப்பாக்கி என்மீது மட்டும் நடவடிக்கை எடுத்து என்னை பலிகிடா ஆக்கி விட்டு எனக்கு முன்பாக பணி செய்தவர்களை பாலினப்பாகுபாடு பார்த்து நடவடிக்கை எடுக்காமல் செய்தது- இயற்கை நீதியை கருவறுப்பதாகும்,
5. விதிமீறல் கட்டடங்களுக்கான பலதரப்பட்ட காரணிகளை (விதிமீறல் கட்டடங்களுக்கு சொத்து வரி விதிப்பது- இதன் மூலமாக அக்கட்டடங்களுக்கு மின்சாரம், கழிவு நீர் மற்றும் குடிநீர் இணைப்பு) கண்டறிந்து அவற்றை நிவிர்த்தி செய்வதற்கான வழிவகைகளை ஆராயாமல் வார்டு பொறியாளர்களை மட்டும் அதற்கு பொறுப்பாக்கி அவர்கள் மீது தொடர்ந்து இது போன்ற தாக்குதல்களை தொடர்வதால் அவர்களுக்கான நியாயமான பதவி உயர்வு மற்றும் கடுமையான ஊதிய இழப்பு பாதிப்பு,

6. சென்னையிலுள்ள கட்டடங்களில் 99 சதவீதம் விதிமீறலாக இருப்பது குறித்து உயர்நீதிமன்றத்தின் கருத்து மற்றும் இது சம்பந்தமான வழக்கு எண்.WP.NO.16555/2014 உயர் நீதிமன்றத்தில் நிலுவையிலிருப்பது,
7. மண்டலங்களில் பணிசெய்யும் வார்டு பொறியாளர்களின் 61க்கும் மேற்பட்ட, அன்றாடப் பணிகளை 775க்கும் மேற்பட்ட அதிகார நபர்களிடம் பணிசெய்யும் நிலை, இணைப்பு -4
8. எனது 9.01.2018 தேதியிட்ட நீண்ட விளக்கத்தை ஒருவரி கூட படிக்காமலும் என் தரப்பு கருத்துக்களை கிஞ்சிற்றும் கவனத்தில் கொள்ளாமலும போகிற போக்கில் ஒற்றை வரியில் இறுதி ஆணை (தண்டனை) பிறப்பித்திருப்பது இயற்கை நீதிக்கு முற்றிலும் முரணானதாகும்.
9. குறிப்பாணையில் குறிப்பிட்டுள்ள அனைத்து கட்டடங்களுக்கும் வேலை நிறுத்த அறிவிக்கை மற்றும் வரைபட அனுமதி கோரும் அறிவிக்கை வழங்கியிருப்பதும், துவக்க நிலை அமலாக்க நடவடிக்கையை எடுத்திருப்பதும் கவனத்தில் கொள்ளாமல் விட்டுவிட்டது,
10. வார்டு-173ல் விதிமீறல் கட்டடத்தின் மீது எடுத்த நடவடிக்கைக்காக ரூ.25,000/- அபராதம் செலுத்திய கொடுமை, இணைப்பு-5
11. கடந்த காலங்களில் மாநகராட்சியின் மிக முக்கிய வருவாயாகவுள்ள சொத்துவரி வசூலில் சிறப்பாக செயல்பட்ட நிகழ்வுகள் ,சொத்து வரி காசோலை நகல்கள் ,
12. வார்டு-173ல் , மாநகராட்சிக்குச் சொந்தமான 2.36 ஏக்கர் -42 கிரவுண்டு – ரூ. 210, கோடி மதிப்புடைய நிலம் மீட்கப்பட்டதில் மிக முக்கிய பங்காற்றியது,

ஆகியவற்றைத் தங்களின் மேலான கவனத்திற் கொண்டு 09.01.2018 அன்று நான் சமர்ப்பித்த நீண்ட விளக்கத்தை படித்தறிந்து ஓழுங்கு நடவடிக்கை மற்றும் மேல்முறையீடு விதி எண்.13(6) , இணைப்பு 14 மற்றும் 15ன்படி எனது இந்த மேல் முறையீட்டை ஏற்று என்மீதான குறிப்பாணை மற்றும் அதன்மீது வழங்கப்பட்ட இறுதி ஆணையையும் கைவிடுமாறு தங்களை பணிவுடன் வேண்டுகிறேன். திரு.அ.பன்னீர்செல்வம், இளநிலை பொறியாளர், மண்டலம்-6, (தற்போது கட்டடத்துறை (மாற்றுப்பணி மண்டலம்-7), அவர்கள் மீது ஏற்படுத்தப்பட்ட குற்றச்சாட்டிற்கு தனியர் அளித்துள்ள விளக்கத்தினை கூர்ந்தாய்வு செய்து, ஆணையர்அவர்களின் 11.02.2019 நாளிட்ட செயல்முறை ஆணையில் **தனியரின் ஊதிய உயர்வினை இரண்டாண்டிற்கு திரண்ட பயனின்றி நிறுத்தம்** செய்து இறுதி ஆணை வழங்கப்பட்டது.

தற்போது, திரு.அ.பன்னீர்செல்வம், இளநிலை பொறியாளர், மண்டலம்-6, (தற்போது கட்டடத்துறை (மாற்றுப்பணி மண்டலம்-7), அவர்கள், தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து 22.04.2019 நாளிட்ட மேல்முறையீடு மனுவினை சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களிடம் அளித்துள்ளார்.

எனவே, திரு.அ.பன்னீர்செல்வம், இளநிலை பொறியாளர், மண்டலம்-6, (தற்போது கட்டடத்துறை (மாற்றுப்பணி மண்டலம்-7), அவர்கள், வகுப்பு 3ஐ சார்ந்த பணியாளர் என்பதால் தனியர் சமர்ப்பித்துள்ள மேல்முறையீட்டு மனு மீது உரிய முடிவு எடுக்கும் பொருட்டு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு சமர்ப்பித்த ஆணையரது 28.05.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"As there's no fresh grounds on the preferred appeal, the earlier punishment is confirmed என சிறப்பு அதிகாரி- மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".

*****

க.து.ந.க.எண்.அ4/10160/2018

தீர்மான எண்.329/2019 **நாள்:24-06-2019**

கல்வித்துறை - அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் இதர பணியாளர்களுக்கு பொது வைப்பு நிதி - அரசு கணக்கிற்கு 31.03.2019 அன்று வரை முற்றிலும் மாற்றம் செய்யப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி.

அரசாணை நிலை எண்:214, பள்ளி கல்வித்துறை இஇ3/2/ நாள் 19.10.17 அரசாணை நிலை எண்:30, பள்ளி கல்வித்துறை இஇ3/(2)/ நாள்.14.02.2019, மற்றும் அரசாணை நிலை எண்:31, பள்ளி கல்வித்துறை இஇ3/(2)/ நாள் 14.02.2019ல் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர்களின் பொது வைப்பு நிதி கணக்கு மற்றும் இருப்புத்தொகையினை பெருநகர சென்னை மாநகராட்சி கணக்கிலிருந்து அரசு கணக்கிற்கு மாற்றம் செய்து அவர்களுக்கு புதிய கணக்கு எண் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டது.

சிறப்பு அதிகாரி, மன்ற தீர்மான எண்.737/2018, நாள். 06.09.2018ல் பெருநகர சென்னை மாநகராட்சி கல்வித்துறையின் கீழ் இயங்கும் பள்ளிகளில் பணிபுரியும் 2348 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர்களின் பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு விவரங்கள் மற்றும் 31.03.2018 வரை பெருநகர சென்னை மாநகராட்சி இருப்பிலுள்ள தொகை ரூ.99,27,74,202/-ஐ அரசு கணக்கிற்கு மாற்றம் செய்ய அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

உதவி இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை (பெருநகர சென்னை மாநகராட்சி சென்னை-03) அவர்களின் 20.03.2019 நாளிட்ட தணிக்கை அறிக்கையில் 31.03.2019 வரை பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து பொது வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்களுக்கும் இறுதி இருப்பானது கணக்கீடு செய்யப்பட்டு மொத்த தொகைக்கு தணிக்கை அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆணையர் அவர்களின் 27.03.2019 நாளிட்ட செயல்முறை ஆணையில் உள்ளாட்சி நிதி தணிக்கையில் சான்றளிக்கப்பட்டுள்ள சென்னை தொடக்க மற்றும் நடுநிலை பள்ளிகளில் பணிபுரியும் 1193 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர்களின் பொது வருங்கால வைப்பு நிதி கணக்குகள் 31.03.2019 வரை கணக்கிடப்பட்டு இறுதியிருப்பு தொகையான ரூ.75,11,94,210/- மற்றும் உயர்நிலை / மேல்நிலை பள்ளிகளில் பணிபுரியும் 1099 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர்களின் பொது வருங்கால வைப்பு நிதி கணக்கு 31.03.2019 வரை உள்ள இறுதியிருப்பு தொகையான ரூ.67,69,02,695/- அரசு கணக்கிற்கு மாற்றம் செய்ய ஆணையிடப்பட்டுள்ளது.

அதன் அடிப்படையில் மேற்கண்ட இரண்டு தொகைக்கும் மன்றத்தீர்மானத்தில் பின்னேற்பு ஆணைக்குட்பட்டு 31.03.2019 அன்று வரை வட்டியுடன் அரசு கணக்கில் 28.03.2019 அன்று செலுத்தப்பட்டுவிட்டது. அனைத்து ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோரின் பொது வருங்கால வைப்பு நிதி இறுதி இருப்புகளும் சந்தாதாரர்களின் விவரங்களும் முழுவதுமாக அரசுக்கு மாற்றம் செய்யப்பட்டுவிட்டது. இனி வரும் காலங்களில் அனைத்து பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோரின் பொது வருங்கால வைப்பு நிதி தமிழக அரசு வழங்கும் ஊதியத்தில் பிடித்தம் செய்து அரசு கணக்கில் (மாநில கணக்காயர், சென்னை-18) செலுத்தப்படும் எனவும், முன்பணம் மற்றும் இறுதித்தொகை அரசு கணக்கிலிருந்து உதவி சம்பள கணக்கு அலுவலர், சார் சம்பள கணக்கு அலுவலகம், சென்னை மாநகராட்சி, சென்னை-03 (Asst. Pay & Accounts Officer, Sub Pay and Accounts Office, Chennai-03) மூலம் வழங்கப்படும் என அரசாணையின்படி தெரிவித்துகொள்ளப்படுள்ளது.

சிறப்பு அதிகாரி-மன்றத் தீர்மானம் எண்.263/2019 நாள்.21.05.2019.ல் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் அலுவலர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியரல்லாதோர் பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து அவசர தேவைக்கான முன்பணம்/ பகுதி இறுதிதொகை பெற ஒப்பளிப்பு வழங்கும் அதிகார பகிர்ந்தளிப்பு செயல் முறை ஆணை அதிகாரம் (Delegation of Powers to the Sanctioning Authority) வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசு பணியாளர்களின் பொது வைப்பு நிதி விதிகளின்படி பொது வருங்கால வைப்பு நிதி சந்தாதாரர்கள் வயது முதிர்வு/தன் விருப்ப ஓய்வு காரணமாக ஓய்வு பெற்றாலோ / பணியில்

இருக்கும் போது மரணமடைந்தாலோ இறுதித்தொகை *(Final Settlement)* மாநில கணக்காயர் அவர்களின் ஒப்பளிப்பு ஆணையினை *(A G Authorisation)* பெற்று அதன் அடிப்படையில் பணம் வழங்கும் அலுவலரால் பொது வருங்கால வைப்பு நிதி இறுதித்தொகை பெற்று வழங்கப்பட வேண்டும் .

(அ) சிறப்பு அதிகாரி-மன்றத் தீர்மான எண்.263/2019, நாள்.21.05.2019ல், அதிகார பங்களிப்பு செயல்முறை ஆணையில் இறுதி தொகை பெற்று வழங்கும் அதிகாரிகளின் விவரம் குறிப்பிடப்பட்ட 4 வது வரிசை நீக்கம் செய்யப்பட வேண்டும்.. சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோரின் பொது வருங்கால வைப்பு நிதி இறுதித்தொகை மாநில கணக்காயர் அலுவலகத்தின் ஒப்பளிப்பு ஆணையின் அடிப்படையில் தான் வழங்கப்பட வேண்டும் என திருத்தம் செய்யவும்,

(ஆ) மேலும் மேற்கண்ட அரசாணைகளின்படியும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் ஆணையின்படியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் பொது வருங்கால வைப்பு நிதித்தொகை மொத்தம் ரூ.142809695/- அரசுக்கு மாற்றம் செய்ததற்கும், அதற்குரிய கணக்குகளையும் மாநில கணக்காயருக்கு மாற்றம் செய்ததற்கும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 19.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.இ6/32877/2018

தீர்மான எண்.330/2019 **நாள்:24-06-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.ஆ.முருகன், பதிவுரு எழுத்தர், பண்ணுருட்டி நகராட்சி என்பவர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் கோரியது - தனியர் குறித்த விவரங்கள் கோரப்பட்டது - தனியர் 10ஆம் வகுப்பு தோல்வி - தனியரை பதிவுரு எழுத்தர் பதவியில் ஈர்த்துக் கொள்ள இயலாது என்ற விவரத்தை தெரிவிப்பதற்கு அனுமதி.

பண்ணுருட்டி நகராட்சியில் பதிவுரு எழுத்தராக பணிபுரியும் திரு.ஆ.முருகன் என்பவர் தனது குடும்ப சூழ்நிலை காரணமாக, பண்ணுருட்டி நகராட்சியிலிருந்து பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஒரு வழி பணியிட மாறுதல் கோரியதை தொடர்ந்து, இப்பொருள்தொடர்பாக தனியரின் பணியிட மாறுதல் குறித்து பண்ணுருட்டி நகராட்சியில் மன்றத் தீர்மானம் நிறைவேற்றி, தீர்மான நகலையும் தனியரின் அசல் கடிதம் மற்றும் விவரங்களை அளிக்குமாறு கோரப்பட்டது.

பண்ணுருட்டி நகராட்சி நகர மன்ற தீர்மானம் மற்றும் ஆணையாளர், பண்ணுருட்டி நகராட்சி அவர்களின் கடிதம் பெறப்பட்டது. அவற்றில் இவ்வலுவலகத்தில் கோரப்பட்ட சில விவரங்கள் அளிக்கப்படவில்லை, அதனை தொடர்ந்து இவ்வலுவலக 09.01.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக தனியர் பணியிட மாறுதல் கோரிய அசல் கடிதம், தனியரின் தகுதிகாண்பருவம் முடித்த நாள் மற்றும் தனியரின் கல்வித்தகுதி ஆகியவை கோரப்பட்டது. நகராட்சி பொறியாளர்(ம) ஆணையாளர்(பொ) அவர்களின் 27.02.2019 நாளிட்ட கடிதத்தில் தனியரின் பணியிட மாறுதல் கோரிய அசல் கடிதம் நிர்வாக ஆணையர் அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது எனவும், அவற்றின் நகல் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது எனவும், தனியர் தகுதிகாண் பருவம் முடித்த நாள்.15.10.2014, கல்வித்தகுதி 10ஆம் வகுப்பு தோல்வி எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி பணி விதிகளின்படி, பதிவுரு எழுத்தர் பதவிக்கு, குறைந்தபட்ச பொது கல்வித்தகுதியில் (10ஆம் வகுப்பு) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். திரு.ஆ.முருகன், பதிவுரு எழுத்தர், பண்ணுருட்டி நகராட்சி அவர்கள் 10ஆம் வகுப்பு தோல்வி அடைந்துள்ளார். ஆதலால் தனியரை பதிவுரு எழுத்தர் பதவியில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஈர்த்துக் கொள்ள இயலாது என தெரிவிக்கப்படுகிறது.

எனவே,

அ) திரு.ஆ.முருகன், பதிவுரு எழுத்தர், பண்ணுருட்டி நகராட்சி அவர்கள் 10ஆம் வகுப்பு தோல்வி அடைந்துள்ளதால், தனியரை பெருநகர சென்னை மாநகராட்சிக்கு ஈர்த்துக் கொள்ள இயலாது என, ஆணையாளர், பண்ணுருட்டி நகராட்சி அவர்களுக்கு கடிதம் அனுப்பவும்,

ஆ) சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் தீர்மான எண். 972/2018, நாள்.05.12.2018யை ரத்து செய்யவும்,

மேற்கண்ட அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"அ மற்றும் ஆ ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.ஈ1/38243/2017

தீர்மான எண்.331/2019 **நாள்:24-06-2019**

பணியமைப்பு - பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.P.H.சங்கர், தலைமை கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம் அவர்களை 30.11.2017 பிற்பகல் முதல் ஒழுங்கு நடவடிக்கைக்கு குந்தகமின்றி பணியிலிருந்து சிறப்பு அதிகாரி - மன்றம் அவர்களின் பின்னேற்புக்குட்பட்டு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி.

நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 15.03.2019 நாளிட்ட கடிதத்தில், பொதுத்துறையின் 24.12.2016 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, திரு.P.H.சங்கர், தலைமை கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம் (தலைமையிடம்) அவர்கள் 30.11.2017 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு காரணமாக ஆணையர் அவர்களின் 30.11.2017 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி தனியரை, ஒழுங்கு நடவடிக்கை எவ்வித குந்தகமின்றி, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டமைக்கு பின்னேற்பு அனுமதி வேண்டி கோரப்பட்டுள்ளது.

திரு.P.H.சங்கர், தலைமை கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் தலைமையிடம்) அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் இயந்திர பொறியியல் துறையில் 23.03.1988 அன்று தட்டச்சராக பணியில் சேர்ந்து 26.06.1997 அன்று உதவியாளராகவும், 17.09.2007 அன்று உரிமம் ஆய்வாளராக பதவி உயர்வு பெற்று மீண்டும் 28.08.2008 அன்று உதவியாளராக பதவி இறக்கம் செய்யப்பட்டார். மேலும், 09.10.2009 அன்று பிரிவு மேலாளராகவும், 30.06.2014 நிர்வாக அலுவலராகவும், 12.08.2016 அன்று உதவி கணக்கு அலுவலராகவும் மற்றும் 23.11.2017 முதல் தலைமை கணக்கு அலுவலராகவும் பதவி உயர்வு பெற்று 30.11.2017 அன்று பிற்பகல் முதல் பணியிலிருந்து ஒழுங்கு நடவடிக்கை எவ்வித குந்தகமின்றி, சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு பணியிலிருந்து ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

திரு.P.H.சங்கர், தலைமை கணக்கு அலுவலர் அவர்கள், சென்னை மாநகராட்சியில் பணியில் சேர்ந்த நாளான 23.03.1988 முதல் 30.11.2017 வரை பணிபுரிந்த பழைய மண்டலம்-3 புதிய மண்டலம்-6 தவிர கீழ்கண்ட துறை / மண்டலங்கள் மற்றும் மத்திய கணக்கு குழுமத்திலும் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கைகள், விசாரணை (ம) தணிக்கை தடைகள் நிலுவையில் இல்லை என்ற விவரம் பெறப்பட்டது.

வ. எண்	காலங்கள்	பதவி	துறை
01.	23.03.1988 மு.ப. முதல் 20.06.1995 பி.ப. முடிய	தட்டச்சர்	இயந்திரப் பொறியியல்
02.	21.06.1995 மு.ப. முதல் 25.06.1997 பி.ப. முடிய	தட்டச்சர்	சுகாதாரத் துறை
03.	26.06.1997 மு.ப. முதல் 16.09.2007 பி.ப. முடிய	உதவியாளர்	கல்வித் துறை
04.	17.09.2007 மு.ப. முதல் 27.08.2008 பி.ப. முடிய	உரிமம் ஆய்வாளர்	வருவாயத் துறை (ப.ம-3) புதிய மண்டலம்-6
05.	28.08.2008 மு.ப. முதல் 08.10.2009 பி.ப.முடிய (பதவி இறக்கம்)	உதவியாளர்	கல்வித் துறை
06.	09.10.2009 மு.ப. முதல் 30.06.2014 மு.ப. முடிய	பிரிவு மேலாளர்	ப.மண்டலம்-8 பு.மண்டலம்-10
07.	30.06.2014 மு.ப. முதல் 03.07.2014 பி.ப. முடிய	நிர்வாக அலுவலர்	வட்டார அலுவலகம் (மத்தியம்)
08.	04.07.2014 மு.ப. முதல் 19.11.2014 மு.ப. முடிய	நிர்வாக அலுவலர்	தொற்றுநோய் மருத்துவமனை

09.	19.11.2014 பி.ப. முதல் 12.08.2016 மு.ப. முடிய	நிர்வாக அலுவலர்	வட்டார இணை ஆணையர் அலுவலகம் (தெற்கு)
10.	12.08.2016 மு.ப. முதல் 22.11.2017	உதவி கணக்கு அலுவலர்	மத்திய கணக்கு குழுமம் (ம-8)
11.	23.11.2017 முதல் 30.11.2017	தலைமை கணக்கு அலுவலர்	தலைமையிடம்

தனியர் மண்டலம்-6ல் 17.09.2007 முதல் 27.08.2008 வரை உரிமம் ஆய்வாளராக பணிபுரிந்த காலத்தில் 2008-2009ம் ஆண்டு தணிக்கைத்தடை பத்தி எண்.83 தொ.க.எண்.6/ஈ2/27.06.2017 அன்று நீக்கப்பட்டுள்ளது என்றும், அதனுடைய F.R Copy நகல் இணைக்கப்பட்டுள்ளது என குறிப்பிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தில், தனியர் உறுப்பினர் இல்லை என தெரிவித்து 27.06.2017 நாளிட்ட சான்றிதழ் பெறப்பட்டது.

ஆணையர் அவர்களின் 01.09.2017 நாளிட்ட குறிப்பாணையில் திரு.P.H.சங்கர், தலைமை கணக்கு அலுவலர் அவர்கள் மத்திய வட்டார அலுவலகத்தில் பணிபுரியும் உதவி பொறியாளருக்கு 9300-34800+5100 தரஊதியம் என்பதற்கு பதிலாக 15600-39100+5400 தரஊதியம் என ஊதியம் நிர்ணயம் செய்ததற்காக சென்னை மாநகராட்சி பணி விதிகள் (வகைப்பாடு, கட்டுப்பாடு மற்றும் மேல்முறையீடு) 1970 ன்படி துணை விதி 10(a) ன்கீழ் குறிப்பாணை வழங்கப்பட்டது.

பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு அலுவலர், விழிப்புக்குழுமம் அவர்களின் 03.11.2017 நாளிட்ட அறிக்கையில் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்று சான்று அளிக்கப்பட்டது.

தனியரின் 02.11.2017 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தில், தான் உதவி கணக்கு அலுவலராக பகுதி கணக்கு குழுமம், மண்டலம் 8ல் பணிபுரிந்து வரும் நிலையில் 30.11.2017 அன்று ஓய்வு பெறவுள்ளதாகவும், தனியருக்கு வழங்கப்படும் ஓய்வூதியப்பணப்பயன்கள் அதிகம் வழங்கப்பட்டது என பின்னர் தெரியவரும் பட்சத்தில், அத்தொகையை சென்னை மாநகராட்சி கருவூலத்தில் ஒரே தவணையில் செலுத்தி விடுவேன் என உறுதி மொழி கடிதம் அளிக்கப்பட்டது.

ஆணையர் அவர்களின் 30.11.2017 நாளிட்ட செயல்முறை ஆணையின்படி, திரு.P.H.சங்கர், தலைமை கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் தலைமையிடம்) அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடைகள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தியது பின்னர் தெரியவரின் தனியரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கின்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் தனியர் மீது தொடரப்பட்ட 10(a)ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ள காரணத்தினால், ஒழுங்கு நடவடிக்கை இறுதி முடிவுக்கு எவ்வித குந்தகமின்றியும், தமிழ்நாடு அரசு ஓய்வூதிய விதி எண் 9 ன்படி, ஒழுங்கு நடவடிக்கை தொடர்ந்து இருக்கும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, தனியரை 30.11.2017 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணையிடப்பட்டது.

ஆணையர் அவர்களின் 06.04.2018 நாளிட்ட செயல்முறை ஆணையில் தனியர் மீதான ஒழுங்கு நடவடிக்கை கைவிடப்படுகிறது என ஆணையிடப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 15.03.2019 நாளிட்ட கடிதத்தின்படி, தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட்டமைக்கு பின்னேற்பு பெறப்பட வேண்டும்.

அரசாணை(ப) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்(தேர்தல்) துறை நாள்.24.10.2016ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்கள் வசம் உள்ளது.

பொ.து.ந.க.எண்.ஈ1/38243/2017

ஆகவே, திரு.P.H.சங்கர், தலைமை கணக்கு அலுவலர், மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் தலைமையிடம் வயது முதிர்வு ஓய்வு நாள்.30.11.2017) அவர்களை பொறுப்பாக்கும் தணிக்கைத்தடைகள் மற்றும் மாநகராட்சிக்கு நிதி இழப்பீடு ஏற்படுத்தியது பின்னர் தெரியவரின் தனியரது பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்கின்ற நிபந்தனைக்குட்பட்டும், மேலும் தனியர் மீது தொடரப்பட்ட 10(a)ன்கீழ் ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் உள்ள காரணத்தினால், ஒழுங்கு நடவடிக்கை இறுதி முடிவுக்கு எவ்வித குந்தகமின்றியும், தமிழ்நாடு அரசு ஓய்வூதிய விதி எண் 9 ன்படி, ஒழுங்கு நடவடிக்கை தொடர்ந்து இருக்கும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதிக்குட்பட்டு, தனியரை 30.11.2017 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்து ஆணையிடப்பட்டமைக்கு சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களின் பின்னேற்பு அனுமதி கோரிய ஆணையரது 18.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதித்து ஆணையிடப்பட்டமைக்கு சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களால் பின்னேற்பு அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ம.அ.14.ந.க.எண்.அ7/1633 /2013

தீர்மான எண்.332/2019 **நாள்:24-06-2019**

மண்டலம்-14 - பகுதி-41, 42மற்றும் 43, வார்டு168, 169, 183 முதல் 191 வரை தேசிய நகர்புற வாழ்வாதார இயக்கத் திட்டத்தின் (NULM) கீழ் நடைபெற்று வந்த துப்புரவு பணி 30.06.2019 உடன் முடிவடைகிறது- 01.07.2019 முதல் 30.09.2019 வரை 92 நாட்களுக்கு கால நீட்டிப்பு செய்வதற்கு - நிர்வாகஅனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட புதியதாக உருவாக்கப்பட்ட மண்டலம்-14 (பெருங்குடி) கொட்டிவாக்கம், பாலவாக்கம், மடிப்பாக்கம், ஜல்லடம்பேட்டை ஆகிய கிராம பஞ்சாயத்துகளும், பள்ளிக்கரணை, பெருங்குடி ஆகிய பேரூராட்சி மற்றும் உள்ளகரம் புழுதிவாக்கம் நகராட்சி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி இணைக்கப்பட்ட மண்டலமாகும். புதியதாக உருவாக்கப்பட்ட இம்மண்டலம் 11 வார்டுகளை கொண்டுள்ளது. 86,539 வீடுகளுடன் கூடிய 3,45,435 எண்ணிக்கைகள் மக்கள் தொகை கொண்ட பெரிய மண்டலமாகும். இம்மண்டலத்தில் உள்ள 2,489 சாலைகள் 394.28 கிலோ மீட்டர் நீளம் கொண்டதாகும்.

மண்டலம் 14-ல் உருவாகும் குப்பைகள் 20எண்ணிக்கை கொண்ட கம்பாக்டர் வண்டிகள், 300 எண்ணிக்கை கொண்ட மூன்று சக்கர மிதிவண்டி மற்றும் 10 எண்ணிக்கையில் உள்ள பலதரப்பட்ட வண்டிகள் மூலமும் 172.71மெட்ரிக் டன் அளவிற்கு குப்பைகள் நாள் தோறும் அகற்றப்பட்டு வருகிறது.

தோராயமாக வீதிகளை சுத்தம் செய்யவும், மூன்று சக்கரவண்டி ஓட்டவும் கம்பாக்டர் மற்றும் லாரிகளில் குப்பைகளை ஏற்றிக் கொண்டு அப்புறப்படுத்தவும், இரவுப்பணி செய்யவும், மொத்தம் 1,353 பணியாளர்கள் தேவைப்படுகின்றனர்.

தற்பொழுது மண்டலத்தில் மொத்தமுள்ள நிரந்தரம் மற்றும் சுமார் 15வருடங்களாக பஞ்சாயத்து காலத்திலிருந்து இன்று வரை தற்காலிகமாக பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள் சேர்த்து மொத்தம் 538 பணியாளர்கள் பணிபுரிகின்றனர். ஆகையால் மொத்தம் தேவையான பணியாளர்கள் 1,353-ல் பணிபுரியும் பணியாளர்கள் 538 போக மீதம் உள்ள 815 பணியாளர்கள் தேவைப்பட்டது.

ஆணையர் மற்றும் சிறப்பு அதிகாரி அவர்களின் 07.03.2019 நாளிட்ட ஒப்புதலின்படி இப்பணியானது 01/04/2019 முதல் 30/06/2019 வரை துப்புரவுபணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியானது 30/06/2019 உடன் முடிவடைவதால் 01/07/2019 முதல் 30.09.2019 வரை NULM திட்டத்தின் மூலம் தொடர்ந்து துப்புரவுபணி மேற்கொள்வதற்கு அனுமதி வேண்டப்படுகிறது.

சென்னை மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் 16.05.2019 நாளிட்ட செயல்முறை ஆணை C2/7393/2018-ன் படி உறுதி செய்யப்பட்ட ஒரு துப்புரவு தொழிலாளியின் தினக்கூலி ரூ.379/-என்ற அடிப்படையிலும், மண்டலம் 14-க்கு தேவைப்படும் 815 தினக்கூலி துப்புரவு பணியாளர்களுக்கு (01/07/2019 முதல் 30/09/2019 வரை) 92 நாட்களுக்கு (ரூ.379/- X 815 X92 = ரூ.2,84,17,420/-) (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து பதினேழாயிரத்து நானூற்று இருபது மட்டும்) தேவைப்படுகிறது.

எனவே, மண்டலம்-14ல் பகுதி-41,42 மற்றும் 43ல் உள்ள கோட்டங்களான 168,169 மற்றும் 183 முதல் 191 வரை உள்ள பகுதிகளில் இதுநாள் வரை பணியில் ஈடுபடுத்தப்பட்ட தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்ட உறுப்பினர்களின் விவரங்கள் அடங்கிய பட்டியல் கீழ்க்கண்டவாறு குறிப்பிடப்படுகிறது.

தற்போது பணிபுரிந்து வரும் தேசிய நகர்புற வாழ்வாதார திட்டத்தின் (NULM) பணியாளர்கள் விவரங்கள்

வ. எண்	பகுதி	வார்டு எண்	தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்ட பணியாளர்கள்	மொத்தப் பணியாளர்கள்	நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.379.00 வீதம் 92 நாட்களுக்கு செலவாகும் தொகை
1	41	183	99	302	ரூ.1,05,30,136/-
2		184	31		
3		185	111		
4		186	61		

5	42	187	34	327	ரூ.1,14,01,836/-
6		188	127		
7		168	47		
8		169	119		
9	43	189	67	186	ரூ.64,85,448/-
10		190	60		
11		191	59		
	மொத்தம்		815	815	ரூ.2,84,17,420/-

எனவே, இம்மண்டலத்தின் துப்புரவுபணியின் முக்கியத்துவம் கருதி,

1. விரிவாக்கப்பட்ட மண்டலங்களில் துப்புரவு பணி தனியார் மயமாக்கும் பணி மேற்கொள்ளப்பட்டு வருவதால், மண்டலம் 14, பகுதி41, 42 (ம) 43-ல் துப்புரவு பணிக்காக தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் (NULM) மூலம் பணியமர்த்தப்பட்ட 815 துப்புரவு பணியாளர்களை01.07.2019 முதல் 30.09.2019 வரை மேலும் மூன்று மாதகாலத்திற்கு (92 நாட்களுக்கு) கால நீட்டிப்பு செய்து பணியமர்த்த நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மேற்கண்டவாறு பணியமர்த்தப்படுவதற்கு ஆகும் செலவினத் தொகை ரூ.2,84,17,420/- (ரூபாய் இரண்டு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து பதினேழாயிரத்து நானூற்று இருபது மட்டும்) ஒதுக்கீடு செய்ய அனுமதியும்,
3. மேற்கண்ட பணிக்கு செலவாகும் தொகைக்கு பிரிவு குறியீடு எண். 40-41-03 மற்றும் கணக்கு குறியீடு எண்.230-15-01-00 கீழ் தனியார் மயம் துப்புரவு என்ற தலைப்பில் 2019-20ம் நிதியாண்டில் போதிய நிதி ஒதுக்கீடு செய்து, பட்டி தீர்வு செய்ய ஆணை வேண்டியும்,
4. மண்டலம்-14ல் பகுதி-41,42 மற்றும் 43-ல் பகுதிகளில் துப்புரவு பணி மேற்கொள்ள 01.07.2019 முதல் 30.09.2019 வரை 92 நாட்களுக்கு, ஏற்கனவே பணிப்புரிந்த தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்ட உறுப்பினர்களை கொண்டு (NULM) 45 குழு ஊக்குவிப்பாளர்களுக்கு மண்டல அலுவலர்-14அவர்கள் மூலமாக பணி ஆணை வழங்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி - நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 18.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ம.அ.14/வ.து.ந.க.எண்.ஆர்2/0592/2018

தீர்மான எண்.333/2019 **நாள்:24-06-2019**

மண்டலம்-14 - வருவாய்த்துறை - வார்டு 183, 188, 189 (ம) 191 ல் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சொந்தமான சமூக நல கூடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்ய அனுமதி.

வட்டார துணை ஆணையர் (தெ) அவர்கள் மண்டலங்களில் உள்ள சமூக நலக் கூடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளன எனவும், இதனால் பெருநகர மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏற்படுவதாகவும் மற்றும் கட்டுமான பணியில் உள்ள சமூகநலக் கூடத்திற்கு கட்டுமான பணி முடிவடைந்து அதன் பிறகு வாடகை நிர்ணயம் செய்து அதை மக்கள் பயன்பாட்டிற்கு விடுவதற்கு காலவிரயம் மற்றும் வருவாய் இழப்பு ஏற்படுவதாலும் இப்போதே வாடகை நிர்ணயம் செய்திடுமாறு வாய்மொழியாக அறிவுறுத்தியுள்ளார்.

மண்டலம் 14, வார்டு 183, 188, 189 (ம) 191 ல் பெருநகர மாநகராட்சிக்கு சொந்தமான சமூக நல கூடங்கள் அனைத்தும் கட்டுமான பணி நடைபெற்று முடிவடையும் தருவாயில் இருப்பதால் அப்பணிகள் முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வழிவகை செய்யும் பொருட்டு அதற்கு வாடகை நிர்ணயம் செய்யப்பட வேண்டியுள்ளது. மண்டலம்-14ல் வாடகை நிர்ணயம் செய்திட வேண்டிய சமுதாய நலக் கூடங்களின் விவரங்கள் மற்றும் அதற்கான அளவீடுகள் கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது :-

வ. எண்	வார்டு	சமூகநலகூடம் அமைந்துள்ள இடம்	கட்டிடத்தின் மொத்த பரப்பளவு (ச.அடி)
01	183	குப்பம் சாலை, கொட்டிவாக்கம்.	2935
02	188	மயிலை பாலாஜி நகர் 3வது பிளாக், மடிப்பாக்கம்.	2575
03	189	ஐ.ஐ.டி., காலனி 3வது பிரதான சாலை, பள்ளிக்கரணை	6566
04	191	வீராத்தம்மன் கோயில் தெரு, ஜல்லடையான் பேட்டை	2008

மேலும், மேற்கண்ட சமுதாய நலக்கூடங்களில் மராமத்து பணிகள் நடைபெற்று வந்ததாலும், உணவு கூடம் மற்றும் கழிவறை வசதிகள் இல்லாத காரணத்தினால் அதற்குண்டான பணிகள் நடைபெற்று தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளதால் இதற்கு தற்போதே வாடகை நிர்ணயம் செய்யப்பட்டால் பணிகள் முடிவுற்ற உடனே மக்கள் பயன்பாட்டிற்கு வழிவகை செய்ய ஏதுவாகும். இதனால் காலவிரயம் ஏற்படுவதை தவிர்ப்பதுடன் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் இழப்பீடு ஏதும் ஏற்படாவண்ணம் தவிர்க்கலாம்.

இச்சமூக நலக்கூடங்களில் உணவருந்தும் கூடம், தளவாட சாமான்கள், மின்சார இணைப்பு, மின் விளக்கு, கழிவறை, மின்விசிறி, குடிநீர் இணைப்பு, சமையல் அறை மற்றும் மணமகன், மணமகள் அறை போன்ற அத்தியாவசிய வசதிகள் அமைய பெற்றுள்ளவையாகும்.

எனவே, மண்டலம் - 14, வார்டு 183, 188, 189 மற்றும் 191ல் அமைந்துள்ள சமூக நலக் கூடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்ய அந்த அந்த பகுதியில் குடியிருப்பு அல்லாத கட்டிடத்திற்கு ஒரு சதுர அடிக்கு முறையே பெருநகர சென்னை மாநகராட்சி சொத்துவரி சீராய்வில் தற்போது நிர்ணயம் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டினை அடிப்படையாக கொண்டு கீழ்கண்டவாறு வாடகை நிர்ணயம் கணக்கிடப்பட்டுள்ளது.

கணக்கீட்டு தாள்:-

வ. எண்	வார்டு	சமூகநலகூடம் அமைந்துள்ள இடம்	பரப்பளவு (ச.அடி)	குடியிருப்பு அல்லாத பகுதிக்கு சொத்துவரி மதிப்பு சதுரடிக்கு (ரூ)	கணக்கீடு	வாடகை (ரூ)
01	183	குப்பம் சாலை, கொட்டிவாக்கம்.	2935	1.64	2935x1.64x12 ஆண்டுக்கு 40 நிகழ்ச்சி	1444

02	188	மயிலை பாலாஜி நகர் 3வது பிளாக், மடிப்பாக்கம்.	2575	3.76	2575x3.76x12 ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்	2905
03	189	ஐ.ஐ.டி., காலனி 3வது பிரதான சாலை, பள்ளிக்கரணை	6566	3.76	6566x3.76x12 ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்	7406
04	191	வீராத்தம்மன் கோயில் தெரு, ஜல்லடையான் பேட்டை	2008	2.60	2008x2.60x12 ஆண்டுக்கு 40 நிகழ்ச்சிகள்	1566

மேற்கண்டவாறு கணக்கிடப்பட்டுள்ள ஒரு நாள் வாடகையை முழுமையாக்கப்பட்ட கீழ்கண்டவாறு கணக்கீடு செய்யப்பட்டு ஒரு நாள் வாடகை மற்றும் அரைநாள் வாடகை ஆகியவற்றை கணக்கீட்டு கீழ்கண்டவாறு தெரிவிக்கப்படுகிறது.

வ. எண்	வார்டு	சமூகநலகூடம் அமைந்துள்ள இடம்	ஒரு நாள் வாடகை ரூ.	அரைநாள் வாடகை ரூ
01	183	குப்பம் சாலை, கொட்டிவாக்கம்.	1500	750
02	188	மயிலை பாலாஜி நகர் 3வது பிளாக், மடிப்பாக்கம்.	3000	1500
03	189	ஐ.ஐ.டி., காலனி 3வது பிரதான சாலை, பள்ளிக்கரணை	7500	3750
04	191	வீராத்தம்மன் கோயில் தெரு, ஜல்லடையான் பேட்டை	1600	800

மேற்கண்ட சமூக நலக்கூடங்களில் நடத்தப்படும் நிகழ்ச்சிகளுக்கு கட்டிட வாடகை மட்டுமே பொருந்தும் எனவும், நிகழ்ச்சிக்காக பயன்படுத்தப்படும் மின்சாரக்கட்டணம் தனியே பயன்பாட்டினை கணக்கிட்டு நிகழ்ச்சி நடத்துபவர்களிடம் தனியே வசூலிக்கப்படும்.

பிற நிபந்தனைகள் :-

1) அரசியல் நிகழ்சிகள், வணிக ரீதியான நிகழ்சிகள் போன்றவைகளுக்கு அனுமதி கிடையாது.
2) பெருநகர சென்னை மாநகராட்சி பயன்பாட்டிற்காக அலுவலர் கூட்டங்கள், இயற்கை இடர்பாடுகளின் போது பணிகள் மேற்கொள்ளுதல் மற்றும் தேர்தல் பணிகள் போன்ற தவிர்க்க முடியாத அவசர நிகழ்வுகளில் சமூக நலக்கூடம் தேவைப்படின் மனுதாரருக்கு வழங்கப்படும் முன்பதிவானது ரத்து செய்யப்படும்.
3) வாடகைக்கு ஒதுக்கீடு பெற்ற நிகழ்ச்சிக்காக மட்டுமே சமுதாய நலக்கூடம் பயன்படுத்தப்பட வேண்டும்.
4) சமூக நலக்கூடத்திற்குள் உள்ள பொருட்களை சேதப்படுத்தினால் அதற்குரிய தண்டத் தொகை வசூலிக்கப்பட்டு சீர் செய்யப்படும்.

எனவே,

1) மண்டலம் – 14ல், கீழ்கண்ட விவரங்களின்படி வார்டுகளில் உள்ள சமூகநலக் கூடத்திற்கு வாடகை நிர்ணயம் செய்யவும்,

வ. எண்	வார்டு	சமூகநலகூடம் அமைந்துள்ள இடம்	ஒரு நாள் வாடகை ரூ.	அரைநாள் வாடகை ரூ
01	183	குப்பம் சாலை, கொட்டிவாக்கம்.	1500	750
02	188	மயிலை பாலாஜி நகர் 3வது பிளாக், மடிப்பாக்கம்.	3000	1500
03	189	ஐ.ஐ.டி., காலனி 3வது பிரதான சாலை, பள்ளிக்கரணை	7500	3750
04	191	வீராத்தம்மன் கோயில் தெரு, ஜல்லடையான் பேட்டை	1600	800

ம.அ.14/வ.து.ந.க.எண்.ஆர்2/0592/2018

2. புனரமைப்பு மற்றும் கட்டுமான பணி நிறைவடைந்தவுடன் இச் சமூக நலக் கூடத்தினை பொதுமக்கள் பயன்பாட்டிற்கு அனுமதிக்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"சமூக நலக்கூடங்களுக்கு வாடகை நிர்ணயம் செய்ய சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

க.து.ந.க.எண்.அ-1/4650/2019

தீர்மான எண்.334/2019 **நாள்:24-06-2019**

கல்வித்துறை - சென்னைப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் நலனுக்காக கற்றல், கற்பித்தல், அலுவலகம், நிர்வாகம் போன்ற பள்ளி சார் பணிகளில் ஏற்படும் தேவைகளை சந்தித்திட மேலும் பள்ளியின் கல்வித்தரத்தை மேம்படுத்திட அந்தந்தப் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தேவைப்படும் நிதியினை பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் மேற்கொள்ள அனுமதி - தலைமையாசிரியர்களுக்குத் தேவைப்படும் நிதியை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியின் கீழ் 119 தொடக்கப்பள்ளிகளும், 92 நடுநிலைப்பள்ளிகளும், 38 உயர்நிலைப்பள்ளிகளும், 32 மேல்நிலைப்பள்ளிகளும் ஆக மொத்தம் 281 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பெரும்பாலும் வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள ஏழை எளிய மக்களின் குழந்தைகள் பயின்று வருகின்றனர். இவர்களது கல்வித்தரம் தனியார் பள்ளிகளுக்கு இணையாக உயர்த்தப்பட்டு வருகிறது. இப்பள்ளிகளில் கடந்த ஆண்டு பொதுத்தேர்வில் 12-ஆம் வகுப்பில் **90.49**% தேர்ச்சியும், 10-ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் **92.44**% தேர்ச்சியும் மற்றும் 12-ம் வகுப்பில் 4 பள்ளிகள் 100 சதவிகித மாணவர்கள் தேர்ச்சியும், 10-ஆம் வகுப்பில் 21 பள்ளிகள் 100 சதவிகித மாணவர்கள் தேர்ச்சியும் பெற்றிருந்தனர்.

மேற்குறிப்பிட்ட சென்னை தொடக்க, நடுநிலை, உயர் மற்றும் மேல்நிலை பள்ளிகளில் கற்றல், கற்பித்தல் பணிகளுடன் அலுவலகப்பணி, நிர்வாகப்பணி மற்றும் கணினி சம்மந்தப்பட்ட பணிகளுக்கான பணி செய்வதற்கான ஆள் எண்ணிக்கை (Man Power) குறைவாக உள்ளதால் இப்பள்ளிகளில் சில தேவைகள் ஏற்படுகின்றன. அதன் காரணமாக நிர்வாக பணிகள், அலுவலகப் பணிகள் மற்றும் கணினி சம்மந்தப்பட்ட பணிகள், கற்றல், கற்பித்தல் பணிகளில் தொய்வுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

ஆகவே, மாணவர்களின் நலனுக்காக கற்றல், கற்பித்தல், அலுவலகம், நிர்வாகம் போன்ற பள்ளிசார் பணிகளில் ஏற்படும் தேவைகள், குறைவுகள், தொய்வுகள் ஆகியவற்றை சந்தித்திடவும், பள்ளிகளில் தேவைகளை மேம்படுத்திடவும் அந்தந்தப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக பெற்று தலைமையாசிரியர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் வழங்க வேண்டி உள்ளது.

எனவே, பள்ளிகளின் தேவைகளை ஜுன் 2019 மாதம் முதல் மார்ச் 2020 மாதம் வரை (10-மாதம்) மேற்கொள்ளவும் பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக பெற்று தலைமையாசிரியர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் அளிக்கலாம்.

தற்போது தற்காலிக கணினி உதவியாளர்கள் மற்றும் தற்காலிக கணினி ஆசிரியர்களுக்கு மாத ஊதியமாக ரூ. 8,000/- வழங்கப்பட்டு வருகிறது. மேற்குறிப்பிட்ட தற்காலிக கணினி உதவியாளர்களுக்கு குறைந்த பட்ச ஊதியம் நாள் ஒன்றுக்கு ரூ. 415/- வீதம் ஒரு மாதத்திற்கு ஊதியம் ரூ.12,450/- நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சென்னை மாவட்ட ஆட்சியர் செயல்முறை ஆணை உள்ளது. எனவே, பள்ளிகளின் கணினி சம்மந்தப்பட்ட பணிகளை மேற்கொள்ளும் தற்காலிக கணினி உதவியாளர்கள் மற்றும் தற்காலிக கணினி ஆசிரியர்களுக்கு ரூ. 8,000/- த்திலிருந்து ரூ. 1000/- உயர்த்தி குறைந்த பட்ச ஊதியமாக ஒரு மாதத்திற்கான ஊதியம் ரூ.9,000/- நிர்ணயம் செய்யலாம்.

எனவே,

1. மாணவர்களின் நலனுக்காக கற்றல், கற்பித்தல், அலுவலகம், நிர்வாகம் போன்றவற்றில் ஏற்படும் பள்ளிசார் பணிகளில் ஏற்படும் தேவைகளை நிறைவு செய்திடவும், பள்ளிகளின் தேவைகளை மேம்படுத்திடவும், அந்தந்தப்பள்ளி தலைமையாசிரியர்களுக்கு தேவைப்படும் நிதியினை கல்வி அலுவலர் மூலம் நேரடியாக பெற்று தலைமையாசிரியர்களுக்கு பெற்றோர் ஆசிரியர் கழகத்தின் மூலம் வழங்க அனுமதியும்,

க.து.ந.க.எண்.அ-1 /4650/2019

2. பள்ளிகளின் கற்றல், கற்பித்தல் பணிகளுடன் அலுவலகப்பணி, நிர்வாகப்பணி மற்றும் கணினி சம்மந்தப்பட்ட பணிகளுக்கான பணி செய்வதற்கான தேவைகளை ஜுன் 2019 மாதம் முதல் மார்ச் 2020 மாதம் வரை (10-மாதம்) மேற்கொள்ள அனுமதியும்,
3. இச்செலவினங்களுக்காக ரூ.2,63,80,000/- (ரூபாய் இரண்டு கோடியே அறுபத்தி மூன்று இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்) வழங்க அனுமதியும்,
4. இத்தொகையை உயர்நிலை / மேல்நிலைப்பள்ளி கணக்கு குறியீடு எண்.80-82-01, 230-11-02-02 கல்வி செலவீனங்கள் என்ற நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள ரூ. 8.50கோடி (ரூபாய் எட்டு கோடியே ஐம்பது இலட்சம் மட்டும்) தொகையில் பெற அனுமதியும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு (கல்வி), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 20.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.இ9/16129/2019 &
ம.அ.9.ந.க.எண்.எச்1/ 3397/2019

தீர்மான எண்.335/2019 **நாள்:24-06-2019**

பணியமைப்பு - பொதுத்துறை - மண்டலம்-9, நான்காம் நிலை பணியாளர் சுகாதாரத்துறை - திரு. P.Y. நாராயணன், பணி எண்.131728, M.W.A. ஆண் இரண சிகிச்சையாளர் மண்டலம்-9 அவர்கள் அரசு இராயப்பேட்டை மருத்துவமனை மருத்துவ குழு சான்றின் படி 01.03.2019 முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் செல்ல அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-9 சுகாதாரத்துறையில் பணிபுரியும் திரு. P.Y. நாராயணன், பணி எண்.131728, M.W.A. ஆண் இரண சிகிச்சையாளர் மண்டலம்-9 அவர்கள் மருத்துவ இயலாமை ஓய்வு கோரி சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களுக்கு சமர்பித்துள்ள 10.12.2018 நாளிட்ட கடிதத்தில், சென்னை எழும்பூர் அரசு கண் மருத்துவ மனையில் எனது இரண்டு கண்களை பரிசோதனை செய்ததில் கண் மருத்துவர் உங்களது இரண்டு கண்களின் நரம்பு பாதிக்கப்பட்டமையால் கண் அறுவை சிகிச்சை செய்தாலும் 100% கண்பார்வை தெரிவதற்கு வாய்ப்பு இல்லை என கூறி கண்மருத்துவ சான்று வழங்கியுள்ளார். எனவே, ஐயா அவர்கள் சென்னை மாநகராட்சி பணியிலிருந்து என்னை மருத்துவரீதியாக தன் விருப்ப ஓய்வில் செல்ல அனுமதித்து உத்தரவு வழங்குமாறு தங்களை வணங்கி கேட்டுக் கொண்டும், எனது பணியை எனது வாரிசுதாரரும் மகனுமான P.N. மகேஷ் அவர்களுக்கு கருணை அடிப்படையில் பணி வழங்குமாறு தங்களை வணங்கி கேட்டுக் கொள்கிறேன் என கேட்டுகொண்டுள்ளார்.

இவர் பெருநகர சென்னை மாநகராட்சியில் 24.03.1987 அன்று முதற்கொண்டு ஆண் இரண சிகிச்சை பணியாளராக பணியில் சேர்ந்து தற்போது வரை பணிபுரிந்து வருகிறார் தனியரின் பிறந்த தேதி 03..04.1964. கருணை அடிப்படை பணி வழங்குவது அரசு விதிகளின்படி நடவடிக்கை மேற்கொள்ள இயலும்.(அரசு ஆணை (நி) எண்.168, தொ.ம.வே.வா(2) துறை ,நாள்,19.10.2000ன்படி 53 வயதை கடந்த நிலையில் வாரிசுக்கு கருணை அடிப்படை பணி வழங்க இயலாது.

மேற்கண்ட தனியரின் மருத்துவ இயலாமை ஓய்வு மனு மீது மேல்நடவடிக்கை எடுக்கும் பொருட்டு இவர் மீது இன்றைய தேதியில் பெருநகர சென்னை மாநகராட்சி விழிப்பு குழுமத்தில் விசாரணை ஏதும் நிலுவையில் இல்லையென்று விழிப்பு அலுவலர் பெருநகர சென்னை மாநராட்சி அவர்களின் 13.02.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக சான்றளிக்கப்பட்டுள்ளது. 19.02.2019 நாளிட்ட பெருநகர சென்னை மாநகராட்சி தொழிலாளர் கூட்டுறவு சங்கத்தில் கடன் தொகை ரூ.3,30,000/- உள்ளது என சான்றளிக்கப்பட்டுள்ளது.

இத்தனியரின் பணிப்பதிவேட்டினை சரிபார்த்ததில் இவர் பணியில் சேர்ந்த நாள் முதல் இந்நாள் வரையில் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டுகள் முன்பண நிலுவை மற்றும் தணிக்கை தடைஏதும் நிலுவையில் இல்லை. மேலும் தனியர் 31 வருங்கள் 11 மாதங்கள் (சம்பளமில்லா விடுப்பு நீங்கலாக) பணிபுரிந்துள்ளார்.

இவருக்கு ஆண் இரண சிகிச்சையாளர் பதவியில் 25.03.1988 முதல் தகுதிகாண் பருவம் முடித்தவராக அறிவிக்கப்பட்டுள்ளது. மற்றும் பணியில் சேர்ந்த நாளான 24.03.1987 முதல் பணிவரன் முறைப்படுத்தப்பட்டுள்ளது.

அரசு இராயப்பேட்டை மருத்துவமனை மருத்துவ குழு 27.02.2019 நாளிட்ட சான்றில் தனியருக்கு 100 சதவீதம் கண் பார்வை இல்லை என சன்றளிக்கப்பட்டுள்ளது. (As per the opinion of the ophthalmology Department of Opthal, Government Royapettah Hospital, Chennai-14 Bilateral Retinitis Pigmentosa Both Eyes 100% Blind.). தமிழ்நாடு ஓய்வூதிய விதி 1978ன்படி துணை பிதி எண் 36(1)ன்படி இக்கடிதம் அரசு மருத்துவ குழுவின் பரிந்துரையின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

10.12.2018 நாளிட்ட தனியர் தனது கடிதத்தில் மருத்துவ இயலாமை ஓய்வில் சென்ற பின்னர் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய நிலுவை தொகை ஏதேனும் இருப்பது தெரியவரின் அத்தொகை ஒரே தவணையில் மாநகராட்சி கருவூலத்தில் செலுத்திவிடுவதாக தெரிவித்துள்ளார்.

தனியரது மருத்துவ இயலாமை ஓய்வு கோரும் 10.12.2018 நாளிட்ட கடிதத்தின் அடிப்படையில் அரசு இராயப்பேட்டை மருத்துவமனை மருத்துவ குழு சான்றின் படி 01.03.2019 அன்று மருத்துவ இயலாமை ஓய்வில் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும்.

பொ.து.ந.க.எண்.இ9/16129/2019 &
ம.அ.9.ந.க.எண்.எச்1/ 3397/2019

இயக்குநர் மாநில விழிப்பு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறை அவர்களிடமிருந்து திரு. P.Y. நாராயணன், பணி எண்.131728, M.W.A. ஆண் இரண சிகிச்சையாளர் மண்டலம்-9 என்பவர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லையென்று 11.01.2019 நாளிட்ட சான்றளிக்கப்பட்டது

திரு. P.Y. நாராயணன், பணி எண்.131728, M.W.A. ஆண் இரண சிகிச்சையாளர் மண்டலம்-9 அவர்களை மருத்துவ இயலாமை ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி (மன்றம்) அவர்களின் அனுமதி பெறப்படவேண்டும். எனவே இத்தனியரை 01.03.2019 பிற்பகல் முதல் மருத்துவ இயலாமை ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 19.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"மருத்துவ இயலாமை ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.இ7/000219/2019 &
ம.சே.து.ந.க.எண்.எப்5/1841/2018

தீர்மான எண்.336/2019 **நாள்:24-06-2019**

பணியமைப்பு - பொதுத்துறை - மருத்துவ சேவைகள் துறை - 2018-2019ம் ஆண்டில் 01.04.2018ஐ மைய நாளாகக் கொண்டு புள்ளியியல் உதவியாளர் (Statistical Assistant) காலிப்பணியிடங்களுக்கான இறுதி தெரிவுப்பட்டியல் வெளியிடவும் மற்றும் பதவி உயர்வு வழங்கவும் அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை சார்நிலைப் பணிகளுக்கான திருத்தப்பட்ட துணை விதிகள் 2009, தீர்மான எண்.113/2018, நாள் : 02.02.2018-ன்படி புள்ளியியல் உதவியாளர் பதவிக்கு வரையறுக்கப்பட்ட பணி நியமன விதிகளின் படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மருத்துவ சேவைகள் துறையில் 2018-2019-ஆம் ஆண்டிற்கான புள்ளியியல் உதவியாளர் (Statistical Assistant) காலிப்பணியிடங்களை ரூ.35900-113500 என்ற ஊதிய விகிதம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் 01.04.2018ஐ மைய நாளிட்டு (Crucial Date) நிரப்புவதற்கு அனுமதி பெறப்பட்டுள்ளது.

புள்ளியியல் உதவியாளர் காலிப்பணியிடங்கள் விவரம்

1	பதவியின் பெயர்	புள்ளியியல் உதவியாளர் (Statistical Assistant) வகுப்பு-3	
2	மைய நாள்	01.04.2018	
3	ஊதிய விகிதம்	35900 - 113500	
4	காலிப்பணியிட விவரம்	1. அனுமதிக்கப்பட்ட காலிப்பணியிடம் மொத்தம்	03
		(அ) தற்காலிக பணியிடம்	00
		(ஆ) நிரந்தர பணியிடம்	03
		(இ) தற்போது பணிபுரிபவர்கள்	03
		(ஈ) காலிப்பணியிடம்	02
		2. மைய நாளுக்கு முன்பு/பின்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம்:	01
		(அ) மைய நாளுக்கு முன்பு ஏற்பட்டுள்ள காலிப்பணியிடம்	00
		(ஆ) மைய நாளுக்கு பின்பு ஏற்பட்ட காலிப்பணியிடம்	01
		(இ) 01.04.2018 முதல் 31.03.2019ம்ஆண்டில் ஏற்படவுள்ள காலிப்பணியிடம்	00
		3. பதவி உயர்வு வழங்குவதால் ஏற்பட்ட/ஏற்படவுள்ள காலிப்பணியிடம்	00
		4. அரசாணை எண்.103, பணியாளர்(ம) நிர்வாக சீர்திருத்தத்(எஸ்)துறை, நாள்.09.10.2014ன்படி எதிர்பாராமல் ஏற்படும் காலிப்பணியிடம் 1x40/100=0.4	00
		5. மொத்த காலிப்பணியிடம்	01

பொ.து.ந.க.எண்.இ7/000219/2019 &
ம.சே.து.ந.க.எண்.எப்5/1841/2018

பெருநகர சென்னை மாநகராட்சி, பொது சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை வகுப்பு 3 மற்றும் 4ம் நிலை சார்நிலைப் பணிகளுக்கான திருத்தப்பட்ட துணை விதிகள் 2009, தீர்மான எண்.113/2018, நாள் : 02.02.2018, புள்ளியியல் உதவியாளர் பதவிக்கான பணி நியமன விதிகள் :

பதவியின் பெயர்	நியமன முறை	நிர்ணயிக்கப்படும் தகுதி	குறிப்பு
புள்ளியியல் உதவியாளர் (Statistical Assistant)	(1) நேரடி நியமனத்திற்கு நிர்ணயிக்கப்பட்ட கல்வி தகுதிகளை பெற்றுள்ள கீழ்நிலை பணியாளர்கள் 5 ஆண்டுகள் பணி முடித்திருப்பின் பதவி உயர்வு மூலம் (தகுதிகாண்பருவம் முடித்திருக்க வேண்டும்) அல்லது (2) நேரடி நியமனம்	இளங்கலை அறிவியலில் புள்ளியியல் பட்டம் அல்லது புள்ளியியல் சிறப்புப் பாடத்துடன் கணிதத்தில் பட்டம் பெற்றிருக்க வேண்டும் மற்றும் தமிழ்நாடு அரசால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பயிற்சி நிலையத்தில் இருந்து கணினி படிப்பில் (Office Automation course) தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்	ஊதிய விகிதம் 9300-34800+தர ஊதியம் 4400 (அரசாணை 303ன்படி புதிய ஊதிய விகிதம் ரூ.35900-113500) நிர்ணய நாள் ஒவ்வோர் ஆண்டும் ஏப்ரல் முதல் நாள்

தற்போது புள்ளியியல் உதவியாளர் பதவியில் ஏற்பட்டுள்ள 1 காலிப்பணியிடம் (டி.ஏ. பாலசந்திரன் 31.05.2018-ல் ஓய்வு) நிரப்ப 28.07.2018 நாளிட்ட சுற்றறிக்கை அனுப்பட்டது. அதன்படி 09.01.2019 நாளிட்ட 1 நபர் அடங்கிய கீழ்க்காண் தற்காலிக தெரிவுப்பட்டியல் தயாரித்து வெளியிடப்பட்டது.

வ. எண்.	பெயர் / பதவி / மண்டலம்	பணியில் சேர்ந்த நாள்	தகுதிகாண் பருவம் முடித்த நாள்	கல்வித்தகுதி
1.	திரு. K. சேகர் உதவியாளர் பொதுத்துறை	05.07.2008	03.03.2016	1) Passed B.Sc. (Maths) -1993 Bharathidasan University 2) Office Automation Course passed in June 2011

மேலே தெரிவிக்கப்பட்ட பணிவிதிகளின்படி, அனைத்து மருத்துவ மண்டலங்கள், மண்டலங்கள் மற்றும் துறைகளுக்கு 09.01.2019 நாளிட்ட 1 நபர் அடங்கிய தற்காலிக தெரிவுப்பட்டியல் வெளியிட்டு ஆட்சேபணை/ஆட்சேபணை இன்மை/ இன்மை அறிக்கையினை 04.02.2019--க்குள் அனுப்பி வைக்குமாறு கோரப்பட்டது. இதன் தொடர்ச்சியாக கீழ்க்காண் மண்டலங்களிலிருந்து மேற்படி பதவி உயர்வுக்கு பரிசீலிக்க கோரி விவரங்கள் பெறப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு

வ.எண்.	தற்காலிக தெரிவுப்பட்டியலுக்கு பின்னர் புள்ளியியல் உதவியாளர் பதவி உயர்வுக்கு விருப்பம் தெரிவித்து பரிசீலிக்க கோரப்பட்டுள்ள நபர்களின் பெயர், பதவி மற்றும் மண்டலம்.	குறிப்பு
01	டி. ஆர். ஸ்ரீதேவி, உதவியாளர், மண்டலம்-11	தனியர், 03.07.2014 அன்று தட்டச்சராக செ.மா.பணியில் சேர்ந்துள்ளார். தனியர் மேற்படி பதவி உயர்வுக்கு தகுதி பெற குறிப்பிடப்பட்டுள்ள

		01.04.2018 மைய நாளில் பணி நியமன விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 5 ஆண்டுகள் பணி முடிக்கவில்லை. எனவே, தனியர் மேற்படி பதவி உயர்வுக்கு தகுதி பெறவில்லை என்பதால், தனியரை இறுதி தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது. மேலும், தனியர் 25.02.2019 நாளிட்ட கடிதம் வாயிலாக தமது விருப்ப கடிதத்தை திரும்ப பெற்று கொள்வதாகவும் தெரிவித்துள்ளார். எனவே, தனியர் பெயரை இறுதி தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது.
02	எஸ். நந்தகுமார், உதவியாளர், மண்டலம்-9	தனியர், 04.03.2014 அன்று உதவியாளராக செ.மா.பணியில் சேர்ந்துள்ளார். தனியர் மேற்படி பதவி உயர்வுக்கு தகுதி பெற குறிப்பிடப்பட்டுள்ள 01.04.2018 மைய நாளில் பணி நியமன விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 5 ஆண்டுகள் பணி முடிக்கவில்லை. எனவே, தனியர் மேற்படி பதவி உயர்வுக்கு கல்வித்தகுதி பெறவில்லை என்பதால், தனியர் பெயரை இறுதி தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது. Passed in B.A. (Economics with Statistics), M.A. (Economics with Statistics) Office AutoMation.
03	பி.பி. மகாலட்சுமி, உதவியாளர், மத்திய கணக்கு குழுமம், பகுதி கணக்கு குழுமம், மண்டலம்-9	தனியர், 10.03.2014 அன்று தட்டச்சராக செ.மா.பணியில் சேர்ந்துள்ளார். தனியர் மேற்படி பதவி உயர்வுக்கு தகுதி பெற குறிப்பிடப்பட்டுள்ள 01.04.2018 மைய நாளில் பணி நியமன விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு 5 ஆண்டுகள் பணி முடிக்கவில்லை. எனவே, தனியர் மேற்படி பதவி உயர்வுக்கு கல்வித்தகுதி பெறவில்லை என்பதால், தனியர் பெயரை இறுதி தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது. Passed in B.Com & M.Com. Office Automation.
04	திரு. V. பாஸ்கர், தொகுப்பாளர் (ம) எழுத்தர் மருத்துவ மண்டலம்-10	தனியர், பி.ஏ., (பொருளாதாரம்) பட்டப்படிப்பு தேர்ச்சி பெற்றுள்ளார். பணி நியமன விதிகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு உரிய கல்வித்தகுதியினை (Degree in Statistics. or B.Sc., Degree in Maths with statistics as allied subject) முடிக்கவில்லை. எனவே, தனியர் மேற்படி பதவி உயர்வுக்கு கல்வித்தகுதி பெறவில்லை என்பதால், தனியர் பெயரை இறுதி தெரிவுப்பட்டியலில் சேர்க்க இயலாது.

மேலே தெரிவித்துள்ள மண்டலம்-9 மற்றும் மண்டலம்-11 தவிர்த்து ஏனைய அனைத்து மண்டலங்கள் (மண்டலம்-1, 6, 7, மற்றும் 12 தவிர்த்து) மருத்துவ மண்டலங்கள் மற்றும் துறைகளிலிருந்து மேற்படி பதவி உயர்வுக்கு வெளியிடப்பட்ட தற்காலிக தெரிவுப்பட்டியலுக்கு ஆட்சேபணை இன்மை தெரிவித்து இன்மை அறிக்கை பெறப்பட்டுள்ளது.

ஆகவே, 01.04.2018 மைய நாளிட்ட புள்ளியியல் உதவியாளர் பதவிக்கு தகுதி வாய்ந்த 1 நபர் கொண்ட இறுதி தெரிவுப்பட்டியல் பின்வருமாறு அமைகிறது.

பொ.து.ந.க.எண்.இ7/000219/2019 &
ம.சே.து.ந.க.எண்.எப்5/1841/2018

வ. எண்.	பெயர் / பதவி / மண்டலம்	பணியில் சேர்ந்த நாள்	தகுதிகாண் பருவம் முடித்த நாள்	கல்வித்தகுதி
1.	திரு. K. சேகர் உதவியாளர் பொதுத்துறை	05.07.2008	03.03.2016	1) Passed B.Sc. (Maths) -1993 Bharathidasan University 2) Office Automation Course passed in June 2011

01.04.2018 மைய நாளிட்டு தயாரிக்கப்பட்டுள்ள மேற்படி புள்ளியியல் உதவியாளருக்கான இறுதி தெரிவுப்பட்டியல் தயாரித்து வெளியிடவும் பதவி உயர்வு வழங்குவது குறித்து,

(அ) 01.04.2018 மைய நாளாக கொண்டு 2018-2019 ஆம் ஆண்டிற்கான புள்ளியியல் உதவியாளர் (Stastical Assistant) பதவிக்கான 1 நபர் அடங்கிய மேற்படி இறுதி தெரிவுப்பட்டியலுக்கு ஒப்புதல் அளிக்கவும்,

(ஆ) இறுதி தெரிவுப்பட்டியலில் இடம் பெற்றுள்ள நபருக்கு ரூ.35900-113500 என்ற ஊதிய விகிதம் மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட படிகளுடன் புள்ளியியல் உதவியாளராக (Stastical Assistant) பதவி உயர்வு வழங்கவும்,

(இ) மேற்படி பதவி உயர்வுக்கு பரிசீலிக்குமாறு கோரிய கீழ்க்காண் நபர்கள் பதவி உயர்வுக்கு உரிய தகுதி பெறவில்லை என்பதால், தனியர்கள் பெயரை தெரிவுப்பட்டியலில் சேர்க்கப்படவில்லை என்பதை தனியர்களுக்கு தெரிவிக்கவும்,

வ. எண்.	தற்காலிக தெரிவுப்பட்டியலுக்கு பின்னர் புள்ளியியல் உதவியாளர் பதவி உயர்வுக்கு விருப்பம் தெரிவித்து பரிசீலிக்க கோரப்பட்டுள்ள நபர்களின் பெயர், பதவி மற்றும் மண்டலம்.
01	டி. ஆர். ஸ்ரீதேவி, உதவியாளர், மண்டலம்-11
02	எஸ். நந்தகுமார், உதவியாளர், மண்டலம்-9
03	பி.பி. மகாலட்சுமி, உதவியாளர், மத்திய கணக்கு குழுமம், பகுதி கணக்கு குழுமம், மண்டலம்-9
04	வி. பாஸ்கர், உதவியாளர், மருத்துவ மண்டலம்-10

மேற்கண்ட அ முதல் இ வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 20.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"புள்ளியியல் உதவியாளர் பணி இறுதி தெரிவுப்பட்டியலுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ம.க.கு.ந.க.எண்.அ8/800/2019

தீர்மான எண்.337/2019 **நாள்:24-06-2019**

மத்திய கணக்கு குழுமம் - தொகுப்பூதியம் / நிலையான ஊதியம் / மதிப்பூதியம் பெறும் பணியாளர்களுக்கு - 01.01.2019 முதல் மற்றொரு தனிப்பட்ட உயர்வு வழங்கி அரசாணை வெளியிடப்பட்டது - அரசாணையை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்த அனுமதி.

அரசாணை (நிலை) எண்.152, நிதி (படிகள்) த்துறை, நாள்.20.05.2019ல் தொகுப்பூதியம் (Consolidated Pay) / நிலையான ஊதியம் (Fixed Pay) / மதிப்பூதியம் (Honorarium) பெறும் பணியாளர்களுக்கு 01.01.2019 முதல் மற்றொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) கீழ்க்கண்ட அட்டவணையில் தெரிவித்துள்ளவாறு ஆணையிடப்பட்டுள்ளது.

எந்நாளிலிருந்து வழங்கத் தக்கது	மற்றொரு தனி உயர்வு(Another Adhoc increase)	
	ரூ.2500 வரை பெறும் பணியாளர்களுக்கு திங்களொன்றுக்கு	ரூ.2500க்கு மேலாக பெறும் பணியாளர்களுக்கு திங்களொன்றுக்கு
(1)	(2)	(3)
1-1-2019	ரூ. 50	ரூ. 100

இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்ட மற்றொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) 01.01.2019 முதற்கொண்டு ரொக்கமாக வழங்கப்படும். ஜனவரி-2019 முதல் ஏப்ரல்-2019 வரை மற்றொரு தனிப்பட்ட உயர்வு (Ad-hoc Increase) உடனடியாகப் பெற்று தற்போது நடைமுறையில் உள்ள பணமில்லா பரிவர்த்தனை முறையினை மின்னணு தீர்வு சேவை மூலம் வழங்கிட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

FINANCE [Allowances] DEPARTMENT

G.O.Ms.No.152, Dated 20th May 2019.
(Vihari, Vaikasi-06, Thiruvalluvar Aandu 2050)

ABSTRACT

AD-HOC INCREASE - Employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium - Another Ad-hoc Increase from 1-1-2019 - Orders - Issued.

Read the fo11owing:-

1. G.O.Ms.No.314, Finance (Allowances) Department, dated: 18-O9-2018.
2. G.O.Ms.No.151, Finance (Allowances) Department, dated: 20-O5-2019.

-000-

ORDER:

In the Government Order first read above, orders were issued sanctioning another Ad-hoc Increase in respect of employees those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium as shown below:-

With effect form	Ad-hoc Increase	
	Employees drawing upto Rs.2500/p.m.	Employees drawing above Rs. 2500/p.m.
(1)	(2)	(3)
1-7-2018	Rs. 50	Rs. 100

2. In the Government Order second read above, orders were issued enhancing the Dearness Allowance payable to Government employees who are drawing pay on regular and special Levels of Pay in the respective Pay Matrix with effect from 1-1-2019.

3. Government has therefore; decided to grant another Ad-hoc Increase to those drawing revised Consolidated Pay / Fixed Pay / Honorarium with effect from 1-1-2019. Accordingly, Government direct that employees drawing Consolidated Pay / Fixed Pay / Honorarium be allowed another Ad-hoc Increase with effect from 1-1-2019 as detailed below:-

With effect form	Ad-hoc Increase	
	Employees drawing upto Rs. 2500/p.m.	Employees drawing above Rs. 2500/p.m.
(1)	**(2)**	**(3)**
1-1-2019	Rs. 50	Rs. 100

4. The arrears of additional Ad-hoc Increase shall be paid in cash with effect from 1-1-2019. The Payment of arrears of Ad-hoc Increase from January 2019 to April, 2019 shall be drawn and disbursed immediately by existing cashless mode of Electronic Clearance System (ECS).

5. This order shall also apply to the employees of Local Bodies, Over Head Tank Operators and Sweepers working in Rural Development and Panchayat Raj Department.

(BY ORDER OF THE GOVERNOR)

K.SHANMUGAM
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

எனவே, அரசாணை (நிலை) எண்.152, நிதி(படிகள்)த்துறை, நாள்.20.05.2019ஐ பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்த, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 20.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"அரசாணையை நடைமுறைப்படுத்த சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ம.க.கு.ந.க.எண்.அ8/801/2019

தீர்மான எண்.338/2019 **நாள்:24-06-2019**

மத்திய கணக்கு குழுமம் - பொது வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வு ஊதிய பங்களிப்பு தொகை (தமிழ்நாடு) - 01.04.2019 முதல் 30.06.2019 வரை உள்ள காலத்திற்கு வட்டி விகிதம் 8% என நிர்ணயித்து (எட்டு சதவீதமாக) அரசாணைகள் வழங்கப்பட்டது - இவ்வரசாரணகளை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைப்படுத்தஅனுமதி.

அரசாணை (நிலை) எண்.126, நிதி(படிகள்)த்துறை நாள். 24.04.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்.150, நிதி(PGC-I)த்துறை, நாள். 15.05.2019ல் பொது வருங்கால வைப்பு நிதி மற்றும் ஓய்வு ஊதிய பங்களிப்பு தொகை (தமிழ்நாடு) 2019-2020ஆம் நிதியாண்டில் 01.04.2019 முதல் 30.06.2019 வரை உள்ள காலத்திற்கான வட்டி விகிதம் 8% என (எட்டு சதவீதமாக) நிர்ணயித்து அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளது.

கீழ்கண்டுள்ள இவ்வரசாணைகளை பெருநகர சென்னை மாநகராட்சியில் நடைமுறைபடுத்திட சிறப்பு அதிகாரி, (மன்றம்) அவர்களின் ஒப்புதல் பெறவேண்டும்.

FINANCE [Allowances] DEPARTMENT

G.O.Ms.No.126, Dated 24st April, 2019.

(Vikari, Chithirai-11, Thiruvalluvar Aandu 2050)

ABSTRACT

Provident Fund - General Provident Fund (Tamil Nadu) - **Rate of interest for the financial year 2019-2020 - With effect from 1-04-2019 to 30-06-2019** - Orders - Issued.

Read the fo1lowing:

1. G.O.Ms.No.125, Finance [Allowances] Department, dated 21.01.2019.
2. from the Government of India, Ministry of Finance, Department of Economic Affairs (Budget Division), New Delhi Resolution F.No.5 (2)-B (PD)/2019, dated 3.04.2019.

-000-

ORDER:

In the Government Orders first read above, orders were issued regarding fixation of the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund (Tamil Nadu) at 8% for the Period from 1st January, 2019 to 31st March, 2019.

2. The Government of India, in its resolution second read above, announced that during the year 2019-2020, accumulation at the credit of subscribers to the General Provident Fund and other similar funds shall carry interest at the rate of 8% (Eight percent) with effect from 1st April, 2019 to 30th June, 2019.

3. The Government now direct that the rate of interest on the accumulation at the credit of the subscribers to General Provident Fund [Tamil Nadu] shall carry interest at the rate of **8%** (Eight percent) with effect from 1st April, 2019 to 30th June, 2019.

4. The rate of interest on belated final payment of Provident Fund accumulation remaining unpaid for more than three months of its becoming payable shall be at the same rate as ordered in par-3 above.

(BY ORDER OF THE GOVERNOR)

K.SHANMUGAM
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

ம.க.கு.ந.க.எண்.அ8/801/2019

FINANCE [PGC-1] DEPARTMENT

G.O.Ms.No.150, Dated 15st May, 2019.

(Vikari, Vaikasi -1, Thiruvalluvar Aandu 2050)

ABSTRACT

PENSION – Contributory Pension Scheme – Accumulations at the credit of subscribers to the Contributory Pension Scheme (both Employees and Employers Contributions) - **Rate of interest for the financial year 2019-2020 - With effect from 1-04-2019 to 30-06-2019** - Orders - Issued.

Read the fo1lowing:

1. G.O.Ms.No.50, Finance (PGC-I) Department, dated 06.02.2019.
2. G.O.Ms.No.126, Finance (Allowances) Department, dated 24.04.2019.

-000-

ORDER:

In the Government Orders first read above, orders were issued fixing the rate of interest for accumulations at the credit of the subscribers to the Contributory Pension Scheme (Tamil Nadu) at 8% for the Period from 1st January, 2019 to 31st March, 2019.

2. In the Government Order second read above, the rate of interest for accumulation at the credit of subscribers to the General Provident Fund (Tamil Nadu) were fixed at the rate of 8% (Eight percent) for the period from 1st April, 2019 to 30th June, 2019.

3. The Government now direct that the rate of interest on the accumulations at the credit of the subscribers to the Contributory Pension Scheme shall be fixed at **8%** (Eight percent) for the period from 1st April, 2019 to 30th June, 2019.

(BY ORDER OF THE GOVERNOR)

K.SHANMUGAM
ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT

எனவே, பொது வருங்கால வைப்பு நிதி வட்டி விகிதம் 8% என நிர்ணயித்து (எட்டு சதவீதமாக) வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.126, நிதி(படிகள்)த்துறை, நாள்.24.04.2019 மற்றும் அரசாணை (நிலை) எண்.150, நிதி (PGC-I)த்துறை, நாள்.15.05.2019ஐ பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்களுக்கு நடைமுறைபடுத்த, சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 20.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"அரசாணைகளை நடைமுறைப்படுத்த சிறப்பு அதிகாரி- நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

வ.அ.(தெ)ந.க.எண்.அ3/7206/2018

தீர்மான எண். 339 / 2019 **நாள்:24-06-2019**

தெற்கு வட்டார அலுவலகம் - மண்டலம்-13, கோட்டம்-179- டான்சி நகர் மற்றும் விஜிபி செல்வா நகர் - டெங்கு பாதிப்பு ஏற்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் கொசுப்புழு இருப்பதும், கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை அகற்றாமல் இருந்தது - அ. குணசீலன் சுகாதார ஆய்வாளர் என்பவர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4 ஆம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983 ஆம் ஆண்டு துணை விதி 9(1) ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தியது- விளக்கம் கோரப்பட்டது- விளக்கம் பெறப்பட்டது-இறுதி ஆணையாக தண்டனை வழங்கப்பட்டது - தனியர் மேல்முறையீட்டு மனுவின் மீது ஆணை வழங்குதல்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13 கோட்டம்-179, டான்சி நகர் மற்றும் விஜிபி செல்வா நகர், டெங்கு பாதிப்பு ஏற்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் கொசுப்புழு இருப்பதும், கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை அகற்றாமல் இருந்தது, அ. குணசீலன் சுகாதார ஆய்வாளர் என்பவர் மீது பெருநகர சென்னை மாநகராட்சி 3 மற்றும் 4 ஆம் நிலை பணியாளர்கள் (ஒழுங்கு மற்றும் மேல்முறையீடு) விதி 1983 ஆம் ஆண்டு துணை விதி 9(1) ன் கீழ் குற்றச்சாட்டுகள் ஏற்படுத்தியது. தனியர் குற்றச்சாட்டு குறிப்பாணையை பெற்றுக் கொண்டு தனது விளக்கத்தினை சமர்ப்பித்துள்ளார்.

குற்றச்சாட்டு எண்.1 அ. குணசீலன் சுகாதார ஆய்வாளர் எனும் நீங்கள், கோட்டம்-179, டான்சி நகர் மற்றும் விஜிபி செல்வா நகர் டெங்கு பாதிப்பு ஏற்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் கொசுப்புழு இருப்பதும், கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை கண்காணிக்காமலும், அதனை அகற்ற எந்தவிதமான நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்துள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.1க்கு தனியரின் விளக்கம்: பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, கோட்டம்-179ல் பூச்சி தடுப்பு பணியை மேற்கொள்ள ஒரு நாளைக்கு 80 வீடுகள் வீதம் 11 சிறு வட்டமாக பிரிக்கப்பட்டு, கொசு ஒழிப்பு பணிக்காக 11 தினக்கூலி பணியாளர்கள் ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேற்கண்ட ஒப்பந்த பணியாளர்கள், தினசரி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு சென்று நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள், பூந்தொட்டிகள், கீழ்நிலைத்தொட்டிகள், உலோக மற்றும் பிளாஸ்டிக் பாத்திரங்கள், ஆட்டுக்கல் மற்றும் தேவையற்ற இதரபொருட்களில் கொசு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுப்புழுக்கள் உற்பத்தியை கண்டறிந்து கொசு ஒழிப்பு களப்பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த அக்டோபர் 2018 மாதத்தில் டான்சி நகர் 2 வது தெருவில் 23.10.2018 அன்று டெங்கு காய்ச்சல் குறித்த தகவல் பெறப்பட்டு அன்றைய தினமே அப்பகுதியில் உள்ள 7 தெருக்களிலும் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 4 வீடுகளில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளில் கொசுப்புழுக்கள் உற்பத்தி கண்டறிந்து அகற்றப்பட்டு, கை தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி, புகை பரப்பும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அப்பகுதியில் உள்ள வீடுகளில் சுகாதார விழிப்புணர்வு அளிக்கப்பட்டு, உடைந்த பாட்டில்கள், டயர்கள், பெயின்ட் டப்பாக்கள் போன்ற தேவையற்ற பொருட்கள் (15கிலோ) அகற்றப்பட்டுள்ளது. அப்பகுதியில், கோட்ட மலேரியா பணியாளர்கள் மற்றும் நகர நல செவிலியர்கள் மூலம் வீடுகள் தோறும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வேறு எவருக்கும் காய்ச்சல் அறிகுறிகள் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் உள்ள மூன்று அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளில் சுகாதார விழிப்புணர்வு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு மண்டல சுகாதார அலுவலர்-13 அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மேற்படி, டான்சி நகர் செக்டார் பகுதியானது, வாரந்தோறும் திங்கட்கிழமை ஒப்பந்த பணியாளரான திரு.கணிக்கைராஜ் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர் சரிவர பணி மேற்கொள்ளாததால், இருமுறை எச்சரிக்கை செய்யப்பட்டு, கடந்த 24.08.2018 அன்று முதல் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இது குறித்து ஒப்பந்ததாரர், முதுநிலை பூச்சியியலாளர்-13 அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, கடந்த 3.09.2018 அன்று முதல் திரு.குமரவேல், என்ற ஒப்பந்த பணியாளர் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த பணியாளருக்கு (திரு.குமரவேல்) கடந்த 17.09.2018 அன்றும் 06.10.2018 அன்றும் டான்சி நகர் மற்றும் சாரதி நகர் பகுதிகளில் பணி

ஒதுக்கப்பட்டு குறுக்காய்வு செய்தபோது, மேற்படி பணியாளர் 4 இடங்களில் கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை சரிவர கண்டறியாமல் விடுபட்டு இருப்பது கண்டறியப்பட்டு ஒரு நாள் ஊதியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாகவும், மேலும், கடந்த 10.10.2018 அன்று விஜிபி செல்வா நகர், அண்ணா நகர் பகுதியில் பன்றிக்காய்ச்சல் குறித்த தகவல் பெறப்பட்டு, அப்பகுதியில் உள்ள 6 தெருக்களிலும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு 2 வீடுகளில் கொசுப்புழுக்கள் உற்பத்தி கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. மேலும், அப்பகுதியில் உள்ள வீடுகளில் சுகாதார விழிப்புணர்வு அளிக்கப்பட்டு உடைந்த பாட்டில்கள், டயர்கள், பெயின்ட் டப்பாக்கள் போன்ற தேவையற்ற பொருட்கள் (21 கிலோ) அகற்றப்பட்டுள்ளது. அப்பகுதியில், கோட்ட மலேரியா பணியாளர்கள் மற்றும் நகர நல செவிலியர்கள் மூலம் வீடுகள் தோறும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வேறு எவருக்கும் காய்ச்சல் அறிகுறிகள் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது என்றும், மேற்படி, விஜிபி செல்வா நகர் செக்டார் பகுதியானது வாரந்தோறும் வெள்ளிக்கிழமை ஒப்பந்த பணியாளரான திரு.கார்த்திக் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அடிக்கடி விடுப்பு எடுப்பதாலும், பணிகள் சரிவர மேற்கொள்ளப்படாததாலும், 04.09.2018 அன்று பணி நீக்கம் செய்யப்பட்டு, கடந்த 06.09.2018 முதல் திரு.பாலசந்தர் என்பவர் முதுநிலை பூச்சியியலாளர்-13 அவர்கள் மூலம் ஒப்பந்ததாரர் அவர்களால் பணியமர்த்தப்பட்டுள்ளார். மேற்படி, ஒப்பந்த பணியாளருக்கு கடந்த 01.10.218 அன்று ஒதுக்கப்பட்ட விஜிபி சீத்தாபதி நகர் பகுதியை குறுக்காய்வு செய்தபோது, 2 இடங்களில் கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறியாமலும், அகற்றாமலும் விடுபட்டு இருப்பது கண்டறியப்பட்டு, ஒரு நாள் ஊதியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதே போன்று ஒப்பந்த பணியாளரான திரு.பெரியசாமி என்பவரும் போதிய படிப்பறிவு இல்லாத காரணத்தினாலும், பணிகள் சரிவர மேற்கொள்ளாததாலும் கடந்த 27.08.2018 அன்று பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், தற்போது, கோட்டம்-179ல் வருகைப்பதிவு நிலையாக இல்லாமல் இருந்ததாலும், கொசுப்புழுக்கள் கண்டறிந்து அகற்றும் பணியை சரிவர மேற்கொள்ளாமல் இருந்ததாலும், திரு.குமரவேல், பாலச்சந்தர், ஹரிகிருஷ்ணன் மற்றும் மணிகண்டன் ஆகிய ஒப்பந்த செக்டார் பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், கோட்டம்-179ல் ஒப்பந்ததாரரால் நியமிக்கப்படும் கொசுப்புழு களப்பணியாளர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டதில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் இடங்களை சரிவர கண்டறியாமலும், காரணிகளை அப்புறப்படுத்தாமலும், அப்பகுதி வீடுகளில் உள்ள பொதுமக்களுக்கு கொசுப்புழுக்கள் விழிப்புணர்வு அளிக்காமலும் செயல்பட்டு வருவது கண்டறியப்பட்டு, பணியாளர்களுக்கு தினசரி காலை வருகைப்பதிவின் போதும், மதியம் பணி முடிந்து அறிக்கை சரிபார்க்கும் போதும் பல முறை அறிவுறுத்தப்பட்டும் வருகின்றது. கோட்டம்-179ல் கடந்த மூன்று மாதத்தில் ஏழு செக்டார் பணியாளர்கள் போதிய பயிற்சியின்றியும் படிப்பறிவில்லாமலும் பணிக்கு வருவதால் கோட்ட சுகாதார பணிகள் பாதிக்கப்படுவதை கண்டறிந்து, முதுநிலை பூச்சியியலாளர்-13 மற்றும் மண்டல நல அலுவலர்-13 அவர்களுக்கு தகவல் சமர்ப்பிக்கப்பட்டு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த அக்டோபர் 2018 மாதத்தில் கோட்டம்-179ல் செக்டார் பணிகள் 27 நாட்களில் 297 செக்டார் பணிகளுக்கு 61 செக்டார் பணியாளர்கள் வருகை பதிவு இல்லாத சூழலில் மாற்றுப்பணியாளர்களை கொண்டு செக்டார் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும்,

இதுகுறித்து, மண்டல நல அலுவலர்-13 அவர்களின் வாரந்திர ஆய்வு கூட்டத்தின் போதும், கூடுதல் மாநகர நல அலுவலர் (தெற்கு) அவர்களின் ஆய்வுக் கூட்டத்தின் போதும், ஒப்பந்த பணியாளர்களின் வருகை பதிவில் நிலைத்தன்மை இல்லாது இருப்பதையும், ஒப்பந்ததாரரால் நியமிக்கப்படும் கொசு ஒழிப்பு களப்பணியாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் அளித்து முறையான பயிற்சிகள் அளிக்க பூச்சிதடுப்பு துறை மூலம் ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தி நடவடிக்கை மேற்கொண்டால் மட்டுமே வரும் பருவ மழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளையும், டெங்கு காய்ச்சல் தாக்கங்களை தவிர்க்க இயலும் என்பதனை கூடுதல் மாநகர நல அலுவலர் (தெற்கு), மண்டல நல அலுவலர்-13, முதுநிலை பூச்சியியலாளர்-13 அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதனை தங்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் தகுதியற்ற பணியாளர்களை நியமனம் செய்த ஒப்பந்ததாரரின் மண்டலம்-13க்கான மேற்பார்வையாளர் திரு.பரத் என்பவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பதனையும் தங்களின் மேலான கவனத்திற்கு தெரிவித்துக்

கொள்ளப்படுவதாகவும், மேலும், கோட்டம்-179ல் ஒப்பந்த பணியாளர்கள் நிலைத்தன்மையின்றி வருகை தந்த போதும், பயிற்சியின்றி பணிக்கு வருவதையும் உடனுக்குடன் முதுநிலை பூச்சியியலாளர்-13 மற்றும் மண்டல நல அலுவலர் -13 அவர்களுக்கு தெரியப்படுத்தி சூழ்நிலையை கருத்தில் கொண்டும் பொதுமக்களின் நலன் கருதியும் மாற்றுப்பணியாளர்களை களப்பணியில் ஈடுபடுத்தி மேற்கண்ட பகுதிகளில் கொசுப்புழு உற்பத்தியாகும் தேவையற்ற பொருட்களை அகற்றும் பணியில் தீவிரமாக பணியாற்றி வருகின்றேன் என்பதனையும், நான் எப்போதும் உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கு கட்டுப்பட்டு பணியாற்றி வருகிறேன் என்பதனையும் கருத்தில் கொண்டு மேற்கண்ட குற்றச்சாட்டிலிருந்து விலக்கு அளிக்கும்படி பணிந்து கேட்டுக்கொண்டுள்ளார்.

குற்றச்சாட்டு எண்.2. பெருநகர சென்னை மாநகராட்சியால் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் டான்சி நகர் மற்றும் விஜிபி செல்வா நகரில் வீடுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதற்கு ஏதுவான தேவையற்ற பொருட்களை அகற்றாமல் இருந்துள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.2க்கு தனியரின் விளக்கம்: கடந்த அக்டோபர் 2018 மாதத்தில் டான்சி நகர் பகுதிகளில் 01.10.2018, 05.10.2018, 12.10.2018, 15.10.2018, 19.10.2018, 23.10.2018 மற்றும் 26.10.2018 ஆகிய தேதிகளில் சுகாதார விழிப்புணர்வு அளிக்கப்பட்டு, ஒப்பந்த பணியாளர்கள் மூலம் உடைந்த பாட்டில்கள், டயர்கள், பெயின்ட் டப்பாக்கள் போன்ற தேவையற்ற பொருட்கள் (89 கிலோ) அகற்றப்பட்டுள்ளது. மேலும், விஜிபி செல்வா நகர், அண்ணா நகர் பகுதியில் 06.10.2018, 13.10.2018, 19.10.2018, 26.10.2018 மற்றும் 27.10.2018 ஆகிய தேதிகளில் சுகாதார விழிப்புணர்வு அளிக்கப்பட்டு, ஒப்பந்த பணியாளர்கள் மூலம் உடைந்த பாட்டில்கள், டயர்கள், பெயின்ட் டப்பாக்கள் போன்ற தேவையற்ற பொருட்கள் (97 கிலோ) அகற்றப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் வாரந்தோறும் திங்கள், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கை தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி, புகை பரப்பும் பணிகள், தினந்தோறும் மருத்துவ முகாம்கள் அமைத்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் பிளீச்சிங்பவுடர் தெளித்தல் மற்றும் வீடுதோறும் கீழ்நிலைத்தொட்டி மற்றும் மேல்நிலைத் தொட்டிகளை சுத்தம் செய்ய பிளீச்சிங் பவுடர் விநியோகித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது, மேலும், அப்பகுதியிலுள்ள நலவாழ்வு சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், வணிக வளாகங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் வாரந்தோறும் சுகாதார விழிப்புணர்வும், நிலவேம்பு குடிநீர் விநியோகித்தல் பணிகளும் நடைபெற்று வருகிறது என்பதனை கருத்தில் கொண்டு மேற்கண்ட குற்றச்சாட்டிலிருந்து விலக்கு அளிக்கும்படி பணிந்து கேட்டுக்கொள்வதாக விளக்கம் அளித்துள்ளார்.

குற்றச்சாட்டு எண்.3 டெங்கு நோய் பரவுகின்ற இச்சூழ்நிலையில் டான்சி நகர் மற்றும விஜிபி செல்வா நகரில் வீடுகளில் கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை அகற்றாமல் இருந்துள்ளதால், சுகாதார சீர்கேடு ஏற்படவும், பொதுமக்கள் மத்தியில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படவும் காரணமாக இருந்துள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.3க்கு தனியரின் விளக்கம்: டான்சி நகர், விஜிபி செல்வா நகர், அண்ணா நகர் உட்பட கோட்டம்-179ல் உள்ள அனைத்து பகுதிகளிலும், குறிப்பிட்ட இடைவெளியில் மருத்துவ முகாம்கள் அமைத்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் பிளீச்சிங்பவுடர் தெளித்தல் மற்றும் தினந்தோறும் வீடுகளில் கீழ்நிலைத்தொட்டி மற்றும் மேல்நிலைத் தொட்டிகளை சுத்தம் செய்ய பிளீச்சிங் பவுடர் விநியோகித்தல், சுகாதார விழிப்புணர்வு அளித்து கொசுப்புழுக்கள் உற்பத்தியாகக்கூடிய தேவையற்ற பொருட்களை அகற்றுதல், கைதெளிப்பான் மூலம் மருந்து தெளித்தல், எலிபொந்துகளை கண்டறிந்து எலிக்கொல்லி பசை பயன்படுத்துதல், புகைபரப்பும் இயந்திரம் மூலம் கொசுக்களை கட்டுப்படுத்துதல், கொசுப்புழுக்களை அழிக்க வீடுதோறும் அபேட் மருந்து பயன்படுத்துதல், குடிநீரில் குளோரின் ஆய்வு செய்தல், குளோரின் மாத்திரைகள் விநியோகம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனையும், இரவு, பகல் பாராது பணிகளை செய்து வருகிறேன் என்பதனையும் தங்களின் மேலான கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கடந்த அக்டோபர் 2018 மாதத்தில் கோட்டம்-179ல்

வீடுகள்தோறும் சுகாதார விழிப்புணர்வு அளிக்கப்பட்டு, ஒப்பந்த பணியாளர்கள் மூலம் உடைந்த பாட்டில்கள், டயர்கள், பெயின்ட் டப்பாக்கள் போன்ற தேவையற்ற பொருட்கள் (415 கிலோ) அகற்றப்பட்டுள்ளது. மேலும், கோட்டம்-179ல் ஒப்பந்ததாரரால் நியமிக்கப்படும் கொசுப்புழு களப்பணியாளர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டதில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் இடங்களை சரிவர கண்டறியாமலும், காரணிகளை அப்புறப்படுத்தாமலும், அப்பகுதி வீடுகளில் உள்ள பொதுமக்களுக்கு கொசுப்புழுக்கள் விழிப்புணர்வு அளிக்காமலும் செயல்பட்டு வருவது கண்டறியப்பட்டு, உடனடியாக முதுநிலை பூச்சியியலாளர்-13 மற்றும் மண்டல நல அலுவலர்-13 அவர்களுக்கு தகவல் சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர் மூலம் முறையாக பயிற்சி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்றும், தான் இதுவரை மண்டல நல அலுவலர் மற்றும் அனைத்து உயர் அதிகாரிகளின் உத்தரவுகளை ஏற்று, பொது சுகாதார பணிகளை மேற்கொண்டு வருகிறேன் என்பதனையும், உயர் அதிகாரிகளால் தினந்தோறும் அளிக்கப்படும் அறிவுரைகளை ஏற்று கோட்டம்-179 மற்றும் கோட்டம்-174 க்குட்பட்ட வேளச்சேரி மற்றும் ஐஐடி, மடுவான்கரை பகுதிகளில் நேர்மையாகவும், கீழ்ப்படிந்தும், கண்ணும் கருத்துமாகவும், திறம்படவும் செயலாற்றிக் கொண்டிருக்கிறேன் என்பதனையும் கருத்தில் கொண்டு மேற்கண்ட குற்றச்சாட்டிலிருந்து விலக்கு அளிக்கும்படி பணிந்து கேட்டுக்கொண்டுள்ளார்.

குற்றச்சாட்டு எண்.4 மேற்கண்ட செயலின் மூலம், நீங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதி 20 ஐ மீறியுள்ளீர்கள்.

குற்றச்சாட்டு எண்.4க்கு தனியரின் விளக்கம்: கடந்த 2015 மழை வெள்ள பாதிப்பின் போதும், கடந்த 2016 வர்தா புயல் (மடுவான்கரை வயிற்றுபோக்கு) பாதிப்பின் போதும் மண்டல நல அலுவலர்-13, கூடுதல் மாநகர நல அலுவலர்(தெற்கு) மற்றும் அனைத்து உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி மண்டலம்-13, பகுதி-39, வேளச்சேரி மற்றும் ஐஐடி, மடுவான்கரை பகுதிகளில் பொது மக்களுக்கு தொற்று நோய்கள் பரவா வண்ணம் இரவு, பகல் பாராது பணிகளை செய்தேன். மேலும், மண்டலம்-13, பொது சுகாதாரத்துறை மூலம் மேற்கொள்ளும் அனைத்து பணிகளையும் உண்மையாகவும், அக்கறையுடனும் மேற்கொண்டு வருகிறேன் என்பதனையும் நான் எப்போதும் உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கு கட்டுப்பட்டு பணியாற்றி வருகிறேன் என்பதனையும் தங்களின் பார்வைக்கு தெரிவித்துக்கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதி 20 ஐ எப்போதும் மீறியது இல்லை என்றும், மண்டலம்-13, கோட்டம்-179 மற்றும் 174 பகுதிகளான வேளச்சேரி மற்றும் ஐஐடி, மடுவான்கரை பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு பொதுசுகாதார பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வரும் சூழ்நிலையில், ஐயா அவர்கள், தன்னுடைய பதில் விளக்கத்தை ஏற்று, தனக்கு கொடுக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டு குறிப்பாணையிலிருந்து விலக்கு அளிக்குமாறு பணிந்து கேட்டுக்கொள்வதாக தன் விளக்கத்தை அளித்துள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக திரு. அ. குணசீலன் சுகாதார ஆய்வாளர் கோட்டம்-197 மண்டலம்-15 என்பவர் மீது சுமத்தப்பட்டுள்ள துணை விதி 9(1)ன் கீழ் குற்றச்சாட்டிற்கு தனியர் அளித்துள்ள விளக்கம் ஆகியவை கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. தனியர் அளித்துள்ள விளக்கம் ஏற்புடையதாகயில்லை என்பதால், தனியருக்கு தண்டனையாக ஒருவருடம் திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து ஆணையிடப்பட்டிருந்தது

தனியர் தனக்கு வழங்கப்பட்ட தண்டனையை எதிர்த்து சிறப்பு அதிகாரியிடம் மேல்முறையீடு மனுவினை சமர்ப்பித்துள்ளார்

மேற்கண்ட பொருள் மற்றும் குற்றச்சாட்டு குறிப்பாணைக்கு மண்டலம்-13, கோட்டம்-179 சுகாதார ஆய்வாளராக இருந்த எனக்கு வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களால் 19.02.2019 அன்று ஓராண்டு திரண்ட பயனின்றி ஊதிய உயர்வு நிறுத்தம் செய்து ஆணையிடப்பட்டது. தற்போது மரியாதைக்குரிய சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களிடம் மேல்முறையீட்டின் பொருட்டு என் மீதான குற்றச்சாட்டுகளுக்கு என்னுடைய தாழ்மையான விளக்கத்தினை தங்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கின்றேன்.

ஐயா அவர்களின் கவனத்திற்கு, நான் கடந்த நவம்பர் -2015 முதல் மண்டலம்-13, கோட்டம்-179ல் சுகாதார ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். கடந்த 2015 சென்னை மழை வெள்ள

பாதிப்பின் போதும், கடந்த 2016 வர்தா புயல் பாதிப்பின் போதும் மண்டல நல அலுவலர்-13, கூடுதல் மாநகர நல அலுவலர்(தெற்கு) மற்றும் அனைத்து உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி மண்டலம்-13, கோட்டம்-179, 174 வேளச்சேரி மற்றும் மடுவின்கரை, ஐஐடி பகுதிகளில் பொது மக்களுக்கு தொற்று நோய்கள் பரவா வண்ணம் இரவு,பகல் பாராது பணிகளை செய்தேன். மேலும், மண்டலம்-13, பொது சுகாதாரத்துறை மூலம் மேற்கொள்ளும் அனைத்து பணிகளையும் உண்மையாகவும், அக்கறையுடனும், எப்போதும் உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கு கட்டுப்பட்டு பணியாற்றி வருகிறேன்.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13க்குட்பட்ட கோட்டங்களில் பூச்சித்தடுப்பு பணியை மேற்கொள்ள சிறு வட்டங்களாக பிரிக்கப்பட்டு அப்பகுதிகளில் தகுதி வாய்ந்த வெளி நிறுவனம் மூலம் தகுதி வாய்ந்த ஒப்பந்த பணியாளர்களை நியமித்து வீடுகளில் உள்ள நீர்த்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத்தொட்டிகள், பூந்தொட்டிகள், கீழ்நிலைத் தொட்டிகள், உலோக மற்றும் பிளாஸ்டிக் பாத்திரங்கள், ஆட்டுக்கல் மற்றும் தேவையற்ற இதர பொருட்களில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகா வண்ணம் கொசு ஒழிப்பு களப்பணி மேற்கொள்ள மதிப்பிற்குரிய ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், கொசுவினால் பரவும் மலேரியா, டெங்கு, சிக்குன்குனியா மற்றும் மூளைக்காய்ச்சல் போன்ற நோய்களை கட்டுப்படுத்த கைதெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணிகள், புகைபரப்பும் இயந்திரங்களை இயக்கும் பணிகளை தகுதி வாய்ந்த ஒப்பந்த பணியாளர்கள் மூலம் மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில், மண்டலம்-13, கோட்டம் 179 மற்றும் 174 பகுதிகளில் ஒப்பந்த தினக்கூலி பணியாளர்கள் மூலம் சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஒப்பந்த தினக்கூலி பணியாளர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் பிரதிநிதியாக ஒவ்வொரு வீடுகளுக்கும் சென்று கொசுப்புழு தடுப்பு பணிகள் உள்பட பூச்சி தடுப்பு பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். ஓப்பந்ததாரரால் நியமிக்கப்படும் தற்காலிக தினக்கூலி பணியாளர்கள் எவ்வித முன்பயிற்சி மற்றும் முன்அனுபவமின்றி நேரடியாக கோட்டங்களுக்கு பணிக்கு வருவதால், கால விரயமும், ஊதிய விரயமும், பணிகள் பாதிக்கப்படும் சூழலும் உள்ளது. மேலும், போதிய படிப்பறிவு இல்லாத பணியாளர்கள் ஒப்பந்ததாரரால் நியமிக்கப்படும் போது பொதுமக்களிடம் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படும் வாய்ப்பும் உள்ளது என்பதனையும், கோட்டம்-179 மற்றும் 174 ஆகியவற்றில் ஒப்பந்த பணியாளர்களின் வருகைப்பதிவு நிலைத்தன்மை இல்லாமல் உள்ளது என்பதனையும் கடந்த 06.07.2018, 02.08.2018, 23.08.2018, 30.08.2018, 10.09.2018, 17.09.2018, 24.09.2018 மற்றும் 04.10.2018 ஆகிய தினங்களிலும், அதற்கு முன்னர் நடைபெற்ற வாரந்திர ஆய்வுக்கூட்டங்களின் போதும், மண்டல நல அலுவலர்-13 அவர்களுக்கும், முதுநிலை பூச்சியியலாளர்-13 அவர்களுக்கும் என்னால் தகவல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

அக்டோபர்-2018 மாத ஒப்பந்த தினக்கூலி பணியாளர் தினசரி வருகை (அலுவலக பணி, மாற்றுப்பணி தவிர) பதிவு கீழ்கண்ட அட்டவணையின்படி வகைப்படுத்தபட்டுள்ளது.

வ. எண்	கோட்டம்	ஒப்பந்த பணியாளர்கள் மொத்த பணி நாட்கள் (பணியாளர் X நாட்கள்)	பணியாளர் வருகை பதிவு	வித்தியாசம்	சராசரி வருகை பதிவு
1	179	17 X 31 = 527	421	106	80...

மேலும், கடந்த 10.07.2018 அன்றும் 24.08.2018 அன்றும் நடைபெற்ற ஆய்வுக் கூட்டங்களின் போது கூடுதல் மாநகர நல அலுவலர் (தெற்கு) அவர்களுக்கும், கடந்த 06.08.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டதின் போது, மாநகர நல அலுவலர் அவர்களுக்கும் 23.10.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தின் போது, மதிப்பிற்குரிய வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களுக்கும், கடந்த 27.10.2018 அன்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தின் போது, மதிப்பிற்குரிய துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களுக்கும் மேற்கண்ட தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகின்றது. மேலும், பொதுமக்களின் நலன் கருதி, இது குறித்து தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டி பூச்சிதடுப்பு துறையின் மூலம் ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்த தங்களது மற்றும் முதுநிலை பூச்சியியலாளர்-13 அவர்களின் அறிவுறுத்தலின் அடிப்படையிலேயே மேற்கண்ட அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

வ.அ.(தெ)ந.க.எண்.அ3/7206/2018

கோட்டம்-179 மற்றும் 174ல் ஒப்பந்ததாரரால் நியமிக்கப்படும் கொசு ஒழிப்பு களப்பணியாளர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டதில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் இடங்களை சரிவர கண்டறியாமலும், காரணிகளை அப்புறப்படுத்தாமலும், அப்பகுதி வீடுகளில் உள்ள பொதுமக்களுக்கு கொசுப்புழுக்கள் விழிப்புணர்வு அளிக்காமலும் செயல்பட்டு வருவது கண்டறியப்பட்டு, பணியாளர்களுக்கு தினசரி காலை வருகைப்பதிவின் போதும், மதியம் பணி முடிந்து அறிக்கை சரிபார்க்கும் போதும் பல முறை அறிவுறுத்தப்பட்டும் வருகின்றது. மேலும் போதிய பயிற்சியின்றியும் படிப்பறிவில்லாமலும் பணிக்கு வருவதால் கோட்ட சுகாதார பணிகள் பாதிக்கப்படுவதை கண்டறிந்து, முதுநிலை பூச்சியியலாளர்-13 மற்றும் மண்டல நல அலுவலர்-13 அவர்களுக்கு தகவல் சமர்ப்பிக்கப்பட்டு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ள ஒப்பந்த பணியாளர்களின் விவரம் கீழ்கண்டவாறு அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளது.

கோட்டம்-179

வ. எண்	பணி நீக்கம் செய்யப்பட்ட பணியாளர்களின் பெயர்	பணி நீக்கம் செய்யப்பட்ட நாள்	ஒப்பந்ததாரரால் நியமிக்கப்பட்ட மாற்றுப் பணியாளர்களின் பெயர்	நியமனம் செய்யப்பட்ட நாள்	பணிகள் பாதிக்கப்பட்ட நாட்கள்
1	தீபக்	31.01.2018	பிரதீப்சந்தர்	17.02.2018	16
2	விஜயராஜ்	12.02.2018	சூர்யா	17.03.2018	29
3	அருமை ஜான்சன்	09.04.2018	அரிகிருஷ்ணன்	01.06.2018	52
4	மகேஷ்	09.05.2018	எம்.சதீஷ்	28.06.2018	59
5	சிவா	18.05.2018	வி.கார்த்திக்	02.06.2018	14
6	வி.மணிகண்டன்	23.06.2018	எஸ்.பெரியசாமி	19.07.2018	25
7	கணிகைராஜ்	24.08.2018	குமரவேல்	03.09.2018	9
8	எஸ்.பெரியசாமி	27.08.2018	ஜி.மணிகண்டன்	27.08.2018	-
9	வி.கார்த்திக்	04.09.2018	வி.பாலசந்தர்	06.09.2018	1
10	அரிகிருஷ்ணன்	05.11.2018	எஸ்.சதீஷ்	19.11.2018	14
11	வி.பாலசந்தர்	05.11.2018	எம்.பிரசாந்	15.11.2018	9
12	குமரவேல்	01.11.2018	ஏ.வைரமணி	21.11.2018	20
13	ஜி.மணிகண்டன்	02.11.2018	எம்.நேதாஜி	05.11.2018	2
14	எம்.நேதாஜி	16.11.2018	கே.சூரியா	26.11.2018	10
15	எம்.சதீஷ்	22.11.2018	காலிப்பணியிடம்	-	-
16	எம்.பிரசாந்	30.11.2018	காலிப்பணியிடம்	-	-
17	கே.சூரியா	28.11.2018	காலிப்பணியிடம்	-	-

மேலும், ஒப்பந்த பணியாளர்கள் பயிற்சியின்றி, நிலைத்தன்மையின்றி வருகை தந்த போதிலும், ஒப்பந்ததாரரால் மாற்றுப்பணியாளர்களை உடனடியாக நியமனம் செய்வதில் காலதாமதம் ஏற்பட்ட போதிலும், சுகாதார பணிகள் பாதிக்கப்படா வண்ணம், சூழ்நிலையை கருத்தில் கொண்டு பருவ மழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைக்காவும், டெங்கு மற்றும் பன்றிக்காய்ச்சல் தாக்கங்களை கட்டுப்படுத்தவும், கோட்டம்-179 மற்றும் 174, ஏழை, எளிய பொதுமக்களின் நலன் கருதியும், மாற்றுப்பணியாளர்களை களப்பணியில் ஈடுபடுத்தி பொதுசுகாதார பணிகள் மேற்கொண்டேன்.

வட்டார துணை ஆணையர் (தெற்கு) அவர்களால் 01.11.2018 அன்று வழங்கப்பட்ட குற்றச்சாட்டு குறிப்பாணைக்கான பதில் மதிப்பிற்குரிய ஐயா அவர்களுக்கு கீழ்கண்டவாறு பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.

குற்றச்சாட்டு எண்.1

கோட்டம்-179, டான்சி நகர் மற்றும் விஜிபி செல்வா நகர் டெங்கு பாதிப்பு ஏற்பட்ட பகுதியில் உள்ள வீடுகளில் கொசுப்புழு இருப்பதும், கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை கண்காணிக்காமலும், அதனை அகற்ற எந்தவிதமான நடவடிக்கை மேற்கொள்ளாமல் இருந்துள்ளீர்கள்.

வ.அ.(தெ)ந.க.எண்.அ3/7206/2018

பதில்

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13, கோட்டம்-179ல் பூச்சி தடுப்பு பணியை மேற்கொள்ள ஒரு நாளைக்கு 80 வீடுகள் வீதம் கோட்ட சுகாதார ஆய்வாளர் 179 அவர்கள் மூலம், 11 சிறு வட்டமாக பிரிக்கப்பட்டு, கொசு ஒழிப்பு பணிக்காக 11 தினக்கூலி பணியாளர்கள் ஒப்பந்ததாரரால் பணியமர்த்தப்பட்டுள்ளனர். மேற்கண்ட ஒப்பந்த பணியாளர்கள், தினசரி தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வீடுகளுக்கு சென்று நீர்தேக்க தொட்டிகள், கிணறுகள், மேல்நிலைத் தொட்டிகள், பூந்தொட்டிகள், கீழ்நிலைத்தொட்டிகள், உலோக மற்றும் பிளாஸ்டிக் பாத்திரங்கள், ஆட்டுக்கல் மற்றும் தேவையற்ற இதரபொருட்களில் கொசு வளர்ச்சி ஏற்படாத வண்ணம் கொசுப்புழுக்கள் உற்பத்தியை கண்டறிந்து கொசு ஒழிப்பு களப்பணி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கடந்த அக்டோபர் 2018 மாதத்தில் டான்சி நகர் 2 வது தெருவில் 23.10.2018 அன்று டெங்கு காய்ச்சல் குறித்த தகவல் பெறப்பட்டு அன்றைய தினமே அப்பகுதியில் உள்ள 7 தெருக்களிலும் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு 4 வீடுகளில் உள்ள நீர்த்தேக்கத் தொட்டிகளில் கொசுப்புழுக்கள் உற்பத்தி கண்டறிந்து அகற்றப்பட்டு, கை தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி, புகை பரப்பும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், அப்பகுதியில் உள்ள வீடுகளில் சுகாதார விழிப்புணர்வு அளிக்கப்பட்டு, உடைந்த பாட்டில்கள், டயர்கள், பெயின்ட் டப்பாக்கள் போன்ற தேவையற்ற பொருட்கள் (15கிலோ) அகற்றப்பட்டுள்ளது. அப்பகுதியில், கோட்ட மலேரியா பணியாளர்கள் மற்றும் நகர நல செவிலியர்கள் மூலம் வீடுகள் தோறும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வேறு எவருக்கும் காய்ச்சல் அறிகுறிகள் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் உள்ள மூன்று அடுக்குமாடி குடியிருப்பு பகுதிகளில் சுகாதார விழிப்புணர்வு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு மண்டல சுகாதார அலுவலர்-13 அவர்களுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி, டான்சி நகர் செக்டார் பகுதியானது, வாரந்தோறும் திங்கட்கிழமை ஒப்பந்த பணியாளரான திரு.கணிக்கைராஜ் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவர் சரிவர பணி மேற்கொள்ளாததால், இருமுறை எச்சரிக்கை செய்யப்பட்டு, கடந்த 24.08.2018 அன்று முதல் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளார். இது குறித்து ஒப்பந்ததாரர், முதுநிலை பூச்சியியலாளர்-13 அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு, கடந்த 3.09.2018 அன்று முதல் திரு.குமரவேல், என்ற ஒப்பந்த பணியாளர் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேற்படி ஒப்பந்த பணியாளருக்கு (திரு.குமரவேல்) கடந்த 17.09.2018 அன்றும் 06.10.2018 அன்றும் டான்சி நகர் மற்றும் சாரதி நகர் பகுதிகளில் பணி ஒதுக்கப்பட்டு குறுக்காய்வு செய்துபோது, மேற்படி பணியாளர் 4 இடங்களில் கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை சரிவர கண்டறியாமல் விடுபட்டு இருப்பது கண்டறியப்பட்டு ஒரு நாள் ஊதியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த 10.10.2018 அன்று விஜிபி செல்வா நகர், அண்ணா நகர் பகுதியில் பன்றிக்காய்ச்சல் குறித்த தகவல் பெறப்பட்டு, அப்பகுதியில் உள்ள 6 தெருக்களிலும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு 2 வீடுகளில் கொசுப்புழுக்கள் உற்பத்தி கண்டறியப்பட்டு அழிக்கப்பட்டுள்ளது. மேலும், அப்பகுதியில் உள்ள வீடுகளில் சுகாதார விழிப்புணர்வு அளிக்கப்பட்டு உடைந்த பாட்டில்கள், டயர்கள், பெயின்ட் டப்பாக்கள் போன்ற தேவையற்ற பொருட்கள் (21 கிலோ) அகற்றப்பட்டுள்ளது. அப்பகுதியில், கோட்ட மலேரியா பணியாளர்கள் மற்றும் நகர நல செவிலியர்கள் மூலம் வீடுகள் தோறும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வேறு எவருக்கும் காய்ச்சல் அறிகுறிகள் இல்லை என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்படி, விஜிபி செல்வா நகர் செக்டார் பகுதியானது வாரந்தோறும் வெள்ளிக்கிழமை ஒப்பந்த பணியாளரான திரு.கார்த்திக் என்பவருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு, அடிக்கடி விடுப்பு எடுப்பதாலும், பணிகள் சரிவர மேற்கொள்ளப்படாததாலும், 04.09.2018 அன்று பணி நீக்கம் செய்யப்பட்டு, கடந்த 06.09.2018 முதல் திரு.பாலசந்தர் என்பவர் முதுநிலை பூச்சியியலாளர்-13 அவர்கள் மூலம் ஒப்பந்ததாரர் அவர்களால் பணியமர்த்தப்பட்டுள்ளார். மேற்படி, ஒப்பந்த பணியாளருக்கு கடந்த 01.10.218 அன்று ஒதுக்கப்பட்ட விஜிபி சீத்தாபதி நகர் பகுதியை குறுக்காய்வு செய்தபோது, 2 இடங்களில் கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறியாமலும், அகற்றாமலும் விடுபட்டு இருப்பது கண்டறியப்பட்டு, ஒரு நாள் ஊதியம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இதே போன்று ஒப்பந்த பணியாளரான திரு.பெரியசாமி என்பவரும் போதிய படிப்பறிவு இல்லாத காரணத்தினாலும், பணிகள் சரிவர மேற்கொள்ளாததாலும் கடந்த 27.08.2018 அன்று பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

தற்போது, கோட்டம்-179ல் வருகைப்பதிவு நிலையாக இல்லாமல் இருந்ததாலும், கொசுப்புழுக்கள் கண்டறிந்து அகற்றும் பணியை சரிவர மேற்கொள்ளாமல் இருந்ததாலும், திரு.குமரவேல், பாலச்சந்தர், ஹரிகிருஷ்ணன் மற்றும் மணிகண்டன் ஆகிய ஒப்பந்த செக்டார் பணியாளர்கள் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

மேலும், பகுதி-39, கோட்டம்-178,179 மற்றும் 180ல் ஒப்பந்ததாரரால் நியமிக்கப்படும் கொசுப்புழு களப்பணியாளர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டதில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் இடங்களை சரிவர கண்டறியாமலும், காரணிகளை அப்புறப்படுத்தாமலும், அப்பகுதி வீடுகளில் உள்ள பொதுமக்களுக்கு கொசுப்புழுக்கள் விழிப்புணர்வு அளிக்காமலும் செயல்பட்டு வருவது கண்டறியப்பட்டு, பணியாளர்களுக்கு தினசரி காலை வருகைப்பதிவின் போதும், மதியம் பணி முடிந்து அறிக்கை சரிபார்க்கும் போதும் பல முறை அறிவுறுத்தப்பட்டும் வருகின்றது. கோட்டம்-179ல் கடந்த மூன்று மாதத்தில் ஏழு செக்டார் பணியாளர்கள் போதிய பயிற்சியின்றியும் படிப்பறிவில்லாமலும் பணிக்கு வருவதால் கோட்ட சுகாதார பணிகள் பாதிக்கப்படுவதை கண்டறிந்து, முதுநிலை பூச்சியியலாளர்-13 மற்றும் மண்டல நல அலுவலர்-13 அவர்களுக்கு தகவல் சமர்ப்பிக்கப்பட்டு பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். கடந்த அக்டோபர் 2018 மாதத்தில் கோட்டம்-179ல் செக்டார் பணிகள் 27 நாட்களில் 297 செக்டார் பணிகளுக்கு 61 செக்டார் பணியாளர்கள் வருகை பதிவு இல்லாத சூழலில் மாற்றுப்பணியாளர்களை கொண்டு செக்டார் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுகுறித்து, மண்டல நல அலுவலர்-13 அவர்களின் வாரந்திர ஆய்வு கூட்டத்தின் போதும், கூடுதல் மாநகர நல அலுவலர் (தெற்கு) அவர்களின் ஆய்வுக் கூட்டத்தின் போதும், ஒப்பந்த பணியாளர்களின் வருகை பதிவில் நிலைத்தன்மை இல்லாது இருப்பதையும், ஒப்பந்ததாரரால் நியமிக்கப்படும் கொசு ஒழிப்பு களப்பணியாளர்களுக்கு தேவையான உபகரணங்கள் அளித்து முறையான பயிற்சிகள் அளிக்க பூச்சிதடுப்பு துறை மூலம் ஒப்பந்ததாரருக்கு அறிவுறுத்தி நடவடிக்கை மேற்கொண்டால் மட்டுமே வரும் பருவ மழை முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கைகளையும், டெங்கு காய்ச்சல் தாக்கங்களை தவிர்க்க இயலும் என்பதனை கூடுதல் மாநகர நல அலுவலர் (தெற்கு), மண்டல நல அலுவலர்-13, முதுநிலை பூச்சியியலாளர்-13 அவர்களுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது என்பதனை தங்களின் மேலான பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் தகுதியற்ற பணியாளர்களை நியமனம் செய்த ஒப்பந்ததாரரின் மண்டலம்-13க்கான மேற்பார்வையாளர் திரு.பரத் என்பவர் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளார் என்பதனையும் தங்களின் மேலான கவனத்திற்கு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

கோட்டம்-179ல் ஒப்பந்த பணியாளர்கள் நிலைத்தன்மையின்றி வருகை தந்த போதும், பயிற்சியின்றி பணிக்கு வருவதையும் உடனுக்குடன் முதுநிலை பூச்சியியலாளர்-13 மற்றும் மண்டல நல அலுவலர் -13 அவர்களுக்கு தெரியப்படுத்தி சூழ்நிலையை கருத்தில் கொண்டும் பொதுமக்களின் நலன் கருதியும் மாற்றுப்பணியாளர்களை களப்பணியில் ஈடுபடுத்தி கோட்ட சுகாதார ஆய்வாளர்-179 அவர்களுடன் இணைந்து மேற்கண்ட பகுதிகளில் கொசுப்புழு உற்பத்தியாகும் தேவையற்ற பொருட்களை அகற்றும் பணியில் தீவிரமாக பணியாற்றி வருகின்றேன் என்பதனையும், நான் எப்போதும் உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கு கட்டுப்பட்டு பணியாற்றி வருகிறேன் என்பதனையும் கருத்தில் கொண்டு மேற்கண்ட குற்றச்சாட்டிலிருந்து விலக்கு அளிக்கும்படி பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

குற்றச்சாட்டு எண்.2.

பெருநகர சென்னை மாநகராட்சியால் டெங்கு காய்ச்சல் தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கை தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் வீடுகளில் கொசுப்புழு உற்பத்தியாவதற்கு ஏதுவான தேவையற்ற பொருட்களை அகற்றாமல் இருந்துள்ளீர்கள்.

பதில்

கடந்த அக்டோபர் 2018 மாதத்தில் டான்சி நகர் பகுதிகளில் 01.10.2018, 05.10.2018, 12.10.2018, 15.10.2018, 19.10.2018, 23.10.2018 மற்றும் 26.10.2018 ஆகிய தேதிகளில் சுகாதார விழிப்புணர்வு அளிக்கப்பட்டு, ஒப்பந்த பணியாளர்கள் மூலம் உடைந்த பாட்டில்கள், டயர்கள், பெயின்ட்

டப்பாக்கள் போன்ற தேவையற்ற பொருட்கள் (89 கிலோ) அகற்றப்பட்டுள்ளது. மேலும், விஜிபி செல்வா நகர், அண்ணா நகர் பகுதியில் 06.10.2018, 13.10.2018, 19.10.2018, 26.10.2018 மற்றும் 27.10.2018 ஆகிய தேதிகளில் சுகாதார விழிப்புணர்வு அளிக்கப்பட்டு, ஒப்பந்த பணியாளர்கள் மூலம் உடைந்த பாட்டில்கள், டயர்கள், பெயின்ட் டப்பாக்கள் போன்ற தேவையற்ற பொருட்கள் (97 கிலோ) அகற்றப்பட்டுள்ளது. அப்பகுதிகளில் வாரந்தோறும் திங்கள், வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் கை தெளிப்பான் மூலம் மருந்து தெளிக்கும் பணி, புகை பரப்பும் பணிகள், தினந்தோறும் மருத்துவ முகாம்கள் அமைத்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் பிளீச்சிங்பவுடர் தெளித்தல் மற்றும் வீடுதோறும் கீழ்நிலைத்தொட்டி மற்றும் மேல்நிலைத் தொட்டிகளை சுத்தம் செய்ய பிளீச்சிங் பவுடர் விநியோகித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது, மேலும், அப்பகுதியிலுள்ள நலவாழ்வு சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் அதிகம் கூடும் பேருந்து நிலையங்கள், இரயில் நிலையங்கள், வணிக வளாகங்கள் மற்றும் அடுக்குமாடி குடியிருப்புகளில் வாரந்தோறும் சுகாதார விழிப்புணர்வும், நிலவேம்பு குடிநீர் விநியோகித்தல் பணிகளும் நடைபெற்று வருகிறது என்பதனை கருத்தில் கொண்டு மேற்கண்ட குற்றச்சாட்டிலிருந்து விலக்கு அளிக்கும்படி பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

குற்றச்சாட்டு எண்.3

டெங்கு நோய் பரவுகின்ற இச்சூழ்நிலையில் டான்சி நகர் மற்றும விஜிபி செல்வா நகரில் வீடுகளில் கொசுப்புழு உற்பத்தியாக கூடிய தேவையற்ற பொருட்களை அகற்றாமல் இருந்துள்ளதால், சுகாதார சீர்கேடு ஏற்படவும், பொதுமக்கள் மத்தியில் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு அவப்பெயர் ஏற்படவும் காரணமாக இருந்துள்ளீர்கள்.

பதில்

டான்சி நகர், விஜிபி செல்வா நகர், அண்ணா நகர் உட்பட கோட்டம்-179ல் உள்ள அனைத்து பகுதிகளிலும், குறிப்பிட்ட இடைவெளியில் மருத்துவ முகாம்கள் அமைத்து பாதிக்கப்பட்ட பகுதிகளில் பிளீச்சிங்பவுடர் தெளித்தல் மற்றும் தினந்தோறும் வீடுகளில் கீழ்நிலைத்தொட்டி மற்றும் மேல்நிலைத் தொட்டிகளை சுத்தம் செய்ய பிளீச்சிங் பவுடர் விநியோகித்தல், சுகாதார விழிப்புணர்வு அளித்து கொசுப்புழுக்கள் உற்பத்தியாகக்கூடிய தேவையற்ற பொருட்களை அகற்றுதல், கைதெளிப்பான் மூலம் மருந்து தெளித்தல், எலிபொந்துகளை கண்டறிந்து எலிக்கொல்லி பசை பயன்படுத்துதல், புகைபரப்பும் இயந்திரம் மூலம் கொசுக்களை கட்டுப்படுத்துதல், கொசுப்புழுக்களை அழிக்க வீடுதோறும் அபேட் மருந்து பயன்படுத்துதல், குடிநீரில் குளோரின் ஆய்வு செய்தல், குளோரின் மாத்திரைகள் விநியோகம் செய்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதனையும், இரவு, பகல் பாராது பணிகளை செய்து வருகிறேன் என்பதனையும் தங்களின் மேலான கவனத்திற்கு தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், கடந்த அக்டோபர் 2018 மாதத்தில் கோட்டம்-179ல் வீடுகள்தோறும் சுகாதார விழிப்புணர்வு அளிக்கப்பட்டு, ஒப்பந்த பணியாளர்கள் மூலம் உடைந்த பாட்டில்கள், டயர்கள், பெயின்ட் டப்பாக்கள் போன்ற தேவையற்ற பொருட்கள் (415 கிலோ) அகற்றப்பட்டுள்ளது. மேலும், பகுதி-39, கோட்டம்-178,179 மற்றும் 180ல் ஒப்பந்ததாரரால் நியமிக்கப்படும் கொசுப்புழு களப்பணியாளர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்ட பகுதிகளில் ஆய்வு மேற்கொண்டதில் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகும் இடங்களை சரிவர கண்டறியாமலும், காரணிகளை அப்புறப்படுத்தாமலும், அப்பகுதி வீடுகளில் உள்ள பொதுமக்களுக்கு கொசுப்புழுக்கள் விழிப்புணர்வு அளிக்காமலும் செயல்பட்டு வருவது கண்டறியப்பட்டு, உடனடியாக முதுநிலை பூச்சியியலாளர்-13 மற்றும் மண்டல நல அலுவலர்-13 அவர்களுக்கு தகவல் சமர்ப்பிக்கப்பட்டு, ஒப்பந்ததாரர் மூலம் முறையாக பயிற்சி வழங்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நான் இதுவரை மண்டல நல அலுவலர் மற்றும் அனைத்து உயர் அதிகாரிகளின் உத்தரவுகளை ஏற்று, பொது சுகாதார பணிகளை மேற்கொண்டு வருகிறேன் என்பதனையும், உயர் அதிகாரிகளால் தினந்தோறும் அளிக்கப்படும் அறிவுரைகளை ஏற்று பகுதி-39க்குட்பட்ட வேளச்சேரி மற்றும் தரமணி பகுதிகளில் நேர்மையாகவும், கீழ்ப்படிந்தும், கண்ணும் கருத்துமாகவும், திறம்படவும் செயலாற்றிக் கொண்டிருக்கிறேன் என்பதனையும் கருத்தில்

கொண்டு மேற்கண்ட குற்றச்சாட்டிலிருந்து விலக்கு அளிக்கும்படி பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

குற்றச்சாட்டு எண்.4

மேற்கண்ட செயலின் மூலம், நீங்கள் பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதி 20 ஐ மீறியுள்ளீர்கள்.

பதில்

கடந்த 2015 மழை வெள்ள பாதிப்பின் போதும், கடந்த 2016 வர்தா புயல் (தரமணி வயிற்றுபோக்கு) பாதிப்பின் போதும் மண்டல நல அலுவலர்-13, கூடுதல் மாநகர நல அலுவலர்(தெற்கு) மற்றும் அனைத்து உயர் அதிகாரிகளின் அறிவுறுத்தலின்படி மண்டலம்-13, பகுதி-39, வேளச்சேரி மற்றும் தரமணி பகுதிகளில் பொது மக்களுக்கு தொற்று நோய்கள் பரவா வண்ணம் இரவு,பகல் பாராது பணிகளை செய்தேன். மேலும், மண்டலம்-13, பொது சுகாதாரத்துறை மூலம் மேற்கொள்ளும் அனைத்து பணிகளையும் உண்மையாகவும், அக்கறையுடனும் மேற்கொண்டு வருகிறேன் என்பதனையும் நான் எப்போதும் உயர் அதிகாரிகளின் உத்தரவுக்கு கட்டுப்பட்டு பணியாற்றி வருகிறேன் என்பதனையும் தங்களின் பார்வைக்கு தெரிவித்துக்கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சி பணியாளர்கள் நடத்தை விதி 20ஐ எப்போதும் மீறியது இல்லை என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு சமர்ப்பிக்கின்றேன். மண்டலம்-13, கோட்டம்-179 மற்றும் 174, வேளச்சேரி மற்றும் மடுவின்கரை, ஐஐடி பகுதியில் பொதுமக்களுக்கு பொதுசுகாதார பணிகளை தீவிரமாக மேற்கொண்டு வந்தேன் என்பதனை பணிந்து சமர்ப்பிக்கின்றேன்.எனவே, மதிப்பிற்குரிய சிறப்பு அதிகாரி ஐயா அவர்கள் எனது இந்த விளக்கத்தினை ஏற்று மேற்கண்ட அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்து என்னை விடுவிக்குமாறு பணிந்து கேட்டுக்கொள்கிறேன்என விளக்கம் அளித்துள்ளார்.

இந்நேர்வு தொடர்பாக திரு. அ. குணசீலன் சுகாதார ஆய்வாளர், கோட்டம்-197 மண்டலம்-15 என்பவர் அளித்துள்ள மேல்முறையீட்டு மனுவினை சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் பரிசீலனைக்கும் தக்க நடவடிக்கைக்காக சமர்ப்பித்த ஆணையரது 10.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"File was perused. As there was no new grounds add used, the earlier punishment is confirmed என சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் ஆணை அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.இ9/15894/2019

தீர்மான எண்.340/2019 **நாள்:25-06-2019**

பணியமைப்பு - பொதுத்துறை - திருமதி.டி.காந்தா, துப்புரவு பணியாளர், பணி எண்.732568, கோட்டம்-59, மண்டலம்-5 அவர்கள் 01.07.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்ல அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-5, பகுதி-14, கோட்டம்-59ல் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து வரும் திருமதி.டி.காந்தா, பணியாளர் எண்.732568 அவர்கள் சென்னை மாநகராட்சியில் நிரந்தர பணியாளராக 01.01.1998 முதல் பணிபுரிந்து வரும் தனக்கு 55 வயது கடந்துள்ள நிலையில் உடல்நலம் பாதிப்பு ஏற்பட்டதால், குடும்ப சூழ்நிலை காரணமாக தன் விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்குமாறு சிறப்பு அதிகாரி/மன்றம் அவர்களுக்கு 03.04.2019 அன்று மனு அளித்துள்ளார்.

மேற்காணும் தனியரின் பணிப்பதிவேட்டின்படி, திருமதி.டி.காந்தா, துப்புரவு பணியாளர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.158, நாள்.19.06.1997-ன்படி சென்னை மாநகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணையின்படி 01.01.1998 அன்று முதல் நிரந்தர துப்புரவு பணியாளராக பணியமர்த்தப்பட்டு, தற்போது மண்டலம்-5ல் பணிபுரிந்து வரும் தனியருக்கு அப்பதவியில் பணிவரன்முறை மற்றும் தகுதிகாண் பருவம் வழங்கப்பட்டும், தனியருக்கு தேர்வு நிலை மற்றும் சிறப்பு நிலை ஊதியம் வழங்கப்பட்டு அப்பதவியில் 21 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளார்.

சென்னை மாநகராட்சி சிந்தாதிரிப்பேட்டை, தொழிலாளர் கூட்டுறவு சங்கம் லிட். அவர்களின் 08.05.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் சங்கத்தில் ரூ.3,81,351/- (மூன்று இலட்சத்து எண்பத்தி ஓராயிரத்து முன்னூற்று ஐம்பத்தி ஒன்று மட்டும்) கடன் நிலுவை தொகை உள்ளது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி காவல்துறை துணை கண்காணிப்பாளர்/ விழிப்பு அலுவலர், விழிப்பு குழுமம் அவர்களின் 22.05.2019 நாளிட்ட கடிதத்தில் தனியரின் மீது விசாரணை ஏதும் இன்றைய தேதியில் நிலுவையில் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 07.06.2019 நாளிட்ட குறிப்பில், திருமதி.டி.காந்தா, துப்புரவு பணியாளர் அவர்கள் மீது துறை ரீதியாக குற்றச்சாட்டுகள் நிலுவையில் இல்லை எனவும், தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு மூன்று மாத அறிவிப்பு காலத்தில் சம்பளமில்லா விடுப்பு ஏதும் துய்க்கவில்லை என மண்டல அலுவலர், மண்டலம்-5 அவர்களால் 30.05.2019 நாளிட்ட கடிதத்தில் தெரிவித்துள்ளதால், தனியரை 01.07.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு, ஆணையர் அவர்களின் அனுமதி வேண்டி கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன் தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டின்படி திருமதி.டி.காந்தா, துப்புரவு பணியாளர், அவர்களின் பிறந்த தேதி 01.07.1963 என்பதால், தனியர் ஓய்வு பெறும் நாள் 30.06.2023 ஆகும். மேலும் தனியரின் வயது 55 வயது பூர்த்தி அடைந்து 21 ஆண்டுகள் பணி நிறைவு செய்துள்ளார்.

மேற்காணும், வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் குறிப்பின்படி, திருமதி.டி.காந்தா, துப்புரவு பணியாளர் (பணி எண்.732568) கோட்டம்-59, பகுதி-14, மண்டலம்-5 அவர்களின் 03.04.2019 நாளிட்ட தன்விருப்ப ஓய்வு கோரிய மனுவினை ஏற்கப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி சிப்பந்திகள் கூட்டுறவு சங்கத்திற்கு செலுத்த வேண்டிய

பொ.து.ந.க.எண்.இ9/15894/2019

நிலுவை தொகை ரூ.3,81,351/- (மூன்று இலட்சத்து எண்பத்தி ஓராயிரத்து முன்னூற்று ஐம்பத்தி ஒன்று மட்டும்) தனியருக்கு வழங்கபடவுள்ள ஓய்வூதிய பணிக்கொடையில் பிடித்தம் செய்யப்படும் என்றும், பெருநகர சென்னை மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய முன்பண நிலுவைத்தொகை மற்றும் தணிக்கைத் தடை மற்றும் பிற முன்பண நிலுவை தொகை ஏதேனும் இருப்பது பின்னர் தெரியவரின், தனியரின் ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, திருமதி.டி.காந்தா, துப்புரவு பணியாளர் அவர்களை 01.07.2019 அன்று பிற்பகல் முதல் தன்விருப்ப ஓய்வில் செல்வதற்கு அனுமதிக்க, சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"தன்விருப்ப ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

க.து.ந.க.எண்.பி2 /2554/2018

தீர்மான எண்.341 / 2019 **நாள்:25-06-2019**

கட்டடத்துறை - மண்டலம் - 9 வார்டு -113 நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் பலஅடுக்கு மாடிகளுடன் கூடிய வாகன நிறுத்துமிடம் மற்றும் மண்டலம் அலுவலகம் - 9 கட்டும் பணியினை தற்போது பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பின் மூலம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதால் ஏற்கனவே கோரிய ஒப்பத்தினை ரத்து செய்ய அனுமதி.

மண்டலம்-9, வார்டு-113 நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் பல அடுக்கு மாடிகளுடன் கூடிய வாகன நிறுத்துமிடம் மற்றும் மண்டலம் அலுவலகம் - 9 கட்டும் பணிக்காக 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி தனித்தனியாக ரூ.9,99,90,000/- மதிப்பீடு தயாரிக்கப்பட்டு மன்ற தீர்மான எண்.502/2015, நாள்.29.08.2015 மற்றும் மன்ற தீர்மான எண்.556/2015, நாள்.30.09.2015ன்படி மன்ற தீர்மானம் பெறப்பட்டது. இப்பணிகளுக்காக 29.01.2016 அன்று ஒப்பம் கோரப்பட்டு இப்பணிக்காக ஒப்பத்தில் கலந்து கொண்ட திருவாளர்கள்.கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களின் ஒப்பம் ஏற்கப்பட்டு மன்ற தீர்மான எண்.268/2016, நாள்.26.02.2016 மற்றும் மன்ற தீர்மான எண்.269/2016, நாள்.26.02.2016ன்படி மன்ற தீர்மானம் பெறப்பட்டு, ஒப்பந்ததாரருக்கு 01.03.2016 அன்று பணி ஏற்பு ஆணை வழங்கப்பட்டது.

பணியின் விவரம்	மதிப்பீட்டு தொகை (இலட்சங்களில்) ரூ.	ஏற்கப்பட்ட ஒப்பத்தொகை	பணி ஏற்பு ஆணை வழங்கப்பட்ட நாள்
மண்டலம் - 9 வார்டு -113 நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் பல அடுக்கு மாடிகளுடன் கூடிய வாகன நிறுத்துமிடம் கட்டும் பணி	99,990.00	11,17,67,384.50	01.03.2016
மண்டலம் - 9 வார்டு -113 நுங்கம்பாக்கம் உத்தமர் காந்தி சாலையில் மண்டல அலுவலகம் - 9 கட்டும் பணி	99,990.00	9,29,16,247.50	01.03.2016

ஆணையர் அவர்களின் 04.03.2017 நாளிட்ட கருத்துருவில் இப்பணிக்காக கலந்தறிவளாராக நியமிக்கப்பட்ட Mahindra Consultant அவர்களின் பணியினையும் ஒப்பந்ததாரர் திருவாளர்கள் கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்களுக்கு வழங்கப்பட்ட இரண்டு பணிகளையும் ரத்து செய்து பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பு (PPP Mode) முறையில் மேற்கொள்ள 03.10.2016 அன்று நடைபெற்ற கலந்தாய்வு கூட்டத்தில் (Minutes of Meeting) ஆணையர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது.

அதனால் TUPISIL மூலம் ஏற்கனவே உள்ள Mahindra Consultant கலந்தறிவாளரை நீக்கிவிட்டு புதிதாக JLL அவர்களுக்கு பணி ஆணை வழங்கப்பட்டு மண்டல அலுவலகம் மற்றும் வாகன நிறுத்துமிடம் இரண்டு பணிகளுக்குண்டான இடங்களையும் சேர்த்து பொதுமக்கள் மற்றும் தனியார் பங்களிப்பின் மூலம் (PPPMode) விரிவான முறையில் பல அடுக்கு வாகனம் நிறுத்துமிடம் கட்டும் பணி மேற்கொள்ள திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு அரசுக்கு அனுப்பபட்டு கலந்தறிவாளர் நியமனம் செய்யப்பட்டு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் ஏற்படும் வகையில் வழிமுறைகளை ஆராய்ந்து பொதுமக்களிடம் கருத்துக்கள் பெறப்பட்டு பணி மேற்கொள்ள DPR பணிநிறைவேற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே மண்டல அலுவலகம் மற்றும் வாகன நிறுத்துமிடம் இரண்டு பணிகளுக்கு ஒப்பம் கோரிய பணி மூலதனநிதியின் மூலம் மேற்கொள்ள இருந்ததாலும் தற்போது பெருநகர சென்னை மாநகராட்சிக்கு வருவாய் ஏற்படும் வகையில் (PPPMode) விரிவான முறையில் மேற்கொள்ள உத்தேசிக்கப்பட்டு இந்த ஒப்பத்தினை ரத்து செய்யலாம் என கருதப்படுகிறது.

எனவே, ஏற்கனவே ஆணையரின் ஆணைப்படி ரத்து செய்யப்பட்ட பணிகளுக்கு,

1. 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி ரூ.11,17,67,384.50/- க்கு வாகன நிறுத்துமிடம் கட்டும் பணியினையும் இப்பணிக்கு வழங்கப்பட்ட பணி ஆணையினை ரத்து செய்யவும்,
2. 2014-2015 ஆம் ஆண்டின் அலுவலக விலைவிவரப்படி ரூ.9,29,16,247.50/- க்கு மண்டல அலுவலகம் - 9 கட்டும் பணியினையும் இப்பணிக்கு வழங்கப்பட்ட பணி ஆணையினை ரத்து செய்யவும், இந்த இரண்டு பணிகளுக்காக திருவாளர்கள் கிருஷ்ணமூர்த்தி அண்டு கோ அவர்கள் வழங்கியுள்ள பிணை வைப்புத் தொகையினை திரும்ப வழங்கவும்,

மேற்கண்ட 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 21.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"ஒப்பந்தத்தை இரத்து செய்ய, 1 மற்றும் 2 ஆகிய இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(பணிகள்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.ஈ1/17313 /2019

தீர்மான எண்.342 / 2019 **நாள்:27-06-2019**

பணியமைப்பு -பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திருமதி.சீ.தமிழ்செல்வி, உதவி கணக்கு அலுவலர் , பகுதி கணக்கு குழுமம். மண்டலம் 11 அவர்கள் 30.06.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்லஅனுமதி.

நிதி ஆலோசகர் அவர்களின் 21.06.2019 நாளிட்ட குறிப்பில், பொதுத்துறையின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, பகுதி கணக்கு குழுமம் மண்டலம் 11ல், உதவி கணக்கு அலுவலராக பணிபுரியும் திருமதி.சீ.தமிழ்செல்வி அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 30.06.2019 அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணையர் அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தனியர் பிறந்த தேதி 02.06.1961 ஆகும்.

திருமதி.சீ.தமிழ்செல்வி, உதவி கணக்கு அலுவலர், பகுதி கணக்கு குழுமம் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலாக 17.06.1987 அன்று தட்டச்சராகவும், 27.05.1996 முதல் உதவியாளராகவும், 25.09.2008 முதல் பிரிவு மேலாளராகவும், 10.09.2015 முதல் நிர்வாக அலுவலராகவும் மற்றும் 03.08.2017 முதல் உதவி கணக்கு அலுவலராகவும் பதவி உயர்வு பெற்று பணிபுரிந்து வருகின்றார். தனியர் பணிபுரிந்து வந்துள்ள துறைகள்/ மண்டல அலுவலகங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	பணியாற்றிய காலங்கள்	பதவி	துறை/மண்டலம்
1	17.06.1987 -15.06.1995	தட்டச்சர்	D.O (S) (பழைய மண்டலம் -7, புதிய மண்டலம் – 9
2	16.06.1995 -26.05.1996	தட்டச்சர்	மத்திய கணக்கு குழுமம்
3	27.05.1996-22.07.1996	உதவியாளர்	ப.க.கு (பழைய மண்டலம் -3) புதிய மண்டலம் 4 மற்றும் 6
4	22.07.1996 -26.09.2001	உதவியாளர்	ப.க.கு /பழைய மண்டலம் -8 , புதிய மண்டலம் -10 (பணியிடம் – வருவாய்த்துறை)
5	26.09.2001 -31.10.2001	உதவியாளர்	வருவாய்த்துறை (தலைமையிடம்)
6	31.10.2001 -24.09.2008	உதவியாளர்	ப.க.கு (பழைய மண்டலம் -8 / புதிய மண்டலம் -10) பணியிடம்- வருவாய்த்துறை
7	25.09.2008 -04.01.2009	பிரிவு மேலாளர்	மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் – நிலம் மற்றும் உடைமைத்துறை
8	05.012009 -22.12.2009	பிரிவு மேலாளர்	மத்திய கணக்கு குழுமம் (பணியிடம் –வருவாய்த்துறை தலைமையிடம்/ கணிப்பொறி பிரிவு
9	22.12.2009 -18.01.2012	பிரிவு மேலாளர்	வருவாய்த்துறை- பழைய மண்டலம் 9/ புதிய மண்டலம் 13
10	19.01.2012 -09.09.2015	பிரிவு மேலாளர்	வருவாய்த்துறை மண்டலம் -14
11	10.09.2015 - 03.08.2017	நிர்வாக அலுவலர்	மண்டலம் -11
12	03.08.2017 முதல் இன்று வரை	உதவி கணக்கு அலுவலர்	ப.க.கு/ மண்டலம்.11

பொ.து.ந.க.எண்.ஈ1/17313 /2019

தனியர் பணிபுரிந்த பிற மண்டலங்கள் / துறைகளில் நேர் செய்யப்படாத முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தில் 28.03.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் எனவும், கடன் தொகை நிலுவை இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, நிதி ஆலோசகர் அவர்களின் 07.05.2019 நாளிட்ட குறிப்பின்படி, தனியர் உதவி கணக்கு அலுவலராக மண்டலம் / துறைககளில் பணிபுரிந்த காலங்களில் 2017-2018 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கைகளின்படி, இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மொத்தம் ரூ.22,159/- உள்ளடக்கிய 2 தணிக்கைத்தடை பத்திகள் கூட்டு பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் நிலுவை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தணிக்கை தடைகள் கூட்டுப்பொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.11,080/- (ரூபாய் பதினொராயிரத்து எண்பது மட்டும்) உள்ளடக்கிய 2 தணிக்கை தடைபத்தி தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது எனவும், தனியருக்கு பொதுத்துறையில் உதவி கணக்கு அலுவலர் பதவியில் ஊதியம் மிகையாக வழங்கியதாக திருத்தம் செய்து பிடித்தம் செய்ய உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை தணிக்கை எழுப்பி உள்ளது எனவும், மேலும் 2018 -19 மற்றும் 2019- 2020 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை பத்திகள் ஏதும் நிலுவையில் இருப்பின் அதன் பொறுப்பு தனியரையே சாரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	மண்டலம் / துறை	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக்குட் படுத்தப்பட்டத் தொகை (ரூ.)	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	திருமதி சீ.தமிழ்செல்வி உ.க.அ. பொறுப்பாக்கும் தொகை(ரூ.)
1	மண்டலம் - 11	2017-18 (அ)	31	22159.00	2	11,080.00
2	மண்டலம் - 11	2017-18 (கு)	15	-	-	-
	மொத்தம்		**2**	**22159.00**		**11,080.00**

சென்னை மாநகராட்சி விழிப்பு துறையின் 07.06.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு துறையில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ தற்போது நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

தனியரின் 08.05.2019 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி, மத்திய கணக்கு குழுமம் (பகுதி கணக்கு குழுமத்தில் மண்டலம் 11)ல் உதவி கணக்கு அலுவலராக பணியாற்றி வயது முதிர்வு காரணமாக 30.06.2019 ஆம் தேதியன்று பணியிலிருந்து ஓய்வு பெற்வுள்ளதால், தணிக்கைத் தடை நிலுவை பத்திகள், வருவாய் இழப்பு, முன்பண நிலுவை மற்றும் தவறான மிகை ஊதிய நிர்ணயம் பெற்றதாக பின்னர் தெரியவரின், அத்தொகையினை எனக்கு அளிக்கப்படும் இறப்பு (மற்றும்) ஓய்வுகால பணிக்கொடையிலிருந்து ஒரே தவணையாக பிடித்தம் செய்து கொள்ளலாம் என சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு-II ன் கீழ்வரும் உதவி கணக்கு அலுவலர் பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் மன்றத்தின் அனுமதி பெறப்பப்பட வேண்டும். தற்போது மன்றம் 24.10.2016 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

அரசாணை(ப) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.10.2016 ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்கள் வசம் உள்ளது.

எனவே, நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதத்தின்படி, திருமதி.சீ.தமிழ்செல்வி, உதவி கணக்கு அலுவலர் அவர்கள் மீது தனிப்பொறுப்பில் உள்ள தணிக்கைத்தொகை ரூ.11,080/- (ரூபாய் பதினொராயிரத்து எண்பது மட்டும்) உள்ளடக்கிய 2 தணிக்கை தடைபத்தி தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது எனவும், தனியருக்கு பொதுத்துறையில் உதவி கணக்கு அலுவலர் பதவியில் ஊதியம் மிகையாக வழங்கியதாக திருத்தம் செய்து பிடித்தம் செய்ய உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை தணிக்கை எழுப்பி உள்ளதையும், மற்றும் 2018 -19 மற்றும் 2019- 2020 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை அவற்றிற்கும் தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஒய்வூதிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 30.06.2019 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஒய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"வயது முதிர்வு ஒய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.ஈ2/13349/2019

தீர்மான எண்.343 / 2019 **நாள்:27-06-2019**

பணியமைப்பு -பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - 2018-2019 ஆம் ஆண்டிற்கான கூடுதல் வருவாய் அலுவலர் பதவிக்கான தெரிவுப்பட்டியல் மன்றத்தினால் ஒப்புதல் அளிக்கப்பட்டு கூடுதல் வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கப்பட்டது - கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் பணிவரன்முறை செய்து ஆணை வழங்க அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறையில் காலியாகவுள்ள கூடுதல் வருவாய் அலுவலர் பணியிடங்களை நிரப்ப 01.04.2018 ஐ மைய நாளாகக் கொண்டு 3 நபர்களைக் கொண்ட தெரிவுப்பட்டியல் தயாரிக்கப்பட்டு, தெரிவுப்பட்டியலுக்கு சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் தீர்மான எண்.076/2019, நாள்.15.02.2019 நிறைவேற்றப்பட்டு, ஆணையர் அவர்களின் 18.02.2019 நாளிட்ட செயல்முறை ஆணையின் மூலமாக தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.1ல் உள்ள திரு. ம.தி.கிஷோர்குமார், உதவி வருவாய் அலுவலர் அவர்களுக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து தனியர் ஆணையர் அவர்களின் 28.02.2019 நாளிட்ட ஆணையின்படி வயது முதிர்வு காரணமாக 28.02.2019 அன்று பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

அதன் பின்னர், ஆணையர் அவர்களின் 04.03.2019 நாளிட்ட ஆணையின்படி தெரிவுப்பட்டியலில் வரிசை எண்.2ல் உள்ள திரு.ஜி.டி.கிஷோர், அவர்களுக்கு கூடுதல் வருவாய் அலுவலராக பதவி உயர்வு அளிக்கப்பட்டது.

மேலும், தனியர்கள் மீது கூடுதல் வருவாய் அலுவலர்களாக பதவி உயர்வு பெற்ற நாள் முதல் இன்றைய தேதி வரை ஒழுங்கு நடவடிக்கை ஏதும் இல்லை எனவும் தனியர்களுக்கு அப்பதவியில் பணிவரன்முறைபடுத்துமாறும் தெரிவித்து வருவாய்அலுவலர் அவர்களின் 15.05.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக கோப்பு பெறப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சியில் கூடுதல் வருவாய் அலுவலர் பதவி வகுப்பு 1-பி-ன் கீழ் வருவதால், பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களுக்கு அதிகார பங்களிப்பு அளிக்கப்பட்டுள்ளது.

ஆகவே, கீழ்கண்ட 2 அலுவலர்களுக்கு கூடுதல் வருவாய் அலுவலர் பதவியில் பணியில் சேர்ந்த நாள் முதல் பணிவரன்முறைப்படுத்த சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

வ. எண்.	கூடுதல் வருவாய் அலுவலர் பெயர்கள்	கூடுதல் வருவாய் அலுவலர் பதவி உயர்வு வழங்கிய செய்லமுறை ஆணை எண்.நாள்.	கூடுதல் வருவாய் அலுவலராக பணியில் சேர்ந்த நாள்.
1.	ம.தி.கிஷோர்குமார்	பொ.து.ந.க.எண்.ஈ2/29924/2018, நாள்.18.02.2019	21.02.2019 முற்பகல்
2.	ஜி.டி.கிரிதர்	பொ.து.ந.க.எண்.ஈ2/29924/2018, நாள்.04.03.2019	06.03.2019 முற்பகல்

"பணிவரன்முறை செய்து ஆணை வழங்க சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

ம.அ.9.ந.க.எண்.இ2/6756 /2019

தீர்மான எண்.344 / 2019 **நாள்:27-06-2019**

மண்டலம்-9, பகுதி-24,25,26 (ம) 27, கோட்டம்-109 முதல் 126 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை ஒப்பந்த அடிப்படையில் சுத்தம் செய்யும் பணியாளர்களை தற்காலிகமாக தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் பணியமர்த்த அனுமதி.

Municipal Administration and Water Supply (Ma.IV) Department, G.O.(MS) No.166, dated 23.11.2016ல், அந்தந்த உள்ளாட்சி எல்லைக்குள் அமைந்துள்ள அரசு மற்றும் நகராட்சி பள்ளிகளில் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் பணியில் ஈடுபடுத்தி பணி மேற்கொள்ளவும், இப்பணிக்கு தேவையான உபகரணங்கள் மற்றும் பொருட்கள் அந்தந்த பள்ளியின் தலைமையாசிரியர்கள் PTA நிதியிலிருந்து வாங்கி வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கல்வி அலுவலர் அவர்களின் 06/06/2017 நாளிட்ட குறிப்பில், அந்தந்த மண்டலங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் பள்ளிகளின் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகளை பராமரித்து தூய்மைபடுத்தும் பணியினை துப்புரவு பணியாளர்கள் மூலம் மேற்கொள்ள துணை ஆணையர்(கல்வி) அவர்கள் அறிவுறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு, பள்ளி இயங்கும் அனைத்து நாட்களிலும் வேலை நாட்கள் மட்டுமின்றி தேர்தல் பணி, சிறப்பு வகுப்புகள் மற்றும் வேறு முகாம்கள் நடைபெறும் நாட்களில் தூய்மை பணி மேற்கொள்ளப்படவேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி மண்டலம்-9, பகுதி-24,25,26 (ம) 27, கோட்டம்-109 முதல் 126 வரை உள்ள சென்னை மாநகராட்சி மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுப்புறமும் வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் ஆகியவற்றை ஒப்பந்த அடிப்படையில் சுத்தம் செய்யும் பணிக்கு ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ.346/- வீதம் (2017-2018ம் ஆண்டு விலை விகிதம்) 6 மாதத்திற்கு

1) பகுதி-24ல் 15 பள்ளிகளில் 32 பணியாளர்களுக்கு ரூ. 20,79,005/-ம்,
2) பகுதி-25ல் 13 பள்ளிகளில் 26 பணியாளர்களுக்கு ரூ. 14,42,382/-ம்,
3) பகுதி-26ல் 7 பள்ளிகளில் 24 பணியாளர்களுக்கு ரூ. 18,03,514/-ம்,
4) பகுதி-27ல் 22 பள்ளிகளில் 38 பணியாளர்களுக்கு ரூ. 24,72,547/-ம்,

ஆக மொத்தம் 57 பள்ளிகளில் 120 பணியாளர்களுக்கு ரூ. 77,97,418/- பணிமதிப்பீட்டில் ஆறு மாதங்களுக்கு பணிமேற்கொள்ள கொள்ள 4.6.2018 அன்று பணியாணை வழங்கப்பட்டு 03.12.2018வுடன் பணி முடிவடைந்தது. இப்பணி ஒப்பந்ததாரர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது.

சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் செயல்முறை ஆணை, எண்.C2/7393/2018, நாள்.16.05.2018ன்படி, ஒரு பணியாளருக்கு ஒரு நாளைக்கு ரூ. 362/-வீதம் 26 நாட்களுக்கு 120 பணியாளர்களுக்கு 11 மாதங்களுக்கு தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டால் **ரூ.1,24,23,840/-** மட்டும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் ஊதியம் வழங்கப்படும்.

இதே பணியினை ஒப்பந்ததாரர்கள் மூலம் பணியாளர்கள் பணியமர்த்தப்பட்டால் ஒரு பணியாளர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 362/-வீதம் 26 நாட்களுக்கு 120 பணியாளர்களுக்கு 11 மாதங்களுக்கு ரூ.1,24,23,840/-ம், மற்றும் 5 சதவீதம் material charges 6,21,192/-ம் சேர்த்து மொத்தம் **ரூ.1,30,45,032/-** ஆகும்.

ஒப்பங்கள் மூலம் கோரப்படும் இப்பணிக்கு ஒப்பந்ததாரர்கள் போட்டியில் கோரும் விலைப்புள்ளியானது மிகவும் குறைவானதாக உள்ளதால், சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவிக்கப்பட்ட ஊதியத்தை விட மிகவும் குறைவான ஊதியம் பணியாளர்களுக்கு ஒப்பந்ததாரரால் வழங்கப்படுகிறது என பல்வேறு புகார் மூலம் அறிய வருகிறது.

இந்நிலையில் பள்ளிகள் மே மாதம் விடுமுறை நாட்கள் முடிந்து 2019 ஆம் ஆண்டு ஜூன் மாதம் பள்ளிகள் திறக்கப்படுவதால், 2018-19 ஆம் ஆண்டு சென்னை மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்பட்ட தினக்கூலி விகிதத்தில் சென்னை பள்ளிகள் மற்றும் அரசு பள்ளிகளில் சுற்றுபுறமும் வகுப்பு அறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்யும் பணியாளர்களுக்கு மே

ம.அ.9.ந.க.எண்.இ2/6756 /2019

மாதம் பள்ளி விடுமுறை நாட்களை தவிர்த்து 11 மாதத்திற்கு 56 பள்ளிகளில் வகுப்பறைகளை சுத்தம் செய்ய 66 பணியாளர்கள் மற்றும் கழிவறைகளை சுத்தம் செய்ய 54 பணியாளர்கள் என மொத்தம் 120 பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் பணிமேற்கொள்ள பரிசீலிக்கப்பட்டுள்ளது. இப்பணியானது மண்டலம்-4ல் அண்டை வீட்டு குழு (NULM) திட்டத்தின் மூலம் பணி மேற்கொள்ள ஆணை வழங்கப்பட்டு சிறப்பாக செயல்பட்டு வருகிறது.

கீழ்காணும் பள்ளிகளில் உள்ள சுற்றுபுறம், வகுப்பறைகளின் எண்ணிக்கை மற்றும் கழிவறைகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் இதுவரை பணியமர்த்தப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்ட பணியாளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பணியாளர்கள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, கீழ்கண்ட பணியாளர்களை நான்கு குழுக்களாக பிரித்து வைக்கப்பட்டுள்ளது.

வ. எண்.	வார்டு எண்.	பள்ளியின் பெயர்	வகுப்பறை சுத்தம் செய்பவர்	கழிவறை சுத்தம் செய்பவர்	மொத்தம்
		பகுதி-24			
1	109	சென்னை துவக்கப்பள்ளி, நமச்சிவாயபுரம்	1	1	2
2	109	சென்னை துவக்கப்பள்ளி, சங்கராபுரம்	1	1	2
3	109	சென்னை உயர்நிலைப்பள்ளி, சங்கராபுரம்	1	1	2
4	110	சென்னை ஆண்கள் மேல்நிலைப்பளி, பள்ளிசாலை	2	2	4
5	110	சென்னை பெண்கள் மேல்நிலைப்பளி, பள்ளிசாலை	2	1	3
6	110	சென்னை நடுநிலைப்பளி, அப்பாசாமி தெரு	1	1	2
7	110	சென்னை துவக்கப்பளி, குட்டி தெரு	1	1	2
8	111	சென்னை துவக்கப்பள்ளி, ஆண்டர்சன் சாலை	1	1	2
9	111	சென்னை நடுநிலைப்பள்ளி, மாடல் பள்ளி சாலை	1	1	2
10	111	சென்னை பெண்கள் உயர்நிலைப்பள்ளி, மாடல் பள்ளி சாலை	1	1	2
11	118	சென்னை நடுநிலைப்பள்ளி, முத்தையா தெரு	1	1	2
12	119	சென்னை நடுநிலைப்பள்ளி, பீட்டர் சாலை	1	0	1
13	119	சென்னை நடுநிலைப்பள்ளி, பாலாஜி நகர் 3வது தெரு	1	1	2
14	119	சென்னை நடுநிலைப்பள்ளி, பேகம் தெரு	1	1	2
		மொத்தம்	**16**	**14**	**30**
		பகுதி-25			
1	123	சென்னை துவக்கப்பள்ளி, பேகம் தெரு	1	1	2
2	123	சென்னை துவக்கப்பள்ளி, அப்பாதுரை தெரு,	1	1	2
3	123	சென்னை துவக்கப்பள்ளி, திருவள்ளுவர் சாலை	1	1	2
4	123	சென்னை நடுநிலைப்பள்ளி, சென்ட்மேரீஸ் ரோடு	1	1	2
5	123	சென்னை மேல்நிலைப்பள்ளி, பேகம் தெரு	1	1	2
6	123	சென்னை உயர்நிலைப்பள்ளி, எல்டாம் ரோடு	1	1	2
7	124	சென்னை துவக்கப்பள்ளி, சிலேட்டர்புரம்	1	1	2

8	124	சென்னை நடுநிலைப்பள்ளி, ராமகிருஷ்ணாபுரம்	1	1	2
9	125	சென்னை உயர்நிலைப்பள்ளி, கே.பி. சாலை	1	1	2
10	125	சென்னை நடுநிலைப்பள்ளி, பேராசிரியர் சஞ்சீவி தெரு	1	1	2
11	125	சென்னை துவக்கப்பள்ளி, நொச்சி குப்பம்	1	1	2
12	126	சென்னை உயர்நிலைப்பள்ளி, கெனால் பேங்க்	1	0	1
13	126	சென்னை துவக்கப்பள்ளி, கெனால் பேங்க்	1	0	1
14	126	சென்னை நடுநிலைப்பள்ளி, சாந்தோம் நெடுஞ்சாலை	1	1	2
		மொத்தம்	**14**	**12**	**26**
பகுதி-26					
1	112	சென்னை நடுநிலைப்பள்ளி, டிரஸ்ட்புரம்	2	2	4
2	112	சென்னை நடுநிலைப்பள்ளி, வரதராஜன்பேட்டை	2	2	4
3	112	சென்னை உயர்நிலைப்பள்ளி, சூளைமேடு நெடுஞ்சாலை	2	2	4
4	112	ஜெயகோபால் கரோடியா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, சூளைமேடு	2	2	4
5	113	சென்னை நடுநிலைப்பள்ளி, தர்மாபுரம்	1	1	2
6	113	சென்னை நடுநிலைப்பள்ளி, இராமா தெரு	1	1	2
7	117	சென்னை நடுநிலைப்பள்ளி, கிரியப்பா சாலை	1	0	1
8	117	சென்னை நடுநிலைப்பள்ளி, தெற்கு போக் சாலை	1	0	1
9	122	அரசு மேல்நிலைப்பள்ளி, நந்தனம்	1	1	2
		மொத்தம்	**13**	**11**	**24**
பகுதி-27					
1	114	சென்னை நடுநிலைப்பள்ளி, பங்காரு தெரு	1	1	2
2	114	சென்னை நடுநிலைப்பள்ளி, தைபூன் அலிகான் தெரு	1	1	2
3	114	சென்னை நடுநிலைப்பள்ளி, பெல்ஸ் ரோடு	1	1	2
4	114	சென்னை உருது துவக்கப்பள்ளி, வல்லப அக்ரஹாரம் தெரு	1	1	2
5	114	சமுதாய கல்லூரி, அருணாச்சலம் தெரு	1	1	2
6	115	சென்னை துவக்கப்பள்ளி, டாக்டர் பெசன்ட் சாலை	1	0	1
7	115	சென்னை உருது ஆண்கள் துவக்கப்பள்ளி, பெசன்ட் சாலை	1	0	1
8	115	சென்னை நடுநிலைப்பள்ளி, சூரப்பா தெரு	1	0	1
9	116	சென்னை நடுநிலைப்பள்ளி, திருவல்லிக்கேணி	3	2	5
10	116	சென்னை நடுநிலைப்பள்ளி, வி.ஆர். பிள்ளை தெரு	1	0	1
11	116	லேடி வெலிங்டன் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி,	3	2	5

12	120	சென்னை நடுநிலைப்பள்ளி, இருசப்பன் தெரு	1	1	2
13	120	சென்னை நடுநிலைப்பள்ளி, கிருஷ்ணாம்பேட்டை	1	1	2
14	120	ஐ.டி.ஐ. லாயிட்ஸ் காலனி	1	1	2
15	121	சென்னை துவக்கப்பள்ளி, லாயிட்ஸ் ரோடு	1	1	2
16	121	சென்னை உருது துவக்கப்பள்ளி, லாயிட்ஸ் ரோடு	1	1	2
17	121	சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, லாயிட்ஸ் ரோடு	1	1	2
18	121	சென்னை துவக்கப்பள்ளி, வீரபெருமாள் கோயில் தெரு	1	1	2
19	121	சென்னை உயர்நிலைப்பள்ளி, வீரபெருமாள் கோயில் தெரு	1	1	2
		மொத்தம்	**23**	**17**	**40**

எனவே, மேற்கூறிய சூழ்நிலையை கருத்தில் கொண்டு,

அ) சென்னை மாவட்ட ஆட்சியர் அவர்களின் குறைந்த பட்ட ஊதிய ஆணையின்படி (2018-2019) நபர் ஒன்றுக்கு தினசரி ஊதியம் ரூ.362/-வீதம், 120 பணியாளர்களை தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணியமர்த்திக் கொள்ளவும்,

ஆ) தேசிய நகர்புற வாழ்வாதார அண்டை வீட்டு குழுக்கள் (NULM) மூலம் பணிமேற்கொள்ளஒப்பந்த புள்ளி நடைமுறையில் ஈடுபடுத்த விலக்கு அளிக்கவும்,

இ) இப்பணிக்கு தேவையான நிதி ரூ. 1,24,23,840/-ஐ 202107/230-150-500 என்ற கணக்கு தலைப்பில் நிதி ஒதுக்கீடு செய்யவும் மற்றும் வகுப்பறைகள் மற்றும் கழிவறைகள் சுத்தம் செய்ய தேவைப்படும் பொருட்கள் (துடப்பம், பிளீச்சிங் பவுடர், பிரஷ், பெனாயில்) அந்தந்த பள்ளியின் P.T.A. நிதியிலிருந்து செலவினங்கள் மேற்கொள்ளவும், பின்னர் அச்செலவினங்கள் மாநகராட்சி மூலம் திரும்ப வழங்கவும்,

மேற்கண்ட 'அ முதல் இ' வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 25.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

" பள்ளிகளில் சுற்றுப்புற தூய்மைப்பணிக்காக NULM பணியாளகள் பணியமர்த்த அ முதல் இ' வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(கல்வி), நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

இ.பொ.து.ஆ.வா.ப.ந.க.எண்: டி5/064/2019

தீர்மான எண்.345/2019 **நாள்:27-06-2019**

இயந்திர பொறியியல் துறை - ஆய்வு வாகனப்பணிமனை - ஜூலை 2019 முதல் மார்ச்2020 வரை உள்ள 9 மாத காலத்திற்கு பெட்ரோல் கொள்முதல் செய்ய - இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - தேவைக்கேற்ப எரிபொருள் கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி.

இயந்திர பொறியியல் துறையின் கீழ் இயங்கிவரும் ஆய்வு வாகனப்பணிமனையில் தலைமை நிலைய உயரதிகாரிகள், வட்டார அலுவலக மற்றும் மண்டலம் அலுவலகம் 1 முதல் 15 வரையிலான அதிகாரிகளின் ஆய்வு பயன்பாட்டிற்கும் மற்றும் மருத்துவ துறை உள்ளிட்ட இதர துறை சார்ந்த பணிக்கும் 188 எண்ணிக்கையிலான ஆய்வு வாகனங்கள் பராமரிக்கப்பட்டு வரப்படுகிறது . மேற்கண்ட வாகனங்களில், 11 வாகனங்கள் பெட்ரோல் மூலம் இயங்கும் ஆய்வு வாகனங்கள்.

இந்த 11 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் தேவைப்படும் எரிபொருள் (பெட்ரோல்) புதுபேட்டையில் அமைந்துள்ள ஆய்வு வாகன பணிமனையில் மத்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்தாரின் பெட்ரோல் சேமிக்கும் கிடங்கு அமைக்கப்பட்டு வழங்கப்பட்டு வரப்படுகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியில் பெட்ரோல் வழங்கும் மையம் ஆய்வு வாகன பணிமனையில் மட்டுமே உள்ளது. அரசு ஆணை (நிலை) எண்.102, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் துறை, நாள். 07.08.2000ன்படி, டீசல் கொள்முதல் செய்ய, 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.92/2000, நாள்.28.02.2000 அனுமதியின்படி, அரசின் பின் ஏற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கும் (மா.ந.1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102 நாள்.07.08.2000, இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன், பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் மற்றும் இந்துஸ்தான் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் ஆகிய மூன்று நிறுவனங்களும் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை, ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டு உள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மான எண். 486/01 நாள்.18.09.2001ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

ஆய்வு வாகன பணிமனையில் ஆய்வு வாகனம், மருத்துவத்துறை சார்ந்த இதர வாகனங்கள் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் அக்டோபர் '2018 முதல் மார்ச்'2019 வரை உள்ள 6 மாத காலத்திற்கு தேவையான 57 கிலோலிட்டர் பெட்ரோல் கொள்முதல் செய்ய ரூ.47,00,000/- திற்கு துணை ஆணையர் (சுகாதாரம்) அவர்களிடமிருந்து 12.10.2018 நாளிட்ட நிர்வாக அனுமதி பெறப்பட்டு பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட்டு வரப்படுகிறது. மேலும் ஜூலை'2019-மார்ச்'2020 வரை உள்ள 9 மாத காலத்திற்கு 11 ஆய்வு வாகனங்களுக்கும், மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் ஒரு மாதத்திற்கு தோராயமாக 9000 லிட்டர் பெட்ரோல் வழங்க வேண்டியுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, ஆய்வு வாகன பணிமனைக்கு தேவையான எரிபொருள் சேமிப்பு தொட்டி நிறுவிய இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால், தற்போதைய பெட்ரோல் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்தை 04.06.2019 நாளிட்ட இவ்வலுவலக கடிதத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தால் அளித்த விலைப்புள்ளியின் அடிப்படையில் ஜூலை2019 முதல் மார்ச்2020 வரை உள்ள 9 மாத காலத்திற்கு தேவையான பெட்ரோல் கொள்முதல் செய்ய ஆகும் தோராய மொத்த தொகை கீழ்கண்டவாறு கணக்கிட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இ.பொ.து.ஆ.வா.ப.ந.க.எண்: டி5/064/2019

நிறுவனம்	பொருள் விவரம்	1 KL-க்கான தொகை ரூபாய்	மொத்த தேவை ஜூலை'2019 முதல் மார்ச்'2020 வரை
இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் விற்பனை அனைத்து வரிகள் உட்பட	பெட்ரோல்	ரூ.72933.49/- (நாள் : 04.06.2019)	9 கி.லிட்டர் x 09 மாதங்கள் = 81 கிலோ லிட்டர்.
ஜூலை 2019 முதல் மார்ச்2020 வரை உள்ள 9 மாத காலத்திற்கு பெட்ரோல் (81 கி) கொள்முதல் செய்ய ஆகும் மொத்த தொகை	81 கி.லி. x ரூ. 72933.49/- = **ரூ.59,07,613/-** (ரூபாய்.ஐம்பத்து ஒன்பது லட்சத்து ஏழாயிரத்து அறுநூற்று பதிமூன்று மட்டும்)		

மேற்கண்ட விலைப்புள்ளிகள், மத்திய அரசின் ஆயில் நிறுவனங்கள் அவ்வப்போது அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், கொள்முதல் செய்வதற்கான விற்பனை தொகையை முன்பணமாக காசோலையாக செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனை தெரிவித்துள்ளது. இந்நிறுவனம் மத்திய அரசு நிறுவனம் என்பதால், மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை வழங்கி வருவதால், இந்த விலைப்புள்ளியை ஏற்றுக்கொள்ளலாம்.

மேலும், ஆய்வு வாகனங்களுக்கும், மருத்துவ துறை உள்ளிட்ட இதர துறை சார்ந்த பணிக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் ஜூலை2019 முதல் மார்ச்2020 வரை உள்ள 9 மாத காலத்திற்கு தோரயமாக கணக்கிடப்பட்ட, 81 கிலோ லிட்டர் பெட்ரோலை தோராய மொத்த தொகையான ரூ.59,07,613/- (ரூபாய் ஐம்பத்து ஒன்பது லட்சத்து ஏழாயிரத்து அறுநூற்று பதிமூன்று மட்டும்) செலவினத்தில் தேவைக்கேற்ப கொள்முதல் செய்துக்கொள்ளலாம். இச்செலவினம் 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில், ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை – கணக்கு எண் : 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும். மேலும், இந்நிறுவனம் இந்திய அரசின் நிறுவனம் ஆதலால், இவை பிணை வைப்புத்தொகை மற்றும் காப்பீட்டு தொகை செலுத்துவதில் இருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம்.

அதன்படி, ஜூலை 2019 முதல் மார்ச் 2020 வரை உள்ள 9 மாத காலத்திற்கு ஆய்வு வாகனப்பணிமனையில் 11 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் தேவைப்படும் பெட்ரோல் கொள்முதல் செய்யப்பட வேண்டும்

எனவே,

1. ஆய்வு வாகனப்பணிமனையில் 11 ஆய்வு வாகனங்களுக்கும் மற்றும் மண்டலம் 1 முதல் மண்டலம் 15 வரை உள்ள சுகாதாரத்துறையின் கொசு ஒழிப்பு புகைப்பரப்பும் இயந்திரத்திற்கும் ஜூலை2019 முதல் மார்ச்2020 வரை உள்ள 9 மாத காலத்திற்கு தேவைப்படும் 81 கிலோலிட்டர் பெட்ரோலை கொள்முதல் செய்யும்போது நடப்பில் உள்ள விலையில், தற்போதைய பெட்ரோல் விலையில் கணக்கிடப்பட்டுள்ள மொத்த தொகையான ரூ.59,07,613/- (ரூபாய்.ஐம்பத்து ஒன்பது லட்சத்து ஏழாயிரத்து அறுநூற்று பதிமூன்று மட்டும்) செலவீனத்தில், திருவாளர். இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனத்திடமிருந்து தேவைகேற்ப கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. ஆய்வு வாகன பணிமனைக்கு தேவையான பெட்ரோல் எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது கொள்முதல் செய்வதற்கு இந்தியன் ஆயில் நிறுவனத்திற்கு முன்பணம் வழங்கிட மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று RTGS மூலம் செலுத்திட அனுமதி வேண்டியும்,
3. இதற்கான செலவினை 2019-2020 ஆம் ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் ஆய்வு வாகனப்பணிமனை, இயந்திர பொறியியல் துறை-கணக்கு எண் : 230-20-03-06 – எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யவும்,

4. இந்தியன் ஆயில் கார்ப்பரேஷன் நிறுவனம் இந்திய அரசு நிறுவனம் என்பதால், அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"எரிபொருள் கொள்முதல் செய்ய 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண். ஈ1/15459/2019

தீர்மான எண்.346 / 2019 **நாள்:27-06-2019**

பணியமைப்பு -பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.ஆர்.பாலாஜி, உதவி செயற்பொறியாளர், இயந்திர பொறியியல் துறை அவர்கள் 30.06.2019 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

பொதுத்துறையின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, இயந்திர பொறியியல் துறையில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.ஆர்.பாலாஜி அவர்கள் 30.06.2019 அன்று பிற்பகல் முதல் பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் பிறந்த தேதி 20.06.1961 ஆகும்.

கண்காணிப்பு பொறியாளர் (இ.பொ.) அவர்களின் 04.06.2019 நாளிட்ட கடிதத்தில், திரு.ஆர்.பாலாஜி, உதவி செயற் பொறியாளர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் 19.10.1995 அன்று வரைவாளராக சென்னை மாநகராட்சியில் பணியமர்வு செய்யப்பட்டு, பிறகு 26.02.1998 முதல் இளநிலை பொறியாளராக பதவி உயர்வு பெற்று, தற்போது 21.09.2011 முதல் உதவி செயற் பொறியாளராகவும் பணிபுரிந்து வருகிறார். அன்னார் பல்வேறு துறை/மண்டலங்களில் பணிபுரிந்துள்ள விவரங்கள் கீழ்காணுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

வ எண்	காலங்கள்	பதவி	துறை
01	19.10.1995 – 25.02.1998	வரைவாளர்	SWD
01	26.02.1998–10.02.1999	இளநிலைபொறியாளர் / உதவி பொறியாளர்	இ.பொ.து 'B' Depot
02	11.02.1999 – 04.01.2001	உதவி பொறியாளர்	SWD
03	05.01.2001 –08.08.2007	உதவி பொறியாளர்	(மண்டலம் - 7) புதிய மண்டலம் – 9
04	09.08.2007 –20.09.2011	உதவி பொறியாளர்	இ.பொ.து SCD
05	21.09.2011 – 21.09.2011	உதவி செயற்பொறியாளர்	SWD
06	22.09.2011 –12.12.2012	உதவி செயற்பொறியாளர்	இ.பொ.து SCD
07	13.12.2012 –03.03.2014	உதவி செயற்பொறியாளர்	மண்டலம் - 15
08	04.03.2014 – 04.12.2014	உதவி செயற்பொறியாளர்	RDC (South)
09	08.12.2014 – 30.12.2014	உதவி செயற்பொறியாளர்	BRR
10	31.12.2014 – 27.01.2015	உதவி செயற்பொறியாளர்	சிறப்பு திட்டங்கள்
10	28.01.2015 – 05.06.2017	உதவி செயற்பொறியாளர்	மண்டலம் - 9
11	06.06.2017 – 22.02.2018	உதவி செயற்பொறியாளர்	மண்டலம் - 15
12	23.02.2018 –03.08.2018	உதவி செயற்பொறியாளர்	மண்டலம் - 5
13	06.08.2018 முதல் இதுநாள் வரை	உதவி செயற்பொறியாளர்	இ.பொ.து (தெற்கு வாகன பணிமனை)

தனியர் பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்களில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொ.து.ந.க.எண். ஈ1/15459/2019

தனியர் மண்டலம் 5ல் பணியாற்றியபோது குடிசை மாற்று வாரியம் மூலம் பகுதி – 14 கோட்டம் - 62, 63ல் வாழ்ந்து வந்த பகுதி மக்களின் ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்காக பெறப்பட்ட முன்பணம் ரூ.53,70,000/- நிலுவையில் உள்ளது எனவும், உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்த காலத்திற்கான 2017-2018 ஆண்டிற்கான தணிக்கை அறிக்கைகள் பெறப்படாததால், தணிக்கை விவரம் தெரிவிக்க இயலவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், மண்டல அலுவலர், மண்டலம் 5 அவர்களின் 04.06.2019 நாளிட்ட கடிதத்தில் மேற்கண்ட முன்பணத் தொகை பட்டி தீர்வு செய்வதற்கு, பகுதி கணக்கு குழுமம், மண்டலம் 5 அவர்களுக்கு 30.05.2019 நாளிட்ட குறிப்பின் மூலம் நடவடிக்கை மேற்கொள்ள அனுப்பப்பட்டுள்ளதில், நிதி ஆலோசகர் அவர்களின் 25.06.2019 நாளிட்ட குறிப்பின்படி மேற்கண்ட முன்பண நிலுவை பட்டி தீர்வு செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்க 28.03.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் சங்கத்தில் உறுப்பினர் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 29.05.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக விழிப்பு துறையிலிருந்தும் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரம் பெறப்பட்டுள்ளது.

திரு.ஆர்.பாலாஜி, உதவி செயற்பொறியாளர், அவர்களின் 09.05.2019 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தில், உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்து 30.06.2019 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறுவதாகவும், தனக்கு வழங்கப்பட்ட ஊதியத்தில் மிகையான தொகை வழங்கப்பட்டிருப்பது தணிக்கை ஆய்வின் போது தெரியவரின், தன்னுடைய ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை தொகையில் பிடித்தம் செய்து கொள்ளலாம் என உறுதியளிக்கிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 20.06.2019 நாளிட்ட குறிப்பில், திரு.ஆர்.பாலாஜி, உதவி செயற்பொறியாளர் அவர்கள் இளநிலை பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளராக துறை / மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 1999-2000 முதல் 2017-2018ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை அறிக்கைகளின்படி, கூட்டுப்பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் ரூ.2,11,570/- **(ரூபாய் இரண்டு இலட்சத்து பதினொராயிரத்து ஐநூற்று எழுபது மட்டும்)** உள்ளடக்கிய 2 தணிக்கைத்தடை பத்திகள் தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளதாக தணிக்கை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும், தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்து தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் ஓய்வு பெறும் நாள்வரை பணிபுரிந்த துறை மற்றும் மண்டலங்களிலிருந்து தனியர் மீது தணிக்கை தடை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை தனியர் மீது ஏதும் இல்லை என்பதற்கான சான்று அனுப்புமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

வ. எண்.	மண்டலம் / துறை	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக்குட் படுத்தப்பட்டத் தொகை (ரூ.)	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	திரு.ஆர்.பாலாஜி உதவி செயற் பொறியாளரை பொறுப்பாக்கும் தொகை(ரூ.)
1	மண்டலம் - 9	2016-17	36 இ.எண்.5 வ.எண்.8	100000.00	1	100000.00
2.	மண்டலம் - 15	2017-18	28 வ.எண்.8	111570.00	1	111570.00
	மொத்தம்			211570.00		**211570.00**

பொ.து.ந.க.எண். ஈ1/15459/2019

இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் 13.06.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீதான மேற்கண்ட வரிசை எண்.1ல் உள்ள தணிக்கைப்பத்தி நீக்கம் செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியர் 25.06.2019 நாளிட்ட உறுதிமொழி பத்திரத்தில் மேற்கண்ட வரிசை எண்.2ல் தணிக்கைப் பத்தி நீக்கம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும், அவ்வாறு நீக்கம் செய்யப்படாதபட்சத்தில் இத்தொகையை தனக்கு வழங்கும் ஓய்வூதிய பணப்பயன்களில் பிடித்தம் செய்து கொள்ளலாம் என உறுதி அளித்துள்ளார்.

உதவி செயற்பொறியாளர், பதவியானது வகுப்பு -2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவியில் வகிப்பவரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, இணை இயக்குநர் உள்ளாட்சி நிதி தணிக்கை மற்றும் நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் குறிப்பு மற்றும் கடிதத்தின்படி, திரு.ஆர்.பாலாஜி, உதவி செயற்பொறியாளர் அவர்களின் தனிப்பொறுப்பாக **ரூ.1,11,570/-(ரூபாய் ஒரு இலட்சத்து பதினொராயிரத்து ஐநூற்று எழுபது மட்டும்)** உள்ளடக்கிய 1 தணிக்கைத்தடை பத்தி நிலுவையில் உள்ளதையும் மற்றும் 2017-2018ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் வெளியிடப்படவில்லை என்பதால், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் தனியரை முழுபொறுப்பாக்கி, அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 30.06.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

இ.பொ.து.தெ.செ.ப.எண். எம்1/190/2019

தீர்மான எண்.347/2019 **நாள்:27-06-2019**

இயந்திர பொறியியல் துறை - தென் சென்னை வாகன பணிமனைமண்டலம் 13 லாரி நிலையம்-ஜூலை2019 முதல் மார்ச்2020 ஆம் ஆண்டுக்கான டீசல் கொள்முதல் - பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன், நிறுவனத்திடமிருந்து விலைப்புள்ளி பெறப்பட்டது - எரிபொருள் கொள்முதல் செய்ய அனுமதி.

சென்னை மாநகராட்சி மன்றத்தீர்மானம் எண். 180 / 78 நாள். 28.02.78 ன்படி சென்னை மாநகராட்சி உபயோகத்திற்கு தேவைப்படும் டீசல், இதர எரி பொருட்கள் ஒப்பம் கோருவதிலிருந்து விலக்கு அளித்து இந்திய அரசு நிறுவனமான இந்தியன் ஆயில் நிறுவனத்திடமிருந்து 1978 -79 ஆம் ஆண்டிலிருந்து விலைப்புள்ளி பெற்று கொள்முதல் செய்ய அனுமதி பெறப்பட்டுள்ளது. தென் சென்னை மற்றும் வடசென்னையில் உள்ள மண்டல வாகன இயக்கூர்தி நிலையம் (1 முதல் 10 வரை) அமைக்கப்பட்ட பின்னர் இந்திய அரசு நிறுவனங்களான இந்துஸ்தான் பெட்ரோலியம், பாரத் பெட்ரோலியம் மற்றும் இந்திய ஆயில் நிறுவனங்களால் டீசல் சேமிப்பு அறைகள் மண்டல வாகன நிலையங்களில் நிறுவப்பட்டன.

டீசல் கொள்முதல் செய்ய 2001-02 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மானம் எண். 92 / 2000 நாள். 28.02.2000 அனுமதியின்படி அரசின் பின்னேற்பினை பெறுவதற்கு அனுப்பப்பட்ட கோப்பின் மீது நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மா.ந. 1) துறை அளித்த அரசு ஆணை நிலை எண். 102 நாள். 09.08.2000, மேற்கூறிய நிறுவனம் மத்திய அரசின் நிறுவனமாக இருக்கும் வரை ஒவ்வொரு ஆண்டும் பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் மற்றும் பெட்ரோல் இனி பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையரே கொள்முதல் செய்து கொள்ள அனுமதி அளித்து நிரந்தர ஆணை வெளியிட்டுள்ளது.

அரசு ஆணையினை அமுல்படுத்திட மன்றத்தீர்மானம் எண். 486 / 01 நாள். 20.09.2001 ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டும் ஆணையரின் ஆணை பெற்று டீசல், பெட்ரோல் கொள் முதல் செய்யப்பட்டு வருகிறது. அதன்படி வரும் ஜூலை2019 முதல் மார்ச்2020 ஆம் ஆண்டிற்கு டீசல் கொள்முதல் செய்திட சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

மேலும் 2018-2019-ல் தென் சென்னை வாகனங்களுக்கு மற்றும் மத்திய சென்னையில் உள்ள மண்டலம்-9, 10 லாரி நிலைய வாகனங்களுக்கு சென்ற வருடம் 1200kl கொள்முதல் செய்ய மன்ற தீர்மானம் எண். 344/2018-19 நாள்: 28.04.2018 பெறப்பட்டு 782 kl டீசல் பாரத் பெட்ரோலியம் காப்பரேஷன் நிறுவனம் மூலம் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

தென் சென்னை மற்றும் மண்டல வாகன நிலையங்களால், அசோக்லேலேண்ட் , சுவராஜ் மஸ்தா , டாடா , எய்ச்சர் . டிராக்டர், சிறியவகை முன்பளு துhக்கிகள் , முன்பளு தூக்கிகள் , மின் துறை வாகனங்கள், பொக்லைன்கள் புல்டோசர்கள், கனரக காம்பேக்டர்கள், இலகு ரக காம்பேக்டர்கள் போன்ற வாகனங்கள் 231 எண்ணிக்கைக்கு மேல் பராமரிக்கப்பட்டு வருகின்றன. மேலும், நலத்துறை மலேரியா பிரிவு கொசு ஒழிப்பு பணிக்காக வேன்பாக் போன்ற வாகனங்களுக்கு தேவையான அளவு டீசல் வழங்கப்பட்டு வருகிறது. குடும்ப நலத்துறைக்கு வாசிங் மெசின்களுக்கு டீசல் வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மின்வெட்டின் காரணமாக மண்டலங்களில் உள்ள பெருநகர சென்னை மாநகராட்சி மருத்துவமனைகள் மற்றும் மண்டல அலுவலகங்களில் இயங்கும் ஜென்ரேட்டர் ஆகியவற்றிக்கும் எரிபொருள் வழங்கப்பட்டு வருகிறது. மழைக்காலங்களில் தண்ணீர் இரைப்பதற்காக ராட்சத மோட்டார்களுக்கும் டீசல் வழங்கப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியில், தென் சென்னைக்குட்பட்ட மண்டலம்-12,13, பெருநகர சென்னை மாநகராட்சி வாகனங்கள் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில், இயங்கும் பெருநகர சென்னை மாநகராட்சி வாகனத்திற்கு தேவையான டீசல், தெற்கு வட்டார கட்டுப்பாட்டில் உள்ள கீழ்க்கண்ட இடத்தில் எரி பொருள் சேமிப்பு தொட்டி உரிய நிறுவனத்தால் நிறுவப்பட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் இயக்கப்பட்டு வருகின்றது.

இ.பொ.து.தெ.செ.ப.எண். எம்1/190/2019

டீசல் விநியோகிக்கப்படும் மண்டலம்	நிறுவனங்களின் பெயர்	சேமிப்பு தொட்டியுள்ள இடம்
12,13 மண்டலம் வாகனங்கள் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் இயங்கும் பெருநகர சென்னை மாநகராட்சி வாகனம்	பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்	மண்டலம் - 13 லாரி நிலையம், சைதாப்பேட்டை, பெருநகர சென்னை மாநகராட்சி மூலம் செயல்படுத்தப்படுகிறது.

தற்போது ஜூலை2019 முதல் மார்ச் 2020 ஆண்டிற்கான மண்டலம் 12,13 மண்டலம் வாகனங்கள் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் இயங்கும் பெருநகர சென்னை மாநகராட்சி வாகனம் வரை தேவையான டீசல் எரிபொருளின் பட்டியல் கீழ்க்கண்டவாறு.

மண்டலம்	ஒரு நாளுக்கு	ஒரு மாதத்திற்கு	9 மாதத்திற்கு
12	850 Lits	26.35 KL	237 KL
13	650 Lits	20.15 KL	181 KL
PDG/RDC	260 Lits	8.06 KL	73 KL
		TOTAL(Approx.)	491 KL

பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தேவையான டீசல் எரிபொருள், சேமிப்பு தொட்டி நிறுவிய இந்திய அரசு நிறுவனமான **பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன்** நிறுவனத்திடமிருந்து மட்டுமே கொள்முதல் செய்யப்படுவதால் டீசல் எரிபொருட்களின் விலை விகிதத்தை தெரிவிக்குமாறு பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்தை கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நிறுவனத்தினர் அளித்த விலைப்புள்ளி கீழே தொகுத்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நிறுவனம்	பொருள் விவரம்	1 KLக்கான தொகை ரூபாய்	9 மாதத்திற்கு தேவையான மொத்த கிலோ லிட்டர்
பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் விற்பனை அனைத்து வரிகள் உட்பட	டீசல்	ரூ.67,896.04 (29.05.2019)	491 (தோராயமாக)
மொத்தம்	491 கி.லி. x ரூ.67,896.04 = ரூ.3,33,36,955/-		

மேற்கண்ட விலைப்புள்ளி, எரிபொருட்களை பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம்-13 லாரி நிலையத்தில் இயங்கும் எரிபொருள் கிடங்கிற்கு பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம் வாகனங்கள் மூலமாக கொண்டு வந்து இறக்கி கொடுப்பதற்கு உட்பட்டதாகும். மேலும், இந்த விலைப்புள்ளி மத்திய அரசு அறிவிக்கும் விலை உயர்வுக்கு உட்பட்டது என்றும், இதற்கான விற்பனை தொகையை முன்பணமாக செலுத்த வேண்டும் எனவும், மேற்கண்ட நிறுவனம் நிபந்தனைகள் தெரிவித்துள்ளது. மத்திய அரசு அவ்வப்போது நிர்ணயிக்கும் விலைப்புள்ளிகளின்படி மேற்கூறிய பொருட்களை கொடுத்து வருவதால் இந்த விலைப்புள்ளி ஏற்றுக் கொள்ளலாம். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் இந்திய அரசின் நிறுவனம் ஆதலால் இவை பிணை வைப்புத் தொகை மற்றும் காப்பீட்டுத் தொகை செலுத்துவதிலிருந்தும், உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கலாம்.

மேலும் , துப்புரவு மற்றும் பிற பணிகளுக்கு பயன்படுத்தப்படும் கனரக மற்றும் இலகுரக வாகனங்கள் அனைத்திற்கும் தேவைப்படும் எரிபொருள் கொள்முதல் அளவுகள் முறையே மண்டலம்-12, 13 வாகனங்கள், மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் இயங்கும் பெருநகர சென்னை மாநகராட்சி வாகனங்களுக்கு 491 கிலோ லிட்டர் டீசலும் பெறுவதற்கு தோராயமாக **ரூ.3,33,36,955/-** தேவைப்படுகிறது. இச்செலவினம் 2019-2020 ஆம் நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இயந்திர பொறியியல் துறை, தென் சென்னை

இ.பொ.து.தெ.செ.ப.எண். எம்1/190/2019

வாகன பணிமனை-பிரிவு எண். ***40-41-10***, கணக்கு தலைப்பு ***230-20-03-06*** - எரிபொருள் உபயோகம் என்ற தலைப்பின் கீழ் செலவு செய்யப்படும்.

எனவே, மண்டலம் 13 லாரி நிலையத்தில் இயங்கும் **பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம்** மூலம் அங்கீகரிக்கப்பட்ட எரிபொருள் கிடங்கு மூலம் தேவையான எரி பொருட்கள் மேற்கண்ட மத்திய அரசு நிறுவனத்திடமிருந்து அவர்கள் அளித்த விலைப்புள்ளியின் படி அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கு வாங்குவதற்காக உத்தேசிக்கப்பட்டுள்ளது.

எனவே,

1. மண்டலம் -12, 13 லாரி நிலையங்களில் உள்ள வாகனங்களுக்கும் மற்றும் மற்றும் பெருங்குடி குப்பை கொட்டும் வளாகத்தில் இயங்கும் எக்ஸ்கலேட்டர், புல்டோசர் இயந்திரங்களுக்கும் ஜூலை2019 முதல் மார்ச்2020 வரை 9 மாத காலத்திற்கு தேவையான 491 கிலோ லிட்டர் டீசலை, திருவாளர்கள் பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனம், மூலம் தற்போது உள்ள டீசல் விலையில் கணக்கிடப்பட்டுள்ள மொத்த தொகையான ரூ.3,33,36,955/- அளவில் அல்லது வாங்கும் காலத்தில் அப்போதைய சந்தை விலைக்கே கொள்முதல் செய்ய நிர்வாக அனுமதி வேண்டியும்,
2. மண்டலம்-13 லாரி நிலையத்திற்கு தேவையான டீசல் எரிபொருளை தேவைக்கேற்ப அவ்வப்பொழுது கொள்முதல் செய்வதற்கு திருவாளர்கள். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் நிறுவனத்திற்கு முன்பணம் வழங்கிட மேற்பார்வை பொறியாளர் (இயந்திரம்) அவர்களின் ஆணை பெற்று RTGS மூலம் செலுத்திட அனுமதி வேண்டியும்,
3. இதற்கான செலவினத்தை 2019-2020 நிதி ஆண்டிற்கான வரவு செலவு திட்ட மதிப்பீட்டில் இயந்திர பொறியியல் துறை, தென் சென்னை வாகன பணிமனை-பிரிவு எண்.40-41-10, கணக்கு தலைப்பு 230-20-03-06- எரிபொருள் உபயோகம் என்றதலைப்பின் கீழ் செலவு செய்யவும்.
4. பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் இந்திய அரசு நிறுவனம் என்பதால் அவர்களுக்கு பிணை வைப்பு தொகை கட்டுவதிலிருந்தும், பாதுகாப்பு தொகை செலுத்துவதிலிருந்தும் மற்றும் உடன்படிக்கை செய்து கொள்வதிலிருந்தும் விலக்கு அளிக்கவும்,

மேற்கண்ட 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு (வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 26.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"எரிபொருள் கொள்முதல் செய்ய 1 முதல் 4 வரை உள்ள இனங்களுக்கு சிறப்பு அதிகாரி-நிலைக்குழு(சுகாதாரம்), நிலைக்குழு(வரி விதிப்பு மற்றும் நிதி) மற்றும் மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண்.ஈ1/13021 /2019

தீர்மான எண்.348 / 2019 **நாள்:28-06-2019**

பணியமைப்பு -பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - மருத்துவர்.E.சரஸ்வதி மண்டல அலுவலர், மண்டலம்-3 (மாற்றுப்பணி கூடுதல் மாநகர நல அலுவலர்(பொ) மத்திய வட்டார அலுவலகம்) அவர்கள் 30.06.2019 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 18/06/2019 நாளிட்ட கடிதத்தில், பொதுத்துறையின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் 3ல், மண்டல அலுவலர் (மாற்றுப்பணி கூடுதல் மாநகர நல அலுவலர்(பொ) மத்திய வட்டார அலுவலகம்) பணிபுரியும் மருத்துவர்.E.சரஸ்வதி, அவர்கள் வயது முதிர்வு ஓய்வு காரணமாக 30.06.2019 அன்று பிற்பகல் முதல் ஓய்வு பெறவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து, தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல ஆணையர் அவர்களுக்கு கோப்பு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. தனியர் பிறந்த தேதி 05.06.1961 ஆகும்.

மருத்துவர்.E.சரஸ்வதி, மண்டல அலுவலர், அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலாக 19.04.1995 அன்று மருத்துவ அலுவலராகவும், 23.06.2006 முதல் உதவி சுகாதார அலுவலராகவும், 27.08.2009 முதல் மண்டல நல அலுவலராகவும், 06.11.2013 முதல் மாநகர கூடுதல் சுகாதார அலுவலராகவும், 21.09.2015 முதல் மண்டல அலுவலராகவும் பதவி உயர்வு பெற்று பணிமாற்று அடிப்படையில் கூடுதல் மாநகர நல அலுவலர்(பொ) மத்திய வட்டார அலுவலகத்தில் பணிபுரிந்து வருகின்றார். தனியர் பணிபுரிந்து வந்துள்ள மண்டல/ வட்டார அலுவலகங்கள் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	பதவி	மண்டலம் / துறைகள்	பணியாற்றிய காலம்	
			முதல்	வரை
1.	மருத்துவ அலுவலர்	பழைய மண்டலம் - 3 புதிய மண்டலம் - 5	19.04.1995	18.05.2000
2	மருத்துவ அலுவலர்	பழைய மண்டலம் - 8 புதிய மண்டலம்-10	19.05.2000	30.07.2003
3.	உதவி சுகாதார அலுவலர் (பொ)	பழைய மண்டலம் - 7 புதிய மண்டலம்-9	31.07.2003	23.06.2006
4.	உதவி சுகாதார அலுவலர்	பழைய மண்டலம் - 7 புதிய மண்டலம்-9	23.06.2006	17.10.2007
5.	உதவி சுகாதார அலுவலர்	பழைய மண்டலம் - 7 புதிய மண்டலம்-9	18.10.2007	26.08.2009
6.	மண்டலந ல அலுவலர்	பழைய மண்டலம் - 6 புதிய மண்டலம்-8	27.08.2009	07.02.2013
7.	மண்டலந ல அலுவலர்	மண்டலம் - 12	07.02.2013	29.07.2013
8.	மண்டலந ல அலுவலர்	மண்டலம் - 13	29.07.2013	05.11.2013
9.	மாநகர கூடுதல் சுகாதார அலுவலர்	மத்திய வட்டார அலுவலகம்	06.11.2013	21.09.2015
10	மண்டல அலுவலர் (மாற்றுப்பணி மாநகர கூடுதல் சுகாதார அலுவலர், மத்திய வட்டார அலுவலகம்)	மண்டலம் - 4	21.09.2015	04.07.2018
11	மண்டல அலுவலர் (மாற்றுப்பணி கூடுதல் மாநகர சுகாதார அலுவலர், மத்திய வட்டார அலுவலகம்)	மண்டலம் - 3	04.07.2018	இதுநாள் வரை

பொ.து.ந.க.எண்.ஈ1/13021 /2019

தனியர் பணிபுரிந்த மண்டலங்கள்/துறைகளில் நேர் செய்யப்படாத முன்பணங்கள்/அலுவலக முன்பணங்கள் மற்றும் ஒழுங்கு நடவடிக்கைகள் ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவற்றில் மண்டலம் 8ல் 2011 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது பெறப்பட்ட முன்பணம் ரூ.60,000/- ஈடு செய்யப்படாமல் நிலுவையில் உள்ளது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாவட்ட வருவாய் (தேர்தல்கள்) அவர்களின் 25.06.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மண்டலம் 8ல் பணியாற்றிய காலத்தில் 2011 ஆம் ஆண்டு சட்டமன்ற தேர்தலின்போது பெறப்பட்ட முண்பணம் ரூ.60,000/- பட்டியினை கருவூலத்தில் மீள சமர்ப்பிக்க வேண்டிய நிலையிலும், நிதி ஒதுக்கீட்டின் காரணமாக கோப்பு நிலுவையில் உள்ளது எனத் தெரிவிக்ககப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி, நிதி ஆலோசகர் அவர்களின் 23.02.2019 நாளிட்ட குறிப்பின்படி, தனியர் மருத்துவ அலுவலர், உதவி சுகாதார அலுவலர் , மண்டல நலஅலுவலர், மாநகர கூடுதல் சுகாதார அலுவலராக மண்டலம் / துறைகள் / வட்டார அலுவலகங்களில் பணிபுரிந்த காலங்களில் 1995-1996 முதல் 2016-2017 ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கைகளின்படி, இணைக்கப்பட்டுள்ள அட்டவணையின்படி மொத்தம் ரூ.20,20,268/- உள்ளடக்கிய 9 தணிக்கைத்தடை பத்திகள் கூட்டு பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் நிலுவை உள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், தணிக்கை தடைகள் கூட்டுப்பொறுப்பில் தனியருக்கு மட்டும் ரூ.10,21,948/- (ரூபாய் பத்து இலட்சத்து இருபத்து ஒன்றாயிரத்து தொள்ளாயிரத்து நாற்பத்து எட்டு மட்டும்) உள்ளடக்கிய 9 தணிக்கை தடைபத்தி தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளது எனவும், மேலும் 2017-18, முதல் 2019- 2020 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை எனவும் மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தனியரை பொறுப்பாக்கும் தணிக்கைத் தடை பத்திகள் ஏதும் நிலுவையில் இருப்பின் அதன் பொறுப்பு தனியரையே சாரும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வ. எண்	மண்டலம்/ துறைகள்	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட தொகை (ரூ.)	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	டாக்டர். E.சரஸ்வதி, மண்டல அலுவலரை பொறுப்பாக்கும் தொகை (ரூ.)
1.	பழைய மண்டலம்-7 புதிய மண்டலம் -9	2004-05	80			
2.	பழைய மண்டலம்-6 புதிய மண்டலம் -9	2008-09	63			
3.	பழைய மண்டலம்-6 புதிய மண்டலம் -9	2009-10	63 இ.எ.13 வ.எ.13	7630	1	7630.00
4.	பழைய மண்டலம்-8 புதிய மண்டலம் -10	2010-11	49 இ.எ.23 வ.எ.7	5000	1	5000.00
5.	பழைய மண்டலம்-8 புதிய மண்டலம் -10	2011-12	56 இ.எ.23 வ.எ.45, 95	11000	1	11000.00
6.	பழைய மண்டலம்-8 புதிய மண்டலம் -10	2012-13	55 இ.எ.14 வ.எ.45			
7.	மண்டலம்-12	2012-13	49	5436	2	2718.00
8.	மண்டலம்-12	2012-13	50	4000	2	2000.00
9.	மண்டலம்-12	2013-14	15	1987200	2	993600.00
மொத்தம்			**9**	**20,20,266**		**10,21,948.00**

பொ.து.ந.க.எண்.ஈ1/13021/2019

சென்னை மாநகராட்சி அலுவலர்கள் கூட்டுறவு சங்கத்தின் 23.04.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்கத்தில் உறுப்பினர் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி விழிப்பு துறையின் 07.06.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் மீது இன்றைய தேதியில் சென்னை மாநகராட்சி விழிப்பு துறையில் விசாரணைகள் ஏதும் நிலுவையில் இல்லை என்ற அறிக்கை பெறப்பட்டுள்ளது. தனியர் மீது துறை சார்ந்த ஒழுங்கு நடவடிக்கைகளோ அல்லது விசாரணைகளோ தற்போது நிலுவை ஏதும் இல்லை எனத் தெரிவித்து கொள்ளப்படுகிறது.

தனியரின் 20.06.2019 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தில், பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலாக மருத்துவ அலுவலராக பணியில் சேர்ந்து, தற்போது மண்டலம் 3ல் மண்டல அலுவலராக பணியமர்வு செய்யப்பட்டு (பணிமாற்று அடிப்படையில் கூடுதல் மாநகர சுகாதார அலுவலர்(பொ) பணியாற்றி, வயது முதிர்வு காரணமாக 30.06.2019 ஆம் தேதியன்று பணியிலிருந்து ஓய்வு பெறவுள்ளதால், ஓய்வு பெற்ற பின்னர் எனக்கு வழங்கப்படும் பணிக்காலப் பயன்களான ஓய்வூதியம் மற்றும் துறை வழி பணப்பயன்கள் மிகையாக இருப்பது பின்னர் தெரிய வந்தால் அத்தொகையினை ஒரே தவணையில் செலுத்திவிடுவேன் அல்லது எனக்கு வழங்கப்படும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம் என இதன்மூலம் உறுதியளிக்கின்றேன் என சம்மதம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை அவர்களின் 26.06.2019 நாளிட்ட கடிதத்தில், மண்டலம் 12ல், 2013-14 ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை பத்தி எண்.15ல், தனியர் மீதான பொறுப்பு நீக்கம் செய்யப்பட்டது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட தணிக்கை பத்தி நீக்கம் செய்யப்பட்டதின் அடிப்படையில், தனியர் மீது தற்போது கீழ்கண்டவாறு தணிக்கைப்பத்திகள் நிலுவையில் உள்ளது.

வ. எண்	மண்டலம்/ துறைகள்	ஆண்டு	பத்தி எண்	தணிக்கைக்கு உட்படுத்தப்பட்ட தொகை (ரூ.)	தடைக்கு பொறுப்பான பணியாளர்களின் எண்ணிக்கை மொத்தம்	டாக்டர். E.சரஸ்வதி, மண்டல அலுவலரை பொறுப்பாக்கும் தொகை (ரூ.)
1.	பழைய மண்டலம்-7 புதிய மண்டலம் -9	2004-05	80			
2.	பழைய மண்டலம்-6 புதிய மண்டலம் -9	2008-09	63			
3.	பழைய மண்டலம்-6 புதிய மண்டலம் -9	2009-10	63 இ.எ.13 வ.எ.13	7630	1	7630.00
4.	பழைய மண்டலம்-8 புதிய மண்டலம் -10	2010-11	49 இ.எ.23 வ.எ.7	5000	1	5000.00
5.	பழைய மண்டலம்-8 புதிய மண்டலம் -10	2011-12	56 இ.எ.23 வ.எ.45, 95	11000	1	11000.00
6.	பழைய மண்டலம்-8 புதிய மண்டலம் -10	2012-13	55 இ.எ.14 வ.எ.45			
7.	மண்டலம்-12	2012-13	49	5436	2	2718.00
8.	மண்டலம்-12	2012-13	50	4000	2	2000.00
	மொத்தம்		**8**			**28348.00**

பொ.து.ந.க.எண்.ஈ1/13021/2019

பெருநகர சென்னை மாநகராட்சியில் வகுப்பு-IA ன் கீழ்வரும் மண்டல அலுவலர் பதவியில் உள்ளவர்களை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்க மன்றத்தின் அனுமதி பெறப்பப்பட வேண்டும். தற்போது மன்றம் 24.10.2016 அன்றுடன் முடிவடைந்துள்ளது.

அரசாணை(ப) எண்.147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை நாள்.24.10.2016ன்படி பெருநகர சென்னை மாநகராட்சிக்கு சிறப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளதால், தனியரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்கள் வசம் உள்ளது.

எனவே, இணை இயக்குநர், உள்ளாட்சி நிதி தணிக்கை மற்றும் நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதங்களின்படி, மருத்துவர்.E.சரஸ்வதி மண்டல அலுவலர், மண்டலம்-3 (மாற்றுப்பணி கூடுதல் மாநகர நல அலுவலர்(பொ) மத்திய வட்டார அலுவலகம்) அவர்கள் மீது தனிப்பொறுப்பில் உள்ள தணிக்கைத்தொகை ரூ.28,348/- உள்ளடக்கிய 8 தணிக்கை தடைபத்தி தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளதையும் மற்றும் தேர்தல் முன்பணம் ரூ.60,000/- (ரூபாய் அறுபதாயிரம் மட்டும்) என சேர்த்து மொத்தம் **ரூ.88,348/- (ரூபாய் எண்பத்தெட்டாயிரத்து முன்னூற்று நாற்பத்து எட்டு மட்டும்)** நிலுவையில் உள்ளதையும் மற்றும் 2017-18 முதல் 2019- 2020 ஆம் ஆண்டு வரை உள்ளாட்சி நிதித் தணிக்கை துறையால் தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படவில்லை அவற்றிற்கும் தனியரை முழுபொறுப்பாக்கி அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஒய்வூதிய தொகையிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 30.06.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 27.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

பொ.து.ந.க.எண். ஈ1/17447/2019

தீர்மான எண்.349/2019 **நாள்:28-06-2019**

பணியமைப்பு -பெருநகர சென்னை மாநகராட்சி - பொதுத்துறை - திரு.என்.வி.மோகன், உதவி செயற்பொறியாளர், வடக்கு வட்டார அலுவலகம் அவர்கள் 30.06.2019 பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதி.

பொதுத்துறையின் 16.12.2018 நாளிட்ட சுற்றறிக்கையின்படி, பெருநகர சென்னை மாநகராட்சி, வடக்கு வட்டார அலுவலகத்தில் உதவி செயற்பொறியாளராக பணிபுரிந்து வரும் திரு.என்.வி.மோகன் அவர்கள் 30.06.2019 அன்று பிற்பகல் முதல் பணியிலிருந்து வயது முதிர்வு ஓய்வு பெறவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. தனியர் பிறந்த தேதி 22.06.1961 ஆகும்.

வட்டார துணை ஆணையர் (வடக்கு) அவர்களின் 24.06.2019 நாளிட்ட கடிதத்தில், திரு.என்.வி.மோகன், உதவி செயற் பொறியாளர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியில் முதன் முதலில் 27.07.1995 அன்று இளநிலை பொறியாளராக சென்னை மாநகராட்சியில் பணியமர்வு செய்யப்பட்டு, பிறகு 27.07.1996 முதல் உதவி பொறியாளராகவும், 18.01.2013 முதல் உதவி செயற்பொறியாளராகவும் பதவி உயர்வு பெற்று, தற்போது வடக்கு வட்டார அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார். அன்னார் பல்வேறு துறை / மண்டலங்களில் பணிபுரிந்துள்ள விவரங்கள் கீழ்காணுமாறு தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

வ எண்	காலங்கள்	பதவி	துறை
01	27.07.1995 - 07.10.1998	உதவி பொறியாளர்	பழைய மண்டலம்-8/ புதிய மண்டலம்-10
02	08.10.1998-17.05.2000	உதவி பொறியாளர்	பழைய மண்டலம்-6/ புதிய மண்டலம்-9
03	17.05.2000 - 16.07.2000	உதவி பொறியாளர்	கட்டத்துறை
04	17.07.2000 -12.07.2005	உதவி பொறியாளர்	பழைய மண்டலம்-5/ புதிய மண்டலம்-8
05	13.07.2005 -03.05.2008	உதவி பொறியாளர்	பழைய மண்டலம்-10/ புதிய மண்டலம்-13
06	04.05.2008 - 17.01.2013	உதவி பொறியாளர்	பழைய மண்டலம்-2/ புதிய மண்டலம்-5
07	18.01.2013 -26.02.2016	உதவி செயற்பொறியாளர்	மண்டலம் 1
08	27.02.2016 -27.11.2017	உதவி செயற்பொறியாளர்	திடக்கழிவு மேலாண்மை துறை
09	27.11.2017 முதல் இந்நாள் வரை	உதவி செயற்பொறியாளர்	வடக்கு வட்டார அலுவலகம்

தனியர் பணியாற்றிய துறைகள் மற்றும் மண்டலங்களில் தனியர் மீது ஒழுங்கு நடவடிக்கை மற்றும் குற்றச்சாட்டுகள் ஏதும் நிலுவையில் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை மாநகராட்சி அலுவலர் கூட்டுறவு சங்க 22.01.2019 நாளிட்ட கடிதத்தில், தனியர் சங்கத்தில் உறுப்பினர் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

விழிப்பு அலுவலர் அவர்களின் 07.06.2019 நாளிட்ட கடிதத்தின் வாயிலாக விழிப்பு துறையிலிருந்தும் தனியர் மீது விசாரணை ஏதும் நிலுவையில் இல்லை என்ற விவரம் பெறப்பட்டுள்ளது.

நிதி ஆலோசகர் அவர்களின் 25.03.2019 நாளிட்ட குறிப்பில், திரு.என்.வி.மோகன், உதவி செயற்பொறியாளர் அவர்கள் உதவி பொறியாளர் மற்றும் உதவி செயற்பொறியாளராக துறை / மண்டலங்களில் பணிபுரிந்த காலங்களில் 1999-2000 முதல் 2017-2018ஆம் ஆண்டு வரை தணிக்கை அறிக்கை குறித்த பத்திகள், இவ்வலுவலகத்தில் உள்ள உள்ளாட்சி நிதித்தணிக்கை

அறிக்கைகளின்படி, ரூ.2,06,498/- உள்ளடக்கிய 12 தணிக்கைத்தடை பத்திகள் கூட்டுப்பொறுப்பு மற்றும் தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளதாகவும், மேற்கண்ட கூட்டுப்பொறுப்பில் தனியருக்கு மட்டும் தனிப்பொறுப்பாக **ரூ.1,82,316/- (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்திரெண்டாயிரத்து முன்னூற்று பதினாறு மட்டும்)** உள்ளடக்கிய 12 தணிக்கைத் தடைப்பத்திகள் நிலுவையில் உள்ளதாகவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது மற்றும் 2018-2019 மற்றும் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் வெளியிடப்படவில்லை எனவும், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவர் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்படும் எனவும், தனிப்பொறுப்பில் நிலுவையில் உள்ளதாகவும் தெரிவித்து தனியர் பணியில் சேர்ந்த நாள் முதல் ஓய்வு பெறும் நாள்வரை பணிபுரிந்த துறை மற்றும் மண்டலங்களிலிருந்து தனியர் மீது தணிக்கை தடை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை தனியர் மீது ஏதும் இல்லை என்பதற்கான சான்று அனுப்புமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், தனியருக்கு அரசாணை நிலை எண்.242, நிதித்துறை (ஊதியக்குழு) நாள்.22.07.2013ன்படி உதவி செயற்பொறியாளர் பதவியில் ரூ15600-39100+5400 என்பதற்கு பதிலாக ரூ.15600-39100+6600 தரஊதியம் என்ற காலமுறை ஊதியத்தில் ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு மிகையாக வழங்கப்பட்ட தொகை அரசாணையில் தெரிவித்துள்ளவாறு 18.01.2013 முதல் 31.12.2018 வரை கணக்கீடு செய்யப்பட்டதில் ரூ.2,12,616/- பிடித்தம் செய்யப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

திரு.என்.வி.மோகன், உதவி செயற்பொறியாளர், அவர்களின் 24.06.2019 நாளிட்ட உறுதிமொழி கடிதத்தில், உதவி செயற் பொறியாளராக பணிபுரிந்து 30.06.2019 அன்று வயது முதிர்வு ஓய்வு பெறுவதாகவும், தனக்கு வழங்கப்பட்ட ஊதியத்தில் மிகையான தொகை வழங்கப்பட்டிருப்பது தணிக்கை ஆய்வின் போது தெரியவரின், தன்னுடைய ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை தொகையில் பிடித்தம் செய்து கொள்ளலாம் என உறுதியளிக்கிறேன் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் தனியர் தன் மீதான தணிக்கை பத்தி நிலுவை மற்றும் உதவி செயற்பொறியாளர் பதவியில் மிகை ஊதியம் வழங்கப்பட்டதை தன்னுடைய ஓய்வூதிய பயன்களிலிருந்து பிடித்தம் செய்து கொள்ளலாம் என 27.06.2019 நாளிட்ட உறுதி மொழி கடிதத்தில் உறுதி அளித்துள்ளார்.

உதவி செயற்பொறியாளர், பதவியானது வகுப்பு -2ன்கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளதால் இப்பதவியில் வகிப்பவரை வயது முதிர்வு ஓய்வில் செல்ல அனுமதிக்கும் அதிகாரம் சிறப்பு அதிகாரி – மன்றம் அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.

எனவே, நிதி ஆலோசகர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் 25.03.2019 நாளிட்ட குறிப்பின்படி, திரு.என்வி.மோகன், உதவி செயற்பொறியாளர் அவர்களின் தனிப்பொறுப்பாக மொத்தம் **ரூ.1,82,316/- (ரூபாய் ஒரு இலட்சத்து எண்பத்திரெண்டாயிரத்து**

முன்னூற்று பதினாறு மட்டும்) உள்ளடக்கிய 12 தணிக்கைத்தடை பத்திகள் நிலுவையில் உள்ளதையும் மற்றும் தனியருக்கு உதவி செயற்பொறியாளர் பதவியில் மிகை ஊதியம் **ரூ.2,12,616/- (ரூபாய் இரண்டு இலட்சத்து பன்னிரெண்டாயிரத்து அறுநூற்று பதினாறு மட்டும்)** யையும், மற்றும் 2018-2019 முதல் 2019-2020 ஆம் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையால் வெளியிடப்படவில்லை என்பதால், மேற்காணும் ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்பட்ட பின்னர், தணிக்கைத்தடை பத்திகள் பணியாளரை சார்ந்தது என்பது பின்னர் தெரியவரும் பட்சத்தில் அவற்றிற்கும் தனியரை முழுபொறுப்பாக்கி, அன்னாருக்கு வழங்கப்படும் பணிக்கொடை மற்றும் ஓய்வூதிய அகவிலைப்படியிலிருந்து பிடித்தம் செய்யப்படும் என்ற நிபந்தனைக்குட்பட்டும், தனியரை 30.06.2019 அன்று பிற்பகல் முதல் வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களின் அனுமதி கோரிய ஆணையரது 27.06.2019 நாளிட்ட குறிப்பு படிக்கப்பட்டது.

"வயது முதிர்வு ஓய்வில் செல்ல சிறப்பு அதிகாரி-மன்றம் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது".

*****

சு.து.ந.கஎண். NUHM/B2/1702 /2018

தீர்மான எண்.350 / 2019 **நாள்:28-06-2019**

பொதுசுகாதாரத்துறை- தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டம் - ரூ.1440.0 லட்சம் RoP 2019-20ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது - பெருநகர சென்னை மாநகராட்சியில் புதியதாக கட்டப்பட்டு வரும் 3 நகர்ப்புற சமுதாய நல மையங்களுக்கு (திருவொற்றியூர்,, புழல் மற்றும் ஈஞ்சம்பாக்கம்) தேவையான மருத்துவ கருவிகள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் இதர பொருள்கள் கொள்முதல் செய்ய அனுமதி.

பெருநகர சென்னை மாநகராட்சியில், தேசிய நகர்ப்புற சுகாதாரத்திட்டத்தில் புதியதாக 34 ஆரம்ப சுகாதார மையங்கள் கட்டுவதற்கும் (New construction), 8 புதிய நகர்ப்புற சமுதாய நல மையங்கள் கட்டுவதற்கும் (New construction) மேலும் 100 ஆரம்ப சுகாதார மையங்களில் பழுது பார்த்தல் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தவும் (Renovation/Up gradation) கீழ்க்கண்டுள்ளவாறு பெருநகர சென்னை மாநகராட்சிக்கு தொகை வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை எண்.1 **Rs in Lakh**

S. No.	Particulars	Numbers	Amount allotted for construction /unit	Allotment in total	Amount released
1	New UPHCs	34	0.75 cr /UPHC (100%)	2550.00	2550.00
2	New UCHCs	8	9.00 cr /UCHC (80%)	7200.00	5760.00
